

திருமகள் நிலையம்

இந்திரா சௌந்தர்ராஜன்

சொர்ணஜாலம்



17 OCT 2005
16 DEC 2007
25 JUN 2008
16 2010
22 DEC 2010
12 JAN 2011
8 MAR 2011

37671

சொர்ண ஜாலம்

இந்திரா சௌந்தர்ராஜன்

திருமகள் நிலையம்
புதிய எண்: 16, பழைய எண் 55
வெங்கட் நாராயணா சாலை
தி.நகர், சென்னை-600 017.
ஓ: 4342899, 4327696
Fax: 91 - 44 - 4341559

மாலி சிங்கம் நூல்...
உரிமைத்தார், சென்னை-98

முதற் பதிப்பு : ஆகஸ்டு, 2003

உரிமைத்தார் : ஆசிரியருக்கு

- TITLE : SORNA JALAM
- BY : INDRA SOUNDAR RAJAN
- FIRST EDITION : AUG. 2003
- PAPER : 11.6 kg CREAM WOVE
- TOTAL NO: OF PAGES : 280

திருமகள் நிலையம்

விலை ரூ. 70/-

கிடைக்குமிடம்

திருமகள் நிலையம்
புதிய எண்.16, பழைய எண்.55
வெங்கட்நாராயணா ரோடு,
தியாகராய நகர், சென்னை-600 017.
தொலைபேசி - 24342899, 24327696

Typesetting : AMBAVAVATHI
W. Mambalam, Chennai - 33.
Mobile : 9444169725

Printed by : Udayam Offsets, Chennai - 600 002

37671
5469217
5469217
37671

எனுரை

ஒருமுறை மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் ஒரு ஜெர்மன்காரரை சந்திக்க நேரிட்டது. மீனாட்சியை தரிசிக்க அவர் முயன்று கொண்டிருந்தார். கையில் ஒரு தேங்காய் பழத்தட்டு. அத்துடன் பெரிய மாலை ஒன்றும் அவரிடம் இருந்தது.

ஆனால் ஐதீக காரணங்களுக்காக ஆலய நிர்வாகம் கருவறைக்குள் அவரை அனுமதிக்கவில்லை. அவர் முகத்திலோ பெரிய அளவில் வருத்தம். அந்த சந்தர்ப்பத்தில் தான் அவரைச் சந்தித்தேன். எனக்கு அவர்மேல் பரிதாபமும், அதேசமயம் அவரை தரிசிக்க விடாதபடி நமது ஐதீகங்கள் தடையாக இருக்கிறதே என்கிற கோபமும் ஒருசேர ஏற்பட்டது. அவரிடம் அதை வெளிப்படுத்திய நான் அவர் சார்பில் அந்த தேங்காய்பழத்தட்டு மற்றும் மாலையை வாங்கிக் கொண்டு சென்று அவர் பெயரில் அர்ச்சனை செய்து விட்டு வந்து அவரிடம் பிரசாதம் தந்தேன்.

பிறகு அவர் நல்ல நண்பராகிவிட்டார்.

ஜெர்மனியில் இருந்தாலும் இந்துமதம் பற்றி நிறைய தெரிந்து வைத்திருந்தார். உங்கள் மதம் மனித வாழ்வின் எல்லா பக்கங்களையும் பற்றி விலாவாரியாக பேசுகிறது.

வாசலில் கோலம் போடுவதில் இருந்து நெற்றிக்கு குங்குமம் வைப்பது வரை அதில் பொதிந்து கிடக்கும் அர்த்தங்களை நான் வெகுவாக வியக்கிறேன். குறிப்பாக உங்கள் புராணங்களில், மற்றும் கதைகளில் வரும் முனிவர்கள், சித்தர்கள் என்னை மிகக் கவர்ந்தவர்கள்.

அவர்கள் இன்று நாவலில் பணியாற்றும் விஞ்ஞானிகளை விடப் பல மடங்கு மேலானவர்களாகத் தெரிகிறார்கள். ஒலியை மிக அதிகம் பயன்படுத்தி மந்திரங்களை நீங்கள் உருவாக்கி வைத்திருப்பதும், காலத்துக்கும் அழிக்க முடியாதபடி கல்வெட்டுக்களில் எழுதி வைத்திருப்பதும் என் வரையில் மிக மிக Great ஆன விஷயங்கள் என்று அடுக்கிக் கொண்டே போனார்.

அந்த நிமிஷம் எனக்கு மிக பரவசமாக இருந்தது.

நமது பெருமை, நமது சிறப்பு, நம்மைவிட அயல்நாட்டவர் ஒருவருக்கு தெரிந்து அவர் வாயிலாக கேட்டறிவதில் ஒரு தனி ஆனந்தம் இருக்கிறது.

அப்பொழுது அவர் ஒரு வித்யாசமான கேள்வி கேட்டார்.

"உங்கள் சித்தர்கள் அசாதாரணமானவர்கள். உடம்பைப் பற்றி அவர்கள் அளவு ஒரு டாக்டரால் கூட சிந்திக்க முடியுமா என்பது சந்தேகம்தான்... எவ்வளவு மூலிகைகள்... எவ்வளவு மருந்துகள்... சுவாசிப்பதிலும் காற்றிலும்தான் மனித வாழ்வின் எல்லா ஆரோக்யமும் அடங்கியிருக்கிறது என்றெல்லாம் அவர்கள் சொல்லியிருப்பது ஏ ஒன்!

ஆமாம்... இப்படிப்பட்ட சித்தர்களில் ஏன் ஒருவர்கூட பெண் இல்லை?" -என்று அவர் கேட்ட ஒரு கேள்வி என்னை வெகுவாகச் சிந்திக்க வைத்து அதில் தோன்றியதுதான் 'சொர்ண ஜாலம்' என்கிற இதிலுள்ள ஒரு நாவல்.

நாவலை வாசியுங்கள். மற்ற விபரங்கள் தானாகப் புரியும். மற்ற நாவல்களும் நம் மண்ணின் சிறப்பையும், இங்குள்ள விளங்காத புதிர்களையும் புரிந்துகொள்ள முயல்பவைதான்...

மற்றபடி இந்த நாவல்களை நிறம்பட தயாரித்து உங்களுக்கு வழங்கும் திருமகள் நிலையத்தாருக்கு என் நன்றிகள்.

அன்புடன்
இந்திராசௌந்தர்ராஜன்

24.9.03
மதுரை-3.

தேசிய மாவட்ட மைய நூலகம்
37671
546921
கொளத்தூர், சென்னை 99

சொர்ண ஜாலம்

1

'அதிசயங்கள் மட்டும் ஏழு அல்ல... ரகசியங்களும் ஏழு. அதில் ஒன்றைச் சொல்லவா?

-பரஞ்ஜோதி

மீனாட்சி அம்மன் படத்தையே வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தார் ராமரத்தினம்.

தூக்கில் தொங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்றுதான் தோன்றியது அவருக்கு.

சுளையாக ஐம்பதாயிரம் ரூபாய் பணம் - முப்பது சவரன் நகை!

- இரண்டையும் ஒடும் ரயிலில் தொலைத்துவிட்டதில் புத்தி கிட்டத்தட்ட பேதலித்துப் போய்விட்டிருந்தது. தனக்குத் தானே பேசிக் கொண்டும், கையைப் பிசைந்து கொண்டும் அப்படியும் இப்படியுமாக நடந்து கொண்டே இருந்தார்.

'நான் இனி உசுரோட இருக்கறதுல அர்த்தமே யில்லை. எதுக்கு உசுரோட இருக்கணும்? என்னால யாருக்கு பிரயோஜனம்? நான் ஒரு தெண்டம். நான் ஒரு அடி முட்டாள். எவனாவது லட்சரூவா மதிப்போட ரயில்ல வருவானா? அதுலையும் படுக்க இடம் கிடைச்சிச்சேன்னு படுத்து தூங்கிகிட்டு... வந்தேனே... முட்டாள்பய நான் வந்தேனே... பாழாய்ப்போன தூக்கம் என்னை கவுத் துடிச்சே... இந்த கண்ணை என்ன செஞ்சா தகும்?'

- கேள்வியோடு உணர்ச்சிவசப்பட்டு கண்களை குத்திக் கொள்ளப் போனார். எகிறிப் பிடித்து தடுத்தாள் வடிவாம்பாள். அவர் மனைவி.

''போனா போகட்டும் விடுங்க. அதான் போலீஸ்ல புகார் கொடுத்துருக்கோம்ல?''

- ஆறுதல் சொல்லிப் பார்த்தாள். அவளால் அதுதான் முடிந்தது. ஆனால், மகள் அழகம்மையால் அதுகூட முடியவில்லை. அழுது கொண்டிருந்தாள். மொட்டுப் போல முகம். நன்கு தழைந்த கூந்தல். அளவான உயரம் வேறு. பிரம்மன் விருந்து சாப்பிட்டு முடித்த நிலையில் தாம்பூலம் தரிக்கும்போது ஏக குஷியோடு யோசித்து அவளை படைத்திருக்க வேண்டும் என்று தோன்றியது. ஊர் விடலைகள் அவ்வளவு பேர் கண்களும் அவள் மேல்தான்!

அவள் வரையில் சில நாற்பது வயது ஆசாமிகள்கூட இரண்டாம் தார கற்பனை செய்து வைத்திருந்தார்கள். 'கோவில் சிலை, குங்குமச் செப்பு, தோட்டத்து மான்' என்று அவளுக்கு ஊரில் பல பெயர்கள் வேறு...

ஆனால், அதிர்ஷ்டம்தான் துப்புரவாக இல்லை!

மாங்கு மாங்கு என்று படித்து பரீட்சை எழுதினாள். மாநிலத்தில் முதலாவதாக வரக்கூடிய எல்லா தகுதியும்

இருந்தது. இருந்தும் கணக்குப் பரீட்சையன்று விஷக் காய்ச்சல் வந்து சதி செய்து பார்டர் மார்க்கில் அவளை சதாய்த்துவிட்டது.

விளையாட்டுப் போட்டிகளில்கூட அப்படித்தான் வெற்றி விரல் நுனியில் தட்டிப் போனது. எல்லைக் கோடு அருகே முதலாவதாக வந்ததும் தடுமாறி விழுந்துவிட்டாள்.

எப்பொழுதும் துரதிர்ஷ்டம் அவளை 'விட்டேனா பார்' என்று துரத்துவது போல ஒரு பிரமை அவளுக்குள்... அது அவள் கல்யாண விஷயத்தில்கூட பலித்துவிட்டது.

அமெரிக்காவில் வேலை பார்க்கும் ஒரு மாப்பிள்ளைப் பையனின் வரன் வந்தது.

அவர்கள் அந்தஸ்துக்கும் அழகம்மை குடும்ப அந்தஸ்துக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. இருந்தும் அழகம்மையின் அழகில் மெல்ட்டாகிவிட்ட மாப்பிள்ளை பையன் மணந்தால் அழகம்மை - இல்லையேல் திருமணமே வேண்டாம் என்று கூறிவிட்டான்.

அதிர்ஷ்டம் அவள் வரையில் இப்படித்தான் கதவைத் தட்டும், அன்றும் மாப்பிள்ளை பையன் ரூபத்தில் கதவைத் தட்டிற்று.

சரியென்று பையனைப் பெற்றவர்களும் அழகம்மை யின் அப்பாவான ராமரத்தினத்தை வந்து பார்த்து பேசினார்கள்.

''எவ்வளவு செய்வீங்க?'' - இறுதிக் கட்டத்துக்கு வந்து கேட்டார்கள்.

''ஏதோ இருபது இருபத்தைஞ்சு பவுன் போடலாம். பெம்பிளா கல்யாணம் பண்ணித்தரலாம். அவ்வளவுதான்

என்னால முடியும் - இதுக்கே நான் கடன் வாங்கணும்.'' - என்றார் ராமரத்தினம்.

''சரி... ஆனால் இப்பொழுது சொன்னதில் இருந்து மாறிடாதீங்க. கரெக்டா நடந்துக்குங்க. காசு, பணம் இல்லாட்டியும் கேரக்டர் இருந்தா அது போதும் எங்களுக்கு'' - என்று சொல்லி கல்யாண தேதியை குறித்தனர். சொன்னது போலவே கடன் வாங்குவதற்காக சுந்தர பெருமாள் கோவிலில் இருந்து தென்காசி வந்து ரயிலேறி விருதுநகர் வரை போனார் ராமரத்தினம். அங்கே அவரையும் மதித்து பழகும் ஒரு நல்ல நண்பர் இருக்கிறார். பேர் மகாதேவன்.

''மகாதேவா... நீதாம்ப்பா உதவி செய்யணும். உன் தயவாலதான் அழகம்மை கரை ஏறணும்'' - என்று காலிலும் விழுந்தார்.

மகாதேவனுக்கு ஆனாலும் பெரிய மனது. கைவசம் காசில்லாவிட்டால் என்ன...! குடியிருக்கும் வீடு இருக்கிறதே என்று அதை அடகு வைத்து பணத்தைப் புரட்டித் தந்தார் மகாதேவன்.

சுளையாக லட்சத்து ஐம்பதாயிரம்! அதை எடுத்துக் கொண்டு மதுரைவரை போய் கருப்பன் செட்டியார் நகைக்கடையில் நல்ல மச்சமுள்ள தங்கத்தில் முப்பது சவரனுக்கு தாலியில் இருந்து தொங்கட்டான் வரை வாங்கிக் கொண்டும் வந்தார்.

பிற்பாடு மகாதேவன் வீட்டில் வக்கணையாக ஒரு சாப்பாடு. ஏழெட்டு வகை காய்கறி, முழங்கை வழிய நெய்ப்பொங்கல் என்று மகாதேவன் மனைவி ஜமாய்த்து விட்டாள்.

எந்த வீட்டில் இப்படி அடகு வைத்து பணம் கொடுத்து சோறும் போட்டு அனுப்புவார்கள்?

ராமரத்தினத்துக்கு அதன் நிமித்தம் மகாதேவனை நினைத்து பெருமிதமாகிப் போனது.

'நான் கொடுத்து வெச்சவன்மகா... இல்லாட்டி நீ எனக்கு சிநேகிதனா கிடைச்சிருப்பியா?' என்று கேட்டு ரயில்வே ஸ்டேஷனில் மகாதேவன் காலிலேயே விழுந்துவிட்டார்.

''போவே... போ! நண்பர்களுக்குள்ள இப்படியா கால்ல கைல உழுவறது. அழகம்மை என் பொண்ணு மாதிரி. என் மக கல்யாணத்துக்கு நான் செய்யாம யார் செய்வா'' என்று மகாதேவனும் மனதில் மச்சுக்கு ஏறினார்.

சிலிர்த்துப்போய் விட்டது ராமரத்தினத்துக்கு. ஒரு பக்கம் அமெரிக்க மாப்பிள்ளை - மறுபக்கம் இப்படி முழுமனசோடு உதவும் நண்பன். யாருக்கு கிடைக்கும்?

செருக்கோடு கம்பார்ட்மென்ட்டில் ஏறினார். பெட்டி காலியாக இருந்தது. ஊரைச் சுற்றிக் கொண்டு மாட்டு வண்டிபோல லொடக்கு லொடக்கு என்று போகும் அந்த பாசஞ்சர் ரயிலில் போக யாருக்கும் மனமில்லை - ராமரத்தினம் ஒருவரைத் தவிர... அப்படியே பழகிவிட்டது.

சில பழக்கங்கள் மாறாதவை.

காலுக்கு டயர் செருப்பு - நெற்றியில் சந்தனப் பொட்டு, கையில் குடை, இடுப்புக்கு மஸ்லின் வேட்டி, வெள்ளை சட்டை என்கிற ராமரத்தினத்தின் லட்சண சொரூபங்கள் அவர் நியூயார்க்குக்கு போய் ஜார்ஜ் புஷ்ஷை சந்திக்கச் செல்லும் போதுகூட மாறாது.

ஆனால் அவ்வளவும் அந்த ரயிலில் ஏறி தூங்கிக் கண் விழித்த பிறகு மாறிவிட்டது. தலை மாட்டில் பையை வைத்துக் கொண்டு தூங்கியதில் வந்தது இடர்.

கண்விழித்தபோது பையும் இல்லை. பெட்டியிலும் யாரும் இல்லை.

'கடவுளே... கிடைத்தது கிடைச்சிச்சே... அது இப்படி களவு போகத்தானா?' - அரற்று அரற்று என்று அரற்றி விட்டார் ராமரத்தினம். நெற்றிப் பொட்டிலிருந்து வெள்ளைச் சட்டை வரை எல்லாமே விலகி ஒரு பைத்தியக்காரனைப் போல இருக்கிறார்.

தன்னைத் தானே நொந்து கொள்வதும் தலையில் அடித்துக் கொண்டு அழுவதும் பார்க்கச் சகிக்கவில்லை.

அழகம்மையும் ஒரு முடிவிற்கு வந்துவிட்டாள். கண்ணடித்து அருகே அழைக்கும் அதிர்ஷ்டம் பிறகு கழுத்தைப் பிடித்து நசுக்கும் துரதிர்ஷ்டமாக மாறுவதற்கு ஒரு முடிவுகட்டியே தீருவது என்பதுதான் அது. தன்னால் தானே எல்லோருக்கும் இத்தனை கவலை...? இத்தனை மன உளைச்சல்? பேசாமல் போய்ச் சேர்ந்து விட்டால்?

புத்தி அதையொட்டி வேகமாக திட்டமிட ஆரம்பித்தது. உத்தரத்தின் கொக்கி கண்ணில் பட்டு தூக்குக் கயிறு மாட்ட வசதியாக நானிருக்கிறேன் என்றது.

கயிறும் பரணில் கிடந்தது.

கயிறை ஏறி எடுத்தவள் கதவைத் தாழிட்டாள். கொக்கியில் ஒரு முனையை கட்டியவள் மறுமுனையில் வளையத்தை உருவாக்கி கழுத்தையும் அதனுள் கொண்டு செல்லத் தொடங்கினாள்.

காலடியில் கோக்குவாளி என்னும் நாற்காலி - உயரமான இடத்தில் உள்ளவைகளை எடுப்பதற்காக வென்றே உள்ளது.

அதை ஒரு உதை உதைத்தால் அது சரிந்து விழுந்துவிடும். அதன்பின் மாமரக்கிளையில் காம்பில் மாங்காய் தொங்குகிற மாதிரி, தோட்டத்து மாதுளைச் செடியில் மாதுளை தொங்குகிறது மாதிரி தொங்கி முடிந்து போய்விட வேண்டியதுதான். சாக முடிவெடுத்து கயிறும் கழுத்துமாக இருக்கும் போதுகூட கவிதைத் தனமாய்தான் அவளால் நினைக்க முடிந்தது. காலும் கோக்குவாளியை உதைக்க தயாரானது.

ஒரு வாழ்க்கை முடியப் போகிறது.

பிரம்மாமிக ரசித்து எழுதிய கவிதை ஒன்றை நெருப்பு தின்று சாம்பலாக்கப் போகிறது.

இப்படித்தான் பல பெண்கள் முடிந்து போயிருக் கிறார்கள்.

அழகம்மைக்கும் அதுதான் முடிவா?

முப்பது பவுன் சவரனும், ஐம்பதாயிரம் ரூபாயும் இப்படிக்கூடவா ஒரு அழகான உயிரை ஆகாசத்துக்கு அனுப்பும்?

கேள்விக்கு எதிராக வாசல்புரத்தில் இருந்து ''அழகு... அழகு...'' - என்று ஒரு குரல் கேட்டது.

பாண்டித்துரை தாத்தாவின் குரல்! பிச்சைக்கார பாண்டித்துரை தாத்தாவின் குரலேதான்... பழைய சோற்றுக்காக ஒரு சட்டிப் பானையோடு அடிக்கடி வந்துவிடும் தாத்தாவின் குரல் கொஞ்சம் போல அவளது

மரணவிருப்பத்தை ஒத்திப்போட்டது. கீழே இறங்கினாள். கதவைத் தாழிட்டு விட்டு வெளியே வந்தாள்.

''தாயி வந்துட்டியா...?''

''என்ன வேணும் தாத்தா?''

''எதுக்குடா வருவேன்? உன் கையால பழையது இருந்தா வாங்கிட்டு போகத்தான்.''

''கொஞ்சம் இருங்க...''

- உள்ளே திரும்பினாள். சில நிமிடங்கள் கழித்து ஒரு பித்தளைப் பாத்திரத்தோடு வெளியே வந்தாள். அதில் சுடச்சுட சோறும் குழம்பும். கூடவே கமகம வாசம்.

தாத்தா பரவசமானார்.

''தாயி... என்ன இது சமைச்ச சோறாட்டம் இருக்கே?''

''ஆமாம். சாப்பிடுங்க.''

''உனக்கு பெரிய மனசு தாயி. பெரிய மனசு. நீ மவராசியா இருக்கணும்.''

- அவள் உதட்டில் அடுத்த நொடியே ஒரு அவுட்டுச் சிரிப்பு.

''ஏன் தாயி சிரிக்கறே?''

''சிரிக்காம...? இந்த துரதிர்ஷ்டக்கட்டையை போய் மகராசியா இருன்னு சொல்றியே தாத்தா.''

''அப்படிச் சொல்லாதே அழகு. நீ அதிர்ஷ்ட தேவதை. அமோகமா இருக்கப் போறே.''

''ஆமாம்... அடுத்த ஜென்மத்துல!'' - இறுக்கமாக அவள் சொன்னவிதம், திரும்பிச் சென்ற விதம் எல்லாமே தாத்தாவை என்னவோ செய்தது.

அப்பொழுது பார்த்து ராமரத்தினம் வேறு தனக்கு தானே பேசியபடி அவரைக் கடந்தார்.

''ஐயா...''

''என்ன?''

''என்ன இப்படி ஆயிட்டீங்க...?''

''உசுரோட இருக்கேனே அதுவே பெரிசு. சரிசரி உனக்கு என்ன வேணும்?''

''அழகு பொங்குன சோத்தையே போட்டுடிச்சு. ஆனா அது முகத்துல ஒரு ஒளியில்லை. ஏதோதப்பு பண்ணப் போற மாதிரி தோணுது.''

தாத்தா சொல்லும் போதே உள்ளே கோக்குவாளி உருளும் சப்தம் கேட்டது. ராமரத்தினமும் தாத்தாவும் உள்ளே ஓடிச் சென்று பார்த்தனர்.

எதற்கு இருக்கிறது கதவின் சாவித் துவாரம்?

அதன் வழியே அழகம்மை தொங்கிக் கொண்டிருந்தாள்.

''ஆத்தா அழகு...'' - ராமரத்தினம் கத்தியபடி கதவை உடைத்துக் கொண்டு உள்ளே போகவும் உடம்பு அடங்கிப் போய் தொங்கியது.

மளமளவென்று கீழே இறக்கி மார்பில் காது வைத்துப் பார்த்ததில் இதயம் நின்று போயிருந்தது.

''ஐயோ அழகு...'' - ராமரத்தினம்.

அலறலோடு பெரும் குரல் ஒலிக்க கொல்லையில் இருந்த வடிவாம்பாளும் ஓடிவந்து அழத் தொடங்கினாள்.

பாண்டித்துரை தாத்தாவாலும் துக்கத்தை அடக்க முடியவில்லை.

சட்டென்று குற்றால அருவியை ஒட்டிச் செல்லும் பாதையில் அமர்ந்திருக்கும் ஒரு சடை பிடித்த கிழட்டுப் பெண்ணின் முகம் ஞாபகத்துக்கு வந்தது.

காளியம்மா!

செத்துப் போய்விட்ட பலருக்கு திரும்ப உயிரைக் கொடுத்த பராசக்தியாயிற்றே அவள். தாத்தா காளியம்மாவைத் தேடி ஓடத் தொடங்கினார்.

2

அதிசயம் மட்டும் ஏழு இல்லை - ரகசியமும் ஏழு என்றேனல்லவா? அதில் முதல் ரகசியம் கூறுகிறேன் - முடிந்தால் புரிந்து கொள்ளுங்கள்.

'நான் நானில்லை, நீயும் நீயில்லை, நானும் நீயும் வேறில்லை, நாம் என்றும் ஒன்றில்லை!'

-பரஞ்ஜோதி

குற்றாலம் கொட்டத் தொடங்கி ஒரு மாதமாகி விட்டது. எப்பொழுது பார்த்தாலும் ஒரே சாரல் மழைதான். தென்காசியே, வியர்த்து நிற்கும் விறகு வெட்டியாட்டம் எப்பொழுதும் சாரலால் தெப்பமாக நனைந்துதான் கிடக்கிறது.

கூட்டம் வேறு கட்டி ஏறிக் கொண்டிருக்கிறது.

சிலருக்கு திரும்ப மனுஷப் பிறப்பெடுப்போமோ இல்லை மாட்டோமோ என்கிற அவநம்பிக்கை. அதான் வருஷம் தப்பினாலும் குற்றாலம் வர அவர்கள் வரத் தவறுவதேயில்லை.

போய் அருவிக்குள் நின்றால் முதுகு, தோள் மேல் போர்க் குதிரைகள் ஓட ஆரம்பித்துவிடுகின்றன! ஒவ்வொருவருக்கும் கணச்சூடு என்று ஒன்று உடம்பில் உண்டு. அது ஒரு நீறுபூத்த நெருப்பாய் உடம்பில் ஏதாவது ஒரு பாகத்தில் பாம்பைப்போல சுருண்டு படுத்தபடி இருக்கும்.

அருவி நீருக்குள் நிற்கும்போது அதனால் உள்ளிருக்க முடியாது. படமெடுத்தபடி நிமிரும். அதனால் கண்களில் செம்மை தட்டி வாயெல்லாம் புண்ணாகிவிடும். தண்ணீரில் குளிக்கப் போய் இப்படி ஒரு அவஸ்தையா என்று அவர்கள் மணத்தக்காளி இலையைப் பிடுங்கி வெற்றிலைபோல் வாயில் அதக்கிக் கொண்டு திரும்ப குளிக்க வருவார்கள்.

வாய் நெருப்புக்கு ஏற்ற நீர் இந்த மணத்தக்காளி இலைச்சாறு. கணச் சூட்டு நெருப்பை அப்படியே கவர்ந்திழுத்துக் கொண்டு மலப் பைக்குள் போய் அடங்கி விடும்.

அப்புறமாய் கணச்சூடாவது கத்தரிக்காயாவது?

வேளைக்குப் பசிக்கும், படுத்தவுடன் தூக்கம் வரும். குற்றாலம் வந்து குளித்தது அடுத்த சீஸன் வரைக்கும் உடம்பை காப்பாற்றிக் கொடுக்கும்.

ரத்த நாளங்களில் ஒரு குதூகலம். சுரப்பிகளுக் கெல்லாம் ஒரு சுறுசுறுப்பு, தசை நார்களிடமெல்லாம் இளகிய தன்மை, கண்ணுக் குழியில் ஐஸ் கட்டி இருப்பதுபோல் ஒருவித ஜிலுஜிலுப்பு...!

இதற்காகத்தானே அப்படி ஒரு கூட்டம் கூடுகிறது? அதிலும் ஆடிப்பிரதோஷத்தின்போது ஆயிரக்கணக்கான

கற்பாறைகள் என்னும் சஹஸ்ரலிங்கங்களின் மேல் ஓடிவந்து விழுந்து அபிஷேக நீராக மாறி அது விழும்போது அந்த நீரே கங்கை நீருக்கும் மேலான புனிதத்துக்கு போய் விடுகிறதே!

இதனால்தான் சதா சர்வ காலமும் குற்றாலத் தெருக்களில் ஒரு ஓரமாக அமர்ந்திருந்து பிச்சை எடுத்தபடி இருக்கும் காளியம்மா ஆடிப் பிரதோஷ வேளையில் மட்டும் அருவிக்கு போய் உள்ளே கற்சிலையாட்டம் நின்று விடுகிறாளோ?

சரியாக 5.45 மணியிலிருந்து 6.15 வரை முப்பது நிமிடங்கள். அப்படி இப்படி நகர மாட்டாள் காளியம்மாள். மனசு 'சிவ சிவ சிவ சிவ' என்று சிவ நாமத்தில் - சர்க்கரையை எறும்பு மொய்க்கிற மாதிரி மொய்த்துக் கொண்டுவிடும்.

பாண்டித்துரை தாத்தா காளியம்மாளைத் தேடிக் கொண்டு வந்தபோது அருவிக்குள்தான் இருந்தாள் அந்தக் கிழவி.

வேறு வழியே இல்லை என்று அருவிக்கு வெளியில் காத்துக் கொண்டு நிற்க ஆரம்பித்தார் அந்தப் பிச்சைக்காரர். போலீஸ்காரர் அவ்வப்போது பார்த்து முறைக்கத் தவறவில்லை. சிலர் சில்லறை போட்டார்கள். சிலர் ''என்ன பெருசு பொம்பளைங்க குளிக்கிற பக்கமாவே லுக் விட்டுக்கிட்டிருக்கே...'' என்று கலாய்த்தார்கள். தாத்தா சட்டை செய்யவில்லை. காத்திருக்கத்தொடங்கினார். கொஞ்சம் போல பழைய நினைவுகள் கசிய ஆரம்பித்தன.

'ஹே' என்று அருவிச் சப்தம்!

அதுதான் தண்ணீரின் குரல். அந்த குரலை புரிந்து கொள்ள முடியுமா என்று காளியம்மாள் கேட்பாள். தண்ணீரின் தாவிக் குதிக்கும் சப்தம் என்பது ஒரு மொழியா என்ன - அதைப் புரிந்து கொள்வதற்கு...?

ஆனால் காளியம்மாள் 'ஆமாம். அது மொழிதான்' என்பாள். தெலுங்கு, தமிழ் மாதிரி அதுவும் ஒரு மொழி என்பாள்.

எல்லா சப்தத்திற்கும் ஒரு அர்த்தம் இருக்கிறது என்று ஒரு நாள் அவள் கூறியபோது எங்கோ ஒரு கரிக்குருவி 'ட்ரொய்ச்ச்... டிரொய்ச்ச்...' எனறு அசோகமரம் ஒன்றின் கிளையில் இருந்தபடி கத்திக் கொண்டிருந்தது.

''பாவம் அந்த கரிக்குருவி... அதோட குஞ்சைக் காணாம கத்துது. இப்ப பார் அதுக்கு நான் பதில் சொல்றேன்'' என்ற காளியம்மாள் பதிலுக்கு 'ட்ரொய்ச்ச்... ட்ரொய்ச்ச்...' என்று ஒரு தினுசாக கத்த அதுவும் மாற்றிக் கத்தியது.

''இப்ப இங்க கூப்பிடட்டுமா?''

''வருமா?''

''தாராளமா... நான் உன் ஆள். உனக்கு கெடுதல் ஒண்ணும் செய்ய மாட்டேன்னு சொன்னா அது எங்கேயும் வரும். பாக்கிறியா?''

''என்னால நம்ப முடியலை...''

''மனுஷனாச்சே... நீ எதை நம்புவே? சந்தேகப் படத்தானே உன்னால முடியும்'' என்ற காளியம்மாள் திரும்பவும் 'ட்ரொய்ச்ச்... ட்ரொய்ச்ச்' என்றாள். நல்ல

கூட்டம். ஒரு பக்கம் அருவிச் சப்தம். மறுபக்கம் ஈரம் சொட்டச் சொட்ட நடக்கும் ஜனங்களின் சப்தம். இதற்கு நடுவில் அந்த ட்ரொய்ச்ச் சப்தம் கச்சிதமாக அந்தக் கரிக்குருவி காதில் விழுந்து அதுவும் ஆவலாக சிறகசைத்துப் பறந்து காளியம்மாள் எதிரே உள்ள ஒரு சிறிய கடையின் ஓட்டுக் கூரைமேல் வந்து உட்கார்ந்தது. அவளையே பார்த்தது.

''வந்துட்டியா... வா... வா... நான் உன்னை ஒண்ணும் பண்ணமாட்டேன். உன் குஞ்சுங்கள தேடறியாக்கும். நான் உன் அம்மா மாதிரி... வா... வா... ட்ரொய்ச்ச்... ட்ரொய்ச்ச்... ட்ரொய்ச்ச்சென‌ப்...''

- பேச்சும் அந்த ட்ரொய்ச்ச் சப்தமும் கலந்து புதுமொழி பேசினாள் அவள். என்ன ஆச்சரியம் அந்த கரிக்குருவி அவள் தோளில் வந்து அமர்ந்தது. கையை நீட்டி உள்ளங்கையில் அடக்கிப் பிடித்தாள். வருடிக்கொடுத்தாள்.

பிச்சைப் பாத்திரத்தில் யாரோ ஒர சோளக் கருதை போட்டிருந்தார்கள். அதில் இரண்டொரு பருப்பை எடுத்து விரல் நகத்தால் பிளந்து வலது உள்ளங்கையில் வைத்துப் பிடித்தாள். அந்தக் குருவி கொத்தி விழுங்கியது. விழுங்கி முடிந்ததும் குருவியை வானில் தூக்கி எறிந்தாள்.

'இன்னிக்கு போய்ட்டு நாளைக்கு வா என் தோழி!'

பின்னர் சற்றே நடுங்கும் தலையோடு பாண்டித்துரை தாத்தாவைப் பார்த்தாள்.

தாத்தா சிரித்தார்.

''பரவாயில்ல காளியம்மா... ஏகப்பட்ட விஷயத்தை கத்து வெச்சுக்கிட்டிருக்கியே...'' என்றார்.

''என்ன பிரயோஜனம்... செத்த பிறகு தர்மம் மட்டும் தானே கூட வரப்போகுது. இதெல்லாத்தையும் இந்த மண்தானே எடுத்துக்க போகுது.''

''அப்படி இல்ல காளியம்மா. படிச்ச படிப்பும் வித்தையும் நிச்சயமா நம்மைத் தொடரும். வள்ளுவர் சொன்னது உனக்கு தெரியாதா?''

''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து'ன்னு சொல்லியிருக்கற குறள் தானே?''

''அதுவேதான். அதுவேதான்...''

''அது ஏழு பொறப்புக்குன்னு சொன்னதா, இல்லை ஏழு தலைமுறைக்குன்னு சொன்னதான்னு தெரியலியே.''

''ஓ... குறள்ளையே சந்தேகமா?''

''ஆமாம்... சந்தேகம்தான். இந்த மலைல நான் யார் யாரையோ பாத்துட்டேன் - ஆனா வள்ளுவரைத்தான் பார்க்க முடியலை. எப்பப் பார்த்தாலும் அவர்கிட்ட இதுக்கு அர்த்தத்தை கேக்கணும்.''

''நான் தெரியாமத்தான் கேக்கறேன்... எப்பவோ காலாவதியாயிட்ட அவங்களை எல்லாம் பார்க்க முடியுமா காளியம்மா...''

- பாண்டித்துரையிடம் மனிதர்களுக்கே உண்டான இயல்பான சந்தேகம். காளியம்மாள் அதைக் கேட்டு ஒரு மாதிரி கொனட்டலாக சிரித்தாள்.

''இந்த சந்தேகம் இருக்கற வரை சந்நியாசத்துல நீ பால பாடத்தைக்கூட கத்துக்க முடியாது'' - என்று ஒரு குட்டும் வைத்தாள். பாண்டித்துரை தாத்தாவுக்கு தலையும் மனசும்

ஒரு சேர வலித்தது. அருகே இருந்து யாராவது கவனித்தார்களானால் சிரிப்பார்கள். அந்த அளவுக்கு இருவர் பேச்சும் பைத்தியக்காரத்தனமாக இருந்ததாக அவரே நினைத்தார்.

ஓடி விடலாமா என்றுகூட இருந்தது. பல நேரங்களில் பாண்டித்துரை தாத்தா அப்படித்தான் ஓடியிருக்கிறார். ''சரியான லூசுக் கெழவி இவ... ஒரு நேரம் பார்த்தா பாம்பு பல்லியோட எல்லாம் பேசி வாயைப் பொளக்க வைக்கறா... இன்னொரு நேரம் பார்த்தா இப்பதான் கைலாசம் வரை போய் பரமசிவனோட தாயகட்டம் விளையாடிட்டு வரேங்கறா.

''லூசு... லூசு...'' என்று வாய்விட்டே புலம்பி யிருக்கிறார். அன்றும் புலம்பினார்.

ஆனால் எல்லாம் சில சந்தர்ப்பங்களில்தான்.

ஒருநாள் அந்த அதிசயம் நடந்தது.

மேலே தேனருவியில் ஒரு மூன்று வயதுப் பெண் குழந்தை தவறிப்போய் அருவிச் சுனைக்குள் விழுந்து விட்டது.

பெற்றவள் பதறிப் போய் விட்டாள். அவள் கத்திய கத்தில் காது மூக்கில் இருந்தெல்லாம் ரத்தம் வடிந்தது. ஆளாளுக்கு சுனைக்குள் குதித்து அந்த குழந்தையைத் தேடினார்கள்.

பெற்றவளையும் இழுத்துக் கொண்டு ஒரு ஓரமாகப் போனார்கள். ஆனால் குழந்தைதான் கிடைக்கவேயில்லை.

'தேனருவிச் சுனையா - கொக்கா?'

அதன் வழியாக எமன் பிடித்துச் சென்றவர்கள் மட்டும் லட்சம் பேர் இருப்பார்கள்.

குழந்தை லட்சத்தில் ஒன்றாகிவிட்டது.

இருட்ட வேறு தொடங்கிவிட்டது.

'மறுநாள் காலை விடிந்த பிறகுதான் வந்து தேடவேண்டும். வேறு வழியில்லை' என்று அந்த தாயை இழுத்துக் கொண்டு போனார்கள்.

சலசலவென்று இருந்த அருவி, குழந்தையை வாங்கிக் கொண்டு சவக்களைக்கு மாறிவிட்டது. யாருக்குமே நின்று குளிக்க மனதில்லை.

அப்பொழுது பார்த்து பிச்சை எடுத்தபடி காளியம்மாள் அந்த பக்கம் வந்தாள். கூடவே பாண்டித்துரை தாத்தாவும் இருந்தார்.

'ஹோ'வென்று இரைச்சலோடு கொட்டிக் கொண்டிருந்தது தேனருவி.

காது கொடுத்து கேட்ட பாட்டி காளியம்மாளின் முகத்தில் கூடணத்தில் சலனம்.

''என்ன காளியம்மா?''

''அருவி அழுவுது.''

''அருவி அழுவுதா?''

''ஆமாம்... ஒரு பிஞ்சை விழுங்கிட்டேனேன்னு 'ஹோ'ன்னு அழுவுது.''

''உளற ஆரம்பிச்சுட்டியா?''

''உளறல் இல்லை பாண்டித்துரை. உண்மை. சுனைக்குள்ள ஒரு பிஞ்சு சடலம் இருக்கு.''

''சரி... அதுக்கென்ன...?''

''அதுக்கென்னவா... பாவம் அந்த பிஞ்சு. அதைவிட பாவம் அவளைப் பெத்தது.''

''அது அவ செஞ்ச பாவம். அதுக்கு நாம என்ன பண்ணமுடியும்?''

''என்ன செய்ய முடியுமாவா...? இந்த காளியம்மாளால் என்ன செய்ய முடியாது?''

''வேணாம் காளியம்மா. கிறுக்குத்தனமா நீ பேசறத கேட்டா எனக்கு சிரிப்பு வருது. வா போகலாம்.''

''ஒரு பொணம் உள்ள கிடக்குதுன்னு சொல்றேன்; வா போகலாம்கறியே - நீயெல்லாம் ஒரு மனுஷனா?''

''இதோ பார் காளியம்மா. நீ சொல்ற மாதிரி பொணம் சுனைக்குள்ள இருக்குன்னே வெச்சுப்போம். அதை வெளில எடுத்து நானும் நீயும் என்ன பண்ணப் போறோம்? உசுரா கொடுக்க முடியும்?''

''ஏன் முடியாது?''

''சரி... இனி நான் இந்த இருட்டுல உன்னோட பேசிக்கிட்டு இங்க நிக்க தயாரில்லை. கீழ மௌன சாமி மடத்துல ராத்திரி அன்னதானம் இருக்குதாம். நான் அங்கதான் போகப்போறேன். நீ என்ன செய்யணுமோ செய்துக்கோ.''

- பாண்டித்துரை தாத்தா கத்தரித்துவிட்டு விறுவிறுவென்று ஓடும் அருவி நீரை ஒட்டிக் கொண்டு நடக்கத் தொடங்கிவிட்டார். அதுதான் பாதையும்கூட...

ஒரு பத்து நிமிட நேர நடை. பிறகுதான் திரும்பியே பார்த்தார். அடப்பமான இருட்டு. மலைக் காற்றின் உரசல். இதைத்தவிர வேறு எதுவும் இல்லை. பாண்டியம்மாளை விட்டுவிட்டு வந்தது அப்பொழுதுதான் தவறு என்றே உறைக்கத் தொடங்கியது.

அதே சமயம் அவள் பேசும் தோரணையும் விதமும் எரிச்சலைத்தான் தந்தன.

'ஒரு பிச்சைக்கார கிழவிக்கு இந்த லொள்ளு கூடாது. என்னமோ பெரிய பிரம்மரிஷி மாதிரி பேசறதும், நடந்துக்கறதும் நல்லாவா இருக்கு...!' என்று தனக்கு தானே கேட்டுக் கொண்டவர் போய்த் தொலைகிறது என்று காளியம்மாளைத் தேடி திரும்பத் தொடங்கினார்.

சந்திரவானம், நட்சத்திர மினுமினுப்பு எல்லாமாய் ஓரளவு வெளிச்சத்தை மலை மேல் தூவ விட்டிருந்ததால் நடப்பதில் பெரிய இடைஞ்சல் இல்லை. அருவி கொட்டும் சப்தமும் 'ஹோ'வென்று காதை அடைத்தது.

அருவியை நெருங்கியபோது காளியம்மாள் யாருடனோ பேசும் சப்தம் கேட்டது.

யாரது என்று பார்த்தபோது வியர்த்து விறுவிறுத்து விட்டது. மூன்று வயசுப் பெண் குழந்தையோடுதான் பேசிக்கொண்டிருந்தாள்.

திரும்பிவந்து முட்டை முழி முனுசாமிபோல பார்க்கும் பாண்டித்துரை தாத்தாவைப் பார்த்து ''வா பாண்டி... எனக்கு தெரியும் நீ என்ன உட்டுட்டு போக மாட்டேன்னு'' என்று சிரித்தாள்.

''காளியம்மா... இந்த குழந்தை...?''

''சுனைல முழுகி செத்துப் போச்சே அதே குழந்தைதான்.''

''செத்துப் போன குழந்தையா?''

''ஆமாம். நான்கூட சொல்லலை...? இப்ப அருவிக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா! காது கொடுத்து கேட்டுப்பார் அது சிரிக்கிறதை...''

- காளியம்மாள் பேசிவிட்டு கலகலவென்று சிரித்தாள். பாண்டித்துரை தாத்தா அந்த நொடி பிரமித்தாலும் வேறு மாதிரியும் யூகித்தார். இந்த குழந்தை இங்கே எங்காவது ஒளிந்து கொண்டிருக்க வேண்டும்; அதைக் கண்டுபிடித்து வைத்துக் கொண்டு இந்த கிழவி கலாய்க்கிறாள். செத்துப் போனவர்களாவது - உயிரோடு வருவதாவது?

''சரி காளியம்மா வா போவோம்...''

''பின்ன... கீழ சத்திரத்துல இருக்கற இந்த குழந்தையோட அம்மாவை பார்த்து அதுகிட்ட இந்த குழந்தையை ஒப்படைக்கணும்ல?''

- காளியம்மாள் சொல்லும்போது குழந்தை பாண்டித்துரை தாத்தாவை பார்த்து சிரித்தது.

''சரி வா போகலாம்...''

- மூவரும் நடந்தார்கள்.

சத்திரத்துக்குள் குழந்தையோடு நடந்தபோது மொத்த பேரும் உறைந்து போய்விட்டார்கள்.

தாய்க்காரி ஒரு புயல் காற்று போல குழந்தையை பார்த்துவிட்டு ஓடி வந்தாள்.

''காயத்ரி... வந்துட்டியா தாயி...''

''ஓ... இந்த குழந்தை பேர் காயத்ரியா?''

''ஆமாம்மா... இந்த குழந்தை உங்ககிட்ட எப்படிம்மா?''

''தேனருவிக்குள்ள இருந்தவளை தேடி பிடிச்சில்ல கொண்டு வந்துருக்கேன். பத்திரமா பாத்துக்கோ.'' - என்று அன்று காளியம்மாள் சொன்னபோது மொத்த பேரும் உறைந்து போய்விட்டார்கள்.

ஒருவர் விஸ்தாரமாக சொன்னார்:

''சுனைக்குள்ள மூழ்கி செத்துப்போன ஒரு குழந்தைக்கு உசுர் வந்துருக்குன்னா அது சாதாரண விஷயம் இல்ல... உசுரைத் தந்திருக்கிற இந்த பாட்டியம்மாவும் லேசுப்பட்டவங்க இல்லை.''

- சொல்லிட்டு நிமிர்ந்தால் காளியம்மா இல்லை. மாயமாக மறைந்து விட்டாள்.

அவள் யார்... சித்தரா? இல்லை மாயாஜாலம் தெரிந்த சூனியக்காரியா... இல்லை கிறுக்குப்பிடித்த ஒரு பைத்தியக்கார ஜென்மமா? நடப்பதெல்லாமும் புதிரா?

பாண்டித்துரை தாத்தாவுக்குள் இப்படி எல்லாம் கேள்விகள். விடைதான் இன்று வரை கிடைக்கவில்லை.

அந்த விடை என்னவென்று தெரிய இன்று காலமாகப் பார்த்து ஒரு சந்தர்ப்பத்தை தந்திருக்கிறது.

அழகம்மை செத்துக்கிடக்கிறாள்.

காளியம்மா... வா... வந்து உயிர் தந்துவிட்டுப் போ. அப்படியே நீ யார் என்றும் சொல்லிப் புரியவைத்துவிட்டுச் செல்.

அழகம்மை என் தாய்!

வயிற்றுக்கு தவறாமல் சோறிடுகின்றவர்கள் தாய் தானே?

அப்படி ஒரு தாயைக் காப்பாற்றத்தான் நான் உன்னைத் தேடி வந்திருக்கிறேன்.

பாண்டித்துரை தாத்தா உலகத்தை மிஞ்சும் அளவுக்கான எதிர்பார்ப்போடு அருவியையே பார்த்தடி இருக்க பாட்டியும் தடுமாறிக் கொண்டு வந்தாள்.

பாண்டித்துரை தாத்தாவை பார்த்து ''யாரு பாண்டித்துரையா?'' என்றும் கேட்டாள்.

''ஆமா காளியம்மா. உன்னால ஒரு உதவி ஆகணும்?''

''என்ன பாண்டி... யாராச்சும் செத்துட்டாங்களாக்கும்?''

- பாட்டியின் பதில் கேள்வி பொட்டில் அடித்தது. என்ன ஒரு கச்சிதமான கேள்வி.

''அ... ஆமாம் காளியம்மா... ஒரு அன்னபூரணி தூக்குல தொங்கிட்டா.''

''அதுக்கு நான் என்ன பண்ண?''

''இப்படிக் கேட்டா எப்படி காளியம்மா... அன்னிக்கு குழந்தைக்கு உசுரைக் கொடுத்த மாதிரி இதுக்கும் நீ உசுரைக் கொடுத்தா...''

- தாத்தாவுக்கு குரல் கதறியது. அந்த மெல்லிருட்டில் ஒரு பிச்சைக்கார கிழவனும் கிழவியும் இப்படி பேசிக் கொள்வதை யாராவது கேட்டால் இருவரையும் பிடித்துக் கொண்டு போய் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்த்து விடுவார்கள்.

ஆனால் அவர்கள் அதைப் பற்றி எல்லாம் கவலைப் படவில்லை. ஒரு அதிசயம் - பாட்டியின் கிழட்டு தேகத்திலும் நடுக்கமில்லை. அரைமணி நேரம் தண்ணீரில் நின்றிருக்கிறாள். உறைந்து போய் உயிரே போயிருக்க வேண்டுமே?

''காளியம்மா... வா காளியம்மா. வந்து அந்த பெண்ணுக்கு உசுரைக் கொடு.''

''எலே... உசுர் என்ன மளிகைக்கடை அரிசி பருப்பா, கேட்ட உடனே எடுத்துத்தர... நானும் என்ன சாமியா... இந்தா உசுருன்னு வரம் தர்றதுக்கு. நான் அஞ்சுக்கும் பத்துக்கும் ஆலாப் பறக்கற ஒரு பிச்சைக்கார கிழவி. நீயும்

என்ன மாதிரிதான். நாம போய் யாரோ செத்ததுக்கெல்லாம் கவலைப் படலாமா? போ போ... போய் நாலு காசு பிச்சை எடுக்கற வழியைப் பாரு. நானும் புடவை மாத்தணும்.''

- பாட்டி விறுவிறுவென்று நடந்தாள். அன்று பேசியதற்கு பழி தீர்க்கிறாள் என்றுதான் பாண்டித்துரை தாத்தாவுக்கு தோன்றியது.

'ஏதோ ஒரு நம்பிக்கையில் வந்தோம். ஆனால் காளியம்மாளே நான் என்ன சாமியா என்று கேட்டுவிட்டாள். இல்லைதான்...

அன்றைக்கு குழந்தை பிழைத்ததற்கு வேறு எதாவது காரணம் இருக்க வேண்டும். அவ்வளவு ஏன்... அது செத்தே போயிருந்திருக்காது. நாம்தான் இயற்கைக்கு மாறாக கண்ட கச்கடாக்களை காளியம்மாள் விஷயத்தில் கற்பனை செய்துகொண்டு விட்டோம்.

அழகம்மாளுக்கு விதி முடிந்துவிட்டது. போய் விட்டாள். அவளுக்காக அழுவதுதான் என் வசம் உள்ள ஒரே விஷயம்.'

பாண்டித்துரை தாத்தா ஒரு முடிவிற்கு வந்து கண்களில் கண்ணீரை உருளவிடவும் பாட்டி காளியம்மா அதை பார்க்கவும் சரியாக இருந்தது.

''அடப்பாவி மனுஷா... எதுக்கு அழுவறே? இப்ப உனக்கு உசுர் வேணும். அவ்வளவுதானே! வா... வா... வா போவோம்.''

- காளியம்மாள் பாண்டித்துரை தாத்தாவை கையைப் பிடித்து இழுத்தபடி நடக்கத் தொடங்கினாள். தாத்தாவுக்கு திகைப்பு.

3

'ஒரு ரகசியம் சொன்னேன். ஈரதையும் கூறிடுவேன். முடிந்தால் புரிந்து கொள்ளுங்கள். யாருக்கு நீ மகனோ அவருக்கு நீ அப்பாவாய் இருந்ததுவும் ஓர் காலம். அப்பொழுது அப்பாவை அப்பாவாய் நடத்தியிருக்க இப்பொழுது தப்பாதே உன் கர்மம் ஓர் நாளும்!

- பரஞ்ஜோதி

இரண்டு கிழடுகளும் ஊருக்குள் நுழைந்தபோது ஊரே அலமலந்து கிடந்தது. கிராமங்களில் ஒரு சௌகர்யம் - நல்லதோ கெட்டதோ அது எல்லார் முகத்திலும் தெரியும். கிழடுகளுக்கும் தெரிந்தது.

''பாத்தியா காளியம்மா... அழகம்மை போயிட்டதுக்கு ஊரே துக்கம் கொண்டாட்றதை?''

''ரொம்ப நல்லபேரெடுத்த பொண்ணோ அவ?''

''பின்ன... எனக்கு இல்லைன்னு ஒரு நாளும் சொன்னதில்லையே.''

''அதனாலதான் இவ்வளவு அக்கறையா?''

''பாத்தியா... பாத்தியா. அவ நெஜமாலுமே நல்ல பொண்ணு காளியம்மா. அதான் நான் துடிக்கறேன். வாழ வேண்டிய பொண்ணு. கல்யாணம்கூட நிச்சயம் ஆகியிருக்கு. கல்யாணப் பந்தல்ல மணப்பொண்ணா உட்கார வேண்டிய அது இன்னிக்கு கயித்துல தொங்கி இப்படி இருக்குன்னா வயித்தெரிச்சலா இருக்கு காளியம்மா...''

- பாண்டித்துரை தாத்தா கண்ணீர் உகுத்தார்.

காளியம்மாள் அதை ரசித்துப் பார்த்தாள். அந்த பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள்.

''ஆமா உனக்கு எது பூர்வீகம்?'' - காளியம்மாள்தான் கேட்டாள்.

''எதுவா இருந்தா என்ன...? இப்போதைக்கு இந்த பொதிய மலைதான் எனக்கு கைலாசம். அனுபூதிதான் கிடைக்கமாட்டேங்குது. ஆமா உனக்கு எது பூர்வீகம்?''

''நீ சொல்லாத பதிலை நான் மட்டும் சொல்லணுமாக்கும்?'' - இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் சதாய்த்துக் கொண்டனர். அப்பொழுது எதிரில் ஒரு கார் அவர்களைக் கடந்து போயிற்று. போன கார் நிற்கவும் கதவுக் கண்ணாடி வழியே ஒருவர் எட்டிப் பார்த்தார். காருக் குள்ளிருக்கும் பெண்மணியும் திரும்பிப் பார்த்தபடியே கேட்டாள்.

''யாரைப் பாக்கிறீங்க?''

''அந்த கெழவியை பாத்தா நம்ம மிட்டாதார் சம்சாரம் மாதிரி இல்லை?''

''என்ன உளர்றீங்க... அவங்க எங்க - இந்த கெழவி எங்க... இவ யாரோ பிச்சைக்காரி மாதிரி தெரியுது.''

''அவங்களும் சொத்தும் வேணாம், சொகமும் வேணாம்னு பங்களாவைவிட்டே ஓடிப் போனவங்கதானே கமலம்!''

''அதனால...?''

''இந்த குற்றாலம் பக்கத்துலதான் அவங்க பிச்சை எடுத்துகிட்டு காலம் கடத்தறதா பலரும் சொன்னாங்க. அதான் சந்தேகமா இருக்கு.''

''அதெல்லலாம் இருக்காது. அந்தம்மாவாலெல்லாம் ஒருநாள் சொத்து சுகமில்லாம இருக்க முடியாதுங்க. அப்படி வளர்ந்தவங்க. அவங்க செத்த இடத்துல இப்ப மரம் முளைச்சிருக்கும். நீங்க வேற.. வண்டிய எடுங்க.''

காருக்குள் இருக்கும் பெண்மணி அதட்டினாள். காரும் திரும்பச் சீறிக் கொண்டு கிளம்பிவிட்டது.

அழகம்மை வீட்டுமுன் நல்ல கூட்டம்.

போலீஸ் வந்திருந்தது. உள்ளே பலத்த வாக்குவாதம்.

''அய்யா, போஸ்ட்மார்ட்டமெல்லாம் வேணாங் கய்யா. பூ மாதிரி பொண்ணுய்யா! அதை அறுத்து கூறுபோட்றாதீங்கய்யா. சொன்னா கேளுங்கய்யா...''

''அதெல்லாம் முடியாதுங்க. சட்டம் எல்லாருக்கும் ஒண்ணுதான். தற்கொலைன்னு தெரிஞ்ச பிறகு நாங்க பரிசோதனை பண்ணலைன்னா நாளைக்கு எங்க வேலைதான் போகும்.''

''எலே ராமரத்தினம்... விடுலே... பொண்ணே போய்ட்டா. அவஉடம்பு எக்கேடு கெட்டா என்ன? மலயை திடப்படுத்திக்கலே...''

கேள்விகள்...

பதில்கள்...

சமாதானங்கள்...

ஒரு ஓரமாக உட்கார்ந்து விசும்பிக் கொண்டிருந்தாள் வடிவாம்பாள்.

நடுக்கூடத்தில் விறைப்பாக கிடந்தது அழகம்மையின் சடலம். கத்தரித்துக் கொண்டு நுழைந்து கொண்டிருந்தாள் காளியம்மாள்.

அவளைப் பற்றி தெரிந்த சிலருக்கு அவளைப் பார்க்கவும் பரவசம். தெரியாத சிலரோ ''யாருப்பாது - பிச்சைக்கார பொம்பளையை எல்லாம் உள்ள விட்டுக்கிட்டு...'' என்று சத்தமிட்டனர்.

எதையும் காளியம்மாள் காதில் வாங்கவில்லை.

பாண்டித்துரை தாத்தா தன் நிலை தெரிந்தவர்போல வெளியே ஒரு ஓரமாக சங்கு ஊதிக் கொண்டிருப்பவன் அருகில் போய் நின்று விட்டார்.

திருகிக் கொண்டு உள்ளே சென்ற காளியம்மாள் சடலமாகக் கிடந்த அழகம்மையை பார்த்தாள். முகத்திற்கு மஞ்சள் பூசி பொட்டு வைத்திருந்தனர்.

அற்புதமான கன்னிமைக் கோலம். அழகு பிடுங்கித் தின்றது. பரிதாபம் குப்பென்று கொப்புளித்தது. மளுக் கென்று அழகம்மையை ஒட்டி அமர்ந்த காளியம்மாள் அவளது கட்டை விரலை கட்டிவிட்ட காலைத்தான் முதலில் தொட்டாள். தொட்ட கையோடு அந்த கயிற்றை அவிழ்த்தும் விட்டாள்.

''ஏ கெழவி என்ன பண்றே?''

''உஸ்ஸ்... எதுவும் பேசப்படாது. உசுரோட இருக்கற பொண்ணுக்கு எதுக்குடா கால்கட்டு...? யாருடா அங்க சங்கு ஊதிகிட்டு...? அவனை நிறுத்தச் சொல்லுடா.''

- பாட்டி அதிர்ச்சியளித்தாள்.

''உசுரோட இருக்கற பொண்ணா? என்ன விளையாட்றியா?'' - ஒருவர் கேள்வியோடு முன்வர,

''சும்மா இருங்க... காளியம்மா சொன்னா அர்த்தமிருக்கும்''- என்று ஒருவர் தடுக்க காளியம்மாள்

அழகம்மையின் பாதத்தை சூடு பறக்க தேய்க்கத் தொடங்கி விட்டாள்.

வடிவாம்பாளுக்கும், ராமரத்தினத்துக்கும் ஒரே குழப்பமாகிவிட்டது.

''யாரு இந்த அம்மா...? என்ன பண்றாங்க?''

''பொறுமை... பொறுமை... அந்தம்மா பாக்கத்தான் பிச்சைக்காரி மாதிரி. ஆனா, அவங்ககிட்ட அபூர்வமான சக்தியெல்லாம் இருக்கு - அதெல்லாம் சொன்னா தெரியாது. அனுபவிச்சுப் புரிஞ்சுக்கணும்.''

ஒருவர் விளக்கமளித்து முடிக்கும் போது காளியம்மாள் நிமிர்ந்து ''ஒரு சுக்குத்துண்டு இருக்காடா?'' - என்று கேட்டாள்.

''சுக்குத்துண்டா...? எதுக்கு?''

''இருந்தா கொடுடா. அப்புறம் கேள்வி கேட்கலாம்.''

அடுத்த முப்பதாவது நொடி ஒரு சுக்குத் துண்டு வந்தது. பாட்டி அதை தன் வாயில் போட்டு மெல்ல ஆரம்பித்தாள்.

'இதற்குத் தானா கேட்டாள்?' - எல்லோரும் அவளை ஒரு மாதிரி பார்த்தனர்.

பின் என்ன நினைத்தாளோ... அழகம்மையின் நாடியை பிடித்துப் பார்த்தாள். கண்களில் கொஞ்சம்போல பரவசத்தை காட்டியவள் சுக்கை மென்று கொண்டிருந்த வாயால் ''ஸ்ழீசிவ நாதி இன்னும் அதங்கல...'' என்றாள். அதை ஒருவர் சரியா மொழி பெயர்த்தார். ''ஜீவ நாடி இன்னும் அடங்கலையாம்...''

''என்ன ஆச்சர்யம்... கிழவி புதுசு புதுசா ஏதேதோ சொல்லுதே...''

''எல்லாரும் கொஞ்சம் வெளிய போங்க...'' - சுக்கு வாயோடு அவள் கட்டளையிட ஆளாளுக்கு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். சிலர் அவள் கட்டளைப்படி அங்கிருந்தும் விலகினர். சொச்ச மிருப்பவர்கள் இந்தக் கெழவி யார் தங்களை வெளியே போகச் சொல்ல என்று முறைத்தனர்.

''எல்லாரும் வெளியப் போங்கன்னு சொல்றேன்ல.'' - பாட்டி திரும்பவும் கத்தினாள்.

''ஏ கிழவி... யார் நீ...? செத்த வீட்ல வந்து ரசளை பண்ணப் பாக்கறியா? நீ போ முதல்ல வெளிய... பிச்சைக்கார நாயே...''

ஒரு நாகரீகமான இளைஞன் குதிரை மாதிரி பாய்ந்து வந்து கத்தினான்.

சத்தம் பாண்டித்துரை தாத்தாவை உள்ளே இழுத்தது. ஓடி வந்தார்.

''ஐயா ராசா... அவுகள ஒண்ணும் சொல்லாதீங்கய்யா. அவுக சாமி. அவுக மனசு வெச்சா போன உசுர் திரும்ப வரும். பட்டமரம் துளிர்க்கும். பார்த்த இடத்துல செல்வம் கொட்டும். சொன்னா கேளுங்கய்யா. வந்துடுங்கய்யா வெளியில...''

''நீ யாருய்யா அவளுக்கு வக்காலத்து? போன உசுர் எந்த காலத்துலய்யா திரும்ப வந்துருக்கு? காது குத்தறதுக்கு ஒரு அளவு வேண்டாமா? ஒரு இளம் உசுர் போச்சேன்னு எல்லாரும் துடிச்சிக்கிட்டிருக்காங்க இங்க. நீங்கதகிடுதித்தம் பண்றீங்களாக்கும். உங்களை யாருய்யா கூப்பிட்டது? மாமா... வாங்க இங்க... யாரு இவர்? உங்களுக்கு தெரியுமா?''

அந்த இளைஞன் ராமரத்தினத்தை அழைத்து கேள்வியாகக் கேட்டான். கேட்டபடியே அழகம்மை பிணத்தையும் திரும்பி ஒரு பார்வை பார்த்தான். அந்த ஒற்றை நொடிப் போதில் அவளது கால் கட்டை விரலில் ஒரு சின்ன துடிப்பு.

அவனுக்கு பகீரென்றது.

கிட்டே சென்று பார்த்தான். விறைப்பாகத்தான் இருந்தது.

''என்ன பாக்கறே...? கால் விரல் துடிச்சிச்சா?''

காளியம்மாள் பாட்டிதான் கேட்டாள்...

''அது... அது... அப்படித்தான் தெரிஞ்சிச்சு.''

''தெரிஞ்சிச்சில்ல... போ வெளில...''

''போறேன். நீ என்ன பண்ணப்போறே?''

அவன் வெறித்து வெறித்துப் பார்த்துக் கொண்டு அந்த இடத்தைவிட்டு வெளியேறினான். அதற்கு முன்வரை கூப்பாடு போட்டவனா இப்படி பேசாமல் போகிறான் என்று வியப்பாக இருந்தது.

வடிவாம்பாளும், ராமரத்தினமும்கூட தயங்கித் தயங்கி வெளியேறினார்கள்.

கூடத்தில் அழகம்மையும், காளியம்மாள் பாட்டியும் மட்டும்தான்.

வெளியில் முந்திரிக் கொட்டையை உடைக்கும்போது வெளிப்படும் சப்தம் போல சலசலப்பு.

''என்னய்யா இது கதையா இருக்கு? யாருய்யா அந்த கெழவி...?''

''சத்தம் போடாதே... கெழவிய பெரிய சாமியார்ப் பொம்பளைங்கறாங்க. நம்ம குற்றால மலைமேல தனியாவே எல்லா இடத்துக்கும் போய் வருமாம். அந்த காளி அம்சமாம்.''

''அது சரி... போன உசுர் திரும்ப வரும்னு நீ நம்பறீயா?''

''அதான் சொன்னிச்சே - ஜீவநாடி இன்னும் அடங்கலைன்னு. ஒரு வேளை அதை துடிக்க வைச்சா உசுரை திரும்ப கொண்டாந்துடுமோ என்னவோ?''

''அப்ப உசுர் இருக்கும் போதே செத்துட்டதாக ராமரத்தினம் நினைச்சிட்டாராக்கும்?''

''எவன்டாவன்? எத்தனைபேர் சுடுகாட்டுல போய் நெருப்பு வைச்சா பின்னால சூடு தாங்காம எழுந்திருச்சு ஓடி வந்துருக்காங்க?''

''அப்ப அழகம்மை பொழைச்சிடுவாங்களா?''

அவர்கள் கேள்விக்கு பதில் போல கதவு திறந்தது. காளியம்மாள் கையைக் கழுவிக் கொண்டு வெளியே வரும் மருத்துவச்சியைப் போல வெளியே வந்தாள்.

எல்லாரும் அவளையே பார்த்தார்கள்.

''இனி ஒரு ஆபத்தும் இல்ல... நூறு வருஷம் நோவு நொடியில்லாம அமோகமா இருப்பா'' - என்றாள் பாட்டி.

வடிவாம்பாள் அதைக் கேட்டபடி உள்ளே ஓடினாள். அழகம்மை கண்திறந்த நிலையில் படுத்திருந்தாள்.

ஓடி வரும் வடிவாம்பாளை பார்த்து ''அம்மா...'' என்று கட்டிக் கொண்டாள். தொடர்ந்து உள்ளே சென்ற மொத்த கூட்டமே அவளைப் பார்த்து மெய்சிலிர்த்துப் போயிற்று. அவர்கள் அப்படியே திரும்பி வெளியில் வந்து காளியம்மாளைத் தேடினார்கள். அவளோ ராமரத்தினத்திடம் பேசிக் கொண்டிருந்தாள்.

''அல்ப நகைக்கும் பணத்துக்கும் ஒரு உயிரைவிட நினைக்கறது பெரிய கொடுமை... அவ நினைச்சா இனி தங்கம் கொட்டும். ஆகையால துளிகூட பணத்தாசையோ, தங்கத்து மேல பற்றுதலோ இல்லாத ஒருவனுக்கு அவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுங்க. இப்படி அவ செத்துப் பொழைச்சது வெளிய தெரிய வேண்டாம். தெரிஞ்சா சோதனைகள் வரும். அதுமட்டுமல்ல... இவ ஆசையே இல்லாதவரை அமோகமா இருப்பா. ஆசைபட்டா அது இவளுக்கு ஆபத்தாயிடும். ஞாபகம்.''

- பாட்டி சீரியஸாக சொல்லிவிட்டு திரும்பினாள். 'பொதேல் பொதேல்,' என்று எல்லோரும் அவள் காலில் விழுந்தனர்.

பாட்டி சிரித்தாள்.

''நீங்கள்லாம் திருந்தவே மாட்டீங்களா?'' - என்ற கேள்வியோடு... ''எங்கே பாண்டித்துரை' என்று அவள் விழிகள் தேடின.

அந்த கூட்டத்தில் பாண்டித்துரை தாத்தா கூப்பிய கைகளோடு காவியம்மாளையே ஏதோ சாமியை கும்பிடுவதுபோல பார்த்துக் கொண்டிருந்தார்.

''போலாமா...?'' - பாட்டி சத்தமாய் கேட்டாள். அவரிடம் ஆமோதிப்பு. நடுவில் சுற்றியிருப்பவர்கள் ''ஆத்தா எள் வீட்டுக்கு வந்துட்டு போ ஆத்தா...'' ''ஆத்தா உன் கையால எனக்கு ஆசீர்வாதம் பண்ணு ஆத்தா...'' ''ஆத்தா இந்த ரூபா நோட்டை உன் கையால தொட்டுக் கொடு ஆத்தா...''

- என்று பிலுபிலுவென்று பிடித்துக் கொள்ள பாட்டிக்கும் தாத்தாவுக்கும் தப்பித்தால் போதும் என்றாகிவிட்டது!

4

'இது மூன்றாவது ரகசியம்! வேருக்கு நீர்விடு. உனக்காக ஒரு வேருக்கு தவறாது நீர்விடு. புவனத்தில் உன் செல்வ வங்கி அதுதான். விருட்சம் வளர்ந்தால் தரித்ரியம் குறையும். துளசி வளர்ந்தால் பக்தி வளரும். வேப்பிலை தழைத்தால் வீரம் வளரும். நெல்லி வேர்விட்டால் செல்வம் வேர்விடும்.

பார்த்துப் பார்த்து வேருக்கு நீர் விடு. நீ பாதி குபேரனாகி விடுவாய்.''

-பரஞ்ஜோதி

கையில் ஒரு பிரம்புக் கூடையுடன், மூலிகைச் செடிகளின் பாரத்துடன் மலை ஏறி இறங்குவது என்பது அசாத்யம்.

ஆனாலும் பலராமையா அதில் சூரர்.

எழுபது வயது ஆகிறது. இருந்தும் திறந்த மார்போடு குளிரைப் பொருட்படுத்தாமல் அவர் மலை ஏறுவதைப் பார்த்தால் யாருக்கும் ஆச்சரியமாகிவிடும்.

அவரோ சிரிப்பார்.

''எதுக்கு இருக்கு யோகங்கள்?'' - என்று திருப்பிக் கேட்பார்.

மலை ஏறும் வழியிலே எங்காவது ஒரு சமதளத்தில் அமர்ந்து பிராணாயாமம் செய்ய ஆரம்பித்துவிடுவார். மூக்குத்துவாரங்களில் காற்றை உள்ளிழுத்து நெஞ்சுக் கூட்டில் குறித்த காலம்வரை அடக்கி பிறகு அதை சீராக வெளியேற்றுவதில்தான் எல்லாவித ஆரோக்கிய ரகசியங்களும் இருக்கிறதாம்.

சில சமயங்களில் மூக்கில் ஒரு குறிப்பிட்ட துவாரத்தை பருத்திப் பஞ்சால் அடைத்துக் கொண்டு ஒரு துவாரம் வழியாகவே சுவாசிப்பார். அப்படிச் சில நாட்கள். அதன்பின் சுவாசித்த துவாரம் அடைபட, மறு துவாரம் வழியாக சுவாசம் களை கட்டும்.

''இதென்ன சாமி கூத்து?'' - என்று கேட்டான் அவர் சிஷ்யன் காளையப்பன்.

''கூத்து இல்லடா... காத்துல இருக்கற சக்தியை வாங்கி சேமிக்கற முயற்சி'' - என்பார்.

''காத்துல இருக்கற சக்தியா?''

''பின்ன... காத்துதானே உசுர் சக்தி?''

''எப்படி சாமி?''

''அதை எல்லாம் உனக்கு வார்த்தைல சொல்லி புரியவைக்க முடியாது காளையப்பா. காத்துலதான் எல்லா சூட்சுமமும் இருக்கு. அதை எந்த விதத்துல இழுத்து எவ்வளவு நேரம் சுவாசப்பைல அடக்கி வெச்சுக்கறோம் கறதுலதான் உடம்போட ஆரோக்கியமே இருக்கு...

எந்த ஒரு யோகிக்கும் முதல் யோகம் பிராணாயாமம். இதுல தெளியாம எதுலையும் மேல வரமுடியாது.''

பலராமையாவின் விளக்கத்திற்கு தலையை ஆட்டுவான் காளையப்பன். ஆனால், அதற்குமேல் கேள்வி கேட்கமாட்டான். கேள்வி கேட்கவும் அவனுக்குத் தெரியாது. அப்படி ஒரு சிஷ்யன் அவன்.

பலராமையாவிற்கும் பொதிகை மலைத்தடத்தில் தெரியாத இடம் கிடையாது. எங்கே எந்த மூலிகை கிடைக்கும் என்பதில் இருந்து அதை எப்படிப் பயன் படுத்துவது என்பது வரையில் அதிசூரர்.

குஷ்டத்தால் அழுகிப் புழுத்துவிட்ட கையை குணப்படுத்தி அந்த ரணத்தை நீக்கியவர். பிறவி ஊமையைக் கூட சில மூலிகைகளால் பேச வைத்தவர்.

ஆலகாலம் என்னும் கொடிய விஷத்தை பாலில் கலந்து குடித்து அது உடம்பில் எந்த எதிர்விளைவையும் உருவாக்காதபடி முறித்துக் காட்டியவர்.

இப்படி மூலிகைகளோடு ஒரு சித்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தவரை ஒருநாள் ஒரு விஷயம் பெரிதாக திசை திருப்பிவிட்டது.

வயிற்றுவலி என்று சொல்லிக் கொண்டு மலைப் பையன் ஒருவனைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள். அவன் வயிறு கல்லைப் போல மாறிப் போயிருந்தது. நிஜமாலுமே கல்லை விழுங்கிவிட்டுத்தான் துடிக்கிறானோ என்றுகூட பலராமையாவுக்கு தோன்றியது.

அவனோ மலைச் சுனை ஒன்றில் தாகத்திற்கு தண்ணீர் குடித்ததில் இருந்து இப்படி ஆகிவிட்டது என்றான். தண்ணீர் குடித்தால் வயிறு கல்லாகுமா?

கேள்வி பலராமையாவையும் அந்த சுனையை நோக்கித் துரத்தியது. போய்ப் பார்த்தார். இரண்டடி நீள அகலம்கூட இல்லாத சுனை. அதில் வேப்பெண்ணெய் போல கொழ கொழவென்று நீர்! 'மலை நீர் இப்படி எண்ணெயைப் போல் இருக்க வாய்ப்பு இல்லியே...?' - கேள்வி கொத்திப் பிடுங்கியது. பதிலை 'கோரக்கர் மலை வாகடம்' என்னும் சித்தவைத்திய நூல் ஒன்று சொன்னது.

'இடியானது பூமியிலும் சமுத்திரத்திலும் விழாமல் மலைகளில் விழுந்தால் அந்த மலை வெடித்து விழுந்த இடம் பிளந்து உள்ளே பொதிகிறபோது அங்கே சக்தியானது

ஓழே போக விடாமல் மத்தியில் நிறுத்தி தன்னுள் ஐக்கியமாய் வைத்துக் கொள்ள அந்த உப்பானது மலைக்கல்லை சல்லிசல்லியாக துளைத்து மணலாக்குகிறது. அதில் மழை பெய்து அத்துடன் நீரும் இடியின் மின்சாரமும் ஒன்றுசேர வேதியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றத்தால்தான் மழை நீரானது கொழ கொழவென்று மாறி உதக நீர் என்றாகிறது. இது இளகிய தன்மையையுடைய எதையும் திடப்படுத்திவிடும் - என்று மலைவாகடக் குறிப்பும் சொன்னது. இதை புத்திசாலித்தனமாக மிருகங்கள் முகூர்த்தம் பார்த்தே தவிர்த்துவிடும் என்றும் நீண்டது அந்தக் குறிப்பு.

அப்படியானால் உதகநீர் அதோடு சேரும் எதையும் திடமாக்கிவிடுமா?

பலராமையாவை ஆச்சரியம் பிடுங்கித் தின்றது. அந்த நீருடன் சந்தனத்தூளைக் கரைத்துப் பார்த்தார். அபூர்வ சந்தனக்கல் உருவாயிற்று. அந்த நீருடன் நீல நிற கண்ணாடியைப் பொடி செய்து மாவு போல தூளாக்கி கலந்து பார்த்தார். மாசு மருவு இல்லாத நீல நிறக் கல் கிடைத்தது.

அந்த சித்த வைத்தியருக்குள்ளும் பொறி பறக்கத் தொடங்கியது.

'இப்படித்தான் இதோடு சேர்க்க வேண்டியதைச் சேர்க்க தங்கம் கிடைக்கின்றதோ?' - அவர் எண்ணம் ரசவாதத்தில் போய் நின்றது. கேள்வித்தி பலராமையாவை ஒரு பிசாசு போல் பிடித்துக் கொண்டு எரித்தது. அதன்பின் பலராமையா அறவே மாறிப்போனார். இருபத்து நாலு மணிநேரமும் தங்கம் செய்வதைப் பற்றிய ஆராய்ச்சிதான்.

அதற்காக அவர் வாசிக்காத சித்தர் பாடல் இல்லை. தேடித் திரியாத மூலிகை பள்ளத்தாக்குகள் இல்லை. அவரது

ஆராய்ச்சியில் ஏதேதோ உருவானது. கருங்கல் கிட்டதட்ட இரும்பாகியது. பூமிக்குள்ளே இயல்பாக நீண்ட காலத்தால் ஆகும் மாற்றங்கள் அவரது குடிசையில் சில மணிநேர ஆராய்ச்சியில் நிகழ்ந்தன. மண் கல்லானது. கல் இரும்பானது. துத்தநாகம் தாமிரமானது. ஆனால் தாமிரம் தான் தங்கமாகாமல் தண்ணீர் காட்டியது. அதைத் தங்கமாக்காமல் விடமாடேன் என்று அவரும் போராடிக் கொண்டிருக்கிறார். குற்றால மலையான பொதிகை மலைப்பகுதியில் சில சித்த புருஷர்கள் சர்வ சாதாரணமாக இரும்பைத் தங்கமாக்கியதாக கதைகளில் படித்திருக்கிறார். அவர்களைத் தேடியும் திரிய ஆரம்பித்தார். தேடினால் அகப்படும் மனிதர்களா அவர்கள்? அவர் கண்ணிலேயே படவில்லை. கண்ணில்பட்ட அரைகுறைச் சாமியார்களே அது உயிரின் ரகசியத்தைவிட பெரிய விஷயம் என்றனர்.

இன்றுகூட இப்படித்தான் ஒரு ஆராய்ச்சியில் சில பச்சிலைச் சாறுகளை எடுத்துக் கொண்டு ஒன்றை ஒன்றோடு கலந்து வெறி பிடித்த கண்களோடு அதைப் பார்த்துக் கொண்டுமிருந்தார்.

அப்போது சில மூலிகைச் செடிகளுடன் வந்து சேர்ந்தான் அவரது சிஷ்யப் பிள்ளை காளையப்பன்.

''சாமி... ஒரு விஷயம் கேள்விப்பட்டீங்களா?'' - என்று ஆரம்பித்தான்.

''என்ன காளைப்பா கதை விடறே...?''

''இல்ல சாமி... சுந்தர பாண்டியபுரத்துல இன்னிக்கு நடந்த ஒரு விஷயம் இது. காதுல உழுந்திச்சு - என்னாலையும் நம்ப முடியலை... ஆனா எல்லாரும் அதான் நிஜம்னு சாதிக்கிறாங்க...'' - காளையப்பன் மூலிகைகளை ஒரு மண்பாத்திரத்தில் வைத்து அலசியபடியே தன் காதில்

விழுந்த செய்தியைச் சொன்னது பலராமையா புருவத்தை சுருங்க வைத்தது. அவனை நெட்டுக்குத்தலாக ஒரு பார்வை பார்த்தார்.

''எதுக்கு சாமி அப்படி பாக்கறீங்க?''

''நீ சொல்றது உண்மையா காளையப்பா?''

''நான் என்னிக்கு சாமி பொய் சொல்லியிருக்கேன்?''

''யார் அந்த பாட்டியம்மா?''

''குற்றால அருவிகிட்ட பிச்சை எடுக்கற வங்களாம்...!''

''ஒரு பிச்சைக்காரிக்கா இவ்வளவு சக்தி? நிச்சயமா இருக்காது. அவங்க ஒரு சித்த சந்நியாசியாதான் இருக்கணும். ஆமா... அவங்க எந்த மூலிகையால பொழைக்க வெச்சாங்க? அது பத்தி ஏதாவது தெரியுமா?''

''மூலிகைல்லாம் எதுவுமில்லை சாமி... சுக்கு கேட்டாங்களாம். சுக்கு ஒரு மூலிகையா என்ன?''

''என்னடா இது கேள்வி? சுப்பிரமணியால ஆகாதது சுக்கால ஆகும்னு கேள்விப்பட்டதில்லையா?''

''எனக்கென்னாங்க தெரியும்? சுக்கை நீங்க மருந்துல ஒரு அம்சமா சேர்ப்பீங்க. ஆனா அதால உசுரை திரும்பி வாங்க முடியுமா என்ன?''

''நீதானே சொன்னே... சுக்கு கேட்டாங்கன்னு. அதை வெச்சு உயிரை மீட்டுக்காங்கன்னா ஆச்சரியமா இருக்கு. வேற ஏதோ நடந்திருக்கணும். ஆமா அந்த பொண்ணுக்கு என்ன வியாதி?''

''வியாதியெல்லாம் ஒண்ணுமில்லீங்க. தற்கொலை செய்துகிட்ட பொண்ணுங்க அது.''

''தற்கொலையா?''

''ஆமாங்க... தூக்குல தொங்கிடிச்சாம்.''

''என்னடா சொல்றே..., வியாதி, விஷம்னா மருந்து கொடுத்து காப்பாத்தலாம். நம்புறதுக்கும் இடமிருக்கு... தூக்குன்னா சுவாசம் சம்பந்தப்பட்ட விஷயம். அது அறுந்தா நாடித்துடிப்பும் அறுந்துபோகும். நாடி துடிப்பு அறுந்துட்டா என்ன செய்தாலும் பிழைக்க வைக்க முடியாதே?''

''அந்த பாட்டியம்மா தண்ணியில மூழ்கி செத்துப் போன ஒரு குழந்தையையே மீட்டவங்களாம். இதெல்லாம் அவங்களுக்கு சாதாரணமாம்.''

''காளையப்பா... இப்ப அந்த பொண்ணு எங்க இருக்கா?''

''சுந்தர பாண்டியபுரத்துல அவங்க வீட்லதான்!''

''நான் அந்த பொண்ணைப் பாக்கணுமே?''

''அதைப் பாத்து என்னத்தங்க பண்ணப் போறீங்க?''

''பாக்கணும்டான்னா...!''

''அதுக்கு அந்த பாட்டியம்மாளைப் பார்த்தாலாவது பிரயோஜனம் உண்டு.''

''இரண்டு பேரையும்தான் பாக்கணும். புறப்படு.''

''இப்பவேவா...?''

''இதுக்கெல்லாம் முகூர்த்தம் பாப்பாங்களா என்ன முட்டாள்...'' - பலராமைய்யா துண்டை உதறிக் கொண்டு புறப்பட்டார்!

5

'நாலதன் ரகசியம் நாளதைப் பற்றியது. திதியினில் ஏகாதசி விடமது பாய்ச்சும். மறுதின த்வாதசி பாய்ச்சியதை அமிர்தமாய் காய்ச்சும்! விடமது பாயும் நாளினில் பசித்திரு. அமிர்தமாய் மாறும் நாளில் புசித்திடு. ஒன்பது சக்கரமும் ஒழுங்காய் இயங்குமே உன்னுடம்புக்குள்ளே!'

-பரஞ்ஜோதி

சோகமாகத்தான் இருந்தாள் அழகம்மை.

செத்து மீண்டவளை ஊரே வந்து பார்த்துவிட்டுப் போயிருந்தது.

அவளுக்கோ ஏன் பிழைத்தோம் என்றிருந்தது.

''இப்படி எங்க தலைல நெருப்பள்ளிக் கொட்ட உனக்கு எப்படிடி மனசு வந்தது'' - என்று மூக்கைச் சிந்திக் கொண்டிருந்தாள் வடிவாம்பாள்.

''அவளை எதுவும் சொல்லாதீங்க... அதை கொஞ்சம் தனியா இருக்க விடுங்க.''

- உறவினர் ஒருவர் வடிவாம்பாளை இழுத்துக் கொண்டு நகர்ந்தார்.

தனித்து விடப்பட்டவளுக்கு தாகம் எடுத்தது. எழுந்து சென்று தண்ணீர் குடிக்கப் போனாள். பானைத் தண்ணீரை செம்பில் எடுத்து குடித்தபோது இளநீர் போல இனித்தது. அப்படியே நெற்றிப் பொட்டிலும் இரண்டு பனிக்கட்டிச் சில்லுகளை வைத்த மாதிரி ஒரு வித ஜில்லிப்பு. உடம்பே

வித்தியாசமாக மாறிவிட்டது போல தோன்றியது. இரண்டு மடக்கு குடித்த உடனேயே தாகம் அடங்கிவிட்டது.

அப்படியே தோட்டத்துப் பக்கம் போனாள். அங்கேயுள்ள சிமெண்ட்டு பெஞ்சில் அமர்ந்தாள். யோசிக்கத் தொடங்கினாள். தற்கொலை செய்து கொள்ளப் பார்த்த கோழை என்று ஊர் முழுக்க பேசப்போவது ஒரு க்ஷணம் கூசியது. கூடவே மனதில் பல கேள்விகள். இப்பொழுது நான் பிழைக்க யார் காரணம்? பாண்டித்துரைத் தாத்தாவா? அப்படித்தான் அம்மாவும் அப்பாவும் சொன்னார்கள். 'அந்த மனுஷன் மட்டும் காளியம்மாளை கூட்டிக்கிட்டு வராம போயிருந்தா நீ இந்நேரம் கைப்பிடிச் சாம்பல்' என்றார்களே!

மோசம் இந்த தாத்தா... எனக்கு உதவுவதாக நினைத்துக் கொண்டு உபத்ரவப்படுத்திவிட்டார் ச்சே...!

அலுத்துக் கொண்டாள். மனம் பிசைந்தாள்.

ராமரத்தினம் அந்த பக்கம் வந்தார்.

''என்னடா இங்க வந்து உக்காந்துட்டே?''

''அட போங்கப்பா... நான் செத்திருந்தா உங்களுக்கு பிரச்சினையே இல்லை. இப்ப பாருங்க... உயிர் பிழைச்சு உக்காந்துகிட்டிருக்கேன். இனி கல்யாணச் செலவுக்கு என்ன செய்யப் போறீங்க?''

''அந்த கவலை எல்லாம் உனக்கு எதுக்கு? ஆமாம்... எனக்கு தொந்தரவுன்னுதான் சாகத்துணிஞ்சியா?''

''அது மட்டுமில்லப்பா... வாழ்க்கைல நான் துளிகூட அதிர்ஷ்டமே இல்லாதவ. ஒரு சின்ன வெற்றிக்குகூட தகுதியில்லாதவ. என் துரதிர்ஷ்டம் உங்களையே காசைத் தொலைக்க வெச்சிடுச்சே...''

''அதெல்லாம் பழைய கதை. இனி நீ தொட்ட தெல்லாம் துலங்குமாம். அந்த பாட்டியம்மா சொன்னாங்க!''

''போங்கப்பா... போய் வேலையைப் பாருங்க. எதையாவது சொல்லாதீங்க. வரட்டும் அந்த பாண்டித்துரை தாத்தா...'' - அவள் குரலில் கோபம் தொனித்தது.

''அவர் என்னம்மா செய்தாரு?''

''அவருக்கு நான் சோறு போடப்போனது நான் செய்த பெரிய தவறுப்பா. இப்ப நான் பொழைச்சு என்னப்பா பிரயோஜனம்? திரும்ப கடன் வாங்க யாரைப் பாக்கலாம்னு அலைவீங்க. கடன்படுவீங்க. கல்யாணமாவது ஒழுங்கா நடக்குமா? அதை நினைச்சாலே பயமா இருக்கு.''

''பயப்படாதே... உன்னை அந்த பாட்டியம்மா கூட்டிக் கிட்டுவரச் சொன்னாங்க.''

''எதுக்கு...?''

''தெரியலை... கட்டாயம் கூட்டிக்கிட்டு வாங்கன்னு சொன்னாங்க.''

''வேண்டாம்ப்பா... நான் எங்கையும் வரலை.''

''அப்படிச் சொல்லாத அழகு. உனக்கு உயிர் கொடுத்தவங்கள நீ பாக்க வேண்டாமா?''

''வேண்டாம். நான் பார்க்க விரும்பலை. எனக்கு இப்ப தேவை எல்லாம் சாவுதான். ஏன்னா நான் ஒரு துரதிர்ஷ்டக்கட்டை.''

''அப்படி இல்லம்மா... செத்துப் பொழைச்ச நீ ஒரு சிரஞ்சீவியாம். நீ தொட்டதெல்லாம் தங்கமாகுமாம்.''

''போதும்பா... எனக்குதான் சின்ன வயசுலையே காது குத்திட்டீங்களே... இன்னும் எதுக்கு இப்படி எல்லாம் பேசிகிட்டு...''

''நீ விரக்தியில் பேசறேமா. ஆனா இந்த ஊரே உன்னைப் பார்த்து பிரமிச்சு போய் உக்காந்துகிட்டிருக்கு. எனக்குகூட பிரமிப்பாதாம்மா இருக்கு. உன்னை ஒண்ணு கேக்கணும்மா. தற்கொலை செய்துகிட்டு தூக்குல தொங்குன உன்னை பிணமா போட்டு வெச்சிருந்தோம். போலீஸ் வந்து போஸ்ட் மார்ட்டம்லாம் பண்ணணும்னு சொன்னாங்க. அப்பதான் அந்த பாட்டியம்மா வந்து எங்களை வெளியபோகச் சொல்லிட்டு உன்னை காப்பாத்தினாங்க. அந்த பாட்டியம்மா வந்து என்ன செய்தாங்கன்னு உனக்கு தெரியுமா?''

''தெரியாதுப்பா... எனக்கே தூங்கி எழுந்திரிச்ச மாதிரிதாம்ப்பா இருக்கு...''

''வேற எந்த நினைப்பும் இல்லையா?''

''இல்லை. ஆனா இப்ப நான் தண்ணி குடிச்சா அது இளநீர் மாதிரி இருக்கு. கண்ணு, நெற்றிப் பொட்டு இதெல்லாம் ஜில்லுன்னு இருக்கு.''

''அப்படியா... சரிம்மா. எப்படியோ நீ பொழைச்சியே அதுவே போதும். சரி சரி கிளம்பு...''

''நான் வரலைப்பா. என்னை விட்டுடுங்க...''

- ராமரத்தினம் வற்புறுத்த, அழகம்மை மறுக்க ''தாயி...'' என்றொரு குரல் கேட்டது.

இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

பாண்டித்துரை தாத்தா!

''வாங்க பெரியவரே... வாங்க! வாங்க...'' ராமரத்தினம் மிகுந்த மரியாதையோடு வரவேற்றார்.

''இங்க வீட்டுத் தோட்டத்துல என்ன பண்றீங்க?''

''ஏன் பொழைச்சேன்னு கவலைப்பட்டு கிட்டிருக்கா அழகம்மை. சமாதானப் படுத்திகிட்டு இருக்கேன்.''

''எதுவா இருந்தாலும் எதிர்த்துப் போராடணும் தாயி. இப்படியா உயிரை விடத் துணிவே?''

''போதும் தாத்தா... யாரையோ கூட்டிக்கிட்டு வந்து, என்னவோ பண்ணி என்னையும் காப்பாத்திட்டீங்க. வாழற நாள்தான் நான் ஒரு துரதிஷ்டகட்டை. எதைத் தேடிப் போனாலும் அது எனக்கு கிடைக்காது. சரி சாகலாம்னா அதுவும் எனக்கு கிடைக்காதபடி செய்து அந்த புண்ணியத்தையும் நீங்க கட்டிக்கிட்டீங்க.

நாளைக்கு மாப்பிள்ளை வீட்ல இருந்து வருவாங்க, எங்ககிட்ட காலணா கிடையாதுன்னா சரின்னு ஒத்துப் பாங்களா? காரித் துப்பமாட்டாங்க?''

- அழகம்மை சுற்றிச் சுற்றி அந்த கல்யாண விஷயத்திற்கே வந்தாள்.

''துப்பினா துப்பிட்டு போகட்டும்மா. அந்த இடம் இவ்வைன்னா இன்னொரு இடம்.''

''ஆக மொத்தத்துல என் அப்பாவை கடனாளி ஆக்கி அவரை சித்ரவதை செய்யவாவது நான் உயிரோட இருக்கணும். அப்படித்தானே?''

''அழகம்மை... நீ உன் அருமை தெரியாம பேசறே. உன் வாழ்க்கையே மாறப் போகுதும்மா. இப்பதான் உன்னைப்பத்தி காளியம்மா சொன்னா. உன்னை கூட்டிக்கிட்டு போகத்தான் வந்துருக்கேன். என் கூட வா. நீ யார்னு தெரிஞ்சுக்கோ...''

- பாண்டித்துரை தாத்தா பலமான பீடிகை போட்டார். வடிவாம்பாளும் வந்திருந்தாள்.

''பெரியவரே...! உங்களை ஒண்ணு கேட்கவா?'' - தயக்கத்தோடு கேட்டாள்.

''என்ன தாயி...?''

''உண்மையில நீங்க யாரு?''

''பாத்தா தெரியலியா...? நான் ஒரு பரதேசி.''

''நிச்சயமா இல்லை. எந்த பரதேசிக்கு இப்படி அன்னமிட்ட பொண்ணுக்கு ஆபத்துன்ன உடனே அவளைக் காப்பாத்தணும்னு தோணும்?

தேடிப்போய் அந்த பாட்டியம்மாவை கூப்பிட்டுக் கிட்டு வந்து நினைச்சு பார்க்க முடியாததை எல்லாம் செஞ்சீங்களே... உண்மைய சொல்லுங்க... நீங்க யார்?''

''பரதேசிதான்மா.. பார்த்தாலே தெரியலையா?''

''இல்லை... இந்த குற்றால மலைல அபூர்வமான சாமியாருங்க நிறைய பேர் இருக்கறதா கேள்விப் பட்டிருக்கேன். அவங்க விளையாட்டா பிச்சை எடுப்பாங் கன்னு கேள்விப்பட்டிருக்கேன். அப்படிப்பட்டவங்கள்ல ஒருத்தரா நீங்க...?''

''பரதேசிக்கு ப்ரமோஸன் கொடுத்து சாமியார்ன்னு சொல்றே. சொல்லிட்டுப்போ. இப்ப கிளம்பும்மா...''

- பாண்டித்துரை தாத்தா மர்மமாக சிரித்தார். அரைமனதாக அவருடன் அழகம்மையும் புறப்பட்டு வாசலுக்கு வந்தபோது எதிரில் வைத்தியர் பலராமையா.

''வணக்கம்... என்பேர் பலராமையா. இலஞ்சில சித்த வைத்யசாலை வைத்திருக்கேன்.''

''வணக்கம். என்ன விஷயம் சொல்லுங்க.''

136 அடிகள்

''இங்க ஒரு பொண்ணு செத்துப் பொழைச்சதா கேள்விப்பட்டேன்.''

''என் மகள்தான். இதோ...''

- பலராமையாவின் பார்வை அழகம்மையை ஊடுருவியது.

அழகம்மையை அது என்னவோ செய்தது.

''ஏம்மா... நீ நிஜம்மா இறந்து போய்த்தான் உயிர்த்தெழுந்தியா? - இல்லை அரை உயிர் கால் உயிர்னு உடம்புல ஜீவன் இருந்து அதைக் கொண்டு அந்த பாட்டியம்மா உன்னை காப்பாத்தினாங்களா?''

அழகம்மைக்கு எரிச்சலாக வந்தது. பிழைத்து எழுந்தது முதல் இதே போல் கேள்விகள்... ஆச்சரியப் பார்வைகள். நல்லவேளை பத்திரிகை, டி.வி. என்று நிருபர்கள் வரவில்லை...

அழகம்மை பதில் சொல்லாமல் வீட்டுக்குள் திரும்பிச் செல்லப்பார்த்தாள்.

''நில்லு அழகு... ஐயா...! இப்ப எதுக்கு இந்த கேள்வி? யார் செஞ்ச புண்ணியமோ என் மக எனக்கு திரும்ப கெடைச்சுட்டா. தயவு செய்து வேற விஷயம் பேசுங்க.''

''என்னை தப்பா எடுத்துக்காதீங்க. நான் ஒரு சித்தவைத்தியன். நடந்துருக்கறது ஒரு அபூர்வ விஷயம். இதை நான் எப்படி நடந்ததுன்னு தெரிஞ்சுக்கிட்டா நாளைக்கு வேறு சிலருக்கு பயன்படும் இல்லியா?''

''அதுக்கு நீங்க அந்த பாட்டியம்மாவை பாக்கணும். இவளை பார்த்து என்ன பிரயோஜனம்?''

''அதுவும் சரிதான்... அவங்க இப்ப எங்க இருக்காங்க?''

3767 / 04947

''அவங்களப் பார்க்கத்தான் கிளம்பிகிட்டிருக்கோம். வேணும்னா வாங்க. அவங்களையே கேளுங்க.''

- ராமரத்தினத்தின் பதிலைத் தொடர்ந்து அவரும் சேர்ந்து கொள்ள அவர்கள் காளியம்மாள் பாட்டியை சந்திக்க புறப்பட்டனர்.

6

'ரகசியம் இது ஐந்து... நாளதில் த்ரயோதசி - அதன் பொழுதினில் அந்திசந்தி - அதனதில் ஒரு நாழிகை தோஷங்கள் செயலிழக்கும். தோஷமிலா ப்ரதோஷ வேளை தனில் சிவ நாமச் சப்தம் ஜீவ நாடியைத் துலக்கும். துலக்கு மந்த நாடியில் போகும் உயிரைத் திருப்பலாம். பாவங்களை கரைக்கலாம்...'

- பரஞ்ஜோதி

இருட்டிவிட்டது...

இருந்தும் கொட்டும் அருவிகளில் கூட்டம் தலையை நனைத்துக் கொண்டிருந்தது. சப்தம் காதுக்கு சங்கீதமாக கேட்டுக்கொண்டிருந்தது. ஆனால் அந்த அருவிக்கு செல்லும் பாதையில் ஒரு மரத்தடியில் அமர்ந்திருக்கும் பாட்டியைத்தான் காணவில்லை.

பாண்டித்துரை தாத்தாவுக்கு ஏமாற்றமாகிவிட்டது. வைத்தியரோதுடித்துக் கொண்டிருந்தார். காளையப்பனிடம் ''பாட்டியம்மா கண்ணுல பட்டாங்கன்னா பார்த்த நொடி கால்ல விழுந்துடணும். நிச்சயமா அவங்க ஒரு சித்த சந்நியாசி'' - என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

''பெரியவரே... எங்க பாட்டியம்மா?''

''இங்கதான் இருக்கேன்னாங்க. ஆனா இப்ப பார்த்தா காணலை.''

''ஒரு வேளை கோவில்கிட்ட இருப்பாங்களா?'' - கேள்வியோடு தேடிப்பார்த்தனர். எங்கும் காளியம்மாள் கண்ணிலே படவில்லை.

''எனக்குத் தெரியும்... சித்த சந்நியாசிங்களே இப்படித்தான். அவங்களுக்கு சித்தம் போக்கு சிவம் போக்குதான்,'' என்று வைத்தியர் ஏமாற்றத்திற்கு ஒரு விளக்கமளித்தார்.

''சரி... இப்ப என்ன செய்யலாம்?''

''எனக்கு தெரியலியே...'' - பாண்டித்துரை தாத்தா குரலில் சோகம் கொட்டியது.

''சரி பெரியவரே... நாங்க கிளம்பறோம். அவங்க வந்தா வீட்டுக்கு கூட்டிக்கிட்டு வாங்க. நாங்க அவங்களுக்கு பாத பூஜையே பண்றதுக்கு தயாரா இருக்கோம்.''

- ராமரத்தினத்தின் முடிவுதான் சரி என்று பாண்டித்துரை தாத்தாவுக்கும் தோன்றியது. அரை மனசாக தலையை அசைத்தார்.

''அப்பா... வந்தது வந்தோம். அருவில குளிச்சுட்டு போவோம்பா,'' என்றாள் அழகம்மை.

ராமரத்தினமும் தலையை ஆட்டினார்.

''அப்ப நான் கிளம்பறேன்...'' - என்று வைத்தியர் பலராமைய்யா நடுவில் பிய்த்துக் கொண்டார்.

ராமரத்தினம் மகளோடும், மனைவியோடும் அருவிக்கு சென்றார்.

திபு திபு என்று நீர்க்குதிரைகள் குதித்தோடி தாவிச் சென்று கொண்டிருந்தன.

சிலு சிலுவென்று உடம்பில் ஒருவித பரவசம். அழகம்மையும், வடிவாம்பாளும் பெண்கள் பகுதிக்குள்ளும், ராமரத்தினம் ஆண்கள் பகுதிக்குமாக சென்று கொட்டும் நீர் விசைக்குள் உடம்பை நுழைத்தனர். வானில் இருந்து மலையில் இறங்கி, மலையில் தழைத்திருக்கும் கோடானு கோடி மூலிகைகளில் ஊறித்திளைத்து அதன் சாற்றை உள்வாங்கிக் கொண்டு துள்ளிக் குதித்தபடி ஓடிவந்து பொங்குமாக்கடலில் விழுந்து தெறித்து தரை எட்டிப் பாயும் அருவிக் குளியலுக்கு இணை ஏது?

ராமரத்தினத்துக்கு பரம சுகமாக இருந்தது. அதைவிட சுகமாக இருந்தது வடிவாம்பாளுக்கு... ஆனால் அழகம்மைக்கோ வேறு மாதிரி உணர்வுகள். காதுக்குள் 'சிவசிவசிவசிவ...' என்று ஓராயிரம் பேர் நின்று கொண்டு முணு முணுக்கிற மாதிரி இருந்தது. சில்லென்று பனிக்கட்டியாக உணர்த்திய நெற்றிப் பொட்டில் ஒரு கற்பூரத்துண்டு எரிகிற மாதிரி குறுகுறு உஷ்ணம்.

தண்ணீருக்குள் இருக்கும்போது நெருப்பா? அவளால் தாள முடியவில்லை. அருவிச்சாரலை விட்டு வெளியே வந்தாள். அந்த நெருப்பு அவிந்து மீண்டும் ஜிலுஜிலுப்பு தோன்றியது.

மனதில் சற்று முன் வரை நிலவிய விரக்தி உணர்ச்சி விலகி மிக சந்தோஷமாக இருந்தது. வடிவாம்பாளும் மகளைத் தொடர்ந்து வெளியே வந்தாள்.

''என்னம்மா குளிக்கலையா?''

''போதும்மா... வாங்க போய் சாமி கும்பிடுவோம்,'' கையைப் பிடித்து இழுத்தாள். வடிவாம்பாளுக்கு உடம்பில்

ஒரு மின்சாரம் பாய்ந்த மாதிரி இருந்தது. அந்த நொடி அழகம்மை முகமும் துலக்கினது போல ஒருவித பளபளப்போடு மின்னித் தெரிந்தது. ஒரு கூணம் அம்பிகை விக்கிரகம் ஒன்றைப் பார்த்த மாதிரியும் இருந்தது.

''அம்மாடி... உன்னை இப்ப பார்க்க நீ எப்படி இருக்கே தெரியுமா?''

''எப்படி?''

''சொல்லத் தெரியலடா. ஆனா ரொம்ப அழகா இருக்கே. மகாலட்சுமி மாதிரி இருக்கே...''

''சரி சரி வா...''

''இரு உங்க அப்பா வந்துடட்டும்.''

- வடிவாம்பாள் சொல்ல ராமரத்தினம் தலையைத் துவட்டியபடி வந்தார். அவரும் அழகம்மையை புதிதாகப் பார்க்கிறமாதிரி பார்த்தார்.

''என்னப்பா பாக்கிறீங்க?''

''என்னம்மா இவ்வளவு அழகா இருக்கே?''

''அம்மா சொன்னதை திருப்பி சொல்றீங்களா?''

''இல்லடா... உன் முகம் இப்ப நிலா மாதிரி ஜொலிக்குதுடா.''

''ஏன் சூரியன் மாதிரி ஜொலிக்கலையா?''

''சூரியனைப் பார்த்தா கண்ணு கூசும். ஆனா உன்னைப் பார்த்தா பாத்துக்கிட்டே இருக்கணும் போல இருக்குடா...''

''போதும்பா... நடங்க!''

- மூவரும் திரும்பி நடந்தார்கள். பாண்டித்துரை தாத்தா வழக்கமான இடத்தில் உட்கார்ந்திருந்தார். மூவரையும் பார்த்துவிட்டு எழுந்து வந்தார்.

''பெரியவர்... நீங்க இப்படி பிச்சை எடுக்கணுமா?''

- ராமரத்தினம் அது தப்பு என்பது போல கேட்டார். தாத்தா பதிலுக்கு சிரித்தார்.

''உங்களுக்கு பிச்சை எடுக்கறோமேன்னு வருத்தமா இல்லை?''

''இல்ல ராமரத்தினம்... இது சந்நியாச லட்சணம். நாளைக்குன்னு எதுவும் வைத்திருக்கக்கூடாது. அன்றைய தேவைக்கு அவன் படியளப்பான்.''

''உழைச்சாகூட படியளப்பானே?''

''உழைப்புங்கறது குடும்பஸ்தனுக்கு... வயிறு வளர்க்க நினைக்கறவங்களுக்கு, பிச்சைதான் நிஜ சந்நியாச லட்சணம்.''

''நீங்க சொல்றதே புரியலை. கேவலமான ஒரு விஷயத்தை எப்படி இப்படி விருப்பத்தோட செய்யறீங்க?''

''உங்களுக்கு சொன்னா புரியாது... ஒரு சந்நியாசி ஒருத்தர்கிட்ட இருந்து காசு பணத்தையோ, இல்லை உணவையோ வாங்கிக்கும்போது கூடவே அவங்க கர்மத்தையும் சேர்த்து வாங்கிக்கறான். பிறர் கர்மம் தொலைய காரணமா நான் இருக்கறது எவ்வளவு பெரிய தர்மம் தெரியுமா?''

''சரி... உங்ககிட்ட பேசி ஜெயிக்க முடியாதுன்னு தெரியுது. நாங்க கிளம்பறோம். பாட்டியம்மா வந்தால் கூட்டிக்கிட்டு வாங்க.''

- அவர்கள் தாத்தாவிடம் இருந்து விலகினர்.

வீட்டுக்குள் நுழைந்த போது ஆச்சரியம் காத்திருந்தது.

காளியம்மாள் பாட்டி அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தாள். பார்த்து சிரித்தாள்.

''பாட்டியம்மா... உங்களைத் தேடித்தான் குற்றாலத்துக்கு போய்ட்டுவரோம்.''

''போன இடத்துல குளிச்சீங்களா?''

''ஆஹா. பார்த்தா தெரியலயா... அப்படியே குற்றால நாதசாமியையும் கும்புட்டுட்டும் வரோம்.''

''ரொம்ப சந்தோஷம்...'' - பாட்டி மகிழ்வோடு அழகம்மையைப் பார்த்தாள்.

அவளிடம் ஒட்ட வைத்த மாதிரி ஒரு சின்னச் சிரிப்பு, நெற்றியில் விபூதி குங்குமக்கீற்று... சிடுக்கில்லாதபடி ஒன்றோடொன்று ஒட்டாத கூந்தல். பாட்டியைப் பார்த்த நொடி வாகாக காலில் விழுந்தாள்.

ராமரத்தினத்துக்குள் வியப்பு ஏகத்துக்கும் விரிந்தது.

''புனர்ஜென்மம் எடுத்துருக்கே... எல்லாம் அந்த குற்றால நாதசாமி அனுக்ரகம்'' - என்றாள் பாட்டி.

''பாக்கணும் - கூட்டிக்கிட்டுவான்னு சொன்னீங்களாமே?''

''ஆமாம். எனக்கு ஒரு உபகாரம் பண்ணுவீங்களா?''

''என்ன பாட்டியம்மா அப்படி கேட்டுட்டீங்க. நாங்க என்ன செய்யணும் சொல்லுங்க.''

''அதை நான் பிறகு சொல்றேன். இப்ப அழகுக்கு கல்யாணம் நடக்கணுமில்லயா?''

''ஆமாம்... ஆமாம்...''

''அது நடக்காம போயிடுமோன்னுதானே அழகு நீ தூக்குல தொங்கினே?''

- அழகம்மை மௌனமாய் ஆமோதித்தாள்.

''இனி அது நல்ல விதமா நடக்கும்... ஒரு குறையுமில்லாம நடக்கும். எந்த தங்க நகை காணாம போய் உங்க பொண்ணு கல்யாணம் நின்னதோ அந்த தங்க நகை உங்களுக்கு இப்ப திரும்ப கிடைக்கப் போகுது...''

''பாட்டியம்மா... என்ன சொல்றீங்க - நீங்க?''

''நான் இப்ப எதையும் சொல்லப் போறதில்லை. செய்யப் போறேன். ஆமா இப்ப கழுத்துல போட்டுருக்கற சங்கிலி தங்கமா?''

''இல்ல பாட்டியம்மா... இது ரோல்ட் கோல்ட். மூளிக் கழுத்தா ஒரு சுமங்கலி இருக்கக் கூடாதேன்னு இதை போட்டுக்கிட்டிருக்கேன்.''

''அதை கழற்றித் தரையா?''

- அடுத்த நொடி வடிவாம்பாள் கழுத்து ரோல்டு கோல்டு சங்கிலி பாட்டியின் கைக்கு போனது. அழகம்மையும் தன் கழுத்து சங்கிலியை கழற்றித் தந்தாள்.

''இவ்வளவுதானா?''

''ஒரு பித்தளை காசு மாலை இருக்கு.''

''அதை கொண்டுகிட்டு வாங்க...''

- உள்ளே பூஜை அறையில் சுவாமி படத்திற்கு போடப்பட்டிருந்த நூற்று எட்டு காசுமாலை நல்ல கனம் கனத்தது. அதையும் ராமரத்தினம் எடுத்து வந்து தந்தார்.

பாட்டியம்மாள் பார்வை வாசற்புறம் ஒருமுறை பார்த்தது. தெருநாய் ஒன்று படுத்திருந்தது. பாட்டி பார்த்த நொடி அது எழுந்தது ஓடிப் போனது.

பாட்டியின் கைகளில் இப்பொழுது ரோல்ட் கோல்ட் பித்தளை காசு மாலையின் குவியல்.

''ஒரு மண்பானை இருக்கா?''

- அடுத்த நொடியே அதுவும் வந்தது. பாட்டி ஒரு துணிப்பை வைத்திருந்தாள். அதில் இருந்து ஒரு குப்பியை எடுத்தாள். அதனுள் உதகநீர். அதை மண் பானையில் கொட்டினாள். கிட்டத்தட்ட பாதியளவு நிரம்பியது. துணிப்பையில் பலவித மூலிகைகள் இருந்தன.

''அழகம்மை... நான் சொல்றபடி செய்...'' - பாட்டியின் கட்டளை அழகம்மையை இயக்க ஆரம்பித்தது.

''அந்த வேரை எடுத்த பானைல போடு...''

- போட்டாள்.

''அந்த சொர்ண சந்தியை எடுத்து உன் உள்ளங்கைல வைத்து கசக்கிப் பிழிஞ்சு அந்த சாற்றைப் பானைல விடு...''

விட்டாள்.

''அந்த செந்தூரத்தை, பஸ்பத்தை, மெழுகை, உப்பை எடுத்து உள்ளங்கைல வெச்சு தேச்சு பானைல போடு.''

போட்டாள்.

''இந்த நகைகள அதுக்குள்ள போடு...''

நகைகள் பானையின் மூலிகைக் கரைசலில் விழுந்து மூழ்கின.

''உன் கையால இந்த பானையை எடுத்துக்கிட்டுபோய் மொட்டை மாடில நிலா வெளிச்சம் விழுற மாதிரிவை.''

- வைத்துவிட்டு வந்தாள்.

''இந்தா... இந்த துணிப்பையும் இதுல இருக்கற எல்லாமும் இனி உனக்கு சொந்தம்.''

''பாட்டியம்மா இது எனக்கு எதுக்கு?''

''நான் மூச்சை நிறுத்திக்கலாம்னு இருக்கேன். எனக்கு எதுக்கு இதெல்லாம்?''

''அப்படி என்ன இருக்கு அதுல?''

''என் குருநாதர் பரஞ்ஜோதி சாமிங்கிறவர் எழுதின ஓலைகள்... என் அனுபவத்துல நான் எழுதின டைரி.''

''அதெல்லாம்...''

''அவ்வளவும் ரகசியங்கள். சொர்ண ஜால ரகசியங்கள்.''

''அப்படின்னா...?''

''போகப்போக விளங்கும். ஆமாம் - உங்ககூட வந்த வைத்தியன் திரும்பிட்டானா?''

''அவர்... அவர் வந்தது உங்களுக்கு எப்படி தெரியும்?''

- பாட்டியம்மாள் சிரித்தாள்.

''சிரிக்காம சொல்லுங்க. நீங்க யாரு?''

''நானா... நான் ஒரு பிச்சைக்காரி...''

''பாண்டித்துரை தாத்தா மாதிரியே சொல்றீங்களே...''

''பாண்டித்துரையும் என்ன மாதிரி தானே?''

''சரி... மொட்டை மாடில நிலா வெளிச்சத்துல அந்த பானையை வைக்கச் சொன்னீங்களே. என்ன ஆகும்?''

''நாளைக்கு சூரிய உதயத்தின் போது பாருங்களேன்.''

''அது தங்கமாயிடுமா?''

- பாட்டி சிரித்தாள்.

''இப்ப நீங்க செஞ்சதுதான் ரசவாதமா?''

- மீண்டும் சிரித்தாள்.

''ஆமாம். இந்த பையை அவன்கிட்ட கொடுத்துடுங்க.''

''உங்க பேச்சு, சிரிப்பு எல்லாமே புதிரா இருக்கு...''

''அப்படியே இருக்கட்டும். மனுஷ வாழ்க்கையே புதிர்களால ஆனது தானே?''

''சரி. எங்ககிட்ட ஏதோ உதவி கேட்டீங்களே? என்ன உதவி?''

''வாங்களேன் - சொல்றேன்.''

- அவர்களால் அதற்குமேல் பாட்டியிடம் பேசமுடியவில்லை. வெளியே வாசலுக்கு வந்தனர். வீதியே வெறிச்சோடி கிடந்தது.

''என்ன இது ஒருத்தரைக்கூட காணலை.''

''எல்லாரும் தன்னை மறந்துட்டாங்களோ என்னவோ?''

- பாட்டி மீண்டும் புதிர் போட்டாள்.

வீதியில் ஒரு குதிரை வண்டி மட்டும் நுழைந்திருந்தது.

கூப்பிட்டு வந்தது போல வீட்டு வாசலில் நின்றது.

''பாட்டியம்மா... வண்டிய வரச் சொன்னீங்கன்னு ஒருத்தன் சொன்னான்.'' - வண்டிக்காரன் சொன்னான். எப்பொழுது வரச் சொன்னாள்? கேள்விகளோடு வண்டியில் ஏறினார்கள். ராமரத்னம் ஓடிப்போய் வீட்டின் கதவைப் பூட்டி விட்டு சாவியோடு வந்தார்.

குதிரை வண்டி ஓட ஆரம்பித்தது!

7

'ஆறாம் ரகசியம் தீராத இன்பம் தரும். உரு தரும் தந்தை, கருவது கொண்ட தாய். திருவது தரும் குரு மூவரே தெய்வம்! மற்றவர் தேவர்களே... மலையகக் கோவில்கள் அருள் நிதிச் சாரங்களே...! அறிந்தவர் பிறப்பதும் தொடராது அடைவார் அவர் முக்தியே!'

- பரஞ்ஜோதி

ஏக சிந்தனையில் இருந்தார் பலராமையா!

''என்ன சாமி... பாட்டியம்மாவை தேடிப் போயும் பாக்க முடியலைங்கற கவலைல இருக்கீங்களா?'' - காளையப்பன் கச்சிதமாக அருகே இருந்து கேட்டான்.

''ஆமாம் காளையப்பா... அவங்கள பார்த்தே தீரணும்.''

''அப்ப அவங்ககிட்ட ஏதோ இருக்குன்னு நினைக்கிறீங்களா?''

''நிச்சயமா. ஒரு பிச்சைக்காரி மாதிரி இருந்துகிட்டு ஜீவ நாடியை தட்டி எழுப்பறாங்கன்னா அவங்ககிட்ட நிச்சயமா ஏதோ இருக்கு.''

''அதான் சித்த சந்நியாசின்னு சொன்னீங்களா?''

''ஆமாம்... அவங்க சித்த சந்நியாசியாதான் இருக்கணும்.''

''எனக்கு தெரிஞ்சு பொம்பள சித்தர்கள் யாருமே இல்லீங்களே...?''

''இவங்க சித்தர்களுக்கும் மேல ஒருபடி மேல போனவங்களா இருக்கணும்.''

''அப்படிப்பட்டவங்க எதுக்கு பிச்சை எடுக்கணும்?''

''பிச்சைல இரண்டு வகை. தரித்திரத்தால பிச்சை எடுக்கறவங்க ஒருவகை. தேவைக்கு மேல எதுவும் வெச்சுக்காம உயிர் வாழறதுக்காக மட்டுமே பிச்சை எடுக்கறது இன்னொரு வகை. ஒண்ணு பிச்சை. இன்னொண்ணு பிட்சை.''

''பிட்சைன்னா...?''

''சந்நியாசிகளோட லட்சணத்துல அது ஒண்ணு...''

''புதுசா இருக்கே...''

''உனக்கு தெரியலைன்னு சொல்லு... மனிதப் பிணங்களை பிச்சு தின்ற அகோர சந்நியாசியில இருந்து, மண்டை ஓட்டை பாத்திரமா பயன்படுத்தற காபாலிக சந்நியாசிகள் வரை எவ்வளவோ பேர் இருக்காங்க...''

''சரிங்க சாமி. பாட்டியம்மாவை பார்த்து என்ன பண்ணப் போறீங்க?''

''நிச்சயமா அந்த பாட்டியம்மாவுக்கு பல சித்துகள் தெரிஞ்சிருக்கும். ஒரு குருவுக்காகத்தான் நான் அலையறேன். நான் தேட்ற குருவா அவங்க அமைஞ்சிட்டா எவ்வளவோ சித்துக்களை கத்துக்க முடியும்...''

''சித்துவேலை செய்யறவங்களை இந்த சமுதாயத்துல யாரும் பெரிசா மதிக்கறதில்லிங்களே. ஏமாத்து வேலைக் காரங்கன்னுதானே அவங்களப் பத்தி சொல்றாங்க.''

''புரியாதவன் ஆயிரம் சொல்வான். உன்னைப் போல தொடை நடுங்கிகள் இப்படித்தான் கேள்வி கேட்பாங்க. லட்சியவாதி தன் காரியத்துல குறியா இருப்பான்.''

''அப்ப பாட்டியம்மாவை விடப் போறதில்லையா நீங்க?''

''நிச்சயமா விடப் போறதில்லை. அவங்க யார், எங்க தங்கி இருக்காங்கன்னு எல்லாத்தையும் எப்படியாவது தெரிஞ்சுக்கணும். ஒரு வழி சொல்லேன்.''

''அவங்க குற்றால அருவிகிட்ட பிச்சை எடுக்கறவங் கன்னு கேள்விப்பட்டோம். அங்க கடை வெச்சுருக்கற நம்ம ஆளுங்க யாரையாவது கேட்டா?''

''உருப்படியான யோசனை!''

இரவு நேரம் என்கிற தயக்கங்கள் இன்றி ஒடிந்து வளைந்து குற்றால அருவிக்கு செல்லும் பாதையை ஒட்டி பழக்கடை வைத்திருக்கும் ராமசாமியின் கடை முன்போய் நின்றார் பலராமையா.

மணி பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

கடையை ராமசாமியும் ஏறக்கட்டிக் கொண்டிருந்தான்.

''வாங்க வைத்யரே... என்ன இந்த நேரத்துல...?''

''காரணமாத்தான் ராமசாமி... இங்க ஒரு பிச்சைக்கார பாட்டியம்மா இருக்காங்களே அவங்களைப் பத்தி...''

''யாரு... காளியம்மா பாட்டியா?''

''அவங்களேதான்... அவங்க யார்...? இப்ப எங்க போயிருக்காங்க?''

''ஏன் வைத்யரே... உங்களுக்கு ஏதாவது சிக்கலா?''

''சிக்கலுக்கும் அவங்களுக்கும் என்ன சம்பந்தம்?''

''தீராத பிரச்சனை யாருக்காவது இருந்தா இப்படித்தான் கேட்டு வருவாங்க. அதுவும் எதையாவது சொல்லி அனுப்பும்.''

''அப்ப அருள் சக்தி உள்ளவங்கன்னு சொல்லு.''

''நாங்க அப்படித்தான் நினைக்கிறோம். என் கடையை நான் திறந்ததும் முதல்ல அவங்களுக்கு சாப்பிடறதுக்கு எதையாவது கொடுத்துட்டுதான் வியாபாரத்தை ஆரம்பிப் பேன். அன்னிக்கு வியாபாரமும் அமோகமா இருக்கு.''

''அப்ப தினமும் நல்ல சில்லறைதான்னு சொல்லு.''

''எங்க... ஒரு நாள் இங்க பிச்சை எடுத்தா பத்து நாள் காணாம போயிடுவாங்க.''

''ஏன் அப்படி?''

''யாருக்கு தெரியும்? அவங்கள புரிஞ்சுக்கற சக்தி இங்க யாருக்கும் இல்லை. ஒரு தடவை அவங்கள ஒரு போலீஸ்காரர் பிடிச்சு தள்ளி விட்டுட்டாரு. அன்னிக்கே ஆக்சிடென்ட் ஆகி அதுல அவர் கை முறிஞ்சுபோச்சு. இதை என்னன்னு சொல்ல?''

''நான் இப்ப அவங்கள பக்கணுமே?''

''நினைச்சால்லாம் பாக்க முடியாது வைத்யரே. ஆமா எதுக்கு இத்தனை அவசரம்?''

''அவசரமில்லை... ஒரு ஆர்வம்தான்!''

''சோழியன் குடுமி சும்மா ஆடாதும்பாங்க. ஏதோ விஷயம் இருக்கு. என்ன விஷயம் சும்மா சொல்லுங்க.''

''சில வைத்திய ரகசியங்கள தெரிஞ்சுக்கத்தான்...''

''அதானே பார்த்தேன்... கண்ணுல பட்டா சொல்லி அனுப்பறேன் - இப்ப கிளம்புங்க.'' ராமசாமி கடையை பூட்டி சாவியை பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். சட்டென்று ''எதுக்கும் பாண்டித்துரை தாத்தாவைப் போய் பாருங்க... அவங்க இருக்கற இடம் தெரியலாம்.''

''அது யார் பாண்டித்துரை தாத்தா...?''

''அவரும் கிட்டதட்ட காளியம்மா பாட்டி மாதிரி தான்... அதோ... அந்த கல்திண்டு மேல படுத்திருக்காரே அவர்தான்...''

- ராமசாமி கை காட்ட வைத்தியர் காலிரண்டும் தாத்தாவை நெருங்கி நின்றன.

''பெரியவரே...'' கூப்பிட்டார். தாத்தாவும் நிமிர்ந்து பார்த்தார். ஊடே சின்னப் பிள்ளை போல கூதைக்காற்று வீசிக் கொண்டிருக்க, குளிர், காது மடலில் ஈரத்தை பூசி நரம்பை இழுத்துப் பார்த்தது.

''யாரு...''

''என்பேர் பலராமையா. சித்தவைத்தியன்.''

''சரி... அதுக்கென்ன இப்போ?'' - தாத்தா கேட்டபடியே போர்வையை விலக்கினார். தெரு விளக்கு வெளிச்சம் மஞ்சள் நீர் பச்சக்கென்று முகத்தில் பட்ட மாதிரி படவே பளிச்சென்று தெரிந்தது முகம்.

முகத்தைப் பார்த்த பலராமையாவுக்கு தூக்கி வாரிப்போட்டது.

''ஐயா... நீங்க... நீங்க...''

''என்னைத் தெரியுமா?''

''நீங்க ஊத்துக்குளி மிட்டாதார் மாணிக்கவேலர் அப்பா தானே?''

''ஓ... கண்டுபிடிச்சிட்டியா - உனக்கு மாணிக்க வேலைத் தெரியுமா?''

''தெரியுமாவா? அவரோட குஷ்ட ரோகத்துக்கு நான் ளதானே மருந்து கொடுத்தவன். அப்பதான் பங்களால உங்க

போட்டோவைப் பார்த்தேன். நீங்ககூட வடக்க கும்பமேளாவுக்கு போன இடத்துல காணாம போயிட்டதா சொன்னாங்க. நீங்களா இங்க இப்படி...?''

''உனக்கு இப்ப என்ன வேணும் சொல்லு.''

''என்னய்யா கொடுமை? எதுக்குய்யா இப்படி பிச்சைக்காரன் மாதிரி நீங்க கஷ்டப்படணும்?''

''நான் கஷ்டப்பட்றதா உன்கிட்ட சொன்னேனா?''

''இப்படி வீதியில கிடந்தா என்னய்யா அர்த்தம்?''

''இந்த உலகம், அதோட கஷ்ட நஷ்டம் எதுவும் எனக்கு ஒரு விஷயமில்லைன்னு அர்த்தம். நான் இப்ப சந்நியாசி. என் குடும்ப ஞாபகங்களை எனக்குள்ள மூட்டாதே. போ... போயிடு.''

- தாத்தா சற்று சப்தம் போட்டு பேசிவிட்டு அங்கிருந்து அவராக விலகத் தொடங்கினார்.

''ஐயா... ஐயா...''

''வராதே... வந்தே... உனக்கு நல்லதில்ல.''

''கொஞ்சம் என் பேச்ச கேளுங்க. உங்களுக்கிருக்கற ஆஸ்தி பாஸ்திக்கு நீங்க இப்படி சுத்தறது நல்லா இல்லையய்யா.''

- பலராமையா பேசிக் கொண்டே பின்னால் போனார். சட்டென்று தாத்தாவின் பார்வை ஒரு தெரு நாய் பக்கம் திரும்பியது. அதுவரை அமைதியாகப் படுத்திருந்த அந்த நாய் அவர் பார்த்த நொடி எழுந்திருந்து பலராமையாவை துரத்தத் தொடங்கியது. அதற்குமேல் பலராமையாவாலும் அவரோடு நின்று பேச முடியவில்லை!

8

'சப்தம ரகசியமிது. ஆக்கினைத் திலகம், இரண்டதில் ரத்தினம், அந்தணனாயின் சுவாசமிசை கேசபங்கம், மூவதும் மூலக பலம் பெருக்குமே!

- பரஞ்ஜோதி

நள்ளிரவு!

தெள்ளிய வானம். ஒச்சமில்லாத நிலாப்பார்வை. அந்த குதிரை வண்டி குற்றால மலையின் ஒரு அடிவாரச் சருக்கத்தில் தேங்கி நின்றது.

அருகில் மாந்தோப்பு - அதனுள் சில்வண்டுகளின் முழு வீச்சுக் கச்சேரி. மற்றபடி எங்கும் அமைதி. தோப்பின் வாசலில் ஒருவர் காத்திருந்தார்.

''ரொம்ப நேரமா காத்திருக்கியா பழனி?'' - கேள்வியோடு குதிரை வண்டியை விட்டு இறங்கினாள் காளியம்மாள் பாட்டி. கூடவே இறங்கினார் ராமரத்தினம். பின்னாலே அழகம்மை, வடிவாம்பாள்.

அந்த மனிதர் மெதுவாக தலையை ஆட்டினார்.

''எல்லாத்தையும் தயார் பண்ணிட்டியா?''

''உம்...'' - சொல்லும் போதே அவர் குரலில் சோகத்தின் உச்சம்.

அழகம்மைக்கு எல்லாமே வியப்பாக இருந்தது.

'ஏதோ ஒன்று அதிசயமாக நடக்கப் போகிறது' - உள்மனது சொன்னது.

சாதாரணமாக இரவில் வெளியே செல்லப் பயப்படுபவள் அந்த பயமே இல்லாதபடி பெற்றவர்களைப் பார்த்தாள்.

''சரி வாங்க போகலாம்...''

- பாட்டி அவர்களோடு உள்ளே நடந்தாள். ஏராளமான காய்ந்த சருகுகள். அவர்கள் நடக்கும்போது சர சரத்து சப்தம் போட்டன. ஒரு ஓரத்தில் குப்பையைக் கொளுத்த வேண்டி எரியும் தீ மயானம் போல புகைக் கொட்டாரத்தை அந்த மாந்தோப்பெங்கும் பரத்தியிருந்தது.

''பாட்டியம்மா... இப்ப இங்க எதுக்கு வந்துருக்கோம்?''

''சொல்றேன்... வாங்க...''

- பாட்டி பிடி கொடுக்காமல் நடந்தாள்.

ஒரு மரத்தடியில் - ஒரு யானையைப் போட்டு புதைக்கலாம்... அப்படி ஒரு குழி. அதில் அகல் விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

''இது என்ன குழி...? விளக்கு வேற எரியுது!''

- வடிவாம்பாளிடம் சின்ன திடுக்கிடல் வெளிப் பட்டது.

''அம்மா இப்ப மகாசமாதி ஆகப்போறாங்க. இந்தக் குழியை தோண்டி ஒரு மாசமாகுது. என்னை தினசரி இங்க காத்திருக்கச் சொன்னாங்க. இன்னிக்கு நிஜமாலுமே வந்துட்டாங்க...''

- தோப்பின் வாயிலில் காத்திருந்த அந்த பழனி என்னும் மனிதர் தன் விசும்பலுக்கு இடையே பேசினார்.

மகாசமாதி என்ற உடனேயே ராமரத்தினத்துக்கு புரிந்து விட்டது. பரிதாபமாக பாட்டியை பார்த்தார்.

''எமன் வந்து கூட்டிகிட்டு போனா நான் பதில் சொல்லணும். நானே போனா எமன் எனக்கு பதில் சொல்லணும். அதான் நானே போகப் போறேன்.''

- பாட்டியின் பதில் புரியாத புதிராக இருந்தது. என்ன பதில்...? எமன்...? புரியவில்லை. ''மணி என்ன ஆச்சு?'' - பாட்டிகேட்க ராமரத்தினம் தன் அந்த நாளைய ரோலக்ஸ் கை கெடிகாரத்தைப் பார்த்தார். அவ்வளவாக கண் தெரிய வில்லை. ஒரு மரத்தில் தீப்பந்தம் ஒன்று தகதகத்துக் கொண்டிருந்தது. அதன்கிட்டே சென்று பார்த்தார். மணி 12ஐ கடந்து விட்டிருந்தது.

''பன்னிரண்டு தாண்டிடிச்சு பாட்டியம்மா...''

''நல்லது. ஏகாதசி திதி வந்தாச்சு. இந்திரியங்கள் விஷம் சுரக்கற நேரம் இது. இப்ப உயிர் அடங்கினா விஷமும் அடங்கும்.''

''என்ன சொல்றீங்க...?''

''மனுஷ வாழ்க்கைல எவ்வளவோ ரகசியங்கள். புரிஞ்சவங்களுக்கு அது அதிசயம்னுதான் செல்லணும்.''

''அதிசயமா?''

''ஆமாம். என் குருநாதர் பரஞ்ஜோதி சாமிங்கறவர் அவைகளை எழுதியே கொடுத்துருக்கார். அது அந்த துணிப்பைல இருக்கு. அது இந்த உலகத்துக்கு பயன் படட்டும்.''

''என்ன அது... ஒண்ணு ரெண்ட சொல்லக்கூடாதா?''

''சொல்றேன். நமக்கு உடம்பைத் தருபவன் தந்தை. அதை வளர்த்து அதுக்கு உயிர் தருபவள் தாய். உயிர் உடம்பு உலகுக்கு வந்த பின்னே அதுக்கு ஒளி தருபவன் குரு. இவர்கள்தாள் தெய்வம். மற்ற தெய்வங்கள்கூட தேவர்கள்தான்.

ஆரோக்ய உடம்போட, ஒளியான கல்வியோட இருந்திட்டா மட்டும் இந்த பிறவியை கடந்துட முடியாது. அதுக்கு ஆசிகளை அள்ளித் தருவதில் மலை மேல் இருக்கும் கோவில்களுக்குத்தான் முதலிடம். இது தெரிந்து மலை ஒளி அருள் பெற்று நெறி தவறாமல் வாழ்ந்தால் அவங்களுக்கு மறுபிறப்பு கிடையாது. முக்திதான்கறது ஒரு ரகசியம்.''

''அற்புதம்... நீங்க சொல்றத பார்த்தாதரைமேல உள்ள கோவில்களுக்கு...''

''உன் கேள்வியில் குயுக்தியும், ஒப்பிட்டு பாக்கற தன்மையும் இருக்கு. ஏன், எதனால, எப்படிங்கற கேள்விகளை எதிர்மறையா சிந்திச்சா இப்படித்தான் வெளிப்படும். எதனால மலையகத்து கோவில்களுக்கு முதலிடம்னு கேட்டா தெளிவான விடை கிடைக்கும்.

ஒரு சன்னதிக்கு வருவதற்கு முன்னால உடம்போட சக்கர ஆதாரங்கள், சுரப்பிகள் விழிப்புல இருக்கணும். நீ மலை ஏறும்போது மனம் உடம்பு இரண்டுலையும்இது சுலபமா நடக்குது. இந்த விழிப்புக்கு காற்றாகிய பிராணனின் பங்கும் உண்டு. சுத்தமான காற்றுக்கு மலையகங்கள் இடமளிக்கறதால சுத்த பிராணனும் ஒரு உதவியா நமக்கு அமையுது.

ஆகையால சன்னதி முன்னால போய் நிற்கும்போது அங்க நிலவற அருள் அலைகளை உடம்பு அதிகமாக சுவீகரிச்சுக்குது.

அந்த அருள் அலைகள்தான் நம் சிந்தனைக்கும் எண்ணத்திற்கும் அடிப்படை. கோள்களின் பிடியில அவைகளின் ஆதிக்கத்துக்கு தகுந்த மாதிரி சிந்திக்கிற சிந்தனைகளையும் ஒழுங்குபடுத்தி அதை சலவை செய்யற ஆற்றல் அருள் அலைக்கு மட்டும்தான் உண்டு. அருள் அலை ஆற்றல் அதிகரிக்க அதிகரிக்க கோள்களின் பிடி தளரும். நாம யாருங்கறதுல இருந்து பிரபஞ்சம் வரை எல்லாம் புரியவரும். யாரும் வந்து போதிக்க வேண்டாம். எதையும் சொல்லி விளங்க வைக்க வேண்டாம். தானாவே எல்லாம் புரியும்...

என் குருநாதர் எனக்கு வித்தைதான் கத்துத்தந்தார். நான் யார்ங்கற கேள்விக்கு அவர் பதிலே சொல்லலை. அதை நானே ஒரு நாள் உணர்ந்தேன்... இப்ப பரமாத்மாவோட ஐக்கியப்பட தயாராயிட்டேன்.

இந்தக் குழியில் நான் அமர்ந்து தியானம் பண்ணப் போறேன். என் தலை சாயும் போது இந்த உடம்பை இயக்கிய பிராணன் பிரிஞ்சதுன்னு பொருள். அந்த பிராணனாகிய ஆத்மாவுக்கு அதன் பிறகுதான் ஆற்றல் அதிகம். அது தன்னையறிய வேண்டி அலையும் என்னைப் போன்றவர்களுக்கு உதவி செய்ய இங்கேயே சுற்றிச் சுற்றிவரும்.

எனது பிராணனுக்கு ஒளியைத் தந்தவர் என் குரு பரஞ்ஜோதி. அவர் ஆணல்ல. பெண்! எனக்கு பிறகும் அந்த ஒளி தொடரணும். அதுக்காக நான் பிரார்த்தனை செய்த போது தான் அழகம்மை உருவுல எனக்கு வழி கிடைச்சது.'' ஒரு நீண்ட விளக்கத்தை அதுவரை தந்து வந்த பாட்டி அழகம்மையை ஆசை பொங்க பார்த்தாள். பிறகு ''பழனி! நீ அழகம்மையோட போய் பால்கொண்டு வா'' என்றாள்.

அழகம்மையும் பழனியும் விலக, பாட்டி தொடர்ந்தாள். ''அழகம்மைக்கு கர்மவினைப்படி ஆயுள் முடிஞ்சுபோச்சு, இப்ப இருக்கற அவள் வாழ்க்கை விதியை மீறிய ஒரு வினைச் செயல். அதுக்கு அர்த்தமிருக்கு. கோள்கள் அவளை எதுவும் செய்யாது. கோள்களின் பிடியைவிட்டு விலகிய எல்லா உயிருமே மற்றவர்களுக்கு மருந்தைப் போன்றது. மருந்துன்னா மூலிகைன்னும் சொல்லலாம். அழகம்மையும் ஒரு மூலிகை. அவ எப்படிப்பட்ட மூலிகைங்கறது என் வயது வரும்போது அவளுக்கு புரியும். அதன் பிறகு அவளும் என்னைப் போலவே இந்த பாதைக்கு வந்துடுவா...''

-பாட்டி முடித்த மறுநொடி ராமரத்தினம் தடுமாறிப் போனார். வடிவாம்பாள் வேகமாகக் கேட்டாள். ''அப்ப என் மகளுக்கு குடும்ப வாழ்க்கை கிடையாதா? அவளும் சந்நியாசிதானா?''

''என்வயசு வரும் போதுன்னு சொன்னேன். இப்ப என் வயசு எவ்வளவு தெரியுமா?''

-அவர்கள் இருவரும் மலங்க மலங்கப் பார்த்தனர். எனக்கு இப்ப எண்பதாகுது. நானும் அழகம்மை மாதிரியேதான். அந்தஸ்தும் காசும் பணமும் குறிப்பாதங்கம் தான் என் கல்யாண வாழ்க்கைக்கு குறுக்க நின்னது. வெறுத்துப் போய் தற்கொலைல இறங்கினேன். பரஞ் ஜோதியம்மாவால உயிர் பிழைச்சேன். எந்தத் தங்கம் என் வாழ்க்கைக்கு குறுக்க நின்னதோ அதை நான் நினைச்ச மாத்திரத்துல செய்ய முடிஞ்சவளா மாறினேன்... ஆனா என்னாலயும் ரசவாதம் செய்ய முடியும், ரசவாதம் செய்யத் தேவையான மூலிகைல நானும் ஒருத்திங்கறது எனக்கு குடும்ப வாழ்க்கைல இருந்த வரை தெரியாது...''

''அப்ப என் மகள் இப்ப ஒரு ரசவாத மூலிகையா?''

''ஆமாம்... அவளும் ஒரு மூலிகை. அவளே ஒரு மூலிகை. அவள் கைகளுக்கு இப்ப அசாதாரண சக்தி உண்டு. பட்டுப் போன ஒரு செடியைக்கூட அவ வருடிக்கொடுத்தா அதுக்கு உயிர் வந்துடும். அவ நினைச்சா ஒரு லாரித் தங்கத்தை ஒரு நாள்ல செய்யலாம். ஆனா...''

பாட்டி போட்ட 'ஆனா'வில் ஏக அழுத்தம்.

''என்ன பாட்டியம்மா அந்த 'ஆனா'வுக்கு அர்த்தம்?''

''இந்த உண்மை அவளுக்கு தானா தெரியறவரை நீங்க அவளுக்கு தெரிவிக்கக்கூடாது... ஆசையால உந்தப்பட்டு நீங்க அவளுக்கு அதை தெரிவிச்சா அதிக பட்சம் அவ ஆயுள் ஒரு நாள் தான். எப்படியோ ஏதோ ஒரு விதத்துல மரணம் வந்து அவளைக் கொண்டு போயிடும்.

அவளோட ரசவாதம்கற அற்புதக் கலையும் செத்துப் போயிடும்.

அந்த கலை வாழறதும் சாகறதும் இனி உங்க கைல தான்!''

-பாட்டி வைத்த முத்தாய்ப்பு இருவரையும் ஒரு மிரட்டு மிரட்டிற்று. கையில் பால் சொம்புடன் அழகம்மையும் வந்து சேர்ந்தாள்.

பார்க்க அன்னபூரணி போலவும் தெரிந்தாள். 'அழகம்மை... அப்ப நான் உத்தரவு வாங்கிக்கட்டுமா?'' -கேள்விக்கு அழகம்மை பதற்றமே இல்லாமல் தலையை ஆட்டினாள். பழனிக்கு கண்களில் நீர் துளிர்த்திருந்தது.

''ஏன் அழறே பழனி... நான் உன் கண்ணுக்கு தெரியமாட்டேன்... ஆனா உங்ககூடவேதான் இருக்கப் போறேன்.''

- பழனி பதிலுக்கு காலில் விழுந்தான். எழுந்தான். ''இந்த குற்றாலத்துல என்னை பயன்படுத்திக்க நினைச்ச வங்க எவ்வளவோ பேர். ஆனா நீ ஒருத்தன்தான் எனக்கு எதாவது செய்யணும்னு நினைச்சே. அதனாலேயே உன் தோப்புக்குள்ள நான் ஐக்கியப்படறேன். போய்ட்டு வரட்டுமா?''

-பழனி அரைமனதாக தலையை அசைத்தான். பாட்டியும் குழிக்குள் இறங்கினாள். அமர்ந்தாள்.

தியானம் ஆரம்பமாயிற்று...

நொடிகள் நிமிடங்களை எட்டிப் பிடித்தது. நிமிடமும் மணியை எட்டிப் பிடித்தது. மணியும் சரியாக சூரிய உதயத்தைத் தொட்டு பொல பொலவென்று விடியலைத் தொட்டு நிற்க காளியம்மாள் பாட்டியின் சிரம் ஒரு பக்கமாக சாய்ந்தது.

''அம்மா....'' -பழனியிடமும் ஒரு உச்சபட்ச கதறல். அதன் பிறகு பால் சொம்பை வைத்திருந்த அழகம்மை அதை பாட்டியின் தலையில் கொட்டி அபிஷேகித்தாள். மண் கவளங்கள் சரிந்து பாட்டியை அப்படியே மூடின.

மூடிய இடத்துக்கு மேல் அந்த அகல் விளக்கு தொடர்ந்து எரிய ஆரம்பித்தது. ராமரத்தினமும், வடிவாம்பாளும் அழகம்மையை கூட்டிக்கொண்டு கிளம்பினர். ஏதோ ஒரு சொப்பனம் கண்ட மாதிரிதான் இருந்தது. தோப்புக்கு வெளியே வந்த போது பாண்டித்துரை தாத்தா குளித்துவிட்டு காவிவேட்டியை தலைக்குமேல் கொடி பறப்பதுபோல பிடித்தபடி வந்துகொண்டிருந்தார்.

அழகம்மையை பார்க்கவும் நின்றார்.

''தாத்தா...''

''எங்கம்மா இங்க...?''

''பாட்டியம்மா முக்தியடைஞ்சிட்டாங்க தாத்தா...''

''கடவுளே-என்ன சொல்றே நீ?''

''தோப்புக்குள்ள போய் பாருங்க...''

- தாத்தா உள் ஓடினார். எரியும் விளக்கு அவருக்கு எல்லாவற்றையும் புரிய வைத்துவிட்டது. தாத்தாவிடம் சில நொடிகள்தான் தடுமாற்றம். அதிலிருந்து மீண்டவர் கைகளைக் கூப்பினார். பழனி பார்த்துக் கொண்டே இருந்தான்.

''பழனி...''

''ஐயா...''

''இனி இது பிருந்தாவனம் பழனி. நான் இங்கேயே தங்கிடட்டுமா?''

''நீங்க இங்கேயே தங்கிடுவீங்கன்னு பாட்டியம்மாவும் சொல்லியிருந்தாங்கய்யா...''

''அப்படியா... ரொம்ப சந்தோஷம் பழனி... ரொம்ப ரொம்ப சந்தோஷம். இங்க சின்னதா ஒரு கோயில் கட்டணும். என்ன?''

''பெரிசாவே கட்டுவோம்யா. அதான் ஒரு பங்குக்கு நாலு பங்கா மரங்கள் காய்க்குதே- காசுக்கா பஞ்சம்?''

''தினசரி ஆறுகால பூஜை - பஜனை - நாமாவளி எல்லாம் சொல்லணும் பழனி.''

''எல்லாத்தையும் அமோகமா செய்துடுவோம்யா.''

''அழகம்மை கல்யாணத்துக்கும் எதாவது செய்யணும்.''

''அதை நான் செய்துட்டேன்னு சொல்லுன்னாங்க பாட்டியம்மா.''

''அப்படியா... அடடே எனக்கு ஒரு வேலையும் வைக்கலையே.''

-பாண்டித்துரை தாத்தா கசிந்துருகினார். அவ்வளவையும் கனத்த இதயத்தோடு பார்த்துவிட்டு ராமரத்தினம் மகளோடு புறப்பட்டார்!

9

சப்தம ரகசியம் புரிந்தவர் சத்தமின்றி வாழ்வர். அற்புதமாய் வாழ்வர். அர்த்தத்தோடு வாழ்வர். ஒருவருக்கு விளங்கிய அது ஏழு பிறப்புக்கும் இடைவிடாது தொடரும்.

- பரஞ்ஜோதி

வீட்டுக்குள் நுழைந்தவுடன் முதல் காரியமாக மாடிக்குத்தான் ஓடினார் ராமரத்தினம்.

முதல் நாள் இரவில் நிலவைப் பார்க்கும்படி வைத்திருந்த மண்பானையை ஒடிப்போய் கையில் எடுத்தார். உள்ளே மூலிகைச் சாறு சுண்டிச் சுருங்கி பல வித நிறங்களோடு தெரிந்தது.

கையைவிட்டு அலசி பித்தளை நகைகளை அவசர அவசரமாக வெளியே எடுத்தார். பாசி பிடித்தமாதிரி அதில் மூலிகைப்பசை.

வடிவாம்பாளும் அழகம்மையும் பின்னாலேயே வந்து அவர் கையில் உள்ளதைப் பார்த்தனர்.

''வடிவு... அழகு...இதை கழுவணும். தண்ணி கொண்டா. ஒடு.''

''ஏன் பதட்டப்படறீங்க. பொறுமையா பார்ப்போமே இப்ப என்ன?''

''தங்கம் புள்ள தங்கம். அவ்வளவு தங்கம். இது மட்டும் தங்கமா இருந்துட்டா நான்தான் இனி குபேரன். இந்த ஊர்தான் குபேரபட்டணம். ஒடு-தண்ணிய கொண்டா.''

- கிறுக்குக் குரலில் அலறினார் ராமரத்தினம். வடிவாம்பாள் தண்ணீருடன் வந்தாள். அவசர அவசரமாக கழுவினார். பக்கத்துவீட்டு மாடியில் துணிகாயப்போட வந்த செந்தாமரை பார்க்கிற மாதிரி தெரிந்தது. அப்படியே மூவரும் கீழே இறங்கினார்கள். கழுவி முடித்த நகைகள் பளபளவென்று மின்னின.

''தங்கம் தான்... தங்கமாயிடிச்சு...' தங்கந்தான் இல்ல...'' - வடிபாம்பாளின் முகத்தில் சூரிய பிரகாசம்.

''இரு.. போய் நகைக் கடைக்காரன்கிட்டயே காட்டி சோதிச்சுட்டு வந்துடறேன்.''

வெளியேறிப் பறந்தார்.

அரைமணி நேரத்திலே திரும்பிவந்தார்.

''வடிவு... வடிவு... அவ்வளவும் தங்கம் தான். தங்கம்னா தங்கம்-சொக்கத்தங்கம் புள்ள. செக்கத்தங்கம்.'' வடிவு வாயைப் பிளந்தாள். அழகம்மை ஆச்சரியமாக பார்த்தாள்.

''என்ன அழகு பார்க்கறே .. நீ இப்ப தங்கம் செய்யத் தெரிஞ்சவ. நீ மனசு வைச்சா ஒரு லாரித் தங்கம் செய்யலாம்...''

- ராமரத்தினம் குரலில் சந்தோஷம் பீறிட்டது. வடிவாம்பாளுக்கு பகீர் என்றாகிவிட்டது.

''என்னங்க நீங்க... இதைப் போய் அதுகிட்ட சொல்லிகிட்டு. பாட்டியம்மா சொன்னது மறந்து போச்சா?''- எச்சரிக்கை செய்தாள் வடிவாம்பாள். சட்டென்று அவளைதனியே அழைத்துக் கொண்டு ஒதுங்கிய ராமரத்தினம் ''பைத்யம்-பைத்யம்''- என்றார்.

''யார் பைத்யம்? நானா- நீங்களா?''

''நீ தான்... அவ யாருங்கறத அவளுக்கு சொல்லாம அவளைக் கொண்டு நாம எவ்வளவு தங்கம்னாலும் செய்துக்கலாம். இல்லையா?''

''நீங்க அப்படி வர்றீங்களா?''

''பின்ன...எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பம் இது. விடலாமா?''

''இருந்தாலும் பயமா இருக்குதுங்க. நம்ம அழகுக்கு ஏதாவது ஆயிட்டா...''

''ஒண்ணும் ஆகாது... அப்படியே ஆனாதான் என்ன?'' -ராமரத்தினம் ஒரு இமாலய அதிர்ச்சியை சாதாரணமாக அளித்தார். வடிவாம்பாள் அகண்ட கண்களோடு பதிலுக்கு பார்த்தாள்.

''என்ன பாக்கே...? ஒரு லாரி தங்கம். நம்மால நினைச்சு பாக்கமுடியுமா? பத்து தலைமுறைக்கு உக்காந்து

சாப்பிடலாம். ஒரு லாரி தங்கத்துக்காக ஒரு பொண்ணை கொடுத்தாதான் என்ன?''

வடிவாம்பாளின் இதயத்தில் ஒரு இடியே இறங்கியது. உள்மனசு ''பாவிமனுஷா..'' என்று மலை உச்சியில் நின்று கத்துகிற மாதிரி கத்திற்று.

''அப்படிப் பாக்காதே வடிவா... இந்த மாதிரி சந்தர்ப்பமெல்லாம் கோடில ஒருத்தனுக்கு அதுவும் ஒரே ஒரு தடவை தான் வரும். அதோ அந்த பை நிறைய மூலிகை இருக்கு. ஏடுங்க எங்க எது கிடைக்குனு சொல்லப்போவுது. எதுக்கு விடணும்?''

''அதை அப்ப அந்த வைத்தியர்கிட்ட கொடுக்கப் போறதில்லையா?''

''எனக்கென்ன தலையெழுத்தா... ஏண்டி அது அம்புட்டும் ரகசியம்டி. சாதாரண ரகசியம் இல்ல. ரசவாத ரகசியம். குபேர ரகசியம், தங்க ரகசியம், சொர்ண ரகசியம்...''

- ராமரத்தினத்துக்கு தங்கப் பைத்தியம் தலைக்கு ஏறிவிட்டதுபோல தோன்றியது.

''வேண்டாங்க... பாட்டியம்மா அப்புறம் நம்மளை சும்மாவிடாது.''

''என்ன பண்ணும்? சமாதியை பொளந்துகிட்டு வந்து காளிமாதிரி சூலம் எடுத்து குத்திப்புடுமாக்கும் பைத்தியம்.''

''செஞ்சாலும் செய்யுங்க. செத்துட்ட நம்ம பொண்ணுக்கே உசுரைக் கொடுத்துச்சே?''

''அது கொடுக்கும் பேரது பாத்தியா நீ... நம்ம மக சாகவே இல்லைன்னு நான் சொல்றேன். அழகும் என்ன சொன்னா... தூங்கி எழுந்திரிச்ச மாதிரிதான் இருந்திச்சுன்னு சொன்னால்ல...?''

''ஐயோ... நான் என்ன பண்ணுவேன்! உங்களுக்கு தங்கக்கிறுக்கு பிடிச்சுகிச்சே. அதுக்காக கொலைகூட செய்வீங்க போல இருக்குதே.''

''தாரளமா செய்வேன். நீ தான் கிடந்து அலட்டறே. இந்த மாதிரி நேரத்துலதான் நாம சாமர்த்தியமா நடந்துக்கணும். அது புரியல உனக்கு. யோசிச்சுப்பாரு. குண்டுமணி தங்கத்துக்கு எவ்வளவு கஷ்டப் பட்டிருப்போம்?''

- ராமரத்தினம் கண்களில் ஆசை குற்றால வெள்ளமாய் வழிந்தது.

''நீங்க என்ன சொன்னாலும் சரி. நான் இதுக்கு ஒத்துக்கமாட்டேன். எனக்கு என் மக முக்கியம். அவ வாழ்க்கை முக்கியம். காசும் பணமும் எப்ப வேணா வரும். ஆனா என் மக போனா வரமாட்டா...''

''ஏன் வரமாட்டா வடிவு... உனக்கு நான் தரேன். நமக்கென்ன வயசா ஆயிடிச்சு?''

-வடிவாம்பாளுக்கு அடிவயிற்றில் சொரேல் என்று கத்தி பாய்ந்த மாதிரி ஆகிவிட்டது. பேச்சே வரவில்லை. வெறித்தாள்.

''என்னம்மா அங்க பண்றீங்க... அப்பா என்ன சொல்றாரு?'' - அழகம்மை கேட்டுக் கொண்டே வந்தாள்.

அவள் வரவும் ராமரத்தினத்திடம் மௌனப் பேச்சிலும் திசைமாற்றம்.

''ஒண்ணுமில்லடா... முப்பது பவுனுக்கு அம்பது பவுனே இப்ப நம்மகிட்ட இருக்கு. உனக்கு இப்ப பாத்துருக்கற மாப்பிள்ளையைவிட இன்னும் நல்ல மாப்பிள்ளையையே பாக்கலாம்னேன். அதான்!''

-அடுத்த நொடி அழகம்மைக்கு சுரீர் என்றது.

''என்னப்பா நீங்க... எனக்கு வேற மாப்ளையா?''

''ஏம்மா... பாத்தா என்ன? நீ என்ன இப்ப சாதாரண பொண்ணா...?''

''சாதாரண பொண்ணு இல்லாம...? உங்களுக்கு என்ன வந்துச்சிப்பா? ஏன் இப்படி உளர்றீங்க?''

''சரிசரி... அதையெல்லாம் பிறகு யோசிப்போம். நீ போ... நானும் உன் அம்மாவும் பேசி ஒரு முடிவுக்கு வந்த பிறகு நீ உன் விருப்பத்தை சொல்லலாம்.''

''என் விருப்பம் எப்பவும் ஒரே விருப்பம்தான். எனக்கு பார்த்த மாப்பிள்ளையைத்தான் நான் கல்யாணம் செய்துக்குவேன். இதுல எந்த மாற்றமும் இருக்கக்கூடாது. ஞாபகம் இருக்கட்டும்.''

- அதிரடியாக சொல்லிவிட்டு அவள் விலகினாள்.

''சரி ஒழியுது... சாகப்போறவ எவனைக் கட்டுனா எனக்கு என்ன? நான் இப்பவே போய் பித்தளை நகைங்கள ஒரு மூட்டை அள்ளிக்கிட்டுவரேன். இன்னிக்கு ராத்திரி அவ்ளவும் மொட்டமாடில நிலா பாக்க தங்கமாகணும். மத்ததெல்லாம் பொறவுதான்.''

-ராமரத்தினம் ஆசையை கொட்டிவிட்டுச் செல்ல வடிவாம்பாளுக்கு நெஞ்சைப் பிசைந்தது. இதை யாரிடம் சொல்லி அழுவது என்றும் தெரியவில்லை. பார்வை தன்னிச்சையாக அந்த துணிப்பைமேல் சென்றது.

சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவள் ஒடிப்போய் அதைக் கையில் எடுத்தாள்!'

10

''நீ பிறருக்கு செய்வதுதான் உனக்குச் செய்வதாகும். உனக்குச் செய்து கொள்வது விரயமாகும்!'

-பரஞ்ஜோதி

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார் பலராமையா. கதவு தட்டப்படும் சப்தம் கண்களை திறக்கச் செய்தது. போய் கதவைத் திறந்தார்.

துணிப்பையுடன் நின்று கொண்டிருந்தாள் வடிவாம்பாள்.

''வாங்கம்மா... வாங்க உள்ள..''

''இந்த பையை உங்ககிட்ட கொடுக்கத்தான் வந்தேன்.''

''என்ன பை இது?''

'காளியம்மா பாட்டி இதை உங்ககிட்ட சேர்க்கச் சொன்னாங்க.''

''அப்படியா...? அவங்க இப்ப எங்க?''

''சொன்னா அதிர்ச்சியடையக் கூடாது. இன்னிக்கு அதிகாலைலதான் அவங்க மகா சமாதியானாங்க.''

''கடவுளே...! நிஜமாவா?''

''ஆமாம். மாந்தோப்புலதான் அவங்க சமாதி ஆனாங்க. நீங்க போனா தரிசிக்கலாம். இந்தாங்க... இதைப் பிடியுங்க முதல்ல.''

''இதுல என்ன இருக்கு...? அவங்களுக்கு என்னை எப்படி தெரியும்?''

''உங்க கேள்விக் கெல்லாம் எனக்கு விடை தெரியாது. ஆனா ஒண்ணு மட்டும் நல்லா தெரியும். நீங்க ஒரு சித்தவைத்தியர். உங்க வைத்தியத்துக்கு பயன் படவேண்டிய விஷயங்கள் இதுல இருக்கு. உங்ககிட்ட இது சேர்ந்தா ஊருக்கு நல்லதுன்னு பாட்டியம்மா நினைச்சிருக்கலாம். அதைத்தான் என்னால் சொல்ல முடியும்.''

''அம்மாடி.... நான் இந்த மாதிரி விஷயத்துக்காகத்தான் அவங்கள பாக்கதுடிச்சேன். நேத்து ராத்திரிகூட தேடிக்கிட்டு போனேன். ஏமாற்றம்தான் மிச்சம். ஆனா இப்ப அவங்களே கொடுத்ததா சொல்லி இதை கொடுக்கறீங்க. ரொம்ப நன்றியம்மா... நன்றி.''

''இன்னொரு விஷயம்.''

''என்னம்மா...?''

''இதை என் கணவர் வந்து திரும்ப கேட்டா எந்த காரணத்தைக் கொண்டும் கொடுக்கக்கூடாது.''

''அப்படின்னா அவர் வந்து கேட்பாரா?''

''கேட்டாலும் கேட்கலாம். அவருக்கு இப்ப தங்கக் நிறுக்கு பிடிச்சிருக்கு. இதுல ரசவாதம் பண்றது பத்தியும்

இருக்கு. ஆகையால் அவர் இதை உங்ககிட்ட இருந்து திரும்ப கேட்கலாம்.''

''என்னது... ரசவாத ரகசியம் பத்தி இதுல இருக்கா?''

''ஆமாம். இந்த ரகசியம் உங்கள் மாதிரி சித்தவைத்தியர்களால பாதுகாக்கப்படணும்கறதுதான் பாட்டியம்மா விருப்பம். என் கணவரோ வேற மாதிரி நினைக்கிறார்...''

வடிவாம்பாள் வைத்தியரை ஒரு உலுக்கே உலுக்கிவிட்டாள்.

அவர் கைகள் வேகமாக பையை அலசியது. ஒரு சிறிய குடுவை. உதில் உதகநீர்... ஒரு மரப்பெட்டி. அதில் வித விதமாய் வேர்கள், மூலிகை இலைகள், அதன் விதைகள், நடுநடுவே ஏட்டுக்கட்டு. அவர் கைகள் நடுங்கிற்று... உடம்பில் வியர்வை பெருகிற்று.

''அவ்வளவும் செல்வம்... அழிக்க முடியாத செல்வம். நான் இதை கட்டிக்காப்பாத்துவேன். நீங்க கவலைப் படாதீங்க. தைரியமா போய்ட்டுவாங்க...'' என்று படபடப் போடு சொன்னார்.

''நீங்க இங்க இருந்தா உங்களோட என் கணவர் மோதலாம். அவர் கொலை வெறில இருக்கார். ஆகையால்...''

''புரியுதம்மா... புரியுது... நான் இந்த ஊரை விட்டேகூட போயிடறேன்... போதுமா?''

''நீங்க எங்க வேணா போங்க. உங்க உடம்புல உயிர் இருக்கறவரை இந்த ஊருக்கு மட்டும் வரக்கூடாது. குறிப்பா என் மகளை மட்டும் பார்க்கவே கூடாது.''

''உங்க மகளை நான் எதுக்கு பாக்கணும்? அவங்ககிட்ட எனக்கு என்ன இருக்கு? எனக்கு தேவை யெல்லாம் மூலிகைகள். அதுக்காக காடுகாடா அலயப் போறேன். இந்த ஊர்ல இனி எனக்கு வேலையும் இல்லை.''

- வடிவாம்பாள் அதைக் கேட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

'ஒரு வேளை நீ பார்க்க நினைத்தாலும் அவளைப் பார்க்க முடியாது. அவள்தான் இந்த மண்ணை விட்டு அமெரிக்காவுக்கு மாப்பிள்ளையோடு பறந்து விடுவாளே...?'

வீட்டுக்குள் நுழைந்தபோது எதிரில் ராமரத்தின எரிமலை.

''வடிவு... எங்க அந்த துணிப்பை?''

''தெரியும்... அதைப்பத்திதான் கேப்பீங்கன்னு எனக்கு நல்லா தெரியும்.''

''பை எங்க... அதுல இருந்த மூலிகைச் சரக்கெல்லாம் எங்க?''

''எல்லாம் பத்திரமா இருக்கு...''

''அது எங்க இப்போ...?''

''முதல்ல அழகு கல்யாணத்தை முடியுங்க. பிறகு கேளுங்க.''

''சாகப்போறவளுக்கு எதுக்குடி கல்யாணம்?''

''அதனாலதான் கல்யாணம் பண்ணணும்கறேன். அவளுக்கு கல்யாணம் ஆகணும். ஒரு வருஷமாவது அவ கல்யாண வாழ்க்கை வாழணும். அதுக்குப் பிறகு உங்க பேராசையை பத்தி யோசிப்போம்.''

''என் ஆசையோட உன் ஆசையை மோதவிட்றியா? வேண்டாம் வடிவு. நீ கதவைத் தட்ற லட்சுமியை கழுத்தைப் பிடிச்சு தள்ளி விரட்றே.''

''அந்த லட்சுமியை ஒரு வருஷம் கழிச்சு வந்து தட்டுன்னுதான் சொல்றேன். அதுக்குள்ள எனக்கும் ஒரு பேரனோ பேத்தியோ பொறந்துடும். மகபோனாலும் பேரன் பேத்தி முகத்துல அவளைப் பார்க்கலாம் இல்லியா?''

வடிவாம்பாள் அற்புதமாக சமாளித்தாள். ராமரத்தினம் கடுரமாக முறைத்தார். ''முறைக்காதீங்க... மீறுனா அந்த பையும் அதுல இருக்கற சரக்கும் எரிஞ்சு சாம்பலாயிடும்.''

-அந்த அதட்டலும் மிரட்டலும் ராமரத்தினத்தை கட்டிப்போட்டது.

பொங்கிப் புரண்டு திமிங்கலத்து வால் பாகமாய் மனதில் அறைந்தபடி கிடக்கும் ஆசையை அடக்குவது மிகச் சிரமமாக இருந்தது. ஆனால் வடிவாம்பாள்தான் பெரிய பூட்டாக போட்டுவிட்டாளே...!

அந்த விமானம் விண்ணில் ஏறியது.

'அப்பாடா...!' விமான நிலையத்தில் இருந்து வெளியே வந்த வடிவாம்பாளிடம் நிம்மதிப் பெருமூச்சு. காத்திருக்கும் டாக்சியில் ஏறி அமர்ந்தாள். ராமரத்தினம் பார்வை என்னவோ விமானம் மேலேயே இருந்தது. அந்த விமானம் ஒரு புள்ளியாய் மறையும்வரை பார்த்துக் கொண்டே இருந்தார்.

நெடுநேரம் கழித்துத்தான் டாக்சியில் வந்து ஏறினார். டாக்சியும் புறப்பட்டது. வடிவாம்பாளுடன் ராமரத்தினம் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. அவ்வளவு இறுக்கம்.

எப்பொழுது அந்த துணிப்பை மறைந்ததோ அப்போ திருந்தே பேச்சு முறிந்துவிட்டது... ஆனால் தனக்குத் தானே ராமரத்தினம் ஒரு பைத்தியம் போல் பேசிக் கொள்ளத் தவறவேயில்லை. உறவுக்காரர்களும் அவருக்கு புத்தியில் தான் ஏதோ கோளாறு என்று நினைத்துவிட்டனர்.

ஆனால் அந்த அதிபயங்கர ரகசியம் வடிவாம்பாளுக்கு தானே தெரியும்...?

ஒரு ரகசியத்தையே ரகசியமாக்கி அழகம்மைக்கு திருமணத்தையும் முடித்து விட்டாள். அழகம்மையும் விமானம் ஏறிவிட்டாள். ஒரு பெரிய காரியத்தை சாதுர்யமாக முடித்தாகிவிட்டது. இனி இந்த தங்கக்கிறுக்கனை என்ன செய்வது?

எப்படி சமாளிப்பது?

டாக்சி ஓடிக்கொண்டிருந்தது.

வடிவாம்பாளுக்குள் கேள்வி ஓடிக்கொண்டிருந்தது.

''ஒரு வருஷம்... சரியா ஒரே வருஷம்.. அப்புறம்தான் குபேரன். ஆமாம்... நான் குபேரன். கட்டாயமா குபேரன்.''

- ராமரத்தினத்தின் முணுமுணுப்பு டிரைவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

மெல்ல திரும்பிப் பார்த்தான். ''என்னம்மா சொல்றாரு...?'' என்று ஒரு மாதிரியாக கேட்டான்.

''அவர் அப்படித்தான் நீ போப்பா...''

அவளது அலட்சியம் ராமரத்தினத்தை கிறியது. பருந்துபோல விருட்டென்று திரும்பி கொத்துவதுபோல ஒரு பார்வை பார்த்தார். வடிவாம்பாள் சட்டையே செய்யவில்லை.

''வடிவு...''

அவள் திரும்பாமல் வெளியே சாலையையே பார்த்தாள்.

''உன்னைத்தாண்டி...''

''என்ன?'' - திரும்பாமலே கேட்டாள்.

''நான் குபேரன் இல்லியா...?''

- அவளிடம் பதிலில்லை.

''ஒரு வருஷம்... நீ சொன்னபடி ஒரே வருஷம்... அழகு திரும்பி வந்தாகணும். வரலே... நான் பாத்துப் பாத்து சேத்து வெச்சிருக்கிற பித்தளை நகைங்கள எல்லாம் தங்கமாக்காமலே உன்னைக் கொன்னுடுவேன்.''

-சினிமா வில்லனைப் போல் பேசினவரை திரும்பவும் டிரைவர் திரும்பிப் பார்த்தான்.

''அம்மா... என்னம்மா சொல்றாரு...? இவர் பேசறதே புரியலியே...''

''புரியாதுப்பா. அவருக்கு தலைல அடிப்பட்டதுல இருந்தே இப்படித்தான்.''

-சர்வ அலட்சியமாக வடிவாம்பாள் சொன்னது ராமரத்தினத்தை நெருப்பாக சுட்டது.

''ஏய்... யாருக்குடி தலைல அடிபட்டிச்சு. என்னை பைத்தியம்னு சொல்லாம சொல்றியா?'' - கத்தினவரை வடிவாம்பாளும் ஒரு கோபப்பார்வை பார்த்தாள். பின் நிதானமாக ''பேசாம வாங்க'' என்றாள்.

''வீடு வரட்டும். உன்னை வெச்சுக்கறேன்.''

''ஏன் இங்கையே வெச்சுக்குங்களேன். எதுக்கு வீடு வரை காத்திருக்கணும்?''

''அம்மா! சும்மா வாங்கம்மா... காருக்குள்ள அடிச்சிக்கிட்டு எதாவது பண்ணிவைக்காதிங்கம்மா.''

''நீ மூடிகிட்டு ஒழுங்கா காரை ஓட்டுடா. நான் இவளை என்னவேணா செய்வேன். இவ என் பொண்டாட்டி.''

''ஆமா... பெரிய பொண்டாட்டி. ஒரு நல்ல அப்பனா இருக்க துப்பு இல்ல. பொண்டாட்டியாம் பொண்டாட்டி.''

''வடிவா...! நீ அதிகம் பேசறே... என்னை கொலைகாரன் ஆக்கிடாதே...''

''நீங்க கொலைகாரன் ஆகி ரொம்ப நாளாச்சு. ஆனா இன்னும் கொலைதான் செய்யல. ஏன்னா நான் உங்கள செய்யவிடலை.''

''வேண்டாம்... இதுவரை உன் பேச்சைக் கேட்டு நடந்துகிட்ட என்னை தூண்டிவிடாதே.''

''இனி கரடியா கத்துங்க. பிரயோஜனம் கிடையாது. அந்த துணிப்பையை நான் அன்னிக்கே வைத்தியர்கிட்ட சேர்த்துட்டேன். அவரும் புதையல் கிடைச்ச மாதிரி அதை எடுத்துகிட்டு ஊரைவிட்டே போயிட்டாரு. ஆகையால நீங்க எது செஞ்சாலும் எனக்கு கவலையில்லை. என் மகள் நல்லா இருந்தா அதுவே எனக்கு போகும்.''

''வடிவா... என்னை ஏமாத்திட்டியா நீ?''

-ராமரத்தினம் ஆவேசமாக மனைவிமேல் பாய டிரைவர் பதறிப்போய் திரும்பிப் பார்க்க அந்த கூணநேரத்தில்... ...

அந்த இன்டர்நெட் ஷாப்புக்குள் சோகமாக நுழைந்த ஒரு இளைஞன் ஈமெயில் தருவதற்கு தயாரானான். கம்ப்யூட்டர் மானிட்டர் முன் அமர்ந்தவன் மெயில் பாக்சுக்குள் நுழைந்து கீ போர்டை தட்ட ஆரம்பித்தான்.

"DEAR AZHAGAMMAI. I AM EXTREAMLY VERY SORRY TO SAY YOUR FATHER AND MOTHER EXPIRED IN CAR ACCIDENT..'

கீபோர்டில் அவன் தட்டி எழுப்பிய ஆங்கில எழுத்துக்கள் வடிவாம்பாளும் ராமரத்தினமும் டாக்சிக்குள் மோதிக் கொண்டதில் விபத்து ஏற்பட்டு இறந்துவிட்ட சேதியை விஸ்தாரமாக சொல்ல ஆரம்பித்திருந்தன.

அவனது தலைக்கு மேலே சுவரில் காளியம்மாள் பாட்டி கைகளை உயர்த்தி ஆசீர்வாதம் செய்தபடி புகைப் படமாய் தொங்கிக் கொண்டிருந்தாள்.

★★★

சொல்லாமல் கொல்!

1

'விதியும் வெள்ளமும் ஒன்று.

இரண்டும் அகப்படுபவரை அசுரவேகத்தில் இழுத்துச் செல்லும்!'

ஆபீசுக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தான் சரவணன். காலை நேரத்துக்கே உண்டான பரபரப்பு. குளித்து முடித்து தலை சீவிக்கொள்ளும்போதுதான் தெரிந்தன தாடையில் தழைத்திருந்த அந்த முள் முடிகள்!

ஷேவ் செய்துவிட்டு குளித்திருக்க வேண்டும். காலதாமதமாய் எழுந்ததன் எதிரொலி... எல்லாமே மாறிப் போய்விட்டது. சனியன் பிடித்த டீ.வி.யை முதல் நாள் இரவில் இரண்டு மணிவரை கண் முழித்து பார்த்தது தப்பு என்று தோன்றியது. எவ்வளவுதான் மனதுக்குள் இதுபோல் தப்புகளை உணர்ந்தாலும் திருத்திக் கொள்ளத்தான் முடியவில்லை.

நெருக்கடி ஏற்படும் சமயங்களில் மனது 'தப்பு தப்பு' என்று பிதற்றி என்ன பிரயோஜனம்?

சாதாரண விஷயங்களில்கூட உறுதியாய் இருக்க முடியவில்லை. அல்ப விஷயங்களில்கூட ஒரு நல்ல திட்டமிடுதல் இல்லை. யூனிஃபார்ம் சட்டைப் பாக்கெட் கிழிந்து அதன் வழியே கூட பல ஒரு ரூபாய் நாணயங்கள் வெளியேற்றம் செய்துவிட்டன. அப்போதெல்லாம் வீட்டிற்கு போனதும் முதல் வேலையாக சட்டையை தைத்துவிட்டுத் தான் மறுவேலை பார்க்கவேண்டும் என்று நினைத்துக் கொள்வதோடு சரி.

வீட்டிற்குள் நுழைந்தாலோ எல்லாமே மாறிப் போய்விடுகிறது. நுழைந்ததும் நுழையாததுமாய் ஈஸிசேரில் சாய்ந்து கொண்டு டீ.வி. பார்க்கத்தான் புத்தி போகிறது. அதன்பின் காபி சாப்பிட்டதும் அப்படியே மலைப் பாம்பு போல படுத்துக்கிடக்கத்தான் முடிகிறது. அதனால் இப்பொழுது காலையில் கால நெருக்கடியும், ஷேவ் செய்ய மறந்த உறுத்தலும் ஏற்பட்டு என்ன பிரயோஜனம்? சரவணனுக்கு அவன் முகத்தைப் பார்க்க அவனுக்கே பிடிக்கவில்லை.

எதற்காக கடவுள் இப்படி ஒரு தாடி மீசையை முகத்திற்களித்தான் என்று ஒரு சன்னக் கோபம்கூட கடவுள் மேல் வந்தது.

கெடிகாரம் வேறு 'டணங் டணங்' என்று சப்தமிட்டு மணி ஒன்பதாகிவிட்டதைக் கூறியது. பத்துமணிக்கெல்லாம் ஆபீசில் சீட்டில் இருந்தாக வேண்டும். புதிதாக ஒரு மேனேஜர் வந்திருக்கிறார். காளன் என்று பெயர். அவர் நடந்து கொள்வதைப் பார்த்தால் அவர் காளனில்லை, 'காலன்' என்பதுதான் அவருக்கு பொருத்தமான பெயர் என்று சரவணனுக்கு தோன்றும்.

காலத்தை பொன்னாகத் கருத வேண்டுமாம்.

ஒருநிமிடம் லேட்டாக வந்தால் அன்றைக்கு ஒரு கிராம் தங்கத்தின் விலை எவ்வளவோ அதை அபராதமாகக் கட்டவேண்டும். இல்லாவிட்டால் லீவ் போட்டுவிட்டு போய்விட வேண்டும்.

கண்டிப்பு என்கிற பெயரில் கழுத்தை இறுக்கும் பேர்வழி. அந்த காலனை ச்சீசீ காளனைப் பற்றி நினைக்கும் போதே சரவணனுக்கு மனசு பதறுகிறது. எனவே வீட்டுக்குள்ளேயே ஓடத் தொடங்கினான். திட்டுதிட்டாய் பவுடர் போட்டுக் கொண்டு இன்னமும் தைத்திராத அந்த யூனிஃபார்ம் சட்டையையே திரும்ப எடுத்து மாட்டிக் கொண்டு ஸ்கூட்டரை நோக்கி ஓடினான்.

எதிரில் அவனது இரட்டைத் தங்கைகள் லதாவும், சுதாவும் கோவிலுக்கு போய்விட்டு விபூதி குங்குமக் கீற்றுகள் நெற்றியில் மின்ன எதிரில் வந்தபடி இருந்தனர்.

''அப்பா! பிராகரஷ் ரிப்போர்ட்ல சைன் பண்ணலை'' - என்று மூன்றாம் வகுப்பில் இருக்கும் ஒரே மகள் வீணா பின்னாலேயே செல்ல, ''டேய் டேய்! ஒரு வாடிபனைச் சாப்டுட்டு போடா...'' என்று அவன் அம்மா ஞானத்தின் குரலும் அவனைப் பின் தொடர, ''என்னங்க கொஞ்சம் நில்லுங்க - பெரிய கலெக்டர் உத்தியோகமா பாக்கிறீங்க! ஒரு பத்து நிமிஷம் லேட்டா போனா ஒண்ணும் குடி முழுகிடாது'' - என்று அவன் மனைவி சங்கீதாவும் அவனைத் துரத்த - எதையும் பொருட்படுத்தாமல் ஸ்கூட்டரில் ஏறிக்கொண்டு கிளம்பிப் போயே போய்விட்டான்!

அதைப் பார்த்தபடியே வீட்டுக்குள் நுழைந்த தங்கைகளில் இருந்து அம்மா, மனைவி, மகள் என்று சகலரும் பெருமூச்சுவிட அவன் ஸ்கூட்டரும் தெரு முனையைக் கடந்து விட்டிருந்தது.

சென்னையில் காலை வேளையில் தினமும் டூவீலரில் பயணம் செய்து வேலைக்கு போகிறவர்கள் நிச்சயமாய் பூர்வஜென்மத்தில் ஆளரவமே இல்லாத வனாந்திரத்தில்தான் வசித்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் உட்கார்ந்த இடத்தைவிட்டு நகராதவர்களாய் இருந்திருக்க வேண்டும்.

அவர்களுக்குத்தான் மறுபிறப்பு சென்னையில் அமைந்து டிராஃபிக்கில் சிக்கிச் சீரழியும் ஒரு சாபம் ஏற்பட்டிருக்கும்.

அதிலும் காலை வேளையில் தி.நகரிலிருந்து கோடம்பாக்கம் நெடுஞ்சாலை வழியாக வடபழனி போவது என்பது நிச்சயமாய் காலில்லாதவன் கையாலேயே மலை ஏறுவதுபோல ஒரு கஷ்டமான அனுபவம்.

கலப்படப் பெட்ரோலின் கர்ண கடூரப்புகை, காதைச் சவட்டும் மோட்டார் வாகன இரைச்சல், இதற்கு நடுவில் கண்ணுக்கு பளிச்சென்று தெரியும் விதத்தில் அந்த சாலை மேல் குறுக்கும் நெடுக்குமாய் நடந்தபடி இருக்கும் எமன் என்று எத்தனையோ விஷயங்களை சமாளிக்க வேண்டியிருக்கிறது?

இத்தனை சமாளிப்புக்குப் பிறகு ஒரு போட்டியில் வெற்றிக் கோட்டை தொடுகிற மாதிரி ஆபீசுக்குள் நுழையும் போது உடம்பில் முக்காலே மூணு வீச சக்தி ஆவியாகப் போய்விடுகிறது. அதன்பிறகு அந்த கால்பாக சக்தியோடு எந்த வேலையை உற்சாகமாய் பார்க்க முடியும்? ஒ.பி. அடிக்கத்தான் மனது முயற்சி செய்யும்.

இந்தியா முன்னேற மாட்டேன் என்கிறது என்றால் எப்படி?

சரவணனும் தூக்கக் களைப்பு, பிரயாண அலுப்பு என்று ஆபீசுக்குள் நுழைந்தபோது ஆபீசே பரபரப்பில் இருந்தது.

ஆபீசின் தினத்தந்தி என்று வர்ணிக்கப்படும் சதாசிவம் வந்து சரவணனின் காதைக் கடித்தான்.

"விஷயம் தெரியுமா சரவணா?"

"நாலு நாள் லீவுக்குப் பிறகு நான் இப்பத்தான் உள்ள நுழையறேன். என்ன விஷயம் சொல்லு?"

"வி.ஆர்.எஸ். அனவுன்ஸ் பண்ணியிருக்காங்க!" சதாசிவம் சொல்ல, வெடுக்கென்று நிமிர்ந்தான் சரவணன்.

"நிஜமாவா?" - ஆச்சரியம் + அதிர்ச்சியை தொனியில் கலந்து கேட்டான்.

"ஆமாம்... நம்ம பி.எஃப்.. கிராஜிவிடி போக சாலிடா மூணு லட்சம் தந்துடுவாங்களாம். நாம எழுதிக் கொடுத்துட்டு வீட்டுக்கு போய்டணுமாம்!"

"அடக் கொடுமையே... ஆமா... எவ்வளவு வரும்?"

"அது வரும் தலைக்கு அஞ்சாறு லட்சம்."

"அதை வெச்சுகிட்டு என்ன பண்றது? பேங்கல போட்டா முழுசா ஆறாயிரம் வட்டிகூட வராதே."

"அதப்பத்தி அவங்களுக்கென்ன...? ஆபீஸ்ல நூறு பேரை குறைக்கணுமாம். மேனேஜ்மெண்ட்ல டார்கட் ஃபிக்ஸ் பண்ணியிருக்காங்க. லிஸ்ட்ல நீயும் இருக்கே. கொஞ்ச நேரத்துல பார்... பர்சனல் மேனேஜர் கூப்பட்டு உடுவான். உன்னை எழுதிக் கொடுக்கச் சொல்வான்."

"நான் முடியாதுன்னு சொல்லிடுவேன்."

''அப்படின்னா அவுரங்காபாத், அஸ்ஸாம், நாகலாந்துன்னு டிரான்ஃபர் பண்றேன்னுவான். போறியா?''

''சதா... நான் என்ன பாவம் பண்ணேன்? எதுக்கு என் வயித்துல இப்படி புளியைக் கரைக்கறே...''

''நான் கரைக்கிறது புளின்னா, பி.எம். கரைக்கப் போறானே அதை என்னான்னு சொல்வே? அமிலத்தையே கரைக்கப் போறாண்டா...''

-சதாசிவம் நக்கலாக சொல்லிவிட்டு விலக சரவணனுக்கு நெஞ்சில் அதிர்ச்சி பரவியது. வேலையை ஆரம்பிக்கவே தோன்றவில்லை. பக்கத்து சீட் ஹெட் கிளார்க்கூட முணுமுணுத்தபடி வேலையில் நுழைய மனமில்லாதபடி பெண்டாட்டிக்கு போன் போட்டு புலம்பிக் கொண்டிருந்தார்.

'கடவுளே... என்ன இது சோதனை?'

-சரவணனுக்குள் கவலை நுழைந்தால் நெற்றிக்குமேல் வியர்க்கும். தலைவலியும் வந்துவிடும். இப்பொழுதும் வந்தது. கூடவே காணாமல் போன அப்பா, ஒருவனோடு ஓடிப்போன அக்கா, கல்யாணத்திற்கு காத்திருக்கும் தங்கைகள் என்று எல்லோர் முகமும் ஞாபகத்திற்கு வந்தது. குறிப்பாக இன்னும் அவன் இடுப்பு உயரம்கூட வளர்ந்திருக்காத மகள் வீணாவின் முகம் தோன்றி 'அப்பா நான் இப்பத்தான் மூணாங்கிளாசுக்கே வந்துருக்கேன். எலிமிண்ட்ரி, ஹைஸ்கூல், காலேஜ் அப்புறம் கல்யாணம்னு எனக்கு நீ நிறைய செலவு செய்ய வேண்டியிருக்கு. வேலையை விட்றாதே. அப்புறம் நான் சத்துணவு சாப்பிட்ற குழந்தையா கார்ப்பரேஷன் ஸ்கூல்லதான் படிக்க வேண்டியிருக்கும்' - என்று விசும்பிக் கொண்டே சொல்கிற மாதிரி தோன்றியது.

தலையை உசுப்பிக் கொண்டான். வேலையில் சேர்ந்து பத்து வருஷம்கூட ஆகவில்லை. வயதும் 35தான் ஆகிறது. இன்னும் 23 வருஷ சர்வீஸ் இருக்கிறது. அதற்குள் இப்படி ஒரு குண்டா?

அவன் கேள்விக்கு பின்சீட் அலெக்சாண்டரிடம் இருந்து பதில் வந்தது.

''என்ன சரவணன்... வி.ஆர்.எஸ். லிஸ்ட்ல பேர் இருக்குன்னு சொன்ன உடனே கவலையா இருக்கா? என் பேரும் இருக்கு. 'பத்துலட்சம் தாங்க. வெளிய போறதப்பத்தி யோசிக்கறேன்'னு சொல்லப் போறேன்'' என்றபடி ஒரு பாக்குப் பொட்டலத்தை பிரித்து வாயில் போட்டுக் கொண்டார்.

சரவணனும் முதுகை வளைத்துத் திரும்பி அவரைப் பார்த்தான்.

''எதனால் சார் இப்படி வி.ஆர்.எஸ். பூதத்தை காட்டி பயமுறுத்தறாங்க?'' - என்று கிணற்றுக் குரலில் கேட்டான்.

''ஒரு சின்ன கரெக்ஷன். இதுக்கு பேர் வி.ஆர்.எஸ். இல்லை. அந்த சதாசிவம் ஒரு அரைகுறை ஆளு. இதுக்கு பேர் ஈ.ஆர்.எஸ். அதாவது எர்லியர் ரிட்டையர்மென்ட் ஸ்கீம்! அப்புறமா இது நம்ம விருப்பத்தை சார்ந்த ஒண்ணுதான். இருந்தாலும் அதைச் சொல்லாம சும்மா லிஸ்ட்டு, பேருன்னு பூச்சாண்டி காட்றாங்க...''

''அதான் ஏன்...? எல்லாத்தையும் அனுப்பிட்டு எப்படி ஆபீசை நடத்துவாங்க?''

''அந்த கவலை நமக்கெதுக்கு? கேட்டா பிசினஸ் டல், புராடக்ட் விலையைக் குறைச்சுக் கொடுத்தாதான்

வியாபாரம் பண்ண முடியும் - போட்டி அதிகமாயிடிச்சுன்னு ராமாயணம் படிப்பாங்க...''

''பிசினஸ் டல்லா?''

''அதுல கொஞ்சம் உண்மை இருக்குதான். இப்பதான் இந்தியாவுல எவன் வேணா வந்து கடை போடலாமே? அதனால சீனாக்காரனும், கொரியாக்காரனும் உள்ள நுழைஞ்சிட்டாங்க. நம்ம கம்பெனி புராடக்ட்டான கண்டன்சர் விலை முன்னூத்திச் சில்லறை. ஆனா அவங்க இருநூறு ரூபாய்க்கு தரத் தயாரா இருக்காங்க. வாங்கறவங்க அதைத்தானே வாங்குவாங்க?''

''நிஜமாவா?''

''என்னய்யா கேள்வி இது... நாட்டு நடப்பே தெரியாத மாதிரி கேட்கிறியே. பேப்பர் படிக்கறதில்லையா... இல்ல நியூஸ் பார்க்கறதில்லையா?''

''இதையெல்லாம் யார் கண்டா? நியூஸ் டைம்ல வேற சேனல்ல சீரியல் ஓடினா நான் அதுக்குத் தாவிடுவேன்.''

''அதான் காட்டுல இருந்து வந்தவன் மாதிரி கேள்வி கேட்கறே. இனியாவது சீரியல் பாக்காம நியூஸ் பாருய்யா. எல்லாம் புதிய பொருளாதாரக் கொள்கை படுத்தற பாடு.

கவர்ன்மெண்ட் கையிலையே காசு இல்லை. முதலமைச்சரே சைக்கிள்ல சட்டசபைக்கு போற அளவுக்கு நிலைமை வரப்போகுது. பாத்துகிட்டே இரு.''

- அலெக்சாண்டர் - சதாசிவம் தேவலை என்கிற மாதிரி பயமூட்டினார்.

சரவணனுக்கு உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கியது. இருந்தும் சுதாரித்தபடி ''அப்ப எனக்கு

இஷ்டமில்லைன்னு சொன்னா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க தானே?'' என்று அப்பாவியாய் கேட்டான்.

''யாருக்கு தெரியும்... இனிமே யாரா இருந்தாலும் நல்லா இருந்தாதான் பொழைக்க முடியும். அதிக பட்சம் கொலை செய்யக்கூடத் தயங்கக்கூடாது. இல்லாட்டி நம்மளை எவனாவது குத்திக் கொன்னுடுவான். அதான் இப்ப நிலை!''

- அலெக்சாண்டர் முடிவாய்ச் சொன்னது சரவணனை ஒரு உலுக்கு உலுக்கியது. அப்படியே முதல்நாள் கைரேகை ஜோசியம் பார்த்ததும் ஞாபகத்துக்கு வந்தது.

பீச்சுக்கு போன இடத்தில் ஒரு கை ரேகை ஜோசியம் பார்ப்பவன் விடாமல் துரத்தி உயிரை வாங்கி விட்டான். ''எதிர்காலத்தை புட்டுப் புட்டு வைக்கறேன் சார். சரியா இருந்தா காசு தாங்க. இல்லாட்டி போய்கிட்டே இருங்க'' - என்று சரவணனை வளைத்துப் பிடித்து கையையும் நீட்டும்படி செய்து விட்டான். பிறகுதான் கிலியே ஆரம்பமானது.

''ஆஹா... என்ன ஒரு கை இது... லட்ச லட்சமா சம்பாதிக்கப் போறீங்க சார். கார், பங்களான்னு ஜமாய்க்கப் போறீங்க. தனரேகை அவ்வளவு அழுத்தமா இருக்கு.'' - என்று முதலில் சரவணனை உச்சாணிக் கொம்பில்தான் ஏற்றினான். ஆனால் கடைசியில்தான் காலை வாரி விட்டான்.

''எதுக்கும் கொஞ்சம் ஜாக்ரதையா இருங்க சார். ஆயுள்ரேகை மேல ஒரு கறுப்புப் புள்ளியும் வெட்டும் விழுந்திருக்கறதாலையும், பாம்பு படம் எடுக்கற மாதிரி ஒரு ரேகை சந்திரமேட்டுல தெரியறதாலையும் உங்களை மீறி

நீங்க கொலை செய்யற அளவுக்கு போயிடுவீங்க. தினம் பிள்ளையாருக்கு விளக்கு போட்டு விழுந்து கும்புடுங்க. எல்லாம் சரியாயிடும்'' - என்று சொல்லி விட்டுப் போயிருந்தான்.

'ஜாக்ரஃபி சேனலில் புலி மானை அடித்துச் சாப்பிடுவதைக் கூட பார்க்க தைரியமில்லாத நானா கொலை செய்யும் எல்லைக்குப் போவேன்... தேவுடா?' - மனது கேள்வியில் விழுந்து அரற்றியது.

இப்பொழுது அலெக்சாண்டர் சுருதி சேர்த்துவிட்டார்.

'கடவுளே...!' சரவணன் மனதுக்குள் அப்படியே சுருண்டு படுத்துவிட்டான்.

2

'வாழ்க்கை அதன் போக்கில் போய்க் கொண்டிருப்பது போலத்தான் தோன்றும். ஆனால் ஒரு விநாடி போதும் அதற்கு... திருப்பங்களை ஏற்படுத்த!'

மணி மதியம் மூன்று!

ஞானம் அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்தாள். சங்கீதா துவைத்த துணிகளை வெளியே கொடியில் காயப்போட்டுக் கொண்டிருந்தாள். லதாவும், சுதாவும் மாத நாவலில் தங்களை மறந்திருந்தனர்.

யாரோ ஒருவர் குடையும் கையுமாக அந்த வீட்டுக்குள் நுழைந்து ''தம்பி இல்லீங்களா?'' - என்று ஆரம்பித்தார். நிமிர்ந்த ஞானம் ''வாங்கய்யா...'' - என்று அவருக்கு

37611
546917

இருக்கையை காட்டினாள். அவரும் போய் உட்கார்ந்தபடி 'அப்புறம்... எப்படி இருக்கீங்க?'' - என்று ஆரம்பித்தார். ''நல்லா இருக்கோம்யா...'' - இது ஞானம். அப்போது சங்கீதாவும் பிளாஸ்டிக் பையுடன் துணியை உலர்த்தி முடித்த கையோடு உள்ளே நுழைந்து அவரைப் பார்த்து சிரித்தாள். அப்படியே ''வீட்டு வாடகையை இந்த தடவை கரெக்டா ஒண்ணாம் தேதியே கொடுத்துட்டோமே...'' - என்று சொன்னபோதுதான் அவர் வீட்டுக்காரர் என்று புரிவாயிற்று.

''நான் வாடகைக்காக வரலைம்மா. அதை எல்லாம்தான் சோத்துக்கு இருக்கோ இல்லியோ கரெக்டா கொடுத்துட்றீங்களே...'' - என்று அந்த குடை மனிதர் பீடிகை போட்டார்.

''அப்ப என்ன விஷயம்னு நீங்கதான் சொல்லணும்.'' - இது ஞானம்.

''சொல்றேன் சொல்றேன்... என் மூத்த மகன் தியாகு பத்தி உங்களுக்கு தெரியும்னு நினைக்கறேன்.''

''சொல்லுங்க... அவரைத்தான் எங்களுக்கு நல்லா தெரியுமே...''

''சந்தோஷம். அவன் இப்ப ஆந்திரா பக்கம் கம்மம் ஜில்லாவுல இருக்கான். பேங்க் உத்தியோகம் பாருங்க. அவனுக்கு இப்ப டிரான்ஸ்ஃபர்! அதுவும் நாங்க இருக்கற இந்த சென்னைக்கு...''

- அவர் என்ன சொல்ல வருகிறார் என்பது ஞானத்துக்கு பளிச்சென்று புரிந்துவிட்டது.

''அப்ப உங்க பையனுக்கு வீடு வேணும். அதனால எங்களை காலி பண்ணச் சொல்றீங்களா?'' - என்று நறுக்கென மாதிரி கேட்டாள்.

''ஆமாம்மா... நான் இருக்கற வீடு புருஷன் பொண்டாட்டி எங்களுக்கே பத்தலை...'' - அவர் யதார்த்தத்தைச் சொன்னார்.

''சரி... சரவணன் ஆபீஸ் போயிருக்கான். வரட்டும் சொல்றேன்.''

''நான் வேணும்னா ஆபீசுக்கே போன் போட்டு சொல்லிட்றேன். நம்பர் இருந்தா தாங்க.''

''இல்ல... வேண்டாம். ஆபீஸ்ல அவனுக்கு ஏகப்பட்ட டென்ஷன். எதையாவது ஞாபகப்படுத்த நாங்க போன் பண்ணினாலே கத்துவான்.''

''நல்லது. நீங்களே சொல்லிடுங்க. இன்னொரு விஷயம்.'' - திரும்பவும் அந்த வீட்டுக்காரர் சுருதி சேர்த்தார். என்ன என்கிற மாதிரி குடும்பமே பார்த்தது.

''காலி பண்றேன். ஆனா எனக்கு ஒரு ஆறுமாசமாவது வேணும்னு தவணை கேட்கக் கூடாது. ஏன்னா என்மகன் இன்னும் 15 நாள்ல சென்னை வந்துடுறான். வேணும்னா ஒரு மாசம் உங்களுக்கு டைம் தரேன். என்னடா இப்படி சொல்றேனே இது சரியான்னு கேட்காதீங்க. நான் வீட்டுக்காரன் மாதிரி உங்ககிட்ட பழகினதில்ல. உங்ககிட்ட அட்வான்லே வாங்கிக்காம வாடகைக்கு விட்றுக்கேன். காரணம் உங்க குடும்ப கஷ்டம். நீங்க அட்ஜஸ் பண்ணனும். இதை ஞாபகத்துல வெச்சுட்டு உதவி பண்ணுங்க. வரட்டுமா?''

-அவர் கிளம்பினார். எல்லோர் முகத்திலும் கிட்டதட்ட இருட்டு.

பர்சனல் மேனேஜர் கூப்பிடுவதாய் அட்டெண்டர் வந்து சொன்னான். சரவணனை பதற்றம் தொற்றிக் கொண்டது. இருந்தும் ஆண்மை முறுக்கு அதை அடக்கிப்பிடிக்க - எழுந்து அவர் அறை நோக்கிச் சென்றான். உள்ளே நுழைந்து அவர் எதிரில் நின்றான்.

''குட்மார்னிங் சார்!''

''வெரிகுட் மார்னிங். வாங்க. உக்காருங்க.''

- உட்கார்ந்தான். கூர்மையாக பார்த்தான்.

''நோட்டிஸ் போர்ட் பாத்தீங்களா?''

''பாத்தேன் சார்...''

''உங்க அபிப்ராயம் என்ன?''

''சாரி சார்... வேலை இல்லாத ஒரு நிலையை என்னால நினைச்சே பார்க்க முடியல சார்...''

''தப்பு சரவணன். ரொம்ப தப்பு... வேலையில்லாத நிலை உங்களுக்கு வந்துட்டதா ஏன் நினைக்கறீங்க? அதான் காம்பன்சேஷன் தரோமே... அதை வெச்சு எவ்வளவோ பிசினஸ் பண்ணலாமே.''

''திரும்பவும் சொல்றேன் சார்... எனக்கு அதுக்கெல்லாம் சாமர்த்தியம் கிடையாது.''

''அப்ப நீங்க ஒரு யூஸ்லெஸ் ஆளா?'' - பி.எம். மடக்குகிறார் என்பது அவனுக்கு தெரிந்தது.

''இல்ல சார். நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க. நான் பிசினசுக்கு ஏத்தவன் இல்லன்னுதான் சொன்னேன். இங்க நான் என் வேலையை ஒழுங்காதான் பார்க்கறேன்.''

''அப்படியா... அப்ப ஈ.ஆர்.எஸ். உங்களுக்கு வேண்டாம். அப்படித்தானே?''

''நிச்சயமா சார்...''

''நல்லா யோசியுங்க. உங்களுக்கு இர ண்டு சிஸ்டர் இருக்காங்கன்னு எனக்குத் தெரியும். அவங்களுக்கு அலயன்ஸ் பாத்துகிட்டிருக்கறதும் எனக்குத் தெரியும். அப்ப பணத்துக்கு எங்க போவீங்க?''

''அதுக்காக இந்த ஈ.ஆர்.எஸ்.ஐ ஒத்துக்க சொல்றீங்களா?''

''இந்த ஈ.ஆர்.எஸ். உதவும் இல்லையா?''

''அப்ப பிசினஸ் எப்படி சார் பண்ண முடியும்? குடும்பம் எப்படி சார் நடத்த முடியும்?''

''எப்பவும் வாழ்க்கை எல்லாமே கிடைச்சுடாது சரவணன். ஒண்ணை இழந்தாதான் ஒண்ணு கிடைக்கும்.''

''அதுக்காக கண்ணை இழந்து நான் சித்திரம் வாங்க பிரியப் படலை சார்.''

''ஓ... பழமொழியைச் சொல்லி என்னை கட்டிப் போடப்பாக்கறீங்களா?''

''அப்படி இல்லை. என் உணர்ச்சி உங்களுக்கு புரியதுக்காக அப்படிச் சொன்னேன்.''

''சரி... நானும் என் உணர்ச்சியை உங்களுக்குப் புரியவைக்க சில விஷயங்களைச் சொல்றேன். என்கிட்ட பேசின மாதிரி நீங்க நம்ம மேனேஜிங் டைரக்டர்கிட்ட பேசமுடியாது. அவர் உங்களைக் கூப்பிட்டு ஈ.ஆர்.எஸ். பத்திகேட்டா என்ன சொல்லணுமோ சொல்லிக்குங்க.

கப்பல் மூழ்கிக்கிட்டிருக்கு. ஈ.ஆர்.எஸ். ங்கறது உங்களுக்கான தப்பிக்கற படகு. அப்புறம் இந்த படகும் இல்லேன்னு ஆயிடும்.''

- பி.எம். சொன்ன பதில் உதாரணத்தில் சரவணனுக்கு மூச்சிரைத்து. முழித்தான். எழுந்து வெளியில் வந்தான்.

அலெக்ஸாண்டர் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

அவன் வரவும் நெருங்கினார். விசாரிக்கத் தொடங்கிவிட்டார்.

''என்ன சரவணா... என்ன சொன்னான் பி.எம்.?''

''சேர்மன்கூட பேசவேண்டி இருக்கும்னு சொல்லிட்டார்சார்.''

''ரொம்ப சௌகர்யமா போச்சு. சேர்மன்கிட்ட பேசும்போது இரண்டுவழி இருக்கு. ஒண்ணு கால்ல விழுந்து காப்பாத்துங்க சார்னு அழற வழி... இன்னொண்ணு 15 லட்சம் தந்துடுங்க சார் போயிட்றேன்னு சொல்றது. கவலைப்படாதே. பிரச்சினை சீக்கிரமா முடிஞ்சிடும்.''

- அலெக்ஸாண்டர் நகர்ந்து கொண்டார். தைரியமான பேர்வழிதான். துளிகூட அவர் மனதில் படபடப்பே இல்லை. எப்படி இருக்க முடிகிறதோ தெரியவில்லை.

ஆனால் சரவணனுக்கு நடுங்கியது. எதிர்காலமே ஆட்டம் ஆடுகிற மாதிரி தோன்றியது. வளர்ப்பு அப்படி. சிட்டில் வேலையே ஓடவில்லை. செக்குமாடு கணக்காக மனசு ஈ.ஆர்.எஸ். ஐயே சுற்றிச் சுற்றி வரத் தொடங்கியது.

புரோக்கர் கல்யாண சுந்தரம் சரவணன் வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தார்.

வீட்டுக்குள் யாரிடமும் உற்சாகமேயில்லை. எல்லோர் முகமும் வீட்டுக்காரர் போட்ட போடில் இருண்டு போயிருந்தது. ஞானம் மட்டும் நிமிர்ந்து பார்த்துப் பேசினாள்.

''என்ன கல்யாண சுந்தரம், என்ன விஷயம்?''

''ஒரு புரோக்கர் எதுக்கும்மா வீட்டுக்கு வருவான்? உங்க இரண்டு பெண்களுக்கும் ஒரு நல்ல இடம் வந்துருக்கும்மா.''

''அப்படியா...?'' - ஞானம் ஏதோ மாடு கன்னு போட்டதைக் கேட்டுக் கொள்வது போலத்தான் கேட்டுக் கொண்டாள்.

''என்னம்மா நீங்க... நான் ஒரு நல்ல சேதி சொல்றேன். அப்படியான்னு கேட்டா என்ன அர்த்தம்?''

''நல்ல சேதிதான். ஆனா இங்க நல்ல நேரம் ஒண்ணு இருந்தாதானே அது உறைக்கும்?''

''என்னம்மா சொல்றீங்க?''

''இங்க குடி இருக்கற வீட்டைக் காலி பண்ணுன்னு வீட்டுக்காரர் சொல்லிட்டார். சரவணனுக்கும் ஆபீஸ்ல ஏகப்பட்ட குடைச்சல். இன்னும் இரண்டு மூணு வருஷத்துக்கு கல்யாணம் பத்தி யோசிக்க முடியாது.''

''அப்படி சொல்லாதீங்க. இந்த இடத்தை பத்தி கேட்டீங்கன்னா விடமாட்டீங்க.''

''யாரா இருந்தா என்ன? இன்னிக்கெல்லாம் குறைஞ்சது பத்து பவுனாச்சும் போடணுமா இல்லையா?''

''அது வாஸ்தவம்தான். ஆனா பத்து பவுன் போட்டாலும் காலத்துக்கும் பிரச்சினை இல்லைன்னா தலையைக்கூட அடகு வைக்கலாமே?''

''அப்படி யார் இப்ப அவசரப்பட்றாங்க?''

''எல்லாம் உங்க தூரத்து சொந்தக்காரங்கதான்...''

''தூரத்து சொந்தமா...? யார் அது?''

''அதாங்க கும்பகோணம் செங்கமலத்தம்மா குடும்பத்தவங்க...''

''அவங்களா?'' - ஞானத்தின் முகம் கேள்வியோடு பிரகாசிக்கத் தொடங்கியது.

''அவங்களேதான். நம்ப முடியலையா?''

''எப்படி நம்ப முடியும்...! அவங்க லட்சாதிபதிங்க. பசங்களும் அமெரிக்கால வேலைல இருக்கறவங்க!''

''ஆமாங்க... அண்ணன் பாஸ்கர், தம்பி தினகர் இரண்டு பேருக்கும் உங்க பொண்ணுங்க லதா, சுதாவை கேக்கறாங்க. என்ன சொல்றீங்க?''

- புரோக்கர் அழுத்தமாகவே கேட்டார். ஞானம் திணறத் தொடங்கினாள். மருமகள் சங்கீதாவும் வந்து நின்று கொண்டு புரோக்கரை பார்த்தாள்.

''என்னம்மா பாக்கற...? நல்ல சந்தர்ப்பம்மா... விட்ற வேண்டாம்னு உங்க அத்தைகிட்ட சொல்லும்மா...''

''வாஸ்தவம்தான். ஆனா பெரிய இடம். நிறைய எதிர்பார்ப்பாங்களே.''

''அதான் இல்லை. போட்றத போட்டு நல்லா கல்யாணம் பண்ணிக் கொடுத்தா போதும்னு சொல்றாங்க.''

''நம்பவே முடியலயே...''

''நேரம் காலம்னு வந்தா அப்படி எல்லாம்தாம்மா நினைக்க வைக்கும். சும்மா தைரியமா சொல்லுங்க சரின்னு... இந்த சந்தர்ப்பத்தை விட்டா ஒரு சந்தர்ப்பம் வரவே வராது. அந்த இரண்டு பசங்களும் தங்கமான பசங்க. உங்க பொண்ணுங்கள கோவில்ல பாத்திருக்காங்க. ரொம்ப பிடிச்சுப் போச்சு. மனசுக்கு பிடிச்சுட்டா காசு பணம் இரண்டாவது தானே?''

- புரோக்கரின் பீடிகை ஞானத்தை அசைத்தது. லதாவும் சுதாவும்கூட ஞானத்தை ஆசை விழிகளோடு பார்த்தனர்.

'அம்மா... சரின்னு சொல்லும்மா...' - என்று கண்ணாலேயே கோரிக்கை மனுப் போட்டனர். ஞானமும் அசைந்தாள்.

''சரி... என் பையன் வரட்டும். பேசிட்டு உங்களுக்கு ஒரு நல்ல பதில் சொல்றேன்.''

- புரோக்கர் கல்யாண சுந்தரம் வந்த வேலை முடிந்த சந்தோஷத்தோடு திரும்பத் தொடங்கினார்.

3

'இன்பமோ துன்பமோ... காலம் ஒருவருக்கு அதைக் கொடுக்கத் தொடங்கிவிட்டால் யாராலும் தடுக்க முடியாது. மனிதர்கள் அதில் அகப்பட்டு ஆடித்தான் தீரவேண்டும்!'

மாலை முடிந்து இரவின் ஆக்ரமிப்பில் வானம் கருமை நிறமடையும் வேளை... சரவணனின் ஸ்கூட்டர் வீட்டுமுன் உறுமலோடு நின்றது. அதை ஓரம் கட்டி விட்டு களைப்போடு நுழைந்தான்.

காத்துக் கொண்டிருந்தனர் அவ்வளவு பேரும்.

ஒவ்வொருவர் கண்ணிலும் ஒவ்வொரு சேதி.

சங்கீதா - அவன் சேரில் வந்து அமரவும் காபியைத் தந்தபடி பேச்சை எடுத்தாள்.

''ஒரு முக்கியமான விஷயங்க.''

''நானும் ஒரு முக்கியமான விஷயத்தை சொல்லணும். சங்கீ...''

''அப்ப நீங்க சொல்லுங்க.''

''இல்ல... நீ முதல்ல சொல்லு...''

''இல்ல நீங்க சொல்லுங்க...''

''நான் சொல்றத கேட்டா மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கும் சங்கீ. நீ சொல்லு...''

- அவன் சொன்ன விதமே அனைவரையும் மிரட்டிற்று. ஆளாளுக்கு பேந்தப் பேந்த பார்த்தனர்.

''அப்ப அந்த கஷ்டமானதை சொல்லிட்றா சரவணா. அப்புறமா நாங்க விஷயத்துக்கு வரோம்.'' - ஞானம் அவன் எதிரில் பேச்சோடு வந்து அமர்ந்தாள்.

''நீங்க ஆளாளுக்கு பாக்கறத பார்த்தா விஷயம் பெரிசா இருக்கும் போலத்தான் தெரியுது..''

''ஆமாண்டா... ஒரு பிரச்சினைக்கு இரண்டு பிரச்சினை...''

''அப்படியா... அப்ப அதோட என் பிரச்சினையையும் சேர்த்துக்க. மூணு பிரச்சினை.''

''என்னடா சொல்றே... பிரச்சினை அது இதுன்னு...''

''நான் சொல்லலை. நீதான் சொன்னே பிரச்சினைன்னு. அதுவும் இரண்டு பிரச்சினைன்னு சொன்னே.''

''ஆமாண்டா... ஒண்ணு வீடு காலி பண்ணனும். அதுவும் ஒரு மாசத்துக்குள்ள. அடுத்தது உன் இரண்டு தங்கச்சிங்களுக்கும் வரன் வந்திருக்குது. அதுவும் நினைச்சுப்பாக்க முடியாத இடத்துல இருந்து.

இரண்டுமே செலவு விஷயங்கள். நம்ம குடும்ப நிலைமை எனக்கு நல்லா தெரியும். நீ எப்படி சமாளிக்கப் போறியோ தெரியல... ஆமா... உன் பிரச்சினை என்ன?''

- சரவணன் உடனே மிடறு கட்டினான். கண்களை அகட்டி விரித்தான். நெற்றியைச் சுருக்கி ரேகைகள் விழும்படி செய்தான்.

''சொல்லுடா... நீ என்னத்த சொல்லப் போறே?''

''ஆபீஸ்ல எழுதிக் கொடுத்துட்டு போகச் சொல்றாங்க.''

''என்னடா சொல்றே... நீ என்ன தப்பு பண்ணினே?''

''நான் ஒண்ணும் தப்பு பண்ணலை. இது நம்ம நிதியமைச்சர் பண்ண தப்புன்னு எல்லாரும் சொல்றாங்க.''

''எதுக்கு எதடா முடிச்சு போட்றே?''

''அப்படி இருக்கும்மா இன்னிக்கு நிலைமை. கம்பெனில வியாபாரம் சரியில்லையாம். ஆகையால ஆள் குறைப்பு செய்யணுமாம். நூறு பேரை வீட்டுக்கு அனுப்பினாதான் கம்பெனி நடத்த முடியுமாம்.''

''அப்ப உன் வேலை போயிடுமா...?''

''தெரியாது. ஆனா போற நிலைலதான் இருக்கு. அஞ்சாறு லட்சம் காம்பன்சேஷன் கிடைக்கும். அவ்வளவு தான்!''

- அவன் வாயை மூட - குறுக்கில் விழுந்து அலறத் தொடங்கினாள் சங்கீதா.

''அது எந்த மூலைக்குங்க. அதெல்லாம் முடியாதுன்னு சொல்லுங்க.''

''பின்ன... சரிசார்னா சொல்வேன். முடியாதுன்னுதான் சொல்லியிருக்கேன்.''

''அப்புறமென்ன... சட்டப்படி உன்மேல நடவடிக்கை எடுக்க முடியாது தானே?''

''முடியாதும்மா.. இது விருப்பம்தான். ஆனா இதை விரும்பாதவங்களால உள்ள நிம்மதியா வேலை பார்க்க முடியாது. டார்ச்சர் பண்ணுவாங்க. தாங்கிக்கிட்டு வேலையை கண்ட்டினியூ பண்றது ரொம்ப கஷ்டம்.''

''சரி என்னதான் பண்ணப் போறே?

''தெரியலம்மா... தெரியல. ஒரே குழப்பமா இருக்கு.''

''இப்படி சொன்னா எப்படிடா... எதாவது ஒரு முடிவு செய்துதானே தீரணும்?''

''ஆமாம்... காசை வாங்கிக்கிட்டா ஆபீஸ் பிரச்சினை தீர்ந்துவிடும். தங்கச்சிங்க கல்யாணமும் முடிஞ்சிடும். ஆனா எங்க எதிர்காலம்?''

''நல்லவங்களுக்கு நல்லதுதாண்டா நடக்கும். உன் எதிர்காலம் அமோகமாத்தான் இருக்கும்.''

''அப்ப அவரை எழுதிக் கொடுத்துட்டு பணத்தை வாங்கிக்கன்னு சொல்றீங்களா?'' - சங்கீதா மாமியார் பக்கம் திரும்பினாள்.

''நான் அப்படி சொல்லலை. அதுவும் ஒரு வழின்னு சொல்றேன்.''

''அதெல்லாம் முடியாது. உங்க பெண்களுக்காக நாங்க நடுத்தெருவுலையா நிப்போம்?''

''வார்த்தையை அளந்து பேசு. நான் யாரையும் நடுத்தெருவுல நிறுத்தச் சொல்லல...''

''அப்ப இப்படி பேசினா என்ன அர்த்தம்?''

- மாமியார் மருமகள் சண்டை சூடு பிடிக்கத் தொடங்க சரவணனுக்கும் தலையை வலித்தது.

''கொஞ்சம் சும்மா இருக்கீங்களா?'' - அலறினான். அவர்களும் பேச்சை நிறுத்தினர். தங்கைகள் லதா, சுதா கண்களிலும் கண்ணீர்ப் பசை.

சரவணன் தலையை உதறிக் கொண்டான்.

''இருக்கற பிரச்சினை போதாதா... நீங்க வேற அடிச்சுக்கணுமா?''

''பின்ன என்னங்க... வேலையை விட்டுட்டு தங்கைகளுக்கு கல்யாணம் பண்ணிட்டா நாம என்ன பண்றது - அதைப் பத்தி யோசிச்சாங்களா உங்கம்மா?''

''ஏன் வேற வேலையே கிடைக்காதா...? எல்லாரும் சேர்ந்து ஒரு இட்லிக்கடை போடுவோம். நீ மாவு ஆட்டு, நான் அவிக்கறேன். இவன் கடை நடத்தட்டும். பிழைக்க வழியா இல்லை?''

- ஞானம் ஒரு முடிவுக்கு வந்த மாதிரி அலறினாள்.

''பிரமாதம்... அந்த இட்லிக் கடையை இப்பவே நீங்க போட்டு உங்க பொண்ணுகளுக்கு கல்யாணம் பண்ணுங்க. எங்களை விட்றுங்க.''

- சங்கீதாவும் சளைக்காமல் பதில் சொன்னாள். சரவணனுக்குள் திரும்பவும் சஞ்சலம் அலை போட்டது.

''வாயமூடுங்க... முதல்ல வேற வீட்டுக்கு குடிபோறதபத்தி சிந்திப்போம். அப்புறம் வேலையை விட்றது, இட்லிக்கடை வைக்கறத பத்தி பேசலாம்.''

- என்றவன் அப்பொழுதே வெளியேறத் தொடங்கி விட்டான்.

''டேய் எங்கடா கிளம்பிட்டே... இப்படிப் போனா எப்படி... அந்த புரோக்கர் வந்தா என்ன சொல்ல?''

''முதல்ல ஒரு நல்ல வீடு பாத்துக் கொடுக்கச் சொல்லு. அப்புறம் கல்யாணம் பத்தி பேசலாம்.''

''அவனுக்கு அதுதான் தொழில். சொன்னா உடனே வீடு இருக்கற இடத்தை சொல்லிடுவான். ஆனா அட்வான்ஸ்ன்னு ஒண்ணு தரணுமே. அதுக்கு என்ன பண்ணப்போறே?''

''என் பொண்டாட்டி கழுத்துலதான் ஒரு அஞ்சுபவுன் சங்கிலி தொங்கிக்கிட்டிருக்கே. வேற வழி?''

- அவன் சொல்ல சங்கீதா புடவைத் தலைப்பால் சங்கலியை இழுத்து மூடினாள்.

''நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வேற வழியே கிடையாது சங்கீதா. இந்த சென்னைல பத்துமாச அட்வான்ஸ்ங்கறதுதான் நடைமுறை. மினிமம் பதினஞ்சாயிரம் வேணும். நமக்கு வேற வழி எங்க இருக்கு சொல்லு பார்ப்போம்...''

- கேட்டுவிட்டு வெளியேறி விட்டான். சங்கீதா கலங்கிப் போய் மாமியாரை வெறித்தாள். அவளோ காணாமல் போய்விட்ட அவள் கணவனும் சரவணனின் அப்பாவுமான கைலாசநாதன் படத்தின் அருகே சென்று சினிமா அம்மாக்கள் மாதிரி அழ ஆரம்பித்தாள்.

''நீங்கபாட்டும் எனக்கென்னன்னு போய்ட்டீங்க. இங்க பாத்தீங்களா எங்க நிலையை...?''

''ஆமா... அவர் பெரிய கடவுள். அவர் காதுல உங்க புலம்பல் உடனே விழுந்து ஒரு பத்து லட்சரூபா பணத்தோட உங்களை வந்து உடனே பாக்கப் போறாரு.'' - என்று

பக்கத்தில் நின்று ஒரு இடி இடித்துவிட்டு சங்கீதா விலகிக் கொண்டாள்.

ஞானத்தால் பேச முடியவில்லை. அவளையும் அழுகை ஆக்ரமித்தது.

'நீங்கமட்டும் கூட இருந்தா பத்து லட்சமெல்லாம் நமக்கு ஒரு விஷயமா?'

- அவளுக்குள் ஒரு கேள்வி எழும்பியது. ஆனால் பலமாய் கேட்கத்தான் திராணி இல்லாமல் போய்விட்டது.

4

'சில நேரங்களில் வாழ்க்கை எல்லோரிடமும் கண்ணாமூச்சி விளையாடும். அது வேடிக்கையாகவும், விநோதமாகவும், புரிந்து கொள்ள முடியாதபடியும் இருக்கும்.'

பத்துலட்சம்!

அவ்வளவும் பச்சை நோட்டுக்கள். அந்த சேட் மிக மரியாதையாக அதை அந்த பெரியவரிடம் தந்து விட்டு காலிலும் விழுந்தார்.

''எழுந்திரு சேட்... எதுக்கு கால்ல உழுறே?'' - இது அந்த பெரியவர்.

சேட்டும் எழுந்திருந்தார்.

''சாமி... நீங்கதான் எனக்கு அந்த ராஜேஸ்வரி. நீங்கதான் எனக்கு அந்த ஆதிபராசக்தி. உங்க கால்ல விழாம நான் யார் கால்ல விழுவேன்?''

''போதும்... பெரிய வார்த்தை எல்லாம் பேசாதே. ஆமா எனக்கு எதுக்கு இவ்வளவு பணம்தர்றே?''

''என் காணிக்கை சாமி. யாராலும் தீக்க முடியாத வியாதியை தீத்துவெச்சு என் சம்சாரத்துக்கு உயிர் கொடுத்திருக்கீங்களே...''

''நான் எங்க தீர்த்து வைச்சேன்? எல்லாம் அந்த அம்பாள் கிருபை.''

''அவதான் உங்க ரூபத்துல வந்து என் குறையை தீர்த்து வெச்சுருக்கா. நீங்க இல்லேன்னா இன்னிக்கு அவ இல்லை. எனக்கும் வாழ்க்கை இல்லை.''

''அப்படியெல்லாம் சொல்லாதே, எல்லாம் விதிப்படி நடந்திருக்கு. நான் உனக்கு உதவணும்கறது விதி. அவ்வளவு தான். இந்த பணத்தை நீ எதாவது நல்ல காரியத்துக்கு கொடுத்துடு.''

''அதை நீங்களே செய்திடுங்க. இது இனிமே உங்க பணம்.''

''அப்படியா... அப்ப இதை நான் எதாவது அநாதை ஆஸ்ரமத்துக்கு தந்துடட்டுமா?''

''தாராளமா...''

''அப்ப நான் புறப்பட்றேன். நல்லா இரு.''

- அவர் கிளம்பினார். வாசல் வரை வந்து வழி யனுப்பினார் சேட்டு. கூடவே அவர் மனைவியும் வந்தாள்.

மார்பகத்தில் கேன்சர் என்று பரிசோதித்ததில் தெரிந்தது. ஆறுமாசம் உயிரோடு இருந்தால் பெரிய விஷயம் என்று கூறிவிட்டார்கள் டாக்டர்கள். அம்ருதாவும் துரும்பு போலாகி விட்டாள். அதுதான் அவள் பெயர்.

'அப்போதுதான் யாரோ சொல்லி சக்தி பெருமாளின் அறிமுகம் சேட்டுக்கு கிடைத்தது.

சக்தி பெருமாள்தான் அந்த பெரியவர். அம்மன் உபாசகர். தினம் தினம் வீட்டுக்கு வந்து அவள் எதிரில் அமர்ந்து ஜபம் செய்தே அவள் வியாதியை கரைத்து விட்டார். டாக்டர்களும் திரும்ப பரிசோதித்து பார்த்த போது கான்சர்கட்டி இருந்த தடயமே இல்லை.

எப்படி இது சாத்யம் என்பது இந்த நொடி புதிராகத்தான் உள்ளது. சேட்டும் பிரமிப்பின் உச்சிக்கே போய்விட்டார்.

சக்திபெருமாள் என்னும் அந்த உபாசகரிடம்கூட சிலிர்ப்போடு கேட்டார். அவரிடம் ஒரு சின்ன புன்னகைதான் பதில். மிகவும் வற்புறுத்திக் கேட்டதில் 'எல்லாம் அம்பிகையின் அருள். அவள் கருணை' என்று சிம்பிளாக முடித்துவிட்டார். எதுவானால் என்ன? சேட் வரையில் நடந்தது ஒரு உலக அதிசயம். அதற்கு பத்து லட்சம் என்பது ஒரு அல்ப சன்மானம்தான்!

ஏ.டி.லெக்ட்ரிக் ட்ரெயினில் அவ்வளவாக கூட்ட மில்லை. பெரியவர் சக்திபெருமாள் அதில் ஏறி ஒரு ஓரமாக அமர்ந்து கொண்டார். மடிமேல் அந்தப் பெட்டி, உள்ளே சுளையாக பத்துலட்சம்.

அதே பெட்டியில்தான் சரவணனும் ஏறினான். அவர் அருகில் இடம் காலியாக இருந்தது. போய் உட்கார்ந்து கொண்டான்.

குரோம்பேட்டையில் ஒரு வீடு காலியாக இருப்பதாக சொன்னார்கள். பார்க்கத்தான் போய்க் கொண்டிருக்கிறான். ட்ரெயினும் மின்சாரத்தை உறிஞ்சி சக்தியை பெற்ற

நிலையில் வேகமெடுக்க ஆரம்பித்துவிட்டது. ஜன்னல் வழியாக காற்று வந்து அப்பியது. அதில் கூடவே ஒருவித ஜவ்வாது வாசம். பெரியவரிடம் இருந்துதான் வந்தது. அவரோ கண்களை மூடி தியானத்தில் இருக்கிற மாதிரி இருந்தார். அவனுக்கும் அவர் தோற்றம், அந்த வாசனை, நாரைச்சிறகு போன்ற தலை முடியும் தாடியும் ஆச்சரியத்தை தந்தபடி இருந்தது.

பகலில் வேலை பார்த்த களைப்பு, வீட்டில் ஏற்பட்ட ரகளை எல்லாமாக அந்த பயணத்தின் போது மனதை அமிழ்த்த வீசும் காற்று தூக்கத்தை பிடித்து கண்களில் செருகியது.

அப்படியே கண்ணயர்ந்து விட்டான்.

கண்ணைத் திறந்தபோது ட்ரெயின் குரோம்பேட்டை ஸ்டேஷனுக்குள் நுழைந்து கொண்டிருந்தது. பெட்டியிலும் ஒருவரும் இல்லை.

'நல்லவேளை... கண் திறந்ததால் பிழைத்தேன். இல்லாவிட்டால் போய்க் கொண்டே இருந்திருப்பேன்' என்று நினைத்தவன் பார்வையில் பெரியவர் அமர்ந்திருந்த இடத்தில் பெட்டி மட்டும் இருந்தது கண்ணில் பட்டது.

'என்ன இது... பெரியவர் பெட்டியை மறந்து விட்டுவிட்டு போய்விட்டாரா?' - அதைக் கையில் எடுத்தபடி சுற்றிச் சுற்றிப் பார்த்தான்.

ஒருவரும் இல்லை. வண்டியை விட்டு இறங்கினான். ஸ்டேஷனிலும் ஆளரவமில்லை. சட்டென்று கடற்கரை கைரேகை ஜோசியன் சொன்னது ஞாபகமாய் ஞாபகத்துக்குள் வந்தது.

'பெரிய ஆளாகப் போறீங்க. லட்ச லட்சமா சம்பாதிக்கப் போறீங்க...'

- அவன் சொன்ன லட்சம் இதில் இருக்கிறதா? கேள்வி பீறாய்ந்தது. விரல்கள் திறந்து பார்க்க முனைந்தன. பெட்டியும் பிரச்சினை பண்ணாமல் திறந்து கொண்டது. உள்ளே பத்து லட்ச ரூபாய்க்கான பச்சை நோட்டுக்கள்.

சரவணனுக்கு நின்ற இடம் நடுங்குவது போல இருந்தது. இது அதிர்ஷ்டமா? இல்லை சோதனையா?

சூட்கேஸோடு வீட்டுக்குள் நுழையவும் வீடே சுற்றி வளைத்துக் கொண்டது.

''என்னடா இது பெட்டி...?'' - ஞானம் மோவாயில் விரல் பதித்தபடி கேட்டாள்.

''ரயில்ல ஒருத்தர் தவறவிட்டுட்டார்மா. உள்ற கட்டுக்கட்டா பணம் இருக்கு.'' - என்றபடியே அதைத் திறந்தான். நோட்டுக்கள் மின்னி அனைவரின் கண்களையும் பறித்தன. சங்கீதா 'வாவ்!' என்று வாயைப் பிளந்து கொண்டு மூடக்கூட முடியாமல் திணறினாள்.

லதாவும் சுதாவும் சிறகை விரித்தபடி இரையைப் பார்த்துவிட்டு வந்தமரும் கொக்கைப் போல சுற்றி வந்து நின்றார்கள்.

''இப்ப என்னடா பண்ணப் போறே?'' - ஞானம் கேட்டாள்.

''என்ன செய்யறதுன்னே தெரியலம்மா...'' - சரவணன் பரிதாபமாகச் சொன்னான்.

''டேய்! நீ ஒரு நாணயஸ்தரோட பிள்ளடா. இதுல தெரியறதுக்கு என்ன இருக்கு? பேசாம போலீஸ்ல கொண்டு போய் கொடு.'' - ஞானம் சரியான பாதையைத்தான் காட்டினாள். 'நான் ஒரு சராசரிப் பெண்ணில்லை' என்கிற மாதிரி அவனையும் பார்த்தாள்.

ஆனாலும் சரவணன் தயங்கினான்.

''என்ன தயக்கம்?''

''போலீஸ்ல கொடுத்தா அந்த வயசான பெரியவர் கிட்ட இது போய் சேருமான்னு சந்தேகமா இருக்கும்மா.''

''போலீஸ் மேலே சந்தேகமா...?''

''ஆமாம்மா... போலீஸ், கோர்ட், ஜெயில்னு எது மேலையும் எனக்கு நம்பிக்கை கிடையாது இப்ப. ரமான்னு ஒரு பெண்ணை என்ன பாடுபடுத்திட்டாங்க தெரியுமா இவங்கல்லாம்...''

''நூத்துல ஒண்ணு பழுதுன்னா எல்லாத்தையுமா அப்படி நினைக்கறே...?''

''என்ன பண்ணச் சொல்றே? தெரியாம ஒன்வேல வந்துட்டேன். போலீஸ்காரரும் பிடிச்சுட்டார். அவர் என்ன பண்ணனும்? ஃபைன்தானே போடணும்?''

அவன் கேட்க - எல்லோரும் வெறிக்க - அவனிடம் விளக்கத்தின் தொடர்ச்சி.

''அம்பது ரூபாய் கொடுத்துட்டு போய்க்கிட்டே இருன்னு சொல்றார் போலீஸ்காரர். கோர்ட்டுக்கு போனா ஐந்நூறு ரூபாய் கட்ட வேண்டியிருக்கும். எது வசதின்னு கேக்கறாரு.''

''சரி இப்ப என்ன பண்ணப் போறே?''

''அந்தப் பெரியவர் முகம் நல்லா ஞாபகம் இருக்கும்மா. தேடிப்பாத்து கொடுக்கணும்.''

''இந்த பெட்டில அட்ரஸ் இல்லையா?''

''தேடிப்பாக்கறேன்...'' - சரவணன் அட்ரஸை தேட ஆரம்பித்தான்.

''என்னங்க நீங்க... அம்மாதான் புரியாம பேசறாங்கனா நீங்களும் அட்ரஸை தேட நீங்களே...'' சங்கீதா பேச்சு அவனை கேலி செய்கிற மாதிரி இருந்தது.

''என்ன சங்கி சொல்றே நீ...?''

''இது நமக்குக் கடவுளா பார்த்து கொடுத்திருக்கற பரிசுங்க.'' - அவளிடம் புதிய கோணம்.

''பரிசா?''

''ஆமாம். நம்ம கஷ்டம் தெரிஞ்சு கடவுளா கொடுத் திருக்கற பரிசுங்க இது. நம்ம தேவைகளை யோசிச்சுப் பாருங்க.'' - சங்கீதா சொல்வதுதான் சரி என்கிற மாதிரி லதாவும் சுதாவும்கூட அவனைப் பார்த்தனர்.

''வாய மூடு... பரிசாம் பரிசு. யார் வீட்டுக் காசோ? தொலைச்சவர் இப்ப என்ன பாடுபட்டுகிட்டு இருக்காரோ...?'' - மீண்டும் ஞானத்திடம் வெடிப்பு.

''பத்துலட்சத்தை ஒரு மனுஷன் ஒட்ற ரயில்ல விட்டுட்டு போறான்னா அவன் எவ்வளவு பொறுப் பில்லாதவனா இருக்கணும்?''

''அதைப்பத்தி நமக்கென்ன வந்தது. இது நேர்வழியில வரலை. திருப்பிக் கொடுத்துட்றதுதான் நல்லது.''

''பெரிய நேர்வழி. இந்தக் காலத்துல யார் நேரா நடக்கறாங்க? நேரா நடந்தா போய் முட்டிக்க வேண்டியது தான். வளைஞ்சு நெளிஞ்சு போகத் தெரியணும் நமக்கு.''

-மீண்டும் மாமியார் மருமகள் சண்டை ஆரம்ப மாகியது.

''இரண்டு பேரும் கொஞ்சம் சும்மா இருக்கிங்களா?''

-இடையில் புகுந்து அலறினாள் சரவணன். நற்காலிகமாக பணத்தோடு சூட்கேஸை பீரோவில் வைத்துப் பூட்டினான்.

''எனக்கு என்ன பண்றதுன்னு தெரியும். பேசாம இருங்க.'' - என்றபடி கட்டியிருக்கும் லுங்கியோடு தெருவில் இறங்கினான்.

வீதிமுக்கில் நாடார் டீக்கடை இருக்கிறது. மாலை முரசு, தினத்தந்தி என்று பேப்பர்கள் விரிந்து கிடக்கும். போனால் படித்துவிட்டு ஒரு டீயும் குடித்துவிட்டு வரலாம்.

தெருவைச் சேர்ந்தவர்களும் வருவார்கள்.

கொஞ்சம் நாட்டு நடப்பும் பேசிவிட்டு வரலாம்.

சரவணனும் நாடார் கடையை நோக்கித்தான் நடந்தான்.

வீட்டில் ஞானம் பிரமை பிடித்த மாதிரி ஆகிவிட்டிருந்தாள். மீண்டும் கணவர் கைலாசநாதன் படம் முன்னால் போய் நின்றாள்.

''என்னங்க இது சோதனை...?'' - என்று படத்தைப் பார்த்து கேட்டாள். சங்கீதாவுக்கு எரிச்சலாக வந்தது.

''ஆ ஊன்னா புருஷன் படத்துகிட்ட போய் நின்னு புலம்ப ஆரம்பிச்சுடுங்க. அவர் உயிரோட இருக்காரோ இல்லை போய்ச் சேர்ந்துட்டாரோ...?''

- அவள் பேச்சில் ஆத்திரமும் ஆவேசமும் தொனித்தது. ஞானத்துக்கு அழுகையே வந்தது.

''போய் வாயைக் கழுவுடி... என் புருஷன் பத்தி எனக்குத் தெரியும். அவர் நூறு வருஷம் இருக்கப் போறவர். வாய் புளிச்சிச்சோ, இல்ல மாங்கா புளிச்சிச்சோன்னு பேசாதே.''

- வெடித்தாள். லதாவும் சுதாவும் வந்து இரண்டு பக்கமும் நின்று கட்டிக் கொண்டனர்.

''அப்படின்னா திரும்பி வரலாமே... அவ்வளவு ஏன் ஒரு போஸ்ட் கார்ட் போடலாமே? வருஷம் அஞ்சாச்சு. என் புருஷன்தானே தூணா இருந்து குடும்பத்தை சுமக்கறார்?''

- சங்கீதாவிடம் தொடர்ச்சியாக சூடான கேள்விகள். ஞானத்துக்கு அழுவதைத்தவிர வேறு வழி தெரியவில்லை.

கணவன் நினைப்புக்குள் நுழைகிறாள்.

ஒரு தனியார் கம்பெனியில் அதன் எம்.டி.க்கு பி.ஏ வாக இருந்தவர் கைலாசநாதன். தமிழ், ஆங்கிலம், ஹிந்தி என்று எல்லா பாஷையும் அத்துபடி. எம்.டி.க்கு கைலாச நாதன் இல்லை என்றால் கையும் ஓடாது. காலும் ஓடாது. அப்படி ஒரு பற்றுதல் கைலாச நாதன் மேல். கை நிறைய சம்பளம் கொடுத்து நன்றாகவே வைத்திருந்தார்.

அதற்காக கைலாச நாதன் தாம் தூம் என்று செலவு செய்து ஒரு படாடோபமான வாழ்க்கை வாழத்தயாரில்லை. அடக்கமான அமரிக்கையான வாழ்க்கைதான் அவருக்குப் பிடித்திருந்தது.

எம்.டி. அவருக்காக ஒரு பங்களாவை ஒதுக்கியபோது வேண்டாம் என்று மறுத்துவிட்டு எளிமையாக வாடகை வீட்டிலேயே இருந்துவிட்டார். கார் கொடுத்த போது அதைக் கூட மறுத்துவிட்டார்.

'இன்று நான் சர்வீசில் இருக்கிறேன். நீங்கள் நல்ல சம்பளம் தருகிறீர்கள். இந்த வசதிகள் தாங்கும். நாளையே நான் ரிட்டையர் ஆனால் இதை பராமரிக்க என்னால் முடியுமா என்று பார்க்க வேண்டும். பராமரித்துத்தான் ஆக

வேண்டும் என்றால் அதற்காக புத்தி இப்பொழுதே நாலு காசை சேர்த்து வைத்துக் கொள்ளச் சொல்லும்.

எதிர்காலத்தில் நிம்மதியாக இருக்க புண்ணியத்தைச் சேர்ப்பதுதான் புத்திசாலிதனம். அதுதான் ஆபத்தில்லாதது. ஆனால் பணம் சேர்த்துக் கொள்வது ஆபத்தானது. அது உறவுகள் இடையே ஆசையை வளர்த்துவிடும். அப்பா சொத்து இருக்கிறதே என்று பிள்ளைகளிடம் உழைப்பையும் மட்டுப்படுத்திவிடும்.

எப்படிப் பார்த்தாலும் பணம் சேர்ப்பது எனக்கு சரியாகப்படவில்லை. அதற்காக இப்பொழுதே பாவம் செய்யவும் நான் தயாராக இல்லை. எளிமைதான் என்றைக்கும் சிறப்பானது' என்கிற ஒரு வியாக்யானத்துடன் அந்த வசதிகளை மறுத்துவிட்டார். இப்படிப்பட்டவர் மேலும் ஒரு பெரும்பழி வந்து விழுந்தது. சம்பளப் பணத்துடன் இவர் பேங்கில் இருந்து திரும்பும் போது ஒரு திருட்டுக் கூட்டம் திட்டமிட்டு பணத்தைப் பிடுங்கிக் கொண்டு இவரையும் தலையில் அடித்துப் போட்டுவிட்டு போயே போய்விட்டது.

அதன்பின் கைலாச நாதனுக்கு உடம்பில் உயிர்தான் இருந்தது. ஆனால் தான் யார் என்றுகூடத் தெரியாத அளவு சித்தம் கலங்கிவிட்டது.

அதன்பின் பார்க்காத வைத்தியம் இல்லை. போகாத கோவில் இல்லை. இறுதியாக காசிக்கு யாத்திரையாக அவரை அழைத்துச் சென்றாள் ஞானம். ஆனால் விதி வேறு விதமாய் விளையாடிவிட்டது. நடுவழியில் ஞானம் தூங்கிக் கொண்டிருக்கும்போது எங்கோ இறங்கிப் போய்விட்டார். இன்றுவரை அவர் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பதுகூடத் தெரியாது.

சகலத்தையும் எண்ணிப் பார்க்கிறாள் ஞானம். தர்மம் காப்பாற்றும், தர்மம் காப்பாற்றும் என்று சொல்லிக் கொண்டிருந்தவர். அது எப்படியோ இன்றுவரை காப்பாற்றிக் கொண்டுதான் இருக்கிறது.

எப்பொழுது செய்த பாவமோ கைலாசநாதனை குடும்பத்தில் இருந்து பிரித்துவிட்டது. மேலும் பாவத்தைச் செய்தால் அது அவரை தன் குடும்பத்துடன் சேரவிடாமலே செய்துவிடுமோ என்பதுதான் ஞானத்தின் கவலை.

மருமகளோ குறுக்கு வழிதான் பிழைக்கும் வழி என்று நினைக்கிறாள். ரயிலில் கிடைத்த பெட்டி தேடி வந்த லட்சுமியாம். இந்த லட்சுமிக்கு ஒரு ஏழைக் குடும்பத்தை நோக்கிவர நேர்வழியே தெரியாதா என்ன?

ஞானத்திடம் அங்கலாய்ப்பு பெருக ஆரம்பித்தது.

5

'காலத்தை நதி என்றும், அதில் விழுந்த துரும்புகள்தான் நாம் என்றும் சொல்வார்கள். துரும்புகளால் எதிர்நீச்சல் போட முடியாது!'

நாடார் டீக்கடை!

டீயைச் சூப்பும்போது பலவிதமான பேச்சுக்கள் காதில் விழுந்தன. 'விலைவாசி உயர்வு' அதில் பிரதான இடத்தில் இருந்தது. நாடார்கூட தனது டீயை இரண்டு ளரூபாயில் இருந்து இரண்டரை ரூபாய்க்கு உயர்த்தி யிருந்தார். அதுவேகூட கட்டுப்படி ஆகாதாம்.

''போதும் போதும்... பால்ல தண்ணி, டீத்தூள்ல கலப்படம்ன்னு நீங்க அட்ஜஸ் பண்றது எங்களுக்குத் தெரியாதாக்கும்...''

''என்னாது... என்கிட்ட கலப்படமா...? நீ நிரூபிச்சிட்டா இந்தக் கடையை உனக்கே எழுதிக் கொடுத்துட்டு போயிட்றேன்.''

- நாடாரும், ஒரு கஸ்டமரும் ஜாலியாக மோதிக் கொள்ள குறுக்கில் ஒரு தகரக் குவளையுடன் கண் தெரியாத ஒரு குருடர்.

''ஐயாசாமி... எதுனா பிச்சை போடுங்கய்யா'' - என்கிற கழிவிரக்கமான குரலில்...

சரவணனை அந்தக் குரலும் அவர் நிலையும் பிடித்து உலுக்கு உலுக்கியது.

கிட்டத்தட்ட அவர் அவன் அப்பாவைப்போல தோற்றத்தில் இருந்தார். அவனுக்குள் பாசம் பீறிட ஆரம்பித்தது. சட்டைப் பாக்கெட்டில் துழாவி ஒரு ஐந்து ரூபாய் நாணயத்தை எடுத்து அந்த தகரக் குவளையில் போட்டான்.

''என்ன சரவணா... காசு நிறைய இருக்குதா? அஞ்சு ரூவாயா போட்றே?'' - இது ஒருவர்.

''என்னமோ தோணிச்சு. போட்டேன். இன்னிக்கு அஞ்சு ரூவாயெல்லாம் ஒரு விஷயமா என்ன...?''

''அப்ப நீ ஒரு லட்சாதிபதின்னு சொல்லு.''

''என்னப்பா சொல்றே?''

''லட்சாதிபதிக்குதான்பா அஞ்சு ரூவா பிசாத்துக்காசு. மாசச் சம்பளக்காரனுக்கு அப்படிக் கிடையாது. ஏன்னா

விலைவாசிதான் ஏறுதே ஒழிய சம்பளம் அதுக்குத் தகுந்த மாதிரி எங்க ஏறுது?''

- நியாயமான ஒரு கேள்வியாகத்தான் சரவணனுக்கு தோன்றியது. சிரித்தான்.

அவன் லட்சாதிபதி என்று சொன்னது கொஞ்சம் ரத்தத்தில் கலந்து தித்தித்தது.

அந்த குருட்டுப் பிச்சைக்காரன் அடுத்த கடையை பார்க்க நகர்ந்து விட்டான்.

மனதோ பத்து லட்சத்தை என்ன செய்வது என்பதில் ஒரு பட்டிமன்றம் நடத்த ஆரம்பித்தது.

ஒரு டீக்கடையில்கூட நடுத்தட்டுக்காரனுக்கு பெரிய மரியாதை இல்லை. அஞ்சு ரூபாயை எல்லாம் பெரிதாகக் கருத வேண்டிய கட்டாயம். ஆபீசிலும் வீட்டுக்கு போகச் சொல்லி துரத்தும் கொடுமை...

'இப்படி ஒரு நிலையில் நான் மட்டும் நியாயமாக இருந்து எதை சாதிக்கப் போகிறேன்?'

கேள்வி மரங்கொத்தியாக கொத்தியது.

'சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்ளத் தெரிய வேண்டும்!' - எதிலோ படித்த பழமொழி ஞாபகத்தில் வந்தது.

'காட்டில் புலி, மானை அடித்துச் சாப்பிடுகிறதே அது தப்பா? அது பாவமா?' - இப்படி ஒரு கேள்வியில் எப்பொழுதோ நடந்த பட்டி மன்றங்கள் ஞாபகத்தில் வந்தன.

காடுகளில் சிங்கம்தான் வாழ முடியும். மான், சிங்கம் வாழ அழிந்துதான் தீர வேண்டும். நீ யார்? மானா? சிங்கமா?

சிங்கமாய் இருந்தால்தான் வாழ்க்கை.

இல்லாவிட்டால் மரணம்தான் பரிசு. எங்கும் எப்பொழுதும் வலிமையானதே வாழ முடியும்.

அப்படி இருக்க வந்த வலிமையை தர்ம நியாயம் பேசி இழந்துவிடுவதா?

அவன் யோசித்துக் கொண்டே இருந்தான். ஒரு ஆச்சரியம்! அவனை, பெட்டியை அவன் வசம் தொலைத்து விட்ட அந்தப் பெரியவரான சக்தி பெருமாள் ஒரு மறைவில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

எதற்காக?

அவன் வீட்டுக்குத் திரும்பியபோது ஞானத்தை பார்க்க முடியவில்லை. எங்கே போய்விட்டாள்? தேடினான்.

''அம்மா அந்த பெட்டியோட எங்கேயோ வெளியே போனாங்க...'' - லதாவும், சுதாவும் அதிர்ச்சியைத் தந்தனர்.

''வெளியே போனாங்களா... எங்க?''

''அநேகமா போலீஸ் ஸ்டேஷனுக்காதான் இருக்கணும்.'' அவர்கள் பதிலில் அவனுக்கு குப்பென்று வியர்த்துவிட்டது.

சங்கீதா ஒடிவந்து குய்யோ முறையோ என்று கத்தத் தொடங்கினாள்.

''இதுக்குத்தான் உங்கம்மா என்னைக் 'காய்கறி வாங்கிட்டு வா'ன்னு கடைக்கு அனுப்பினாங்களா?'' - என்று ஒப்பாரியே வைக்கத் தொடங்கினாள். சரவணனுக்கு அதற்குமேல் அங்கு இருக்கப் பிரியமில்லை. அவனும் போலீஸ் ஸ்டேஷனுக்கு கிளம்பினான்.

ஸ்டேஷனில்...

பெட்டியையும் பணத்தையும் பார்த்துவிட்டு ஒரு சந்தேகப் பார்வையோடுதான் சப்-இன்ஸ்பெக்டர் பேசிக் கொண்டிருந்தார்.

''பத்து லட்ச ரூபா பணத்தை ஒரு பெரியவர் ரெயில்ல தவறவிட்டார்னா நம்ப முடியலையே! ஆமா எந்த இடத்துல தவறவிட்டார்...?''

''எலெக்ட்ரிக் ட்ரெயின்லங்க. என் மகன்தான் இதை எடுத்துக்கிட்டு வீட்டுக்கு வந்தான்.''

''அவர் ஏன் நேரா போலீஸ் ஸ்டேஷனுக்கு வரலை.''

- எஸ்.ஐ.யின் கேள்வி ஞானத்தை குத்தியது.

''அவனுக்கு இந்த பெட்டியைத் திறந்து பார்த்த உடனேயே கையும் ஓடலை, காலும் ஓடலை.''

''ஆனா உங்க வீட்டுக்கு மட்டும் ஓடி வர முடிஞ்சிச்சாமா?''

''என்னங்க கேள்வி இது. வீட்டுக்கு வராம வேற எங்க போவான்?''

''நேரா இங்க வந்திருக்கணும்.''

''தப்புதாங்க.''

''தப்புதான்னா...? நீங்க மட்டும் எதனால ஸ்டேஷனுக்கு கொண்டுகிட்டு வந்தீங்க?''

''இங்க உங்ககிட்ட ஒப்படைச்சாதானேங்க பணம் உரியவர்கிட்ட போய்ச் சேரும்.''

''ஒஹோ... இந்த புத்தி உங்க பையனுக்கு இல்லையேன்னு நினைக்கும் போதுதான் ரொம்ப வருத்தமா இருக்கு.''

''சிறு பையன்க. குழம்பிட்டான். அதான் நான் கொண்டு வந்துட்டேனே...?''

''சரி சரி... உங்க வீட்டு விலாசம், போன் நம்பர்லாம் கொடுத்துட்டு புறப்படுங்க. நாங்க பாத்துக்கறோம்.''

''பாத்துக்கறோம்னா...?''

''பாத்துக்கறோம்னா உரியவங்ககிட்ட ஒப்படைக்கப் போறோம்னு அர்த்தம். ரொம்ப நோண்டி நொங்கு எடுக்கக்கூடாது.''

''நல்லதுங்க. நான் கிளம்பறேன்.'' - ஞானம் கிளம்பத் தொடங்கி வாசலைத் தாண்டும்போது எதிரில் சரவணன்!

''என்னம்மா... எங்க பொட்டி?''

''சப்-இன்ஸ்பெக்டர்கிட்ட ஒப்படைச்சுட்டேன்.''

''சரி எங்க அதுக்கு எவிடென்ஸ்?''

''அப்படின்னா?''

''எப்.ஐ.ஆர். மாதிரி, நீங்க பணத்தை ஒப்படைச்சதுக்கு உங்களுக்கு ஒரு ரசீது கொடுப்பாங்க. அது எங்கே?''

''அதெல்லாம் எதையும் தரலியே...''

''இதுக்குத்தான் நான் அப்பவே சொன்னேன். போலீஸ்காரங்களை நம்பாதீங்கமான்னு. கேட்டா தானே? இப்ப என்ன குடி முழுகிப் போச்சுன்னு பணத்தை தூக்கிக்கிட்டு இங்க வந்துட்டீங்க...?''

- ஸ்டேஷன் வாசலிலே சரவணன் கத்த ஆரம்பிக்க, சக போலீஸ்காரர்களும் வேடிக்கை பார்க்க, எஸ்.ஐ.யும் வாசலுக்கே வந்துவிட்டார்.

''என்னய்யா இங்க சத்தம்?''

''சத்தம் இல்லை... பெட்டியை ஒப்படைச்சதுக்கு ரசீது எதுவும் கிடையாதா? அதத்தான் கேட்டுகிட்டிருக்கேன்.''

- சரவணன் கேள்வியே அவன் விவரமானவன் என்று சொல்லாமல் சொல்லிவிட்டது. எஸ்.ஐ.யும் அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

''உள்ற வா...'' - என்று அழைத்தபடி திரும்பி நடந்தார்.

''நீங்க பப்ளிக்கை வா போ நீன்னுதான் கூப்பிடு வீங்களா?'' - சரவணனும் கேட்டபடி பின் தொடர்ந்தான். இது அவன் சுயமரியாதையும் உடையவன் என்று சொல்லாமல் சொல்லிவிட்டது. எஸ்.ஐ. முகத்தில் கோபம் குவிய ஆரம்பித்தது.

தனது நாற்காலியில் உட்கார்ந்தபடியே அவனை மேலும் கீழுமாய் பார்த்தார்.

''என்ன சார் என் கேள்விக்கு பதிலே சொல்ல மாட்டீங்களா?''

''என்ன பதில் சொல்லணும்?''

''எங்கம்மா பணத்தை ஒப்படைச்சிருக்காங்க. அதுக்கு ஒரு ரசீது கிடையாதா?''

''ரசீது கிடக்கட்டும். அந்தப் பணம் யார் கைல கிடைச்சது?

''என் கைலதான்...''

''நீ வராம எதுக்காக உங்கம்மா கிட்ட கொடுத்து விட்டே...?''

''முதல்ல கொஞ்சம் மரியாதையா பேசுங்க. நான் புறப்பட்றதுக்குள்ள எங்கம்மா கிளம்பிட்டாங்க. இப்ப யார் வந்து தந்தா என்ன...? ஒருத்தர் பணத்தை தொலைச்

திருக்காரு. எங்கம்மா கொண்டுகிட்டு வந்து தந்திருக்காங்க. அதைப் பாராட்டாம, ரசீது தராம இப்படி மரியாதை இல்லாம பேசினா என்ன சார் அர்த்தம்?''

''நீ ரொம்ப அதிகம் பேசறே... இது யாரோ தொலைச்ச பணமா... இல்லை நீ யார்கிட்டையாவது திருடின பணமா?''

''என்ன சார் இது புது கதை?''

''கதை இல்லை... உங்கம்மா பணத்தோட வந்திருக்கறத பார்த்தா எனக்கு சந்தேகமா இருக்கு!''

''திருடியிருந்தா நான் தைரியமா இந்த ஸ்டேஷனுக்கு வருவேனா?''

''நேர வந்துட்டதாலேயே நீ நல்லவன்னு நம்ப நான் ஒண்ணும் இளிச்ச வாயனில்ல.''

- எஸ்.ஐ.யிடம் எகத்தாளம் கொடிகட்டிப் பறந்தது. ஞானம் அதிர்ச்சியடைந்தாள்.

''சார்... என் மகன் திருடன் கிடையாது சார். நான் கொண்டு வந்து தந்தது தப்புள்னா என்னை மன்னிச்சிடுங்க. அவனை எதுவும் சொல்லாதீங்க'' என்று பதற்றத்தோடு சொன்னாள்.

நடுவில் செல்போன் ஒன்று எஸ்.ஐ.யின் பாக்கெட்டில் அமட்டியது. அதற்கு காதைக் கொடுத்தபடி எஸ்.ஐ. சற்று விலகிச் செல்ல ஸ்டேஷன் ரைட்டர் மெல்ல சரவணனையும், ஞானத்தையும் சமீபித்தார்.

''தம்பி! தைரியமா நில்லுங்க. இந்த ஆள் ஒரு மாதிரி. ஏரியா எம்.எல்.ஏ.வைத் தெரியும்னு சொல்லுங்க. வழிக்கு வந்துடுவாரு. இல்லாட்டி தலைல மிளகா அரைச்சிடுவாரு.'' - என்று காதோரமாய் கிசுகிசுத்து விட்டு விலக, எஸ்.ஐ.யும் திரும்பி வந்தார்.

மீண்டும் முறைப்பு.

சரவணனும் புத்திசாலித்தனமாய்ப் பேச ஆரம்பித்தான்.

''எஸ்.ஐ.சார்! நான் இந்தத் தொகுதி எம்.எல்.ஏ. வெற்றிக்காக பாடுபட்ட ஒருத்தன். என்கிட்ட நீங்க தப்பா நடந்துகிட்டா அதோட விளைவு ரொம்ப மோசமா இருக்கும்.''

- அடுத்த வினாடியே எஸ்.ஐ.யிடம் தடுமாற்றம். ''இதை முந்தியே சொல்றதுக்கென்ன.... அடடா... நான் ஏரியா ரவுடிப்பசங்களடல் பண்ற மாதிரி பண்ணிட்டேனே. சாரி... வெரிசாரிசார். சாரி.'' - என்று வழிந்தார். ரைட்டர் அதைப் பார்த்து ரகசியமாய் சிரித்துக் கொண்டபோது இன்னொரு ஆச்சரியம். ஸ்டேஷன் வாசலில் ஆட்டோவிலிருந்து பெட்டியைத் தொலைத்த பெரியவர் சக்தி பெருமாளே இறங்கிக்கொண்டிருந்தார்!

விடுவிடுவென்று நடந்து உள்ளே நுழைந்தவரைப் பார்த்து சரவணனே ஆச்சரியப்பட்டுப் போனான். ரயிலில் அருகில் அமர்ந்திருந்தபோது அவன் மூக்கைத் துளைத்த அதே ஜவ்வாது வாசனை இப்பொழுதும் மூக்கை நிமிண்டியது. ''ஐயா! நீங்கதானே இந்த பெட்டியைத் தொலைச்சவர்?'' - என்று அவரைப் பார்த்து பரவசத்தோடு கேட்டான். அவரும் ஒரு சின்னப் புன்னகையோடு அதை அங்கீகரித்துக் கொண்டார். எஸ்.ஐ. பார்வை அவரை அளக்க ஆரம்பித்தது.

''சப்-இன்ஸ்பெக்டர் சார்... நான் பத்து லட்ச ரூபாயோட ஒரு பிரீஃப்கேஸை தொலைச்சிட்டேன். கம்ப்ளைண்ட் கொடுக்கத்தான் வந்தேன். வந்தா வந்த

இடத்துல நான் தொலைச்ச பெட்டியே இருக்குது. நல்லவேளை ஒரு கெட்டதுலையும் எனக்கு நல்லதுதான் நடந்திருக்கு...'' - என்றார் அந்த பெரியவர்.

''அப்ப... இந்த பாக்ஸ்தானா?''

''ஆமாம்... அதுல மூணு லட்சரூபாய்க்கு ஐந்நூறு ரூபாய் நோட்டும், இரண்டு லட்சத்துக்கு ஆயிரம் ரூபாய் நோட்டும், மீதிக்கு நூறு ரூபாய் நோட்டும் இருக்கும். பாருங்க தெரியும்.''

- அதன்பின் பார்க்க வேண்டியதைப் பார்த்து செய்ய வேண்டியதைச் செய்து அவர்களை வெளியே விட்டார் சப்-இன்ஸ்பெக்டர்.

வெளியே வந்த சரவணன் ஞானத்தைப் பார்த்து பெருமூச்சுவிட்டான்.

''ஒரு நல்லது பண்றதுக்குக்கூட இவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கு...'' - என்று சலித்துக் கொண்டான்.

அவரோ ''ரொம்ப நன்றி தம்பி...'' என்று கையைப் பிடித்துக் கொண்டார்.

''அம்மாவுக்கு சொல்லுங்க. நான்கூட கொஞ்சம் யோசிச்சேன்.'' - என்று உண்மை பேசினான் சரவணன்.

''நல்ல அம்மா... நல்ல பிள்ளை... உங்களுக்கு பிரமாதமான எதிர்காலம் இருக்கு!'' - என்றார் பெரியவர்.

அவன் உதட்டில் அடுத்த நொடி விரக்திச் சிரிப்பு.

''என்ன தம்பி? எதுக்காக இப்படி விரக்தியா சிரிக்கிறே?''

''சிரிக்காம என்னத்தங்க பண்றது?''

''சிரிக்கற அளவுக்கா நான் வாழ்த்தியிருக்கேன்.''

''அப்படி இல்லீங்க. நீங்க எதிர்காலம் இருக்குள்ளு சொன்னதை நினைச்ச உடனே என் கஷ்டங்கள் ஞாபகம் வந்தது. அதுசரி... எப்படி பெரியவரே இப்படி பத்து லட்ச ரூபாயை மறந்துட்டு ரயிலை விட்டு இறங்க உங்களுக்கு மனசு வந்தது?''

- இப்பொழுது அவர் பதிலுக்கு சிரித்தார்.

''இனிமேலாவது பணத்தை பத்ரமா வெச்சுக்குங்க. நல்லவேளை... நீங்க வந்ததால என் மகனை அந்த போலீஸ்காரர் விட்டார். இல்லேன்னா அவனை ஒரு திருடன்னு சொல்லி முத்திரை குத்தியிருப்பார்.'' - ஞானம் இடைவெட்டிப் பேசினாள்.

''எது எப்படி நடக்கணுமோ அப்படி நடந்து தானேம்மா தீரும். உண்மையில உண்மையா இருக்கறவங்களுக்கு எப்பவும் பிரச்சினை இல்லம்மா...''

''அப்படித் தெரியலீங்க. கலியுகம் ரொம்ப மோசமானதுன்னு புத்தகத்துல படிச்சிருக்கேன். இப்ப அதை தினமும் அனுபவிக்கிறேன்.''

''அப்படிச் சொல்லாதீங்க. உங்களுக்கு என்ன சிக்கல்?''

''குடியிருக்க ஒரு வீடு இல்லை. சொந்த வீட்டுக்கு கூட நாங்க அலையலை - வாடகை வீடு ஒண்ணுக்கு என் பையன் அலையறான். ஆனா அதுகூட நல்ல விதமா கிடைக்க மாட்டேங்குது.''

''இவ்வளவுதானா?'' - அவர் கேட்ட விதத்தைப் பார்த்தால் அது ஒரு விஷயமே இல்லை என்கிற மாதிரிதான் தோன்றியது.

6

'வாழ்க்கையில் உண்மையில் துன்பம் என்று ஒன்று இல்லவே இல்லை. உண்மையான துன்பம் என்பது நம்மை மயக்கும் இன்பங்களே என்றால் நம்பமுடிகிறதா?''

சாப்பிட்டு முடித்து கைகழுவி விட்டு ஹாலில் வந்து அமர்ந்தார் பெரியவர்.

அவர் முன்னால் சரவணனிலிருந்து அவன் குடும்பம் மொத்தமும் கூடியிருந்தது. குழந்தை வீணா வாயில் விரல் சப்பியபடி பெரியவரைப் பார்க்க, அவளை அழைத்து மடியில் அமர்த்திக் கொண்டார் அவர்.

''கவலைப்படாதீங்க... உங்களுக்கு நான் உதவி செய்யறேன்'' என்று அவர் சொல்ல, அதைக் கேட்டு கொஞ்சம் போல தெம்பாகியிருந்தான் சரவணன்.

''இவ்வளவு சொல்ற என்னை உன் வீட்டுக்கு கூப்பிடமாட்டியா?'' - இதுவும் அவர்தான்.

''வாங்க பெரியவரே... உங்களுக்கு இல்லாத உரிமையா?'' -என்று கேட்டு, வீட்டுக்கும் அழைத்து வந்து விட்டான் அவரை.

வந்தவரை சாப்பிடச் சொல்லாவிட்டால் எப்படி? சொன்ன உடனேயே அவரும் ஏதோ மகன் வீட்டில் கை நனைக்கும் தகப்பனைப் போல உடனேயே சாப்பிட அமர்ந்துவிட்டார். சாப்பிட்டும் முடித்துவிட்டார்.

''நான் என்ன நினைக்கறேன்னா... ஒரு பத்தாயிரம் பதினஞ்சாயிரம் இனாமா தருவார். பெரிய மனுஷன் மாதிரி

வேண்டான்னு சொல்லிடாதிங்க.'' - என்று ஙங்கீதா அவன் காதோரம் குசுகுசுத்தபடி நிற்க அவரும் வாயைத் திறந்தார்.

''இந்தப் பணம் என்னோட பணமே இல்லை. நான் ஒரு சக்தி உபாசகன். ஒரு சேட்டோட மனைவிக்கு கேன்சர் வியாதி. அவ பூரண குணமாகறதுக்காக அம்பாளை வேண்டி ஜபம் செய்தேன். அவளும் குணமாயிட்டா! அதுக்காக இந்த பணத்தை சேட் கொடுத்தார். நானும் இதை ஏதாவது அநாதை ஆஸ்ரமத்துக்கு கொடுத்துடலாம்னு இருக்கேன்.''

- அவர் சொன்னதைக் கேட்டு சங்கீதாவுக்கு நெஞ்சு துடித்தது.

'இதுவும் ஒரு அநாதை ஆஸ்ரமம் மாதிரிதான். நீங்க அதை இங்கேயே தந்துடலாம்' - என்று அவள் உள்மனது சொன்னது. உரக்கச் சொல்லத்தான் முடியவில்லை.

''ரொம்ப நல்ல முடிவு... அப்படியே செய்துடுங்க'' - என்று ஞானம் அவர் பதிலுக்கு ஒரு மறுபதிலைச் சொன்னாள்.

''உங்களுக்கு ரொம்பப் பெரிய மனசு...'' - அவர் எதை வைத்து அப்படிச் சொன்னாரோ தெரியாது. பார்வை சங்கீதா மேல் வந்து நிலைத்து நின்றது.

''நீதான் இந்த வீட்டுக்கு மருமகளா?''

''அ... ஆமாம்!''

''நீ என்னம்மா நினைக்கறே...?''

''அது... அதத்தான் அத்தை சொல்லிட்டாங்களே.''

''அப்படியா?'' -அவர் கேட்ட விதத்தில் ஏராள அர்த்தங்கள்.

''ஆமாம்... அதுதான் சரி.''

''ரொம்ப சந்தோஷம். இதை ஏன் நான் உங்ககிட்ட சொல்றேன்னா அந்த புண்ணியமெல்லாம் உங்களுக்குத்தான் வரப்போகுது.''

- சரவணன் அதைக் கேட்டு நெளிந்தான்.

''ரொம்ப சந்தோஷம். உங்க எண்ணப்படி அந்த புண்ணியத்தாலையாவது என் மகன் வேலைக்கு ஒரு குந்தகமும் வராம இருந்தா சரி.'' - இது ஞானம்.

''வேலைக்கு மட்டுமல்ல... உங்களுக்கு ஒரு வீடும் கிடைக்கப் போகுது.'' - அவர் புதிர் போட்டார்.

''வீடு... எங்களுக்கா?'' - சரவணன்தான் கேட்டான். சொல்லப் போனா நான் ஒரு சன்யாசி. இந்த சன்யாசிக்கு எதுக்கு வீடும் வாசலும்?''

- அவர் என்ன சொல்ல வருகிறார் என்றே புரியவில்லை. எல்லோர் புருவத்திலும் குழப்ப வளைவு.

''புரியலையா...?''

''ஆமாம் நீங்க என்ன சொல்றீங்க?''

''இந்த சென்னைல வேளச்சேரில கடல்போல ஒரு பங்களா எனக்கு சொந்தமா இருக்கு. அதை நான் தற்காலிகமா உங்களுக்கு கொடுத்துடலாம்னு இருக்கேன்.''

- அவர் அப்படிச் சொன்ன மறு நொடி எல்லோருக்குமே இன்ப அதிர்வில் நெஞ்சு படபடத்தது.

''பெரியவரே! நீங்க சொல்றது உண்மையா?''

''சந்தேகமா இருந்தா என்கூட வந்து பார் சரவணா...''

''அதுக்கில்ல... நீங்க யாரோ நாங்க யாரோ... எங்களுக்கு போய் உங்க பங்களாவை...''

''ஏன்... உங்களுக்கு நான் அதை வாடகைக்கு தரக்கூடாதா?''

''வாடகைக்கா... பங்களாவையா?''

''ஆமாம்... சும்மா ஒரு நூறு ரூபா வாடகை நீ தந்தா போதும். அதுகூட தர முடியலேன்னா பரவாயில்ல.'' - அவர் முடிக்க, அனைவரும் மேலும் அதிர ஞானம் பரவசத்தின் உச்சிக்கே போய்விட்டாள்.

''ரொம்ப சந்தோஷம்ங்க... ஆனா ஒரு பங்களாவை பராமரிச்சு அதுல குடியிருக்கற அளவுக்கு எங்களுக்கு வசதி கிடையாது.''

''அந்த வீட்டுக்குப் போற நேரம் வசதிகள் வரலாம் இல்லையா?''

''என்ன சொல்றீங்க... எங்களால உங்களோட பேச்சை நம்ப முடியலை.''

''இப்ப அப்படித்தான் இருக்கும். பங்களாவை வந்து பாத்துட்டு சொல்லுங்க.''

''இதுல பார்க்க என்ன இருக்கு... ஆமா நீங்க எங்க இருப்பீங்க?''

''நான் நூத்தி எட்டு சக்தி ஸ்தலத்துக்கும் யாத்திரை போய் வரப்போறேன். அது முடிய எப்படியும் மூணு வருஷம் ஆகலாம்.''

''அப்ப அந்த மூணு வருஷம்தான் எங்களுக்கு அந்த பங்களாவா?'' - இப்படிக் கேட்டவள் சங்கீதா.

''ம்... அப்படித்தான் வெச்சுக்குங்களேன். என் பங்களாவை ஒரு நல்ல குடும்பத்துகிட்ட விட்டுட்டு போற

ஒரு திருப்தி எனக்கு கிடைச்சா போதும். இதுகூட ஒரு சுய நலம்தான்.''

-என்னவோ தெரியவில்லை அவர் அப்படிச் சொல்லியும் ஞானத்துக்கு நெருடலாகத்தான் இருந்தது.

''உங்களுக்கு எங்கமேல ஏன் இவ்வளவு அக்கறை?''

''உங்க நேர்மைக்கு நான் செய்யற ஒரு சிறு சகாயம். அவ்வளவுதான்.''

''நேர்மைக்கு பதிலா சகாயத்தை வாங்கிக்கறது பாவமில்லையா?''

''ஒரு பாவமுமில்லை. சொல்லப் போனா நான் என் வீட்டை உங்களை நம்பி ஒப்படைக்கிறேன். அது பாதுகாப்பா இருக்கும்னு நம்பறேன்.''

''நீங்க யாருக்காவது வாடகைக்கு விட்டாலும் அதே பாதுகாப்பு இருக்குமே...'''

''யாருக்கோ வாடகைக்கு விட்றதுக்கு நான் உங்களுக்கே விடலாமே. நீங்க யாரையோவிட எதுல குறைஞ்சவங்க?''

-அவர் அப்படிக் கேட்டபின் அதற்கு மேல் ஞானத்தால் பதில் பேசமுடியவில்லை.

''சும்மா பதிலுக்கு பதில்னு சொல்லாம ஒத்துக்குங்க அத்தை. மூணு வருஷம்தானே... இவர் வாய் முகூர்த்தம் நாம அந்த வீட்டுக்குப் போய் பெரிய ஆளா வரலாம் இல்லையா?''

-சங்கீதா தன் பேராசையை பட்டவர்த்தனமாக காட்டினாள்.

''சரி... இனி அவர் விருப்பம்.'' - ஞானம் அரை மனதாக சொல்ல ஒரு முக்கியமான விஷயம்...'' - பெரியவர் இறுதிக் கட்டத்தில் அப்படிச் சொல்லி இடைவெளியும்விட எல்லோரும் அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று அவரையே வெறித்தனர்.

''என்ன... வீட்டுல, சாரி உங்க பங்களாவுல சுவத்துல ஆணி அடிக்கக்கூடாது, சுத்தபத்தமா வீட்டை வெச்சுக் கணும்னு சொல்லப் போறீங்களா?'' - சங்கீதாதான் கேட்டாள்.

''இல்லை... அதெல்லாம் உங்க விருப்பம்.'' - அவர் பதில் ஆச்சரிய மூட்டியது.

''அப்படின்னா என்ன அந்த முக்கிய விஷயம்?''

''அந்த பங்களாவுல மாடியில ஒரு அறை இருக்கு.''

''சரி... அந்த அறைக்கென்ன?''

''அதை மட்டும் எந்தக் காரணம் கொண்டும் நீங்க திறக்கக்கூடாது.''

- அவர் சொன்ன விதத்தில் இனம் புரியாத மர்மம்.

''அந்த அறைல அப்படி என்ன இருக்கு?''

''அது உங்களுக்குத் தேவையில்லாத விஷயம். அதை திறக்கக் கூடாதுன்னா திறக்கக்கூடாது.''

''நீங்க பூட்டி சாவி எடுத்துக்கிட்டு போயிடுங்க. எதுக்கு எங்ககிட்ட சொல்றீங்க?''

''அதை நான் எப்பவும் பூட்டினதேயில்லை. பூட்டவும் கூடாது. வெறுமனசாத்திதான் வெச்சிருக்கேன்.''

''ஏன் அப்படி?''

''அப்படித்தான்... 'அதை எந்தக் காரணம் கொண்டும் திறக்கமாட்டோம்'னு சத்தியம் செய்து தந்தா நான் அந்த பங்களாவை உங்களை நம்பி ஒப்படைக்க தயாராக இருக்கேன்.''

- பெரியவர் சொன்னது சரவணனை மிகவும் ஆச்சரியப்படுத்தியது. ஞானத்தைப் பார்த்தான். அவள் முகத்திலும் ஆச்சரிய ரேகைகள்.

''என்ன யோசனை... அங்க ஏதாவது பேயோ பிசாசோ இருந்து அதை நான் மறைக்கறதா ஒரு நினைப்பு தோணுதோ?''

''சேச்சே... அதெல்லாம் இல்லை. அதை நீங்க பூட்டாம வெச்சிருக்கறதுதான் புரியலை!''

''சரி... பூட்டி சாவியை எடுத்துக்கிட்டே போயிட்றேன். இப்ப உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே...?''

- அவர் அப்படிச் சொன்ன மறு நொடியே எல்லோர் முகத்திலும் மலர்ச்சி. இருந்தும் சுதாவும் லதாவும் ஒருவரையொருவர் பார்த்தபடி ஒதுங்கினர்.

''லதா! இவர் பேசற எல்லாமே அன்யூஷுவலா இல்ல?''

''ஆமாண்டி. எனக்கு ஒண்ணுமே புரியலை. யாராவது ஒரு பங்களாவை நூறுக்கும் இருநூறுக்கும் வாடகைக்கு விடுவாங்களா?''

''சரி... சரி... சத்தமா பேசாதே. நமக்கெதுக்கு வம்பு? நாம எதாவது பேசப்போய் அண்ணி கத்தப் போறா. அவளுக்குதான் ஒசியில எது கிடைச்சாலும் பிடிக்குமே...''

-இருவரும் அமரிக்கையாக பேசி விட்டுத் திரும்ப அந்த பெரியவர் ஆசீர்வதித்துவிட்டு புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

சரவணன் வாசல் வரை சென்று அவரை வழி அனுப்பிவிட்டு வந்தான்.

வந்த ஜோரில் ''நாளைக்கே வீட்டைப்போய் பாத்துடுவோம்'' என்றான் அவன் மனைவி சங்கீதாவிடம்.

''இப்பவேகூட அவர்கூட போய் நீங்க பாத்துட்டு வந்திருக்கலாம்...'' சங்கீதா, லதா - சுதாவின் கருத்துக்கு சுருதி சேர்க்கிற மாதிரிதான் சொன்னாள்.

லதாவும் சுதாவும் மீண்டும் ஒருமுறை தங்களை பார்த்துக்கொண்டனர். 'இது எதில் போய் முடியுமோ?'

பெருமூச்சு!

7

'அழகான ஆசைகள் மோட்சத்துக்கு வழி காட்டும். அதிகமான ஆசைகள் மோசத்துக்குத்தான் வழிகாட்டும்!'

வேளச்சேரி!

பங்களா மிரட்டலாக சரவணனையும் அவன் குடும்பத்தையும் வரவேற்றது.

சினிமாக்காரர்கள் பார்த்தால் விடமாட்டார்கள். அப்படி ஒரு விஸ்தீரணம். முன்னால் தோட்டம். அதில் விசிறி வாழை! ஒரு சன்யாசிக்கு எதற்கு இத்தனை பெரிய

வீடு என்கிற கேள்வி பார்த்த மாத்திரத்தில் லதாவுக்கும் சுதாவுக்கும் வந்துவிட்டது.

பெரியவர் தோட்டத்தில் ஒரு மூங்கில் நாற்காலியில் உட்கார்ந்து தேவிபாகவதம் படித்துக் கொண்டிருந்தார். தாடியை நீவிக் கொண்டே அவர் படித்துக் கொண்டிருந்த விதமும் சரவணன் குடும்பத்தோடு ஒரு ஆட்டோவில் வந்து இறங்க - அவர்களைப் பார்த்து சிரித்த விதத்திலும் ஏதோ ஒரு உள்ளர்த்தம் பொதிந்திருந்தது.

''வந்துட்டீங்களா?''

''வந்துட்டோம் சாமி...'' - என்ற சரவணன் மிகப் பணிவாக அவர் காலில் எல்லாம் விழுந்து எழுந்தான். சங்கீதாவோ வீட்டின் விஸ்தீரணத்திலேயே கவனமாக இருந்தாள். அவளுக்கு ஏற்கெனவே நன்கு பெரிய பெரிய விழிகள். அது காதுவரை விரிந்து அவள் வியப்பின் உச்சியில் இருப்பதை சொல்லாமல் சொன்னது.

ஞானமும் வியப்பில்தான் இருந்தாள். உள்ளூர ஒரு சின்ன பயம் அவளுக்குள் கபடி விளையாடியபடி இருந்தது. அது கண்ணிலும் தெரிந்தது.

''என்னம்மா... இவ்வளவு பெரிய பங்களாவான்னு ஆச்சரியமா இருக்கா?''

''அ... ஆமாங்க...''

''எல்லாம் என் பூர்வீக சொத்து.''

''இந்த சொத்துக்கு வாரிசுகள் இல்லையா?''

- ஞானம் நியாயமான அந்தக் கேள்வியை முன்பே கேட்டிருக்க வேண்டும். இருந்தும் இப்பொழுதுதான் கேட்டாள். பெரியவர் சிரித்தார்.

''யாரும் இல்லைம்மா. நான் ஒரு ஒண்டிக்கட்டை'' என்றார்.

''தூரத்து சொந்தம்னுகூடவா யாரும் இல்லை...?''

- இது லதா. பெரியவர் திரும்ப சிரித்தார்.

''இல்லைன்னுதான் சொல்லணும்...'' என்றார்.

''ஆச்சரியமா இருக்கு...'' இது சுதா.

''வாழ்கைல எவ்வளவோ ஆச்சரியங்கள். அதுல இதெல்லாம் ஒண்ணுமேயில்லம்மா...''

- அவர்கள் இப்படி பேசிக் கொள்ள சங்கீதாவுக்கு எரிச்சலாக வந்தது.

''ஏய் லதா... சுதா... என்ன இது பெரியவரைக் கேள்வி மேல கேள்வி கேட்டுக்கிட்டு. ஐயா நீங்க வாங்க... வந்து வீட்டைக் காட்டுங்க...'' - என்று படபடத்தாள்.

பெரியவரும் ''வாங்க வாங்க...'' - என்று அவர்களை உள்ளே அழைத்துச் சென்றார்.

பங்களாவின் ஒவ்வொரு பாகமும் மிரட்டலாக இருந்தது. தரையெல்லாம் மார்பிளில் இழைக்கப் பட்டிருந்தது. கதவும், நிலையும் தேக்கு மரத்தில் வார்னீஷ் பூச்சில் ஜொலித்தது. சங்கீதா வாயைப் பிளந்தாள்.

''வாவ்... எவ்வளவுக்கெவ்வளவு அடைஞ்சு கிடந்தோமோ அவ்வளவுக்கவ்வளவு இங்க சுதந்திரமா இருக்கப் போறோம். ஆமா... மொத்தம் எத்தனை ரூம்கள்...?''

''அது இருக்கும்மா ஒரு ஏழு ரூம்...''

''அப்ப ஆளுக்கு ஒரு ரூம் எடுத்துக்கலாம். பிரச்சினை இல்லை.''

''அண்ணி... இப்ப ரூம் இருக்கு - பிரிச்சுக்கலாம். ஆனா எல்லாம் மூணு வருஷத்துக்குத்தான். அப்புறம் இவர் வந்துட்டா நாம பழையபடி ஒண்டுக் குடித்தனத்துக்குத்தான் திரும்பணும். ஞாபகம் வெச்சுக்குங்க...''

- லதா ஒட்டியும் ஒட்டாமலே பேசினது சங்கீதாவுக்கு எரிச்சலைத் தந்தது.

''ஏண்டி அப்படி பேசறே... பெரியவரே மனசு மாறி நீங்களே இங்க இருங்க. உங்களோட நானும் இருந்துக்கறேன்னு சொல்லலாம் இல்லையா?''

- சங்கீதா மிக சாமர்த்தியமாக பேசிவிட்டதாக நினைத்துக் கொண்டு பெரியவரைப் பார்த்தாள். அவர் முகத்தில் அழையாத அந்த மர்மப் புன்னகை.

இறுதியாக மாடியில் உள்ள அந்த அறைக்கு முன்னால் சென்றபோது அதை பெரியவர் பூட்டியிருந்தார்.

''இதுதான் நீங்க திறக்கக்கூடாத என்னோட அறை. திறக்கக் கூடாதது மட்டுமில்ல - ஜாக்ரதையாவும் பாத்துக்கணும்'' - என்றார்.

சங்கீதா அந்த அறையின் கதவை ஊன்றிப் பார்த்தாள். ஒரு கோவிலின் கர்ப்பக்கிரகக் கதவு போல அதில் சந்தனம் பூசி பொட்டெல்லாம் வைக்கப்பட்டிருந்தது. அந்த நாளைய கொண்டி போட்ட தாழ்ப்பாள். அதன் துவாரக் காதுக்குள் அடைபட்டுத் தொங்கும் ஒரு சாதாரண பூட்டு.

பூட்டையும் கதவையும் எல்லோருமே பார்த்தார்கள். பெரியவரும் ''இந்த ரூம்தான் நான் சொன்ன அந்த ரூம்'' என்று கண் சிமிட்டினார்.

அப்பொழுதுகூட சுதாவுக்கும் லதாவுக்கும் அந்த ரூமில் விபரீதமாய் ஏதோ இருப்பதாகத்தான் தோன்றியது. இருப்பினும் சூழ்நிலையை உத்தேசித்து அடக்கிக் கொண்டனர்.

சரமான் செட்டெல்லாம் வந்து வீடு முழுக்க நிரம்பிவிட்டன. பெரியவரும் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு 108 சக்தி ஸ்தல யாத்திரைக்குப் புறப்பட்டு விட்டார். சங்கீதாவுக்கு அந்த பங்களா வீடு மிகவும் பிடித்துப் போய்விட்டது. சுற்றிச் சுற்றி வந்தாள். தோட்டத்துப் பக்கம் வந்து எங்கே காய்கறி போடலாம், எங்கே கீரைகள் போடலாம் என்றெல்லாம் யோசிக்கத் தொடங்கிவிட்டாள்.

நடுநடுவே அந்த மாடி அறைப் பக்கமும் அவள் பார்வை போகத்தான் செய்தது. அதன் எதிரொலிகளையும் சரவணனிடம் அவ்வப்போது காட்ட ஆரம்பித்தாள்.

''ஏங்க... அந்த ரூம்ல என்ன இருக்கும்னு நீங்க நினைக்கிறீங்க...?''

''எது இருந்தா நமக்கென்ன சங்கீதா? அது நம்ம ரூம் கிடையாது. அதைப் பத்தி எதுக்கு அநாவசியமா? யோசிக்கறே?''

''இல்ல... எனக்கு அந்தப் பெரியவரை நினைச்சா ஒரு பக்கம் சந்தேகமா இருக்கு.''

''என்ன சந்தேகம்...?''

''எந்த ஒரு மனுஷனும் இவ்வளவு பெரிய வீட்டை இப்படி நூறு இருநூறுக்கு விட்டுட்டுப் போகமாட்டான். மீறிப் போறான்னா ஏதோ விஷயம் இருக்கணும்...''

''அதான் சொன்னார்ல... என் வீட்டைப் பாதுகாக்க நம்பிக்கை, நாணயமுள்ள ஒரு குடும்பம் தேவைன்னு. அதனால நமக்குக் கொடுத்திருக்கலாம்.''

''நானும் அப்படித்தான் நினைச்சேன். எதுக்கும் அந்த ரூமை திறந்து பார்த்துட்டா நிம்மதியாயிடும்னு மனசு நினைக்குதுங்க.''

''பாத்தியா... மனுஷ புத்தி ஒரு குரங்கு புத்திங்கறத நிரூபிக்கிறியே. அவர் இன்னும் இந்த டிஸ்ட்ரிக்கைக்கூட தாண்டியிருக்கமாட்டார். ஆனா அதுக்குள்ள அவர் கேட்ட வாக்குறுதியை மீறப் பார்க்கிறியே...?''

''பெரிய வாக்குறுதி. ஒரு இங்கிலிஷ் படத்துல வரிசையா கொலைங்க நடக்குது. செய்யறது யாருங்கறது பயங்கர சஸ்பென்ஸ். அதுலையும் இப்படித்தான் ஒரு தனிப்பட்ட அறை. அதுல நுழைஞ்சு பார்த்த பிறகுதான் விஷயமே போலீஸுக்குத் தெரியவருது. கொலைகாரன் ஒரு மனநோயாளி.''

''நீ என்ன சொல்லவர்றே... அந்த மாதிரி இந்த அறையிலும் ஏதாவது கொலை கிலை பண்ணி உடம்பு களைப் போட்டு மூடி வெச்சிருப்பார்னு கற்பனை பண்ணிப் பார்த்தியா?''

''இருக்கலாம் இல்லியா?''

''வாயைக் கழுவு. ஏன் இப்படி கண்டபடி கற்பனை பண்றே? அப்படி எல்லாம் இருந்தா நாம இந்த வீட்ல குடி இருக்க முடியுமா? நாத்தம் ஒரு கலக்கு கலக்கிடாது?''

-சரவணன் அதட்டலாகப் பேசி சங்கீதாவை அடக்கினான். அதே சமயம் ஆபீஸிலும் அவன் கொடி உயரத்தான் பறக்க ஆரம்பித்தது. ERS என்று மிரட்டி வந்த பி.எம். எதனாலோ ERS பற்றிப் பேசுவதே இல்லை. மாறாக ப்ரமோஷன் வேண்டுமானால் கிடைக்கலாம் என்கிற மாதிரி நிலை மாறிவிட்டது. எல்லாவற்றையும் வீட்டு ராசி என்றும் வைத்துக் கொள்ளலாம். நாள் செல்லச் செல்ல சங்கீதாவுக்கு அந்த பங்களா ஒரு அதிர்ஷ்டமான பங்களா என்கிற எண்ணம் வலுப்பட ஆரம்பித்து விட்டது.

சுதாவையும் லதாவையும் பெண் கேட்டு வந்த கும்பகோணம் செங்கமலத்தம்மாளும் மீண்டும் வந்தாள்.

''எப்பொழுது கல்யாணத்தை வெச்சுக்கலாம்?'' என்றுதான் எடுத்த எடுப்பில் கேட்டாள்.

'' அதுக்கென்ன இப்போ..வர்ற முகூர்த்தத்திலேயே வெச்சுக்கிட்டா போச்சு'' என்கிற பதிலைச் சொல்ல சங்கீதா துடித்தாள். ஆனால், சரவணன் மிகவும் அடக்கியே வாசித்தான். இருந்தும் ஒருநாள் அந்த நடக்கக்கூடாத ஒன்று நடக்க ஆரம்பித்துவிட்டது. எந்த அறையை திறக்கவே கூடாது என்று பெரியவர் கூறியிருந்தாரோ, அந்த அறைக்கதவைக் கண்ட கள்ளச்சாவிகளைப் போட்டு திறக்க முயன்று கொண்டிருந்தாள் சங்கீதா.

வசதியாக வீட்டில் சுதாவும் லதாவும் இல்லை. ஞானம்கூட ஒரு திருமணம் என்று வெளியூர் போய் விட்டிருந்தாள். சரவணனும் ஆபீஸ் போய்விட சங்கீதாவைக் குடை குடை என்று குடைந்தது அந்த அறைதான்.

'உள்ளே என்னதான் இருக்கிறது? எதற்காக இப்படி ஒரு ரகசியப்பூட்டு?'

கேள்விக்கு பதிலை நெடுநேரம் வரை பிரயாசைப் பட்டுக் கொண்டு திறந்த அறையின் பூட்டே சொல்லி விட்டது. ஏதா ஒரு கள்ளச்சாவி. மிக அழகாக பூட்டு திறந்தாகிவிட்டது. உள்ளே அப்படி என்ன இருக்கிறது?'

கேள்வியோடும் ஆர்வத் துடிப்போடும் மெல்ல உள்ளே எட்டிப் பார்த்தாள். மிக இருண்ட நிலையில் ஒரு மாதிரி வாசமடித்தது அறை. விளக்குக்கான ஸ்விட்சைப் போட்டாள். குபீர் என்று வெளிச்சம் பரவி அறையில் என்ன இருக்கிறது என்று காட்டியது. மிகப் பெரிய விசாலமான

அறை. சலவைக்கல்லால் ஆன ஜில்லென்ற தரை. அதன் நடுவில் இடுப்பு உயரத்திற்கு ஒரு ராஜேஸ்வரி தேவி விக்கிரகம். விக்கிரகத்திற்கு இரண்டு பக்கத்திலும் மரத்தால் ஆன ரேக்குகள். அதில் ஏகமாய் சுவடிகள்-வேத புத்தகங்கள் ஒரு ஓரத்தில் ஒரு ஆளை போட்டு மூடலாம் என்கிற அளவில் ஒரு கள்ளிப்பெட்டி.

சங்கீதா அறையைப் பார்த்து விக்கித்துவிட்டாள். அநேகமாய் அது பெரியவர் பூஜைசெய்து வந்த அறையாக இருக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது.

ராஜேஸ்வரி விக்கிரகமும் ஏதோ அப்பொழுதுதான் யாரோ வணங்கி வழிபட்டது போல விளக்குகள் எரிய,தசாங்க வாசம் கமழ காட்சியளித்தது. சிலையின் உடம்பிலும் ஏராளமான நகைகள்!தேவி கண்ணைப் பறித்தாள். விழுந்து கும்பிடத் தோன்றியது-அத்தனை அழகு! அவ்வளவு தெய்வீகம்! பக்கத்திலேயே இருந்த கள்ளிப் பெட்டி பேறு பூட்டின்றி 'என்னைத் திறந்து பார்' என்று சொல்லாமல் சொல்ல அதையும் திறந்தாள்.

அப்படியே விக்கித்துப் போய் நின்றுவிட்டாள்.

உள்ளே குவியல் குவியலாக தங்க நகைகள். தங்க பிஸ்கட்டுகள். அதைப் பார்த்த மறுநொடி உள்ளுக்குள் பெரியவரின் பிம்பம் மரியாதை இழந்து போயிற்று. அவர் அநேகமாய் ஒரு திருடனாய் குறிப்பாக தங்கக் கடத்தல் அல்லது தங்க நகைகளைத் திருடும் ஒருவனாக இருக்கலாம் என்றுதான் தோன்றியது. இது தெரிந்துவிடக் கூடா தென்றுதான் அறையைத் திறந்து பார்க்கக்கூடாது என்று அந்தப் பெரியவர் சொல்லியிருக்கிறார் என்று அவள் மனது நிர்மானமாய் நம்பியது. கணவன் வந்தால் அவனிடம் இனி

தைரியமாக சொல்லலாம். நாம் ஒரு நல்ல வீட்டில் இல்லை - ஒரு கடத்தல்காரன் வீட்டில் இருக்கிறோம் என்று தாராளமாகச் சொல்லலாம் என்றெல்லாம் எண்ணம் பெருக் கெடுத்தது.

அதே சமயம் கும்பகோணம் செங்கமலத்தம்மாள் அனுப்பியதாக புரோக்கரும் வந்து பார்த்தார்.

''என்னம்மா... கல்யாண விஷயமாக என்ன முடிவு செய்திருக்கிங்க...?''

''என்ன முடிவுன்னா... நடத்திட வேண்டியதுதான்.''

''ரொம்ப தெம்பா சொல்றீங்களே. இரண்டு பொண்ணுக்கும் எவ்வளவு நகை போடறதா இருக்கிங்க?''

''என்ன... இருவருக்கும் சேர்த்து ஒரு அம்பது பவுன்.''

''அம்பது பவுனா... மை காட்!எங்க இருந்தும்மா இப்படி ஒரு தைரியமும் பெரிய மனசும் உங்களுக்கு வந்துச்சு? சரவணன் தம்பி நேத்துகூட கம்பெனில சம்பள உயர்வெல்லாம் இப்ப இல்லைங்கற மாதிரி சொல்லிக் கிட்டிருந்தாரே?''

''அப்ப..சம்பளம் ஒசந்தாதான் அவரால கல்யாணத்த நடத்தவே முடியுமா..? வேற வழியே அவருக்கு உங்களைப் பொறுத்தமட்டில் கிடையாதா?''

''அப்படித்தானேம்மா சரவணன் தம்பி சொல்லிக் கிட்டு இருந்துச்சு?''

''இனி அப்படி எல்லாம் அவர் சொல்லமாட்டார். அவர் பிசினஸ் பண்ணப் போறார்''.

''பிசினஸா... என்ன பிசினஸ்...?''

37671
64217

''அதை எல்லாம் உங்ககிட்ட சொல்லணும்ங்கற அவசியம் எங்களுக்கில்ல. அவரைப் பொறுத்தமட்டுல இந்த வீடு ராசியான வீடா அமைஞ்சிகிச்சு. அவர் இனி எதைத் தொட்டாலும் அது தங்கம்தான்...''

- சங்கீதா புதிய முடிவுகளோடு மிக தெனாவெட்டாக பேசினாள். புரோக்கர் கல்யாண சுந்தரம் ஒருபுறம் மகிழ்ந்தும், மறுபுறம் சற்று குழம்பியும் போனார். ஆனாலும் கல்யாணம் நடக்கப் போவதில்,அதுவும் படு ரிச்சாக நடக்கப் போவதில் அவருக்கு சந்தோஷமாகத்தான் இருந்தது.

8

'ஆசையை வைத்துத்தான் விதி வாழ்க்கையையே உருட்டி விளையாடுகிறது. அநேகமாக அந்த விளையாட்டில் ஆசைக்கு தாயம் எப்பொழுதும் விழத் தவறியதேயில்லை!'

வேலை முடிந்து வீட்டிற்கு திரும்பிய சரவணனை காத்திருந்த மாதிரி கவ்விக் கொண்டாள் சங்கீதா.

புரோக்கர் கல்யாண சுந்தரம் வந்துவிட்டுப் போனதையும் அம்பது பவுன் போட்டு திருமணம் செய்யப் போவதாக சொன்னதையும் அவன் முன் சொன்னாள்.

''அம்பது பவுனா...! எங்க இருக்கு சங்கீ...?''

அதிர்ச்சியுடன் திரும்பிக் கேட்டான் சரவணன்.

''இருக்குங்க...இந்த வீட்டுல அம்பது பவுன் இல்லீங்க, ஐயாயிரம் பவுன் வரை இருக்குங்க.''

சங்கீதா அதிகபட்ச அதிர்ச்சியளித்தாள்.

''என்ன சொல்றே சங்கி...?!''

''நான் ஒரு பெரிய ரகசியத்தை இப்ப உங்ககிட்ட சொல்லிக்கிட்டு இருக்கேன். ஞாபகம் வெச்சுக்குங்க.''

''ரகசியமா..?''

''ஆமாம்,ரகசியம்தான். இந்தவீட்டுப் பெரியவர்பத்தி நான் சந்தேகப்பட்டு பேசினப்போ அதை கற்பனைன்னு சொன்னீங்கள்ல...''

''ஆமாம் இப்ப என்ன அதுக்கு?''

''பெரியவர் ஒரு பெரிய ஸ்மக்ளர்ங்க...''

''ஸ்மக்ளரா...!என்ன சொல்றே சங்கி..?''

''ஆமாங்க...அவர் சாமியார் வேஷத்துல இருக்கற ஒரு கள்ளக்கடத்தல் பேர்வழி...''

''எதை வெச்சுச் சொல்றே...?

''வாங்க காட்றேன். வீட்ல உங்கம்மாவும் தங்கச்சிகளும் இல்லாத இந்த டைம்தான் சரியான டைம்.''சங்கீதா அவளை இழுத்துக்கொண்டு மாடிக்குச் சென்றாள். மாடிக்கு செல்லத் தொடங்கும்போதே சரவணனுக்கு புரிந்துவிட்டது ''என்ன சங்கீ அந்த ரூம் கதவைத் திறந்து,தப்பு பண்ணிட்டியா?''

''இல்லீங்க..ரூம் கதவை திறந்து தப்பு பண்ணினதை கண்டுபிடிச்சிருக்கேன்.''.

''அப்படின்னா திறக்கக்கூடாத அந்தக் கதவை திறந்துட்டியா?''

''பெரிய்ய திறக்கக் கூடாத கதவு. அந்த கிழவனார் பெரிசா பீடிகை போடும்போதே எனக்குத் தெரியும், அங்க எசகுபிசகா ஏதோ இருக்குதுன்னு...''

''இப்ப அங்க எசகுபிசகா என்ன இருக்குது?''

''வாங்க வந்து பார்த்துட்டு சொல்லுங்க...''

சொன்னபடியே கதவைத் திறந்து உள்ளே நுழைந்தவள் கல்விப் பெட்டியையும் காட்டினாள். அதைத் திறந்து பார்த்த சரவணன் விக்கித்து வெலவெலத்துப் போய்விட்டான்.

''சங்கீ...அவ்வளவும் தங்க நகையா சங்கீ..?''

''பின்ன...எல்லாத்தையும் எடுத்து உரசிப் பார்த்துட்டேன்.எடைகூட போட்டுட்டேன். கிட்டத்தட்ட அம்பது கிலோ இருக்குதுங்க..''

''அம்பது கிலோவா?'' வாயைப் பிளந்துவிட்டான் சரவணன்.

''ஆமாங்க...இவ்வளவு தங்கம் ஒரு இடத்துல இருக்குதுன்னா என்னங்க அர்த்தம்...?''

''என்ன அர்த்தம்?''

''இது நேர் வழியில சம்பாதிச்சது கிடையாதுன்னு அர்த்தம்...''

''அப்படின்னா கள்ளக்கடத்தலா..?''

''இப்பவாவது புரிஞ்சுக்கிட்டு சரியா கேட்டீங்களே. இந்த உண்மையை நாம தெரிஞ்சுக்கக்கூடாதுன்னுதான் அந்த பெரியவர் இந்த ரூமை திறக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கார்.''

''இருக்கும்...இருக்கும்...''

சரவணன் சங்கீதாவுக்கு ஜால்ரா தட்ட ஆரம்பித்து விட்டான். கதவை திறந்தது,இப்படி ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பது எல்லாம் தவறு என்கிற பிரக்ஞையே

இப்பொழுது அவனிடம் இல்லை. சங்கீதாவின் கேள்விகள் அவனை அந்த அளவு மாற்றிவிட்டிருந்தன.

''ஆமாம், அந்தப் பெரியவர் வந்து நாம கதவைத் திறந்ததைத் தெரிஞ்சுக்கிட்டா...?''

''அதுக்குதான் அவர் சொன்ன மாதிரி இன்னும் மூணு வருஷம் இருக்குதே?''

''அப்ப மூணு வருஷத்துக்கு அந்த ஆள் இந்த வீட்டுப் பக்கம் வரமாட்டார்ன்னு நீ நம்பறியா?''

''அவர்தானே சொன்னாரு...''

''அவர் சொன்னாரு சரி... ஆனா எந்த ஒரு கடத்தல்காரன், இல்ல இப்படி கிலோ கணக்குல நகை வெச்சிருக்கறவன் ரூமை வெறுமனே பூட்டிட்டு மட்டும் போவான்?''

''அப்படின்னா...?''

''இதுக்குப் பின்னாடி ஏதோ மர்மம் இருக்குது சங்கீ...!''

''மர்மமா...?''

''ஆமாம்... திருட்டுச் சரக்கை நமக்கே தெரியாம நாம பாதுகாக்கணும்னு நினைக்கறாரோ என்னவோ...? அதே சமயம் போலீஸ் சந்தேகப்பட்டு தேடத் தொடங்கி யிருக்கலாம். அதனால நம்மளை இப்படி காவலுக்கு விட்டுட்டு போய்ட்டாரோ?''

இருவருக்குள்ளும் சந்தேகப் பிசாசு விளையாடத் தொடங்கிவிட்டது.

அவரது சொல்லை மீறிச் செயல்பட்டது ஒரு தவறு என்கிற பிரக்ஞையே அற்றும் போனது.

''சரி இப்ப என்ன செய்யலாம்கறே...?''

''எனக்கென்னவோ நாம இங்க குடி இருக்கறது பெரிய தப்பா தெரியுது. நாளைக்கே அங்கத் தொட்டு இங்கத் தொட்டு போலீஸ் நம்மக்கிட்ட வந்தா?''

''ஓ... நீ அப்படி வர்றியா?''

''ஆமாங்க... பேசாம நாம காலி பண்ணிடுவோம். வீடு பூட்டியே இருக்கட்டும். அவர் வந்து பார்த்து உண்மையைத் தெரிஞ்சுக்கட்டும்.''

''அப்ப இந்த தங்கமெல்லாம்...?''

''இதுதான் எனக்கும் பெரிய தர்மசங்கடமா இருக்குது. நமக்கு இருக்கற நெருக்கடிக்கு இதுல ஒரு கிலோவை எடுத்துக்கிட்டாக்கூட யாருக்கும் தெரியப் போறதில்லை. அதே சமயம் இதனாலேயேகூட பிரச்சினை வந்துடு மோன்னும் பயமா இருக்குங்க...''

''அவசரப்பட்டுடாதே சங்கீ... அந்தப் பெரியவர் நம்மை வசமா மாட்ட உட்டுட்ட மாதிரிதான் தெரியுது. நாம இங்க எதையும் தொடாம சைலண்ட்டா நழுவிட்றதுதான் நல்லது.''

''நழுவுவோம், அதே சமயம் நம்ம சுதாவுக்கும், லதாவுக்கும் போட்றதா சொன்ன அம்பது பவுன் நகையை மட்டும் நாம இதுல இருந்து எடுத்துக்குவோம்.''

''என்ன சங்கீ... இப்பதானே சொன்னே இது திருட்டுச் சொத்தா இருக்கலாம் - இதை தொட்டா ஆபத்து வரலாம்ன்னு...''

''உண்மைதான். ஆனா அம்பது பவுனை ஒண்ணும் தெரியற மாதிரி எடுக்க வேண்டாம். இதுல இருந்து எடுக்ற

அம்பது பவுன் நகைக்கு பதில் ரோல்டு கோல்டு நகை வாங்கி உள்ள வெச்சுடலாம். அப்படிச் செய்தா யாருக்குத் தெரியப் போவுது?''

''வேண்டாம் சங்கீ... எப்ப நாம அந்தப் பெரியவரைப் பத்தி தெரிஞ்சுக்கிட்டோமோ... அப்பவே தப்பிச்சுக்கப் பாக்கறதுதான் நல்லது.''

''சரி... அப்ப அந்த அம்பது பவுனை நீங்களே உங்க சம்பாதியத்துல வாங்கிடுங்க...''

''என்ன விளையாட்றியா? வேலை காலி ஆகாம தப்பிச்சதே பெரிய விஷயம்னு நான் நினைச்சுக்கிட்டிருக் கேன். நீ என்னடான்னா அம்பது பவுனை வாங்குன்னு சாதாரணமா சொல்றே...''

''அது எனக்கும் தெரியும். 'கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை'ன்னா எப்படிங்க. சில நேரங்கள்ல புத்திசாலித்தனமாவும் துணிச்சலாவும் முடிவுகளை எடுத்துதான் தீரணும்.''

- இருவரும் பேச்சை வளர்த்தபடி இருக்கும்போது அந்த பங்களாவுக்கு ஒரு தந்தி வந்தது. தந்திக்காரர் பஸ்ஸரை அழுத்தி இருவரையும் மாடி அறையைவிட்டு கீழே வரும்படி செய்தார்.

சரவணனும் தந்தியைக் கையெழுத்துப் போட்டு வாங்கி அதைப் பார்த்தான்.

- பார்த்தவனுக்கு மயக்கம் வராத குறை.

''என்னங்க... என்ன விஷயம்...?''

''சங்கீ... அந்தப் பெரியவர் இல்லை... பெரியவர்...''

''யாரைச் சொல்றீங்க...? எந்தப் பெரியவர்?''

''ஐயோ இப்ப நாம பேசிக்கிட்டிருந்தோமே... அவரைத்தான் சொன்னேன்.''

''அவருக்கென்ன... அவரை போலீஸ் கிலிஸ் பிடிச்சுட்டாங்களா... ஏதாவது சிக்கலா?''

''போலீஸும் பிடிக்கலை கிலீஸும் பிடிக்கலை. யாத்திரை போன மனுஷனை கங்கை வெள்ளம் அடிச்சுக் கிட்டு போயிடுச்சாம். கரைல கிடந்த அவரோட சூட்கேஸை வெச்சு காசி போலீஸ் அவர் அட்ரஸான இந்த அட்ரஸுக்கு தகவல் கொடுத்திருக்காங்க.''

''என்னது... பெரியவரை வெள்ளம் கொண்டுகிட்டு போயிடுச்சா...?''

- சங்கீதா அருகில் உள்ள சோபாவில் பொத்தென்று விழுந்தாள்.

''ஆமாம்... அவர் உறவினர்கள் வந்து அவருடைய பொருட்களை வாங்கிக்கிட்டு போகச் சொல்லி தந்தி கொடுத்திருக்காங்க...''

''மைகாட்... என்னங்க இது? நாம விலக நினைச்சாலும் இந்த விவகாரம் நம்மை விடாது போல இருக்குதே?''

-சங்கீதா புலம்ப சரவணனும் யோசிக்கத் தொடங்கினான்.

9

'விதி விளையாடும் கண்ணாமூச்சியில் உண்மையில் உண்மையாக இருந்தால்தான் வெற்றி. இல்லாவிட்டால் அது அந்த விளையாட்டில் பொய்யானவர்களை சுருட்டி விழுங்கிவிடும்!'

உள்ளிருந்து வந்த ஞானம் தந்தியைப் பார்த்து அதிர்ந்துவிட்டாள். நெடுநேரம் அவளால் எதையும் பேச முடியவில்லை. லதாவும் சுதாவும்கூட அண்ணன் சரவணனையும், சங்கீதாவையும் அடுத்து அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்றுதான் பார்த்தனர்.

தப்பத் தவறியும் மாடி அறையில் உள்ள தங்கம் பற்றி இருவரும் மூச்சுக்கூட விடவில்லை. ஞானம் அதைக் கேட்டால், அதையும் வீட்டையும் ஒன்றாக சேர்த்தே போலீஸில் ஒப்படைக்கச் சொல்லலாம் என்கிற பயம்.

''என்னம்மா பண்ணட்டும்?'' - சரவணன் ஞானத்தை நிமிண்டினான்.

''எனக்கு என்ன பதில் சொல்றதுன்னே தெரியலப்பா. பாவம்... ரொம்ப நல்ல மனுஷன். அவருக்குப் போய் இப்படி ஆனதை நினைச்சா ரொம்ப வருத்தமா இருக்குது.''

''வருத்தப்பட்றது ஒரு பக்கம் இருக்கட்டும். என்ன செய்யலாம். சொல்லுங்க...''

''அவர் ஆத்மா சாந்தியடையணும்னா நீ போய் அவர் உடைமைகளை வாங்கிக்கிட்டு அவருக்கும் கர்மம் பண்ணிட்டு வர்றதுதான் நல்லதுன்னு படுது எனக்கு...''

''என்னம்மா நீங்க... போலீஸ்ல நான் யாருன்னு கேட்டா என்ன சொல்றது?''

''அவர் வீட்ல குடி இருக்கற டெனன்ட்ன்னு சொல்லு.''

''அப்படிச் சொன்னா அவர் உடைமைகளைத் தரமாட்டோம்னு சொல்லிட்டா...?''

''அவருக்கு யாரும் கிடையாது. நாங்கதான் இருக்கோம்னு சொல்லு.''

''அப்படிச் சொன்னா ஒத்துக்குவாங்களா?''

''ஒத்துக்கிட்டா வாங்கிட்டு வா. இல்லைன்னா விட்டுடு.''

''அந்த சாமானை விட்டுடுங்க. இந்த பங்களாவை என்ன எண்றது?''

''என்னப்பா கேள்வி... நாலு பெரியவங்களைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்வோம். பெரியவங்க சொல்ற மாதிரி செஞ்சுடுவோம்.''

ஞானம் துளிகூட நேர்மை பிசகாமல் பேசினாள். ஆனால், சங்கீதாவோ அதற்கு நேர் எதிராக சிந்தித்தாள். அவர் உயிரோடு இருந்தவரைதான் அவரைப் பற்றிய பயங்கள் அவளை ஆக்ரமித்துக் கொண்டிருந்தன.

அவர் போய்விட்ட நிலையில் பங்களாவும் அந்தத் தங்கமும் அவள் மடியில் விழுந்த குபேர சொத்தாகத்தான் அவளுக்குள் எண்ணங்களை வளர்த்தன. எனவே ஒரு புது முடிவுக்கு வந்தவள் சட்டென்று கணவனை தனியே அழைத்து காதைக் கடிக்க ஆரம்பித்தாள்.

''என்னங்க... நீங்க உடனேயே காசிக்குப்போய் அந்த பெட்டியை வாங்கிக்கிட்டு வந்துடுங்க. போலீஸ்ல கேட்டா டெனன்ட்டுன்னுல்லாம் சொல்லாதீங்க. அந்த பெரியவரோட பேரன்னு சொல்லுங்க....''

''என்ன சங்கீதா இது... தந்தியை பாக்கறதுக்கு முந்திவரை அவரை ஒரு கடத்தல்காரர்னு சொன்னே. இப்ப இப்படி பல்டி அடிக்கறே...?''

''இதுக்குப் பேர் பல்டி கிடையாது; புத்திசாலித்தனம். அவரைப் பத்தி நான் சொன்னதும் தப்புங்க. அவர் தப்பான ஆளா இருந்தா சொன்ன மாதிரி ஸ்தல யாத்திரை போயிருக்கமாட்டார். எங்கையாவது தலைமறைவாகி யிருப்பார். அவர் நல்ல மனுஷன்னுதான் தோணுது. இந்த நகை, தங்கமெல்லாம் அவரோட பூர்வீக சொத்தாகக்கூட இருக்கலாம். எது எப்படியோ... நான் அம்பது பவுனுக்குத்தான் ஆசைப்பட்டேன். ஆனா அம்பது கோடிக்கு இப்ப சொத்து நமக்குக் கிடைக்கப்போகுது. இந்த பங்களாவுக்கும் வாரிசுங்க கிடையாது. அங்க போலீஸ்ல பேரன்னு சொல்லி ரிக்கார்டும் பண்ணிடுங்க. நாளைக்கு யாராவது கேட்டா சொல்றதுக்கு அதுவே பெரிய எவிடென்ஸா நிக்கும். அப்படியே அங்கையே உக்காந்து கர்மகாரியமும் பண்ணிட்டு வாங்க. இதெல்லாம் இப்ப நாம் செய்தாதான் நமக்கு பலம். சொல்றதக் கேளுங்க...''

''சங்கீதா... உனக்கு உடம்பெல்லாம் மூளைடா... ஆமா... அம்மா நம்ம திட்டத்துக்கு ஒத்துக்குவாங்களா?''

''அம்மாவை நான் பாத்துக்கறேன். நீங்க கிளம்புங்க.''

''நீ என்ன சொன்னாலும் அம்மா ஒத்துக்கமாட்டாங்க. இது நமக்கு சொந்தம் இல்லாத சொத்து. ஆகையால் இதை

கவர்ன்மெண்ட்கிட்ட ஒப்படைக்கறதுதான் சரின்னு வாங்க...''

''அதை எல்லாம் நான் பாத்துக்கறேன்னு சொல்லிட் டேன்ல. தேடி வந்த லட்சுமியை நான் விடமாட்டேங்க. என்ன ஆனாலும் சரி...''

''அது சரி... ஆனா அம்மாவை எப்படி வழிக்குக் கொண்டு வருவே...? அதை மட்டும் சொல்லு.''

''அதை இப்ப என்னால் சொல்ல முடியாது. நீங்க போய்ட்டு வாங்க. வரும்போது பாருங்க. அம்மாவால நமக்கு ஒரு தொந்தரவும் இருக்காது. ஊர் உலகமும் பூர்வீக சொத்து ஒண்ணு உங்களுக்குக் கிடைச்சு நீங்க நல்லா வந்துட்டீங்கன்னு சொல்லும். இதுதான் நடக்கும்.''

''நிச்சயமா அப்படித்தான் நடக்குமா?''

''நிச்சயமாவும் அப்படித்தான் நடக்கும், சத்தியமாவும் அப்படித்தான் நடக்கும்.''

''நீ சொல்றத நம்பித்தான் நான் போறேன். இங்க நீதான் அம்மாவை வழிக்குக் கொண்டு வரணும்.''

''கவலையேபடாதீங்க. ஊர்ல இருந்து வந்தவுடனே நீங்க உங்க வீணாப்போன வேலையையும் விட்டுடலாம்''.

சங்கீதா அப்பொழுதே ஒரு கோடீஸ்வரி ஆகிவிட்ட மாதிரி பேசினாள். அவன் பார்த்து வரும் வேலைகூட அவளுக்கு வீணாய்ப் போன வேலை ஆகிவிட்டது.

சரவணனும் கோவில் மாடுபோல தலையை ஆட்டிவிட்டு புறப்பட்டான். இருவரும் குசுமுசுவென்று

பேசியதை கவனித்துக் கொண்டிருந்த லதாவும் சுதாவும் ஞானத்திடம் சென்றனர்.

''அம்மா... அண்ணனும் அண்ணியும் எதுக்காகம்மா இப்படி தனியா போய் பேசிக்கறாங்க...''

''இது என்னடா கேள்வி? போய் உன் அண்ணியையே கேள். அவளே பதில் சொல்லட்டும்.''

''இதை கேட்டுத்தான் தெரிஞ்சுக்கணுமா? அண்ணி, அண்ணனை நல்லா பிரெய்ன்வாஷ் பண்ணுதுன்னுதான் நான் நினைக்கிறேன்.''

''என் பையனை யாரும் எதுவும் பண்ண முடியாது. நீங்க கவலையேபடாதீங்க...''

''என்னம்மா நீ... அண்ணியைப் பத்தி தெரிஞ்சுமா இவ்வளவு நம்பிக்கையா பேசறே நீ?''

''சரி இப்ப என்ன பண்ணச் சொல்றீங்க...?''

''நாங்க சொல்ல என்ன இருக்கு...? அண்ணி நிச்சயமா ஏட்டிக்குப் போட்டியா பேசப் போறாங்க. அப்ப தெரியத்தானே போகுது?''

அவர்கள் சொன்ன மாதிரிதான் ஆனது.

சங்கீதா ஞானத்தைத் தேடிவந்து எதிரில் சற்று அலட்சியமாகவே உட்கார்ந்தாள்.

''அத்தை உங்ககிட்ட சில முக்கியமான விஷயங்களை சொல்லணும்.''

''என்னம்மா...?''

''கொஞ்ச நாளாகவே நம்ம வாழ்க்கை நாம நினைச்ச திசைல போகல. நம்மை எப்படி எப்படியோ இழுத்துக் கிட்டுப் போகுது. இல்லையா?''

''சொல்லு...''

''எனக்கென்னவோ பயமா இருக்குது. நாம சும்மா இருந்தாலும் விதி விடுவேனாங்குது. இப்ப பாருங்க... இவ்வளவு பெரிய வீடும் இப்ப நம்ம கைல...''

''வாஸ்தவம்தாம்மா... ஆனா அதை நாம கவர்ன்மெண்ட்கிட்ட ஒப்படைக்கிறதுதான் மரியாதை''.

''நானும் அதைத்தான் சொல்ல வந்தேன்''- என்று இன்ப அதிர்ச்சியளித்தவள் லதாவும் சுதாவும் பார்க்க,

''ஏய்! நீங்க இரண்டு பேரும் போய் உங்க வேலையைப் பாருங்க... எதுக்கு இப்படி வாயைப் பாக்கறீங்க...?''

-என்று அவர்களை சுண்டிவிட்டு அந்தப் பக்கம் போகச் சொன்னாள். அவர்களும் முறைப்புடன் விலகினர்.

''இப்ப அவங்கள எதுக்கும்மா போகச் சொல்றே?''

''காரணமாத்தான் அத்தை. நான் இப்ப சொல்றதை நல்லா கேட்டுக்குங்க. இந்த பங்களா இப்ப நமக்குக் கிடைச்சிருக்கிற ஒரு பரிசு. இதை கவர்ன்மெண்ட்டுக்கு கொடுக்க நினைக்கறது முட்டாள்தனம். உங்க பிள்ளை இதை உங்ககிட்ட நேர்ல சொல்லத் தயங்கினாரு. என்கிட்ட சொல்லி சொல்லச் சொன்னாரு. சொல்லிட்டேன். ஆனா, நீங்க என்ன முடிவு எடுத்தாலும் சரி...''

-சங்கீதா ஆழம் பார்க்கிற மாதிரி பேசிவிட்டு மேஜை மேலுள்ள புத்தகம் ஒன்றை எடுத்து புரட்டத் தொடங்கினாள்.

-ஞானம் முகம் அதைக் கேட்டு இருண்டுவிட்டது.

''நிச்சயமா சரவணன் இப்படி சொல்லியிருக்க மாட்டான். தனக்கு சொந்தமில்லாத ஒண்ணை அவன் எப்பவும் அடைய ஆசைப்படமாட்டான். எப்ப செஞ்ச பாவமோ நான் என் வீட்டுக்காரரைப் பிரிஞ்சு தனியா வாழ்ந்துக்கிட்டிருக்கேன். இதுக்கு மேலயும் பாவம் பண்ணி நான் நிரந்தரமா அவரைப் பிரியத் தயார் இல்லை. உழைப்புல கிடைக்கிறது காலணாவா இருந்தாலும் சரி. அது போதும்''.

''அப்ப அந்த பத்து லட்சத்தை போலீஸ்கிட்ட ஒப்படைச்ச மாதிரி இதையும் கொடுத்துடலாம்னு சொல்றீங்களா...?''

''நிச்சயமா...''

''உங்க முடிவுல மாற்றமில்லையா?''

''என்னை யாராலையும் மாற்ற முடியாது.''

''ஒருவேளை உங்க மகன் உங்க கருத்தை ஏத்துக்காம உங்களையே ஒதுக்கினா...?''

''உண்மையைப்போய் போலீஸ்ல சொல்வேன்...''

''அப்படி சொன்னா உங்க மகன் குற்றவாளியா யிடுவார் அத்தை...''

''எப்ப அடுத்தவங்க சொத்துக்கு ஆசைப்பட்டானோ அப்பவே அவன் குற்றவாளியாகிட்டான்னுதானே அர்த்தம்?''

''நல்லா யோசியுங்க அத்தை. இந்த வீடு கோடிக் கணக்குல போகும். அதுக்கு மேலையும் இந்த வீட்ல நகை நட்டெல்லாம் இருக்கு...''

''எது இருந்தா என்ன...? எல்லாம் இனி கவர்ன்மெண்ட்டுக்குத்தான் சொந்தம்...''

''அப்ப அவர் காலம் பூரா மாசச் சம்பளத்துக்கு கஷ்டப்படணும். அதுதான் உங்க முடிவா?''

''தப்பு பண்ணிட்டு ஒரு பாவியாக கஷ்டப் பட்றதைவிட இது ஒண்ணும் பெரிய கஷ்டமில்லைம்மா...''

''பாவம் புண்ணியமெல்லாம் நாம பாக்கற பார்வைலதான் இருக்கு. புலி, காட்டுல மானை அடிச்சு நின்னுது. அது பாவம் பார்த்தா பிழைக்க முடியுமா?''

''ஆறறிவுள்ள மனுஷனை அஞ்சறிவு பிராணிகூட ஒப்பு வைக்கிறியே. அதுகூட தேவைக்குத்தான் அப்படிச் செய்யுது. அடுத்த வருஷத்துக்கு இப்பவே சேத்து வெச்சுக்கறதில்ல.''

-ஞானம் துளிகூட சளைக்காமல் பதிலைச் சொன்னாள். சங்கீதா முறைத்துப் பார்த்துவிட்டு எழுந்தாள்.

இனி பேசுவதில் பிரயோஜனமில்லை என்று புரிந்தவளைப் போல எழுந்து அவளது அறைக்குச் சென்றாள். படுக்கையும் தலையணையும் கண்ணில்பட்டது.

தலையணையையே உற்றுப் பார்த்தவள் ஒரு புதிய முடிவுக்கு வந்தவளைப்போல அதை எடுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

மனக்கண் அந்தத் தலையணையால் மூச்சுத் திணறி ஞானம் உயிர்விடப் போவதை ஒருமுறை எண்ணிப் பார்த்தது.

எதையும் சொல்லாமல் சொல்வதுதான் இப்போது ஒரே வழி.

10

'சிலரின் விதி தன் வாலை, தானே விழுங்கும் பாம்பைப் போன்றது.'

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. சங்கீதா தூக்கம் பிடிக்காமல் தான் மனதுக்குள் நினைத்ததை செய்துவிடும் எண்ணத்துக்குள் அலை பாய்ந்து கொண்டிருந்தாள்.

குறுக்கும் நெடுக்குமாய் நடை!

நடுவில் அவ்வப்போது ஞானமும், நாத்தனார்களான லதாவும், சுதாவும் என்ன செய்கிறார்கள் என்கிற பார்வை. லதாவும் சுதாவும் டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஞானம் அன்றைக்கு என்று பார்த்து ராமாயண புத்தகம் ஒன்றை எடுத்துக் கொண்டு ஆழ்ந்து படிக்கத் தொடங்கியிருந்தாள்.

எப்படியும் படுப்பதற்கு பத்து மணிக்கு மேல் ஆகும் என்று தோன்றியது. கடிகாரத்தைப் பார்த்தாள். மணி எட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. புத்தியில் மளுக்கென்று ஒரு சிவப்பு விளக்கு வேறு எரிந்தது.

குறுக்கும் நெடுக்குமாய் நடந்தவள் திடீரென்று வயிற்றுவலி என்று ஒரு நாடகம் போட ஆரம்பித்தாள். நேராக ஞானத்தின் எதிரில் போய் நின்றாள். ரப்பரைப்போல வளைந்தாள். முகத்திலும் கோணல்கள். ஞானம் நிமிர்ந்தாள்.

''என்ன சங்கீதா... உடம்பு சரியில்லையா?''

''ஆமாம் அத்தை. ரொம்ப வயித்தை வலிக்குது.''

''தயிர்ல வெந்தயம் போட்டுக்குடி. சூட்டு வலியா இருக்கும்.''

''குடிச்சுட்டேன். எதுவும் கேக்கல.''

''சரி என்ன பண்ணப் போறே?''

''டாக்டரைப்போய் பார்த்துட்டு வந்துட்றேன்.''

''ரொம்ப நேரமாயிடிச்சே! டாக்டர் இருப்பாரா...?''

''டாக்டர் ரங்கபிரசாத் பத்து மணி வரைகூட டிஸ்பென்சரில இருப்பார்.''

''சரி வா போகலாம். நானும் வரேன்.''

-ஞானம் புத்தகத்தை மூடிவிட்டு எழுந்தாள். நெற்றியில் புரண்டு விழுந்த நரை முடிக் கற்றையையும் ஒதுக்கினாள்.

''இல்ல அத்தை... உங்களுக்கு எதுக்கு சிரமம்? நான் போய்ட்டு வந்துட்றேன்...'' -வேகமாக ஞானத்தை தவிர்க்கப் பார்த்தாள்.

''எப்படி தனியா இந்த வலியோட போவே... லதாவையாவது, சுதாவையாவது அனுப்பட்டுமா?'' -ஞானத்தின் அடுத்த கட்ட உதவி அவளை மேலும் சங்கடப்படுத்தியது.

''வேண்டாம் அத்தை... நானே பாத்துக்கறேன்...''

-சொன்ன வேகத்தில் புறப்பட்டுவிட்டாள். லதாவும் சுதாவும்கூட டீ.வியிலிருந்து விலகி சங்கீதாவைப் பார்த்தனர். எழுந்து வருவதற்குள் சங்கீதா வாசலைத் தாண்டிவிட்டாள்.

ஞானம் முணுமுணுக்கத் தொடங்கினாள்.

''ஏன் இவ இப்படி விட்டேத்தியாவே நடந்துக்கறா?''

''அண்ணி டாக்டர்கிட்ட போகலை. வேற எங்கேயோ போறாங்க. அதான்''-லதாவிடமிருந்து கச்சிதமான பதில்.

''வேற எங்கையோன்னா...?''

''யாருக்குத் தெரியும்? அவங்க மனசுதான் ஒரு மாயா பஜார் ஆச்சே...''

''என்னவோம்மா. நடக்கற எதுவும் எனக்கு நல்லதா தெரியலை.''

அப்பொழுது குழந்தை வீணா கண்களைக் கசக்கியபடி அவர்களை நோக்கி வந்தாள்.

''அம்மா எங்கே அத்த?''-கேட்டாள்.

''உங்க அம்மா வெளிய போயிருக்காங்க. வந்துடுவாங்க. நீ படுத்து தூங்கலையா?''

''தூக்கமே வரலை. ஆமா அப்பா எப்ப வருவாங்க?''

''இன்னிக்குத்தானே காசிக்கு போயிருக்கான். வர்றதுக்கு எப்படியும் இரண்டு நாள் ஆயிடும். நீ போய் படு...'' - லதாவும் சுதாவும் அவளை சமாளிக்க முயல, குழந்தையின் பார்வை ஞானத்தின் மடியின்மேல் இருந்த புத்தகத்தின் மேல் சென்றது.

''ஹை... மாடி ரூம் புத்தகம்...'' என்றது உடனே.

''மாடி ரூம் புத்தகமா?''

''ஆமாம் அத்தை... மாடியில ஒரு ரூம் இருக்குல்ல? அங்க இந்த மாதிரி நிறைய புத்தகங்கள் இருக்கு.''

குழந்தை-அவர்கள் எதிர்பாராத அதிர்ச்சியை அளித்தது.

''நீ எந்த ரூமை சொல்றேடா கண்ணு...''

''வாங்க காட்றேன்...'' வீணா லதாவின் கையையும் சுதாவின் கையையும் பிடித்து இழுத்தது. அவர்களும் அதன்பின்னே சென்றனர். ஞானம் மட்டும் சற்று கலங்கிப் போனாள்.

''ஏய்... அந்தப் பெரியவர் சொன்ன ரூமா இருந்தா அதுக்குள்ள போய்டாதீங்க...'' -அலறினாள்.

''அதெல்லாம் போகமாட்டோம். நீங்க தைரியமா இருங்கம்மா...''-என்றார்கள் இருவரும் படியில் ஏறிய படியே. ஞானம் அவர்கள் மேல் வைத்த பார்வையை விலக்கவேயில்லை.

அவர்கள் மேலேறி வளைந்து திரும்பி ஞானத்தின் பார்வையை விட்டும் மறைந்தார்கள்!

ஞானத்திற்கு இருப்பு கொள்ளவில்லை.

ராமாயண புத்தகத்தை மோடாமேல் வைத்துவிட்டு அவளும் பின்தொடர்ந்தாள்.

அந்தப் பெரியவரான உபாசகர் சக்தி பெருமாள் சொன்ன அதே அறை. முன்னால் நின்று கொண்டு வீணா கையை நீட்டிக் காட்டியது.

''இந்த ரூம்லதான் அத்தை நிறைய புத்தகம் இருக்கு.''

''ஆமா... நீ பார்த்தியா?''

''பார்த்தேன். அம்மாகூட ஒருநாள் இதுக்குள்ள போய் எல்லாத்தையும் பாத்துக்கிட்டிருந்தாங்க...''

''நிஜமாவா?''

''ஆமாம்...''-குழந்தை வீணா ஆமோதிக்க ஞானமும் வந்து சேர சரியாக இருந்தது.

''அம்மா... கேட்டியா?''

''கேட்டேன்... சங்கீதா தப்பு பண்ணிட்டா...''

''அவங்க என்னிக்கு எதுல நல்லது பண்ணி யிருக்காங்க-இந்த விஷயத்துல தப்பு பண்ணாம இருக்க?''

- சுதா பதிலோடு அறைக் கதவைப் பார்த்தாள். பேருக்குப் பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது.

''ஆமா... அந்த பெரியவர்தான் செத்துப் போய்ட்டாரே! உள்ளே போய் என்ன இருக்குன்னு பார்த்தா என்ன?''-லதா ஒரு தினுசாக ஆரம்பித்தாள்.

''வாயை மூடுங்கடி. நம்பள நம்பி ஒப்படைச்சுட்டு போயிருக்கார் அவர். இப்ப அவர் உயிரோட இல்லைன்னாலும் இதைத் திறந்து பாக்கறது தப்புதான்.'' -ஞானம் அழுத்தமாகவே சொன்னாள்.

''எப்படிம்மா தப்பாகும்? எப்படி இருந்தாலும் இன்னிக்கு இல்லை-நாளை திறந்தாதானே அவர் எதுக்காக அப்படி சொன்னார்ங்கறதும் நமக்குத் தெரியும்?''

''எல்லாம் சரவணன் வந்த பிறகு பேசிக்கலாம். பேசாம வாங்க.''-ஞானம் கோபத்தோடு அவர்களை போகச் சொல்லிவிட்டு அறையைப் பார்த்துவிட்டு ஒரு பெருமூச்சு விட்டாள்.

பின் கீழே வந்தாள். மீண்டும் ராமாயண புத்தகத்தை எடுத்துக் கொண்டாள். அதே சமயம் வீணா சங்கீதாவின் அறையில் இருந்து ஞானத்தின் கையில் உள்ளதைப் போலவே ஒரு புத்தகத்தை எடுத்து வந்தது.

''இது என்னடா புத்தகம்?''

''அந்த ரூம்ல இருந்த புத்தகம் இது. அம்மா இதை ராத்திரியெல்லாம் படிச்சுக்கிட்டிருந்தாங்க.''

''அப்படியா...?'' - கேள்வியோடு அந்த புத்தகத்தை வாங்கிப் புரட்டினாள்.

'எண்ணின் மர்மங்கள்.'-புத்தகத்தின் தலைப்பே மிரட்டலாக இருந்தது. உபாசனாமூர்த்தி தர்மராஜர் எழுதியது என்று அதற்குக்கீழே எழுதியவரின் பெயர் இருந்தது. லதாவும் சுதாவும் அதை ஆளுக்கு ஆள் பிடுங்க முயன்றனர். இறுதியில் லதாதான் ஜெயித்தாள்.

''நான் படிச்சுட்டு தரேன். அப்புறமா நீ படிக்கலாம்''

-என்று சுதாவை சமாதானப்படுத்தியவளாக புத்தகத் தோடு அறைக்குள் நுழைந்தாள்.

பக்கங்களில் விழ ஆரம்பித்தாள்.

முதல் பக்கத்திலேயே தர்மராஜர் அந்த நூலைப் பற்றிய முன்னுரையை விஸ்தாரமாக எழுதியிருந்தார்:

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்கிற ஆன்றோர் வாக்கு ஒன்றும் சாதாரண வாக்கு அல்ல. அதில்தான் நமது வாழக்கைக்குத் தேவையான எல்லாமே ஒளிந்துள்ளது. நமக்கெல்லாம் ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எண்களைப் பற்றி அது கணக்கிற்கு பயன்படுவது என்று மட்டும்தான் தெரியும். ஆனால், ஒவ்வொரு எண்ணிற்குப் பின்னாலும் ஒரு மர்மம் உள்ளது. அதைத் தெரிந்து கொண்டால் ஆச்சரியத்திலும் அதிர்ச்சியிலும்

நாம் செயலற்றவர்கள் ஆகிவிடுவோம். எண்களே நம்மை கட்டி ஆள்கின்றன. இதை நான் பத்தாயிரம் பேரிடம் பரீட்சை செய்து பார்த்தேன். ஒருவரிடம்கூட எனக்கு தவறே ஏற்படவில்லை!'

-முன்னுரை சுவாரஸ்யமாக நீண்டு கொண்டே போனது. லதாவும் வைத்த விழியை எடுக்காமல் படித்தபடி இருந்தாள். நேரமும் கரைய அது பத்தைத் தொடும்போது சங்கீதா உள் நுழைந்தாள். வீணாவும் சுதாவும் படுக்கப் போய்விட்டனர்.

ஞானம், அவள் வரவும் ஏறிட்டாள்.

''என்னம்மா... டாக்டரைப் பார்த்தியா?''

''பார்த்துட்டேன் அத்தை. ஊசி போட்டார்...'' -என்றபடியே கையில் இருந்த சில மாத்திரைகளை காண்பித்தாள். அதில் ஞானத்தை ஆழ்ந்த தூக்கத்தில் ஆழ்த்தும் தூக்க மாத்திரைகளும் இருந்தன. வெளியே சென்றதே அதை வாங்கி வரத்தானே?

''ஆமா... இப்ப எப்படி இருக்கு?''

''பரவாயில்ல அத்தை...''

''சரி இப்படி உட்கார்...'' -ஞானம் எதிரில் கை காட்டினாள். ஏதோ பேச விரும்புகிறாள் என்பது சங்கீதாவுக்குப் புரிந்தது.

''என்ன அத்தை?''-உட்கார்ந்தபடியே கேட்டாள்.

''மாடியில திறக்கக் கூடாதுன்னு அந்தப் பெரியவர் சொன்ன அறையை நீ திறந்தியா?''-ஞானம் மிக நேராக

விஷயத்திற்கு வந்த அதே சமயம் லதா தன் அறையில் புத்தகத்தின் முக்கிய பக்கத்தில் இருந்தாள்.

'இந்த எண் கணித புத்தகத்தின் மர்ம எண் சக்கரத்தில் கண்களை மூடிக்கொண்டு ஒரு எழுதுகோலால் ஏதாவது ஒரு எண்ணைத் தொட வேண்டும். அந்த எண்ணுக்கான பலன் அடுத்த பக்கத்திலேயே உள்ளது. யட்சினி மூலமந்திரம் மூலமும், வசிய வித்தை மூலமும் உருவாக்கப்பட்ட இந்த மர்ம எண் சக்கரம் உடனேயே அடுத்து நடக்க இருப்பதை சுட்டிக் காட்டிவிடும். நம்பிக்கையோடு நாம் மனதில் எதை நினைத்துக் கொண்டு எண்ணைத் தொடுகிறோமோ அந்தக் கேள்விக்கு சரியான விடையை இந்த எண் சக்கரம் கூறும். ஒருவர் ஒரு சமயம் மூன்று முறை இந்த சக்கர எண்ணைத் தொட்டு பலன் அறியலாம். நான்காம் முறை முயன்றால் பலன் பலிக்காது போய்விடும்.'

-மர்ம எண் சக்கரம் பற்றி இருந்த விளக்கத்தைப் பார்த்துவிட்டு ஆவலான லதா உடனேயே ஒரு பேனாவை எடுத்துக்கொண்டு வந்து அதைப் பயன்படுத்தத் தயாரானாள்.

எதைப் பற்றிக் கேட்கலாம்?

மனதில் ஒரு சின்ன அலை மோதல்...

இறுதியில் பங்களாவை ஒப்புவித்துவிட்டு காசிப் பக்கம் போய் செத்து வைத்த சக்தி பெருமாள் நினைப்புதான் முதலில் முண்டியது. 'உண்மையில் அவர் இறந்து

விட்டாரா...? இறந்திருந்தால் அவர் ஆத்மா சாந்தி அடையுமா...? அம்மா இந்த பங்களாவை அரசாங்கத்துக்குக் கொடுத்துவிடுவதுதான் நல்லது என்கிறாளே-அதுதான் நல்ல முடிவா...?' பெரியவரைத் தொட்டு கேள்விகள் ஒன்றன்பின் ஒன்றாக ரயில் பெட்டிபோல அணிவகுத்தன.

பேனாமுனையும் மர்ம எண் சக்கரத்தின் எண் ஒன்றைத் தொட்டு நின்றது. அது தொட்ட எண் இருபத்து ஒன்பது. உடனே பலனை அறிய அடுத்த பக்கத்தைப் பார்த்தாள்.

'இந்த எண்ணைத் தொட்ட நீ அறியக் கடவது எதுவென்றால், ஓர் உயிரைப் பற்றியதாம். அவ்வுயிரும் இவ்வுலகத்தில் நூறாண்டு ஜீவிக்குமே!'

-பதில் லதாவுக்கு வியப்பைத் தந்தது. பதிலின்படி பெரியவர் இறந்திருக்க வாய்ப்பில்லை என்பதும் புரிந்தது. மளமளவென்று மீண்டும் மர்ம எண் சக்கரப் பக்கத்திற்கு வந்து அடுத்த ரவுண்டுக்கு தயாரானாள்.

வெளியே ஞானம் சோபாவில் மயங்கிய நிலையில் கிடக்கிற மாதிரி தெரிந்தது. சங்கீதா ஞானத்தை சிரமப் பட்டுத்தூக்கி படுக்கை அறைக்குக் கொண்டு சென்று படுக்க வைப்பதில் முனைப்பாக இருந்தாள். இருவருக்கும் இடையில் என்ன நடந்தது என்பது லதாவிற்கான மர்ம சக்கரத்தில் அவள் தொட்ட 88-ஆம் எண்ணிற்கான பலனில் தெரிந்தது.

'ஈரெட்டைத் தொட்டதால் இயம்புவதும் துராச்சிரமே. பீடுடைய ஓர் உயிர் பிரிந்திடுமே இக்கணத்தில்!'

-பக்கென்றது லதாவுக்கு. அறைக்கு வெளியே நடந்தது தெரியாமல் வேகவேகமாக மூன்றாவது எண்ணைத் தொட்டாள். அவள் தொட்டதும் பூஜ்யம்.

'தொட்டதும் பூஜ்யமிது கிட்டிய யாவும் பூஜ்ஜியமாகி எட்டியாய் வாழ்வும் கசந்திடுமே!'

-என்கிற அதன் பலன் அவள் பொட்டில் அடித்தது. நான்காவது முறை முயன்று பார்க்கவும் எச்சரிக்கை தடுத்தது. புத்தகத்தை ஒரு விநாடி மூடியவள் மீண்டும் திறந்தாள். எண் வாரியாக பலன்கள் கண்ணில் படத்தொடங்கின.

'ஒன்றில் பிறந்தவர் சூரியனாவார். நான்கதாம் ராகுவை வளைத்தே பிடித்து அடிமையாய் ஆட்டி வைப்பார். நான்கும் ஒன்றிற்கு திருவடிச் சேவை புரியுமே. ஒரு ஆண் ஒன்றிலும் பெண் நான்கிலும் இருக்க இவ்வாழ்வும் இன்ப உச்சிதான்!'

-ஒன்றாம் எண் பலன் அவளுக்கு ஆச்சரியம் தந்தது. சரவணன் நான்காம் எண் காரன். சங்கீதாவோ ஒன்று. அதுதான் சரவணனை அந்த ஆட்டு ஆட்டி வைக்கிறாளோ என்று உடனேயே விளக்கம் உள்ளுக்குள் ஓடிற்று.

ஏனோ அதற்குமேல் படிக்கத் தயக்கமாய் இருந்தது. அந்த புத்தகம் மற்ற புத்தகம் போல் இல்லை. அதில் உள்ள ஒவ்வொன்றும் தேவரகசியம் போன்றது என்று அவளுக்குள் ஒரு குரல் சொல்லிற்று.

அப்படியானால் மர்ம எண் சக்கரத்தைத் தொட்டதில் வந்த பலன்கள் அப்படியே நடக்க வேண்டுமே? நடக்குமா?

கேள்வியை அவள் கேட்டுக் கொண்டபோது கடிகாரத்தில் மணி பதினொன்று.

காலிங் பெல் அலறும் சப்தம் காதில் விழுந்தது. யார் இந்த நேரத்தில்? எட்டிப் பார்த்தாள். சங்கீதா போய் கதவைத் திறந்து கொண்டிருந்தாள். திறந்து கொண்ட கதவுக்கு அப்பால் சக்தி உபாசகர் சக்திபெருமாள்!

பகீரென்றது.

''நீங்களா...நீங்க...நீங்க...''-சங்கீதாவுக்கு நாக்கு குழறியது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த லதாவுக்கோ உடம்பில் ஒரு புத்துணர்ச்சி ஊறியது போல் இருந்தது.

இப்பொழுதுதான் மர்ம எண் சக்கரத்தில் பலன் வந்தது. அது எப்படியோ பலித்துவிட்டதே! இது என்ன காக்கை உக்கார பனம் பழமா... இல்லை புத்தகம் ஒரு அபூர்வச் சரக்கா?

ஓடி வந்தாள்.

பெரியவரும் சிரித்தபடி உள்ளே வந்தார்.

''என்னம்மா... என்னை இந்த நேரத்துல நீங்க எதிர்பார்க்கலையா?'' - அவரிடம் கேள்வி.

''ஆமாம்... நீங்க எப்படி உயிரோட?''

-சங்கீதாவிடம் குரல் குழறியது.

''என்னம்மா கேள்வி இது? நான் செத்துட்டதா யார் சொன்னது?''

-லதா உடனே ஓடிச்சென்று தந்தியை எடுத்து வந்தாள். காட்டினாள். அதைப் பார்த்த உடனேயே பெரியவரின் முகத்தில் பலத்த சிரிப்பு.

''என்னய்யா சிரிக்கிறீங்க... இந்த தந்திக்கு என்ன அர்த்தம்?''

''இதுவா... இது நான் கொடுத்த தந்திம்மா.''

''நீங்க கொடுத்த தந்தியா?''

''ஆமாம்மா. உங்களை சோதிக்க நான் கொடுத்த தந்தி. நான் செத்துட்டா ஒழிஞ்சான்னு நினைக்கப் போறீங்களா - இல்லை என்னைப் பொருட்படுத்தி கர்மம் செய்வீங்களான்னு தெரிஞ்சுக்க ஆசைப்பட்டேன். அதான் இப்படி ஒரு தந்தியைக் கொடுத்தேன்.'' -பெரியவரின் பதில் லதாவை கோபத்தில் பிடித்துத் தள்ளியது.

''நல்லாருக்கு... என்னய்யா நீங்க. அண்ணன் உங்களுக்காக இப்ப காசிக்கு போயிருக்கார் தெரியுமா?''-சற்று உரக்கவே கத்தினாள் லதா.

''பொறும்மா... நான் ஒண்ணும் காரணமில்லாம விளையாடலை. உங்கப்பா சொல்லித்தான் இப்படிச் செய்தேன்.''

-பெரியவரின் அந்த பதில் இருவரையும் வாயைப் பிளக்கவிட்டது.

''அப்பாவா...எங்கப்பாவா?''-லதா மிக ஆவலாகக் கேட்டாள்.

''ஆமாம்மா... உன் அப்பாவேதான். நான் அவரோட ஷெய்ன்!''

''அப்பா இப்ப எங்கே?''

''இருக்கார். இமயமலைச் சாரல்ல ஒரு சமாதியா.''

''என்னது? சமாதியாவா...? என்ன சொல்றீங்க?''

''அவர் மகா சமாதியாகி பல மாசம் ஆயிடிச்சு. சாகறதுக்கு முந்தி உங்க ஞாபகம் வந்து உங்களுக்கு காலத்துக்கும் பயன்பட்ற மாதிரி ஏதாவது பெரிதா உதவணும்னு நினைச்சார். அதேசமயம் பணத்தாசையால நீங்க தரம் தாழ்ந்து போயிடக் கூடாதுன்னும் கவலைப் பட்டார்.

அப்பதான் நான் அவரைப் பார்த்தேன். கவலைப்படாதீங்க. அவங்க வேண்டாம்னு மறுக்கிறது எதுவா இருந்தாலும் அதை நான் அவங்களுக்கு உங்க சார்பா தரேன்னு சொன்னேன். அதுக்காகவே உங்க சார்பா தேடி அலையும்போது அவன் நேர்மையைப் பரிசோதிக்க பணப்பெட்டியை அவன்கிட்ட விட்டேன். அதன்பிறகு இந்த வீட்டையும் உங்க பொறுப்புல விட்டு மாடி அறையையும் திறக்கக் கூடாதுன்னு சொன்னேன். அந்த அறைல பெரிசா எந்த மர்மமும் இல்லை. உங்க அப்பாவோட பக்திக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டு பல பணக்காரர்கள் அவர் காலடியில் கொட்டின தங்கம் வெள்ளிநகைகள்தான் அந்த அறைல இருக்குது. இன்னும் சொல்லப்போனா அவர் தன் யோகசக்தியால் உணர்ந்து எழுதின பல புத்தகங்கள்கூட அங்க இருக்கு. அதெல்லாம் வேத புராண ரகசியங்கள். அதுக்கெல்லாம் ஒரு விலைமதிப்பே கிடையாது.

ஆமா எங்க உங்கம்மா...?''-பேச்சோடு பேச்சாக ஞானம் எங்கே என்று கேட்டவர் எதிரில் சங்கீதா நடுங்க ஆரம்பித்தாள். லதா திரும்பிப் பார்த்துவிட்டு ''தூங்க்றாங்க'' என்றாள்.

''நான் வந்த பிறகுமா தூங்கறாங்க? என் குரல் அவங்க காதுல விழலையாக்கும்?''-பலமாக பெட்ரூமை பார்த்தபடி கத்திய சக்திபெருமாளை லதாவும் வெகுவாக ரசித்தாள்.

''இங்க நடக்கற எல்லாமே எனக்கு பிரமிப்பா இருக்கு. எங்க அப்பா பொறுப்பில்லாம எங்களை விட்டுட்டு போய்ட்டார்னு நினைச்சேன். ஆனா அவர் எங்களுக்காக உங்களையே அனுப்பியிருக்கறத நினைச்சா சிலிர்ப்பா இருக்கு...'' என்றாள்.

''எனக்கும்தாம்மா. நான் எவ்வளவு ஆசை காட்டியும் உன் அம்மா மசியலை. சந்தர்ப்ப சூழ்நிலைக்கும் பலியாயிடலை. இந்த வீட்டைப் போல பலகோடி செல்வம் கொடுத்தாலும் நேர்வழியில வராத நிலைல அதை ஏத்துக்கத் தயாரா இல்லாத அவங்கள நான் பாராட்டறேன். இனி இந்த பங்களா அந்த மாடி அறை நகைகள் எல்லாமே உன் அம்மாவுக்குத்தான் சொந்தம். அடுத்து அவங்க மகனான சரவணனுக்கு சொந்தம். எல்லாத்தையும் பத்திரமா எழுதி எடுத்துக்கிட்டு வந்துட்டேன். கூப்பிடு அம்மாவை...''

-பெரியவரின் கட்டளையைத் தொடர்ந்து லதா, ஞானம் படுத்திருந்த அறை நோக்கி ஓடினாள்.

கட்டிலில் படுத்திருக்கும் ஞானத்தின் தோளைத் தொட்டபோது ஜில்லிட ஆரம்பித்திருந்தது உடல். அதை உணர்ந்த அவளது அடிவயிற்றில் ஒரு குபீர் அமிலப் பாய்ச்சல்.

''அம்மா... எழுந்திரும்மா. நினைச்சுப் பார்க்க முடியாதது எல்லாம் நடந்திருக்கும்மா. உன் நம்பிக்கையும்

உண்மையும் வீண் போகலை. அப்பா நமக்கெல்லாம் சக்தி உபாசகர் வடிவத்துல வந்து வழியை காட்டிட்டார்மா. எழுந்திரும்மா... எழுந்திரு...''

-லதா பதற்றமும் நடுக்கமுமாய் உசுப்ப, உயிரில்லாத ஞானத்தின் உடல் ஒரு மூட்டைபோல அசைந்தாடியது. ஆனால் கண்ணைத்தான் திறக்கவில்லை.

''ஐயோ அண்ணி... அம்மா எழுந்திருக்க மாட்டேங்கறாங்க. அவங்களுக்கு என்னவோ ஆயிடிச்சு.'' அலறினாள். சங்கீதாவும் ஒன்றும் தெரியாதவள் போல் வந்து பார்த்து விட்டு ''அத்தை...'' என்றாள் ஒங்கலாய். பெரிய வரும் அருகில் வந்து நாடியை பார்த்துவிட்டு ''அடடா போய்ட்டாங்களே!'' என்று அடிக்குரலில் வருத்தத்துடன் சொன்னபோது லதா அப்படியே நொறுங்கி அமர்ந்து விட்டாள்.

சங்கீதாவுக்கோ தான்தான் கழுத்தை நெறித்துக் கொன்றோம் என்பது வெளியே தெரிந்துவிடுமோ என்கிற அச்சம்.

இப்படி இந்தக் கிழவர் அர்த்த ராத்திரியில் வந்து கதையையே புரட்டிப் போடுவார் என்றெல்லாம் எதிர்பார்த்திராத ஆச்சரியம், அதிர்ச்சி எல்லாம் அவளைப் போட்டு உழுது கொண்டிருந்தது.

ஊடே தொலைபேசியும் சிணுங்கியது.

'இந்த நேரத்தில் யாராக இருக்கும்?'

தயக்கத்தோடு போய் ரிசிவரை எடுத்தாள்.

காதில் சேதி விழத் தொடங்கியது. முகமும் வெளிறிப் போய் அவளை அப்படியே குப்புறத் தள்ளியது.

''என்ன அண்ணி... என்ன விஷயம்?''

-ஓடி வந்து பரபரக்கக் கேட்டாள் லதா.

''என்னன்னு சொல்வேன் லதா. பட்டகால்லையே படும், கெட்ட குடியே கெடும்னு சொல்வாங்க, அது உண்மை லதா உண்மை.''

''விளக்கமா சொல்லுங்க. போன்ல யார் என்ன சொன்னாங்க?''

''உங்க அண்ணன் போன ரயில்ல குண்டு வெடிச்சிடுச்சாம். அதுல அவர்... அவர்...''

-முழுவதுமாக சொல்ல முடியாமல் சங்கீதா மயங்கிக் கீழே விழுந்தாள். அவள் சொல்லாமலே மீதம் என்ன என்பது அவர்களுக்குப் புரிந்துவிட்டது.

அனைத்தையும் கேட்டு உபாசகர்கூட ஸ்தம்பித்துப் போய்விட்டார். லதா வேகமாக உள்ளே ஓடினாள். 'எண்ணின் மர்மங்கள்' என்கிற அந்தப் புத்தகத்தை தூக்கிக்கொண்டு வந்தவள், ''ஐயா! இது புத்தகம் இல்ல குட்டிச் சாத்தான். இதை நான் படிச்சது-பலன் பார்த்தது எல்லாம் என் தப்பு. மூன்று முறை மர்ம எண் சக்கரத்துல பலன் பார்த்தேன். நேர்எதிரான பலனா வந்து அதேபோல எல்லாம் நடந்து எங்களை பூஜ்யமாக்கிடிச்சு. இப்ப அப்பாவும் இல்லாம, அம்மாவும் இல்லாம, அண்ணனும் இல்லாம நாங்க அநாதை ஆயிட்டோமே...! நாங்க என்னய்யா பண்ணுவோம்?''

புத்தகத்தை விட்டெறிந்தபடியே கத்தினாள். பெரியவர் சக்திபெருமாள் முகத்தில் ஒரு விரக்திப் புன்னகை. அப்படியே ''என் வாக்கை மீறிட்டீங்களே

இருக்கே?'' என்னும் கேள்வி. பார்வை, போய் விழுந்த புத்தகத்தின் மேல் இருந்தது.

''நாங்க மீறலை. எல்லாம் எங்க அண்ணியோட வேலை.''

''அதுதான் அந்த சக்தி இவங்களை இப்படி தண்டிச்சுட்டாளா?''

''இவங்கள மட்டுமா... எங்களையும்தானே?''

''கவலைப்படாதம்மா... நான் இருக்கேன். உங்களுக்கு கல்யாணம்னு ஒண்ணு நடந்துட்டா வாழ்க்கை திசை திரும்பிடும். நாலும் தெரிஞ்ச நானே வேடிக்கை பார்ப்பேனா. ஆனா இவங்க நிலைதான்...''

-பெரியவர் சங்கீதாவின் மயங்கிய உடலைப் பார்த்தபடியே சொல்லும் போது அவளிடமும் கண் விழிகளில் மலர்ச்சி.

தூங்கி எழுபவள் போல எழுந்தவள் முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டு தலையைச் சொறிந்தபோது பெரியவருக்கு புரிந்து போயிற்று.

அவளது புத்தி அதிர்ச்சியில் பிசகிவிட்டது.

அதீத ஆசை... சுயநலம்... இப்படித்தான் முடியுமோ?

தூர விழுந்து கிடந்த புத்தகத்திடம் கூட படபடப்பு. பெரியவர் போய் அதைக் கையில் எடுத்தார். மடக்கி பத்திரமாய் பக்கத்து ஷெல்ப்பில் வைத்துவிட்டு வந்து ஞானத்தை அடக்கம் செய்வதற்கான பணிகளில் இறங்க ஆரம்பித்தார்.

★★★

மாயப் புன்னகை

1

விடிந்து விட்டது.

கண் விழித்த நந்தகுமாருக்கு 'அடடா... தூக்கம் கலைந்து விட்டதே' என்றிருந்தது.

இரு கைகளையும் பரபரவென்று தேய்த்துவிட்டபடி ரேகைகளை ஒரு பார்வை பார்த்தான்.

கண்டவர் முகத்தில் விழிப்பதைவிட இப்படி உள்ளங்கையை பார்ப்பது நல்லது என்று அவனது பாட்டி மிகச்சிறிய வயதிலேயே சொல்லியிருந்தாள்.

பின்னாளில் அவன் மனம் கவர்ந்த நடிகர் ஒருவரும், எழுத்தாளர் ஒருவரும், அரசியல்வாதி ஒருவரும், ஒரு இந்தியப் பிரசித்திபெற்ற விஞ்ஞானி ஒருவரும்கூட 'விடிந்ததும் உள்ளங்கையைப் பார்த்துவிட்டுத்தான் மற்றவைகளைப் பார்ப்போம்' என்று அவரவர்களுக்கான பேட்டிகளில் சொன்னதையெல்லாமும் அவன் படித்திருந்தான்.

எனவே அப்படி உள்ளங்கையைப் பார்த்தால் தானும் ஓர் ஊரறிந்த புள்ளியாகிவிடலாம் என்று நம்பியோ, இல்லை

அதை சோதித்துப் பார்க்கவோ அன்று முதலே அவனும் உள்ளங்கையைப் பார்ப்பதையே ஒரு வழக்கமாக்கிக் கொண்டுவிட்டான்.

சரி... அதனால் அவன் ஊரறிந்த ஒரு புள்ளியாக ஆனானா என்றெல்லாம் கேட்டுவிட வேண்டாம். அதற்காக முயற்சிகளில்தான் அவன் இருக்கிறான்.

நந்தகுமார் ஒரு சராசரிப் பட்டதாரிதான்.

அடித்துப் பிடித்து இடம் வாங்கி ஒரு டாக்டராகவோ எஞ்ஜினியராகவோ அவனால் முடியவில்லை.

எல்லாவற்றிலும் ஐம்பது அறுபது என்று மார்க்குகள் வாங்கி செகண்ட் கிளாஸில் பாஸ் செய்ததே பெரிய விஷயமாகிவிட்டது அவனுக்கு.

தொண்ணூறு மார்க்குகளுக்கு மேல் வாங்கியவர்களே 'தில்லாலங்கடி தில்லாலோ' என்று வேலைக்காக சீரழியும் போது ஐம்பதும் அறுபதும் சோறு சாப்பிட்டு ஜீவிப்பதே பெரிய விஷயம்தானே?

அதிலும் நந்தகுமார் இன்று ஒரு ஃப்ரீ லான்ஸ் பத்திரிகையாளன்! வித்தியாசமான செய்திகளுக்காக அலைந்து திரிந்து பத்திரிகைகளுக்கு அனுப்பி மாசம் மூவாயிரம் நாலாயிரம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறான்.

பல சமயங்களில் வருவது அந்த மாசத்தின் பதினைந்து நாள் செலவுக்குகூட தாங்கமாட்டேன் என்கிறது. நல்லவேளை கல்யாணம் பிள்ளை குட்டி என்று குடும்பக் குழியில் விழுந்துவிடவில்லை.

அப்படி ஆகியிருந்தால் அவனது நண்பன் சங்கர ராமனைப் போல கன்னாபின்னாவென்று பொய் சொல்லி கண்டதையும் எழுதி ஜீவிக்க வேண்டி வந்திருக்கும்.

நந்தகுமார் அப்படி இல்லை. ஆதாரபூர்வமான செய்திகளைத்தான் பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்புகிறான்.

உறங்கிக் கண் விழித்த நிலையில் அவனுக்குள் இன்று எந்த மாதிரி செய்தி கிடைக்கப் போகிறதோ தெரியவில்லையே என்கிற கவலை!

நேற்றுதான் இந்தியா வந்திருந்த ஒரு அமெரிக்கப் பெண், ஊரைச்சுற்றிப் பார்க்க வந்த இடத்தில் அவளுக்கு கைடாக இருந்து செயல்பட கைலாசபதி என்கிற இளைஞனிடம் மனதைப் பறிகொடுத்து அவனை ரிஜிஸ்தர் மேரேஜ் செய்திருந்தாள்.

'காதலுக்கு கண் இல்லை' என்கிற கருத்துக்கு ஏற்ற விஷயம் வசமாய் வந்து மாட்டியது. எழுதி ஃபேக்ஸ் செய்திருந்தான்.

பத்திரிகை எடிட்டரும் பதிலுக்கு போன் செய்து 'நல்ல விஷயம்யா... இதே மாதிரி வித்தியாசமாவே விஷயத்தைத் தேடு' என்று பாராட்ட வேறு செய்து விட்டார்.

அதுவே பெரிய குளுகோஸ் ஆகிவிட்டது.

இன்று அந்த மாதிரி எதாவது செய்தி மாட்டுமா?

கேள்வியோடு எழுந்து மனிதர்கள் காலையில் செய்தாக வேண்டிய சகலத்தையும் செய்து முடித்தான்.

அவன் வரையில் டாய்லெட்டில் போய் உட்கார்ந்தபடி பேப்பர் வாசிப்பது என்பது உலகத்தின் உன்னதமான இன்பங்களில் சேர்க்க வேண்டிய ஒரு இன்பமான விஷயம்.

சுத்தமாக முக்கால் மணிநேரம்!

பேப்பர் படித்த மாதிரியும் இருக்கும் - வயறும் சுத்தமாகி மனது பரம சுகத்தில் மிதக்கும்.

எத்தனை பெரிய மனிதனாய் இருந்தாலும் தனிமையில் அவர்களிடம் சில கிறுக்குத் தனங்கள் இருக்கும்.

அதில் ஒன்று மூத்திரம் பெய்யும்போது பெய்யுமிடம் சுவரோரமாக இருந்தால் அதில் பீறிடும் மூத்திர நீரால் தன் பெயரை எழுதிப் பார்ப்பது.

நந்துவும் அப்படித்தான்.

அதே நாலுபேர் இருக்குமிடம் என்றால் மிக இறுக்கமாய் மாறிப் போவான். எது எப்படியோ ஓடும் வாழ்க்கையில் ஒடிக் கொண்டே இருக்க வேண்டி யிருக்கிறது. நிம்மதியாய் உட்கார்ந்து ஒரு நாள் மூச்சுவிட முடியவில்லை.

வயதும் இருபத்து ஒன்பதைக் கடந்து முப்பதுக்குள் பிரவேசித்து 'வாழ்வில் இன்னமும் நீ செட்டில் ஆகவில்லை நந்து' என்று சதா பிரச்சனைப்படுத்திக் கொண்டே இருக்கிறது. அவன் வயதுதான் ஒரு பிரபல சினிமா இயக்குநருக்கு... லான்சர்காரென்ன... செல்போனென்ன...? லட்சம், கோடி என்று ஜமாய்க்கிறார். நினைத்தாலே நந்துவுக்கு தீக்குச்சியில்லாமலே வயிறு எரியும்.

இந்திய அரசாங்கம் சத்தியமாய் எல்லோருக்கும் பொதுவாகத்தான் நாசிக்கில் நோட்டு அடிக்கிறது. ஆனால் அதை சிலர் மட்டும் கோணிச்சாக்கில் வாரி அள்ளுகிறார்கள். சிலருக்கு நாலணா எட்டணாகூட கிடைப்பதில்லை.

இது எதனால் என்று நந்தகுமார் அடிக்கடி கேட்டுக் கொள்வான்.

அவனது சகா சங்கரராமன் வேடிக்கையாய் அதற்கு பதில் சொல்வார்.

'எல்லாத்துக்கும் சுழிவேணும் நந்து. பிச்சைக் காரங்ககூட தினம் அம்பது நூறு பாக்கறாங்க. நம்மப்பாரு - ...கழுவத் தெரியாதவனையெல்லாம் பேட்டி எடுத்து பீறாய வேண்டியிருக்குது!' என்பார்.

''அது என்ன சார் சுழி?''

''சுழி தாம்பா எல்லாம்...''

''அதுதான் என்னன்னு கேக்கறேன்?''

''மச்சம்ப்பா... மச்சம்!''

''மச்சம்னா...?''

''அதிர்ஷ்டம்ப்பா!''

''அப்படி மாடி ஊட்டுக்காரன்லாம் அதிர்ஷ்டக் காரனுங்களா?''

''இல்லையா பின்னே. அதுமட்டும் இருந்துச்சுன்னு வை. ஒரு ஒத்தரூபா லாட்டரி சீட்டுபோதும். லைஃபே மாறிடும்.''

''அதுக்கு என்ன பண்ணனும்?''

''அது தெரிஞ்சா நான் ஏன் துணுக்கு எழுதிப் போட்டு ரூம்பது நூறுக்கு சாகப் போறேன்... அதுக்கு என்ன உண்டோ அதை நான் செஞ்சுட மாட்டேன்?''

''உளறாதீங்க சார்... அதிர்ஷ்டம், மச்சம் எல்லாம் சும்மா நாமளா சொல்லிக்கற விஷயங்கள்.''

''அப்படியா... அப்ப எது முட்டாப் பயலை எல்லாம் மேல வைச்சிருக்கு? உன்னையும் என்னையும் அலைய உட்டுகிட்டிருக்கு?''

- சங்கர ராமன் இப்படித்தான் திருப்பிக் கேப்பார். அந்தக் கேள்விக்கு ஏற்ற பதிலைச் சொல்லத் தெரியாமல் முழிப்பான்.

அப்படி ஒரு பக்கம் அதிர்ஷ்டம், சுழி, மச்சம் என்பதெல்லாம் பம்மாத்து என்று உதடு சொன்னாலும் தூங்கி எழுந்தவுடன் உள்ளங்கை ரேகையைப் பார்ப்பது எதோடு சேர்த்தி என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொள்வான்.

யார் முகத்திலாவது முழித்து அதனால் அந்த முகராசியால் அன்று லாட்டரி அடிக்க நேர்ந்துவிட்டால் என்னாவது என்கிற பயமா?

ஆமாம்... அதுதான் உண்மை!

எப்பொழுதும் புத்தி ஒரு விதமாகவும், உணர்ச்சிகள் ஒரு விதமாகவுமே மனிதர்களை ஆட்சி செய்கின்றன.

தன்னுள்ளும் அப்படித்தான் நடக்கிறது என்பதுதான் நந்தகுமாரின் தீர்மானம்.

காலைக் களேபரங்கள் முடிந்து டிபன் சாப்பிடக் கிளம்பிய நந்தகுமாருக்குள் சதா இப்படித்தான் கேள்விகளும் பதில்களும் ஓடியபடி இருக்கும்.

இந்த ஹைடெக்யுகத்திலும் நாயுடு ஹோட்டலில் ஒரு பூரி செட் ஐந்து ரூபாய்க்கும், ஒரு இட்டிலி ஒரு ரூபாய் இருபத்து ஐந்து காசுக்கும் கிடைப்பது ஆச்சரியம்தானே?

அதுவும் நல்ல ருசியோடு...!

நாலு இட்லி, ஒரு பூரி, ஒரு காபிக்கு பதின்மூன்று ரூபாய்தான்.

இதே வேறு ஹோட்டலாக இருந்தால் முப்பது முப்பந்தைந்து ரூபாய் பழுத்துவிடும்.

நாயுடுவுக்கு எப்படித்தான் கட்டுப்படி ஆகிறதோ?

நந்தகுமார் சாப்பிட வந்தபோது நல்ல கூட்டம். பல சமயங்களில் நின்று கொண்டே சாப்பிட வேண்டியிருக்கும். நந்துவும் சாப்பிட்டிருக்கிறான். இன்றும் அதே நிலைதான்...

நாயுடு ஒரு தட்டில் இட்லி பூரியை ஒரு சேரப்போட்டு நீட்டினார். ஒரு ஓரமாய் நின்று சாப்பிடும் போதுதான் சுவரில் அந்த யந்திரத்தைக் கவனித்தான்.

புதிதாக மாட்டப்பட்டு மல்லிகைப் பூவெல்லாம் போடப்பட்டிருந்தது.

''நாயுடு.. அது என்ன சுவத்துல?''

''யந்திரம் நந்து!''

''யந்திரம்னா...?''

''என்னய்யாநீ... யந்திரம் தெரியாதாக்கும்?''

''தெரிஞ்சா எதுக்கு கேக்கறேன்?''

''அது யந்திரம். அவ்வளவுதான் எனக்கும் தெரியும். அதை கடைல வெச்சு ஊதுபத்தி காட்டினா வியாபாரம் நல்லா நடக்கும்னு ஒருத்தர் சொல்லிக் கொடுத்தாரு. அதான் மாட்டி வெச்சிருக்குறேன்.''

''யந்திரம்னா மெஷின்னு கேள்விப்பட்டிருக்கேன். இது ஏதோ தகடு மாதிரி இருக்குது. இதை யந்திரம்கறே. கும்புட்டா வியாபாரம் நல்லா நடக்கும்கறே... புரியலியே.''

''அதுக்கு நான் என்ன பண்ண... ஒண்ணு மட்டும் நிச்சயம். அதை மாட்டுனதுல இருந்து வியாபாரம் பிச்சுக்கிட்டு போகுது.''

''மொட்டத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடறியே நாயுடு.''

''தா... எனக்கு நிறைய வேலை இருக்குது. ஆளவிடு.''

- நாயுடு அவனிடம் இருந்து வெட்டிக் கொண்டு அடுத்த ஆளிடம் போய்விட்டார்.

ஆனால் அவன் பார்வை என்னவோ யந்திரத்தின் மேலேயே இருந்தது. 'இது எப்படி வியாபாரத்தை அதிகரிக்க வைக்கும்?''

கேள்வி பிறாண்டியது.

பக்கத்தில் இன்னொருவர்.

''ஆமா... நீங்க என்ன நாத்திகவாதியா?''

''எதுக்கு கேக்கறீங்க?''

''யந்திரத்தைப் பத்தி இவ்வளவு எளப்பமா கேள்வி கேக்கறீங்க?''

''எளப்பமா இல்லீங்க. தெரிஞ்சுக்கத்தான் கேட்டேன். இதுவோ செப்புத்தகடு. இது எப்படி வியாபாரத்துக்கு உதவி செய்யும்? நான் இங்க சாப்பிட வந்தது நல்ல ருசியைப் பார்த்துத்தான்... யந்திரத்தைப் பார்த்து இல்லை.''

''அது சரி... ஆனா நல்ல ருசி இங்கே இருக்கவே இந்த யந்திரம்தான் காரணம்னு நான் சொல்றேன்.''

''இது என்ன புதுக்கதை?''

''கதை இல்லை தம்பி... அதுதான் குட்சமம். இதுக்கே இப்படி சந்தேகப்படறீங்களே. நாறு வயசாயியும் ஒரு அம்மா இன்னும் இருபது வயசுப் பொம்பளையாவே இருக்காங்க. அதைப் பார்த்தா என்ன சொல்வீங்க?''

- அவர் அவனுக்குத் தேவையான பரபரப்பான சேதி ஒன்றுக்கு பிள்ளையார் சுழி போட்டார்.

''எங்க... யார் அது?''

''பஞ்சமூர்த்தி மலை தெரியுமா?''

''கேள்விப்பட்டிருக்கேன்.''

''அங்க போய் பர்வதம்மா பத்தி கேளுங்க. சொல்வாங்க.''

''நிஜமாவா?''

''நான் அவங்கள முப்பது வருஷமா பாத்துக்கிட்டு வரேன். காத்தால பூத்த மாதிரி அப்படி இருக்காங்க. அவங்கதான் இந்த எந்திரத்தை நாயுடுவுக்கும் தந்தவங்க...''

''அப்ப பஞ்சமூர்த்தி மலைக்கு போனா அவங்களப் பாக்கலாமா?''

''தாராளமா... ஆனா பக்தியோட-நம்பிக்கையோட போகணும். நோண்டிப் பாக்க போனா அவங்களப் பாக்க முடியாது. அப்படி போறவங்களும் உதை வாங்காம திரும்பினதில்லை!''

-ஒரு வடையை விண்டு வாயில் போட்டபடி அந்த மனிதர் சொன்னது நந்தகுமாரை ஒரு கிறுக்கு கிறுக்கியது.

இட்லி, பூரியை அள்ளி எறிந்தான்.

வேகமாய் கை கழுவிவிட்டு வெளியில் வந்தான். ஒரு டெலிபோன் பூத்துக்குள் நுழைந்து எண்களைச் சுழற்றி மறுமுனையில் ஒரு பத்திரிகையின் உதவி ஆசிரியர் பழனிக்குமார் என்பவரைப் பிடித்தான்.

''பழனிக்குமார் சாரா?''

''ஆமாம்... யாரு நந்தகுமாரா?''

''ஆமாம் சார்... ஒரு முக்கியமான விஷயம்.''

''என்ன... நடிகை நளினிகுமாரி வீட்டுக்கு முதல்வர் சாப்பிடப் போனதப்பத்தி எதாவது தகவல் கிடைச்சிருக்கா?''

''சார் அதெல்லாம் லோக்கல் நியூஸ். இது பயங்கர சூத்தல் சமாச்சாரமா இருக்கு''.

''என்ன... பின்லேடன் இங்க வீரப்பனோட காட்டுல கூட்டணி அமைச்சுக்கிட்டிருக்கானாமா?''

''அதெல்லாம் இல்லை சார்... பஞ்சமூர்த்தி மலைல பர்வதம்மான்னு ஒரு லேடி நூறு வருஷமாகியும் இருபது வயசு இளமையோடையே இருக்காங்களாம்.''

''நம்ம ஊர் நடிகைங்க மாதிரியா?''

''விளையாடாதீங்க சார். இதுக்கு பின்னாடி நிறைய இண்டரஸ்டிங் தகவல் இருக்குன்னு நான் நினைக்கறேன்.''

''ஒரு புடலங்காயும் இருக்காது. பிரேமானந்தா வாயில லிங்கம் எடுத்த மாதிரி எதாவது உல்டாவா இருக்கும்.''

''உல்டாவோ கில்டாவோ... வித்தியாசமான செய்திதானே?''

''அதுல என்ன சந்தேகம்? இப்ப அதுக்காக பஞ்சமூர்த்திமலைக்கு போகப் போறியாக்கும்?''

''ஆமாம் சார். போட்டோ கிராபர் மணியனைக் கொஞ்சம் அனுப்பித்தாங்க சார்.''

''ஜமாய் கண்ணா. இப்பவே மணியனை சென்ட்ரல் பஸ் ஸ்டாண்டுல உன்னைப் பாக்கச் சொல்றேன். அந்த பர்வதம்மாவை உண்டு இல்லைனு பண்ணிடு.''

''அதெல்லாம் என்பாடு சார். மேட்டர் படு சூடான மேட்டர். பேமெண்ட் கொஞ்சம் பாத்துப் போடுங்க சார்.''

''முதல்ல மேட்டரை முடி. அப்புறம் பார்ப்போம்.''

-பழனிக்குமார் அவனுக்குள் மறை முகமாய் ஊக்கம் தர நந்தகுமாரும் பஞ்சமூர்த்தி மலைக்குப் புறப்படத் தயாரானான்.

வெளியில் வந்தான். ஆட்டோ ஒன்றைப் பிடித்து ஏறி அமர்ந்தான்.

''சென்ட்ரல் பஸ்ஸ்டாண்டுக்கு போங்க!''

ஆட்டோவும் புலித்தனமாய் உறுமியபடி புறப் பட்டது.

2

பஞ்சமூர்த்திமலை!

சிலுசிலு வென்ற பாரமான காற்று, வெண்ணிற பனிப்போர்வைக்கு கீழே பசுமையான காடுகள்-என்று மலைகளுக்கேயுரிய இலக்கணம் மீறாமல் ஊர் எல்லையில் 'பஞ்சமூர்த்தி மலை உங்களை வரவேற்கிறது' என்கிற முகப்புப் பலகையுடன் இருக்க, அந்த பலகை மேல்கூட நான்கைந்து செம்போத்துப் பறவைகள் உட்கார்ந்திருந்தன.

வளைந்து மேலேறும் பஸ்ஸில் குளிருக்குப் பயந்து கொண்டு பலரும் ஷட்டரை இறக்கிவிட்டிருந்தாலும் நந்தகுமார் மட்டும் தனக்கருகே உள்ள ஷட்டரை இறக்காமல் வெளியே பார்த்தபடி வந்தான்.

பக்கத்திலேயே ஒரு மலைவாசி வேட்டியை அவிழ்த்துப் போர்த்திக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

ஷட்டரை இறக்கிவிட அவர் முயன்ற போதெல்லாம் தடுத்து வெளியே பார்த்துக் கொண்டே வந்தான் நந்தகுமார்.

''இறக்கி விடுங்க தம்பி...கூதைக் காத்து அப்பால சலதோஷத்துல பிடிச்சு தள்ளிப்பிடும். மலைப்பனி மார்புல சளிக்கூடு கட்டிப்பிடும்...'' என்று சொல்லிப் பார்த்தார்.

''இருக்கட்டும்... எனக்கு ஒண்ணும் ஆகாது'' என்றவனுக்கு அந்த மலையின் அழகு மிகப் பிடித்துவிட்டது.

''ஆமா இப்பதான் முதல் முதலா வர்றீங்களா?'' அவர்தான் கேட்டார்.

''ஆமாம்...''

''என்ன விஷயமா வர்றீங்க...?''

யதார்த்தமாய்த்தான் கேட்டார்.

''பர்வதம்மாளைப் பாக்கறதுக்கு'' - சொல்லிவிட்டு அவர் முகத்தைப் பார்த்தான். அதில் கடுக்கென்று ஊசி ஏறின மாதிரி ஒரு மாற்றம்.

''அவங்க ரொம்பஃபேமஸாம்ல?''

''அவுகளை எதுக்குப் பாக்கணும் நீங்க...?''

''குறி சொல்றவங்கள எதுக்குப் பார்ப்பாங்க?''

''எனக்கு தெரிஞ்சு இப்ப அவங்க யாருக்கும் குறி சொல்றதில்லையே!''

''அப்படியா...!''

''பல வருசமாவே அவங்க குகையைவிட்டும் வெளிய வர்றதுமில்ல!''

''அவங்க அப்ப குகைலயா இருக்காங்க?''

''ஆமாம்...இதெல்லாம் தெரியாதா உங்களுக்கு?''

''தெரிஞ்சுக்கத்தான் வந்துருக்கேன்.''

''பேசாம திரும்பிப் போயிருங்க. ஊர்க்காரங்க நாங்களே அந்த குகைப்பக்கம் போவுறதில்லை.''

''எதனால அப்படி?''

''அவுக ஒரு மாதிரி. அவங்களா எப்பவாச்சும் ஊருக்குள்ள இருக்கற பொன்னியம்மன் கோவிலுக்கு வருவாங்க. அப்ப பார்ப்போம். மத்தபடி அவுகள பாக்க யார் எதுக்காக போனாலும் அவங்க திருப்பி அனுப்பிடறாங்க. குகையைவிட்டு வெளியவே வர்றதில்லை.''

-ஓடும் பஸ்ஸிலேயே ஓரளவு விஷயம் கிடைத்தது. பஸ்சும் பஞ்சமூர்த்தி மலையின் உச்சியில் ஒரு சின்ன மைதானம் போல் உள்ள இடத்தில் ஆசுவாசப்பட்டு நின்று எல்லோரையும் உதிர்த்துவிட்டது.

நந்தகுமாரும் இறங்கினான்.

எதிரில் ஒரு பெட்டிக்கடை!

கடைக்காரன் கறுப்புப் போர்வை ஒன்றுக்குள் பதுங்கியிருந்தான். உதட்டில் பீடியும் புகையும்.

நந்தகுமாரும் கடைமுன் போய் நின்றான்.

''கோல்ட் ஃப்ளேக் சிகரெட் ஒரு பாக்கெட்...'' என்றபடி ஐம்பது ரூபாயை நீட்டினான்.

''சில்ற இல்லையே தம்பி... அதோட கோல்ட்ஃப்ளேக் சிகரெட்டும் இல்ல. இங்க கத்திரி சிகரெட் தான் கொஞ்சம் விக்கும். மத்தபடி பூக்கூடை பீடிக்குதான் கிராக்கி.''

''சரி சிசர் சிகரெட்டை கொடுங்க...''

''சில்ற இல்லியே...''

''பரவால்ல...நான் அப்புறமா வாங்கிக்கறேன்.''

''தம்பி யார் ஊட்டுக்கு வந்துருக்கீங்க?''

''யார் வீட்டுக்கும் வரலை. பர்வதம்மாளை பார்க்கத்தான் வந்துருக்கேன்.''

-நந்தகுமார் சொன்ன மறுநொடி கடைக்காரன் முகத்திலும் மாற்றங்கள்.

''ஏன்...அவங்கள பார்க்க முடியாதா?''

''அப்படித்தான் சொல்லிக்கிறாங்க.''

''அவங்க ஏதோ ஒரு குகைலதான் இருப்பாங்களாம்னு கேள்விப்பட்டேன். அந்த குகைக்கு எப்படி போகணும்?''

''வேணாம் தம்பி. திரும்பிப்போயிடுங்க. எதுக்கு வம்பு?''

''இதுல என்ன வம்பு இருக்குது... அவங்களப் பாத்து கும்புடத்தான் வந்துருக்கிறேன்.''

''எதுக்கு வந்திருந்தாலும் சரி. அவங்களப் பாக்க முடியாது. போனவாரம்கூட ஒருத்தர் வந்து குகைக்கு போய் வெளியவே காத்துக் கிடந்தார். அம்மா வெளிய வரவேயில்லை. பொறுமை இழந்து உள்ளாரயே போய்ட்டார். அம்மா கோவிச்சுக்கிட்டு 'உன் கண்ணு அவிஞ்சு போக'ன்னு சாபம் கொடுத்துட்டாங்க!''

-கடைக்காரன் ஒரு மாதிரி பயமுறுத்தினான்.

''அப்புறம் என்ன ஆச்சு... அவர் திரும்பிட்டாரா?''

''திரும்பினது மட்டுமா... அவருக்கு கண்ணுமுல்ல போயிடிச்சு.'' - நந்தகுமாருக்கு பகீர் என்றது.

''நிஜமாவா சொல்றீங்க...?''

''அட என்னங்க நீங்க... எங்க ஊர் பொன்னியம்மன் கோவிலுக்குப் போய்ப்பாருங்க. அந்த ஆள் அங்கதான் இருக்காரு. அந்த ஆளைப் பார்த்து ஊரே அரண்டுபோய் டெக்குது. நீங்க என்னன்னா...?''

''சரி கோவிலுக்கு எப்படி போகணும்?''

''இப்படியே நேரா போங்க-கூப்புடு தூரத்துலதான் கோவில். பாத்தாலே தெரியும்.''

''ஆமா...இங்க டெலிபோன் பூத் இருக்கா?''

''தனியா இல்லீங்க. போஸ்ட் ஆபீஸ்ல ஒண்ணு இருக்குது. செவ்வா, வெள்ளி கோவிலுக்கு நல்ல கூட்டம் வரும். வெளியூர்ல இருந்தெல்லாம் கூட வருவாங்க. அப்ப போஸ்ட் மாஸ்டர் திறந்து வெச்சுருப்பாரு. மத்த நாள்ல மூடித்தான் இருக்கும்.''

''ஒரு அவசரம் ஆத்திரம்னா...?''

''போஸ்ட் மாஸ்டர் வீட்டுக்குத்தான் போகணும். வீட்ல இருந்தா வந்து திறந்து விடுவாரு.''

-கடைக்காரன் சொன்ன விஷயங்களை அசைபோட்டபடியே நடக்க ஆரம்பித்தான் நந்தகுமார்.

சிறிய ஊர்தான்!

அங்கங்கே சில சென்ட்ரிங் வீடுகள். பெரும்பாலும் நாட்டு ஓடு வேய்ந்த வீடுகள். வீட்டு முகப்பில் பாரபட்சம் இல்லாமல் வளர்ந்திருக்கும் முருங்கை மரங்கள். அதில் வாலில் பிடி போட்டுத் தொங்கும் பச்சைப் பாம்பு கணக்காய் அதிக பருமன் இல்லாத காய்கள். காற்றில் அது ஆடுவதுகூட சற்று பயமூட்டும் விதமாகத்தான் இருந்தது.

எதிரில் வித்தியாசமாக - கழுத்தில் வேட்டியை முடிபோட்டு மார்பை மறைத்தபடி நடக்கும் மலை ஜாதிப் பெண்களும் போர்வையால் உடம்பே தெரியாதபடி மறைத்துக் கொண்டு பீடி பிடித்தபடி நடக்கும் ஆண்களுமாய் பஞ்சமூர்த்தி மலை வித்தியாசமாகத்தான் இருந்தது.

ஊரில் பார்த்த மனிதர் எதை வைத்து பர்வதம்மாளை சகஜமாய் பார்க்க முடியும் என்கிற மாதிரி சொன்னார் என்பதும் மனதில் இடித்தது.

அவளது இளமை ரகசியத்துக்கு விடை தேடி வந்தால் இங்கே வேறு ஏதேதோ மர்மங்கள் மண்டிக்கிடக்கின்றன.

நந்தகுமாருக்கு கொஞ்சம் குழப்பமாகக்கூட இருந்தது. முதலில் அந்த குருட்டு மனிதரைப் பார்த்துப் பேசினால்தான் ஒரு வழி கிடைக்கும் போலவும் தோன்றியது.

யோசனையோடு நடப்பவனின் ஒரு பக்க தோளில் கேமரா. ஒரு வாரமாய் தோய்க்காத ப்ளூ கலர் ஜீன்ஸ் பேண்ட். எவ்வளவு அழுக்குப்பட்டாலும் வெளிகாட்டாத அரக்கு வண்ண டி ஷர்ட்!

இதனால் உடம்பில் குளிரின் தாக்கம் தெரியவில்லை. ஆனால் காதுமடல் கற்பூர வல்லி இலை கணக்காய் விடைத்துப் போய் குளிரால் அவன் முகத்தில் சுருக்கத்தை உருவாக்கப் பார்த்தது.

கையை பரபரவென்று தேய்த்து விட்டுக் கொண்டு தொடர்ந்து நடந்தான்.

நிச்சயம் வித்தியாசமான விஷயங்கள் நிறைய கிடைக்கப் போவதாக உள்ளுணர்வு சொன்னது.

வடக்கில் சோமன் தத்தா என்று ஒரு ஃப்ரீலான்ஸ் ரிப்போர்ட்டர். கங்கையாற்றங்கரையில் உள்ள ஒரு ரொமத்தில் காபாலிகர்கள் என்னும் பிணம் தின்னிச் சாமியார்கள் பற்றிக் கேள்விப்பட்டு அவர்களை சந்திக்கச் ளசென்று அவர்கள் பிணம் தின்னும் போது புகைப்படம் எடுத்து, அவர்களையும் பேட்டி கண்டு எழுதிய கட்டுரை அவன் ஞாபகத்திற்கு வந்தது.

அதன்பின் கட்டுரையை வெளியிட்ட பத்திரிகையே அவருக்கு தன் நிறுவனத்தில் முப்பதாயிரம் சம்பளத்தில் வேலை போட்டுக் கொடுத்துவிட்டது.

இதே கதைதான் கல்கத்தாவிலும்... ராஜன் கானர்ஜி என்னும் ரிப்போர்ட்டர் காளிக்கு நரபலி கொடுக்கும் மூடப் பழக்கத்தைப் பற்றி கேள்விப்பட்டு மிகச் சாதுர்யமாக ஒரு கட்டுரை செய்தார். அதன்பின் அவரே ஒரு பத்திரிகை நடத்தும் அளவு பெரிய ஆளாக மாறினார்.

தனக்கும் அப்படி ஒரு அதிர்ஷ்டம் அடிக்குமா?

கேள்விப் பந்துகளை தட்டிக் கொண்டு நடந்தவன் கண்ணில் போஸ்ட் ஆபீஸ் பட்டது.

போனால் போகிறது என்று ஒரு சின்ன பெயர் பலகை. நல்லவேளையாக உள்ளே போஸ்ட் மாஸ்டர் இருந்தார். அவரைப் பார்க்கவும் உதவி ஆசிரியர் பழனிக்குமார் ஞாபகம் வந்தது.

அவருக்கு போன் செய்து இங்கு கேள்விப்பட்ட விஷயங்களைச் சொன்னால் என்ன என்று தோன்றியது.

உள்ளே நுழைந்தான்.

போஸ்ட் மாஸ்டர் படுஹோம்லியாக வேஷ்டி பனியனில் இருந்தார். தபால் பை ஒன்று அவன் வந்த

பஸ்ஸிலேயே வந்திருந்தது. அதன் அரக்கு சீலை உடைத்து பையைத் திறந்து கொண்டிருந்தார்.

''குட்மார்னிங் சார்...'' -நந்தகுமாரின் குரலுக்கு திரும்பினார்.

''STD கால் ஒண்ணு பண்ணணும்.''

''எந்த ஊர் நீங்க?''

''சென்னை!''

''போட்டோகிராபரா...?''

''பத்திரிகைக்கு எழுதற ஃப்ரீலான்ஸ் ரிப்போர்ட்டர்.''

''பண்ணிக்குங்க...'' - பதிலோடு தொலைபேசியை காட்டினார்.

நந்துவும் எண்களைத் தட்டி பழனிக்குமாரை பிடித்தான்.

''குட்மார்னிங் சார்... நந்தகுமார் பேசறேன்!''

''சொல்லுய்யா... எங்க இருந்து பேசறே!''

''பஞ்சமூர்த்தி மலைல இருந்து.''

''அங்க டெலிபோன்லாம் இருக்கா...?''

''ஒரே ஒரு போன்... அதுவும் போஸ்ட் ஆபீஸ்ல-அங்க இருந்துதான் சார் பேசறேன்.''

''சரி சொல்லு...''

''நான் உங்கக்கிட்ட சொன்னதைவிட மிரட்டலா இருக்கு சார் விஷயங்கள்.''

''எப்படி?''

''பர்வதம்மா இப்ப அருள்வாக்கெல்லாம் சொல்ற தில்லையாம். ஒரு குகைலதான் இருக்காங்களாம். யாரும்

37671
6469219

அவங்கள பார்க்க முடியாதாம். மீறி பார்த்தா தேஜஸ்ல சபிச்சுட்றாங்களாம். அப்படி ஒரு நபரை சபிச்சு அவருக்கு கண் பார்வை போயிட்டதா சொல்றாங்க.''

''அட்றாசக்கைன்னானாம்... அப்புறம்?''

''நான் இப்ப அந்த கண் போன மனுஷரைப் பார்க்கத்தான் போறேன்.''

''பாரு...பாரு... விஷயங்களை ஷார்ப்பா கவனி. ஏடாகூடமா எதாவது இருக்கும்.''

''அப்படித்தான் நானும் நினைக்கறேன். கஷ்டமான அசைன்மென்ட் சார். நம்ம பத்திரிகையை நம்பித்தான் இறங்கியிருக்கேன்...''

''நீ என்ன சொல்லவரே...உன் கட்டுரையைப் பிரசுரம் பண்ணுவோமா மாட்டோமான்னு டவுட்டா இருக்கா உனக்கு?''

''அப்படி இல்ல சார். இந்த அசைன்மென்ட்டைப் பண்ணும்போது எனக்கு எதாவது ஆயிட்டா எங்களுக்கு எதுவும் தெரியாதுன்னு நீங்க சொல்லிடக்கூடாது சார்.''

''என்ன பயப்பட்றியா?''

''இல்ல சார்... இது ஒரு எச்சரிக்கை.''

''சரி நந்து... நீ எங்க ஸ்டாஃப் ரிப்போர்ட்டர் இல்ல. நீ உன் சொந்த விருப்பத்துலதான் இதை எல்லாம் செய்யறே. அப்படிச் செய்யும்போது ஆபத்து எதுவும் ஏற்பட்டா அதை நீ சந்திச்சு ஜெயிக்கத்தான் வேணும். இப்படி எங்ககிட்ட புலம்பக்கூடாது.''

''புலம்பலே சார்... நான் எடுக்கற ரிஸ்க்கோட டெப்த்தை சொல்றேன். ஆர்ட்டிகளை அதுக்குண்டான வெல்யூவோட கவர்ஸ்டோரியாவே போடணும் சார்.''

''கல்யாணமே ஆகலை. அதுக்குள்ள குழந்தைக்கு என்ன பேர்வைக்கலாம்கற மாதிரி அபத்தமா பேசறியே. தைரியமா இறங்கி செயல்படுய்யா. எந்த நல்ல விஷயத்தையும் எந்த ஒரு பத்திரிகையும் சும்மாவிடாது. நான் பாத்துக்கறேன்.''

''தேங்க்யூ சார்... அது போதும் சார்!''-நந்து ரிஸீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தான்.

போஸ்ட் மாஸ்டர் வெறித்தபடி இருந்தார்.

''எவ்வளவு சார் ஆச்சு?''

''அது இருக்கட்டும். நீங்க பர்வதம்மா விஷயமா கட்டுரை பண்ண வந்திருக்கீங்களா?''

''ஆமாம் சார்... அவங்களப் பத்தி கேள்விப் பட்டுத்தான் வந்திருக்கேன்.''

''வேண்டாம் தம்பி. திரும்பிப் போயிடுங்க.''

''என்ன சார் நீங்களும் அதே பல்லவியைப் பாடறீங்க...''

''அப்ப இதுக்கு முந்தியே பலர் எச்சரிக்கை பண்ணியிருக்காங்களா?''

''ஆமாம்... எல்லாமே ரொம்ப ஆச்சரியமா இருக்கு. இந்தக் காலத்துல இப்படியான்னு அதிர்ச்சியாவும் இருக்கு.''

''ஆச்சரியமும் அதிர்ச்சியும் எந்த விஷயத்துலதான் இல்ல... சொல்லுங்க பார்க்கலாம்''.

''என்ன அப்படி சொல்றீங்க... நூறு வயசாகியும் ஒருத்தர் இருபது வயசு மாதிரியே இருக்காங்கன்னா அது சாதாரண விஷயமா?''

''யோகத்துல அதெல்லாம் ரொம்ப சாதாரண விஷயம் தம்பி.''

''அதுசரி...நீங்க பர்வதம்மாவை பாத்துருக்கீங்களா?''

''இதே ஊர்ல இருக்கேன். பார்க்காம இருப்பேனா... பாத்துருக்கேன்.''

''உங்களுக்கு ஆச்சரியமா இல்லை?''

''ஆச்சரியமாத்தான் இருக்கு. ஆச்சரியப்பட்டுக்கற தோட நிறுத்திக்க வேண்டியதுதான்!''

''எப்படின்னு சந்தேகமா இல்லையா?''

''சந்தேகப்பட்டா சாகவேண்டியதுதான்...''

''அங்கதான் எனக்கு உதைக்குது. அப்படி என்ன அது தெரிஞ்சுக்க கூடாத ஒரு விஷயம்?''

''பொதுவுல நதிமூலம் ரிஷிமூலம் பார்க்கக் கூடாதுன்னு சொல்வாங்க. பார்த்தா எப்பவுமே ஆபத்துதான்.''

''எப்படி சார்... எப்படி இவ்வளவு பெரிய விஷயத்தை சாதாரணமா எடுத்துக்கிட்டு சும்மா இருக்கீங்க?''

''எங்களுக்கெல்லாம் உயிர் மேல ஆசை இருக்கு. உங்களுக்கு இல்லேன்னா போங்க. போய் அனுபவியுங்க.''

-போஸ்ட் மாஸ்டர் விட்டேத்தியாக பதில் சொல்லிவிட்டு வந்த கடிதங்களுக்கு முத்திரை குத்த ஆரம்பித்தார்.

அவனுக்குள் பூச்சி பறந்தது.

அவர் திட்டமிட்டு மிரட்டுகிறாரா... இல்லை சாதாரணமாக சொல்கிறாரா என்பதே குழப்பமாக இருந்தது.

3

பொன்னியம்மன் கோவில் ஒன்றும் அத்தனை பெரிதாக இல்லை. சாதாரண கோவில் தான்! ஒரு இருபதடி உயர கோபுரம். கோவிலைச் சுற்றி காவிப் பட்டையடித்த மதில் சுவர். முகப்பில் தட்டில் தேங்காய் பழங்களை பரத்தி வைத்துக் கொண்டு சில கடைகள்.

நந்தகுமார் கோவிலை ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டான், உள்ளே நடந்தான். கூட்டமே இல்லை. எங்கே அந்த குருட்டு மனிதர்? பார்வை துழாவியது. உள்ளே ஒரு தூணுக்கு அருகில் கையில் தடியுடன் அமர்ந்திருந்தார். கண்ணுக்கு பெரிதாய் கட்டு போட்டிருந்தார். நெருங்கினான்.

''வணக்கம்ங்க... நீங்கதான் பார்வதம்மா சாபத்தால கண்ணப் பறி கொடுத்தவரா?''

-அவர் உடனே தடுமாறிக் கொண்டு எழுந்து ''கேள்வி கேக்கற நீங்க யாரு?'' என்றபடி சற்று முன்னால் வந்தார்.

''எனபேர் நந்தகுமார். நான் ஒரு ஃப்ரிலான்ஸ் பத்திரிகை ரிப்போர்ட்டர். உங்களைப் பத்தி கேள்விப் பட்டேன். அதான் பாக்க வந்தேன்.''

''நல்லது... சாமிதரிசனம் பண்ணிட்டீங்களா?''

''இல்ல... இனிமேதான் பண்ணணும்.''

'போங்க... போய் சாமியை கும்புட்டு வாங்க. பொறவு பேசலாம்.''

''பரவால்ல... நீங்க சொல்லுங்க. நான் அப்புறமா சாமி கும்புட்டுக்கறேன்.''

''தப்பு பண்றீங்க. பொன்னியாத்தா ரொம்ப சக்தி வாஞ்சவ. அவளைக் கும்புடாம இங்க எதையும் யாரும்

செய்ய மாட்டாங்க. அது தெரியாம அலட்சியமா இருந்துதான் எனக்கு இப்படி ஆயிடிச்சு.''

- அவர் கொஞ்சம் போல பதறினார்.

''சரி... நீங்க இங்கையே இருங்க. நான் போய் தரிசனம் பண்ணிட்டு வந்துடறேன்.''

நந்தகுமார் சற்று பின் சென்று அவரையும் ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டான். பிறகு பிராகாரத்தில் நடந்து சிறிய பீடம் கடந்து சன்னதி முன் போய் நின்றான்.

சன்னதி திறந்திருந்தது. பூசாரியைக் காணவில்லை. உள்ளே பொன்னியம்மன் ஒற்றை சாமந்தி மாலையோடு தேஜோமயமாய் அமர்ந்திருக்க அருகில் தடிமனான கூடர் விளக்கு.

நந்தகுமார் உற்றுப்பார்த்தான். திருட்டுத்தனமாய் சாமி கும்பிடுகின்றவர்களைப் போல அரைக்கை கூப்பி கன்னத்திலும் போட்டுக் கொண்டான்.

பூசாரி எங்கோ வெளியே போயிருந்தவரைப் போல அப்பொழுதுதான் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்.

நந்தகுமாரைப் பார்த்துவிட்டு அரைச் சிரிப்பு சிரித்தார்.

''தம்பிக்கு வெளியூருங்களா?''

''ஆமாம்... மெட்ராஸ்.''

''சென்னைன்னு சொல்லுங்க. கேமரா வெச்சிருக்கீங்களே போட்டோ கீட்டோ எடுத்துப்புட்டீங்களா?''

''இல்லை... இனிமே நீங்க அனுமதிச்சா எடுத்துக்கறேன்.''

''தப்புதம்பி. அது ரொம்பதப்பு. ஆத்தா பொல்லாதவ. அவளுக்கு இதெல்லாம் புடிக்காது.''

''அப்படின்னு ஆத்தா வந்து உங்கக்கிட்ட சொன்னாளா?''

- பட்டென்று நந்தகுமார் திருப்பிக் கேட்க, ஒரு விநாடி பூசாரி தடுமாறி விட்டார். பிறகு சுதாரித்து, ''என்ன தம்பி இது கேள்வி... ஆமா உங்களுக்கு கடவுள் நம்பிக்கை உண்டா இல்ல சும்மா சுத்திப் பார்க்க வந்தீங்களா?''

- அவர் கேள்வியில் அவன் ஒரு நாத்திகன் என்கிற தீர்மானம்.

''கடவுள் நம்பிக்கைக்கும் என் கேள்விக்கும் என்னங்க சம்மந்தம்?''

''இல்லையா பின்ன... நீங்க திருப்பதியிலையோ பழனியிலையோ போய் படம் புடிப்பீங்களா... உடுவாங்களா அங்க?''

''அப்ப அவங்க விடமாட்டாங்க. அதனால நீங்களும் விட மாட்டீங்க... அப்படித்தானே?''

''அப்படி இல்லை... அதுதான் ஐதீகம். அதனால அப்படிச் சொன்னேன்.''

''ஆத்தாளுக்கு பிடிக்காதுன்னு அப்ப எதை வெச்சு சொன்னீங்க?''

''சரிதான்... விடமாட்டீங்க போல இருக்குதே. சாமி கும்புட்டுக்கறதா இருந்தா கும்புட்டுக்குங்க.'' - அவர் கருவறைக்குள் நுழைந்து கற்பூரத்தட்டை எடுத்து ஆரத்தி காட்டினார். நந்தகுமாரும் புத்திசாலித்தனமாக சூழ்நிலை அதீத பக்திமான் போல மாறி கைகளைக் கூப்பி வணங்கினான். திரும்பி வந்து குங்குமம் தரும்போது தட்டில் ஒரு ஐம்பது ரூபாயைப் போட்டான்.

பூசாரிக்கு வாயெல்லாம் பல்லாகிவிட்டது.

''தம்பி பாக்கத்தான் பலாப்பழம் மாதிரி முள்ளா தெரியறீங்க. ஆனா சுளையாட்டம் மனசு இருக்குது.''

- நந்தகுமார் ஐம்பது ரூபாயின் மகிமையை நினைத்து ஒரு சிரிப்பு சிரித்தான். பின்,

''உங்கக்கிட்ட ஒண்ணு கேக்கலாமா?'' என்று ஆரம்பித்தான்.

''ஒண்ணென்ன ஓராயிரம் கேளுங்க. தெரிஞ்சதைச் சொல்றேன்.''

''நீங்க இந்த பஞ்ச மூர்த்தி மலையே பிறந்து வளர்ந்தவரா?''

''ஆமா... நாமட்டுமா...? பதினாலு தலைமுறையா எங்க குடும்பத்துக்கே இதுதானே ஊரு... ஆத்தாதானே எங்களுக்கு படியளக்கறவ!''

''அப்ப ரொம்ப சக்தி வாய்ந்த சாமின்னு சொல்லுங்க.''

''அதுல என்ன சந்தேகம். இவளைக் கும்புட்டு எதைக் கேட்டாலும் கொடுப்பாளே!''

''அப்ப நீங்க எதையுமே இதுவரை கேட்டதில்ல மாதிரி தெரியுதே?''

''நீங்க கேக்கறது புரியல எனக்கு...''

''இல்ல... கேட்டா கேட்கறத தர்ற சாமியை வெச்சுக்கிட்டு இப்படி மணி ஆட்டிக்கிட்டு பொழுதை கழிச்சுக்கிட்டிருக்கிங்களே அதைச் சொன்னேன்...''

''விளையாட்டா பேசறீங்க. நாங்க எதுக்கு கேக்கணும்? கேக்காமலேதான் அவ கொடுத்துட்றாளே... இப்பக்கூட பாருங்க ஊட்டுல என் பேத்திக்கு மேலுக்கு முடியலை. மருத்துவன் கிட்ட காட்டணும்னா அம்பது ரூவா ஆகும்னு என்மக சொன்னா. இதோ இப்ப நீங்க கொடுத்துட்டீங்க.''

- பூசாரி சொல்லி விட்டுச் சிரித்தார்.

''அது சரி... இவ்வளவு சக்தி படைச்ச சாமி உள்ள ஊர்ல பர்வதம்மாங்கறவங்களை எல்லாரும் சாமியா நினைச்சு கும்புட்றாங்களே... அது எதனாலங்க?''

- நந்து விஷயத்துக்கு வந்தான். பூசாரி முகம் உடனே இருட்டு கட்டியது. சட்டென்று வார்த்தைகள் வரவில்லை.

''என்ன பூசாரி பதிலக் காணோம்?''

''இல்ல... நீங்க எதுக்கு கேக்கறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''சும்மாதான்... என் மனசுல தோணிச்சு. கேட்டேன்.''

''நல்லது தம்பி. என் வரைல அது மூலமாகதான் இந்த ஆத்தா பேசறா. இவ நித்ய கன்னி. இவளைக் கும்புட்ற அவுகளும் நித்ய கன்னியாகவே இருக்காங்க.''

''அவங்கள பாக்க முடியாதுங்கறாங்களே...?''

''என்னான்னு தெரியல தம்பி. முந்தியெல்லாம் ஆத்தா சகஜமா எல்லாருக்கும் அருள்வாக்கு சொல்லிக்கிட்டுத்தான் இருந்துச்சு. இப்பதான் வெளியவே வரமாட்டேங்குது.''

''ஏன்னு தெரியலியா?''

''ஆத்தா விஷயம். நமக்கு என்ன தெரியுமா?''

''இப்படி சொன்னா எப்படிங்க? நான் அவங்கள பாக்கத்தான் வந்துருக்கேன். ஆனா பார்த்தா பார்வை போயிடும் அப்படி இப்படின்னு சொல்லி எல்லாரும் பயமுறுத்தறாங்க...''

''அதுவும் நெசம் தான். பாருங்க அங்க ஒருத்தர் உக்காந்திருக்காரே, அவரு இப்படித்தான் ஆத்தாவை பாக்க குகைக்குப் போய் பார்வை போயிடுச்சு. இப்ப கண்ணுக்கு

மருந்து வெச்சு கட்டிக்கிட்டு இங்கையே தவம் கெடக்கறாரு...''

''அப்படி என்ன அவர் பாக்கக் கூடாததை பார்த்துட்டாரு?''

''அதை எல்லாம் நாம கேக்க முடியாது. 'தப்பு பண்ணிட்டேன்; பார்வை கொடு ஆத்தா'ன்னு இப்ப இங்கையே கிடக்காரு. ஆத்தாளும் மூலிகையைக் கொடுத்து கண்ணுல வெச்சு கட்டிக்க சொன்னிச்சு. ஒரு மண்டலத்துல போன பார்வை வந்துடும். அப்புறமா ஒழுங்கா நடந்துக்கோன்னு சொல்லிடிச்சு.''

''ஒஹோ... அதான் அவர் டாக்டரைக்கூட பார்க்காம இங்க இருக்காரா... ஆமா பார்வை வந்துடுமா?''

''என்ன தம்பி கேள்வி இது? ஆத்தா சொல்லி எது நடக்காம போயிருக்குது?''

''நீங்க சொல்லச் சொல்ல எனக்கு அவங்களப் பாக்கற ஆசை அதிகமாயிட்டே போகுது.''

''வேண்டாம் தம்பி. ஒழுங்கா ஊர் போய்ச் சேருங்க. சொல்லிப்புட்டேன். அப்புறம் நீங்களும் குருடாகி தடவிக்கிட்டு திரியாதீங்க...''

- பூசாரி நயமாக எச்சரிக்கை செய்ய, யோசனையோடு விலகிய நந்தகுமார் மீண்டும் அந்த குருட்டு மனிதர் முன் வந்தான்.

''ஐயா, நான்தான்... சாமி கும்புட்டுட்டேன். இப்ப பேசறீங்களா?''

''உங்களுக்கு என்ன தெரியணும் தம்பி?''

''பர்வதம்மாவை பார்க்கப் போய் இப்படி ஆனதா சொன்னீங்களே. அந்த குகைல அப்படி என்னத்த பார்த்தீங்க?''

''வேண்டாம் தம்பி... அத மட்டும் கேக்காதீங்க. பாத்ததுக்கே இந்தப் பாடு. பாத்ததை வெளிய சொன்னா எனக்கு பேச்சே போனாலும் போயிடும்.''

''இல்ல... நீங்க அநாவசியமா பயப்பட்றீங்க. அவங்கள கும்புடத்தானே போனீங்க, வேற எதுக்கும் போகலியே...?''

''நீங்க எப்படிக் கேட்டாலும் நான் அங்க பார்த்ததை சொல்ல மாட்டேன். விட்றுங்க. இன்னும் முப்பத்தஞ்சு நாள் இருக்குது. அதுவரை இங்க இருந்து பார்வை வந்த உடனே நான் திரும்பிக்கூட பார்க்காம ஊருக்கு போயிடுவேன்.''

- அவர் அதிகம் பயந்திருப்பது நடுங்கி நடுங்கி பேசுவதிலேயே தெரிந்தது. நந்தகுமாருக்குள் 'க்யூரியாசிட்டி'யும் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. மௌனமாய் அவரை வெறித்துவிட்டு நடந்தான். பூசாரியும் பார்த்துக் கொண்டிருந்தார்.

கோயிலுக்கு வெளியே சென்றவன் தேங்காய் பழ கடைக்காரர் முன்னால் போய் ''பர்வதம்மா இருக்கற குகைக்கு எப்படிப் போகணும்'' என்று மெல்லிய குரலில் கேட்டான்.

கடைக்காரர் அடுத்த நொடி கண்ணில் முள் ஏறியது போல முகம் இடுங்கிப் போய் ''தெரியாது தம்பி'' என்றார்.

''பயப்படாம சொல்லுங்க... நான் உள்ள எல்லாம் போகப் போறதில்ல. சும்மா அந்த குகையை ஒரு படம் எடுத்துக்கிட்டு திரும்பத்தான் கேட்கறேன்.''

''உள்ளகூட போங்க. எனக்கென்ன வந்துச்சு. அப்பால நீங்களும் குருட்டு முண்டமாயி அதா அந்த ஆள் கணக்கா மூலிகையைக் கண்ணுல கட்டிக்கிட்டு உக்காந்துக்க வேண்டியதுதான்...''

''நான்தான் சொன்னேனே... உள்ளெல்லாம் போக மாட்டேன்.''

''எதுக்கு தம்பி வம்பு. ஆத்தாளை பாக்கணும்னா ராத்திரி வரை இங்கையே இருங்க. இன்னிக்கு பௌர்ணமி. அதுவும் சித்திரை பௌர்ணமி. போன பௌர்ணமிக்கு ஆத்தா கோவிலுக்கு வந்துச்சு. இன்னிக்கும் வரும்னு நான் நினைக்கறேன். வந்தா அப்ப பாத்துக்குங்க!''

- கடைக்காரன் ஒரு புதிய வழியைக் காட்டினான்.

''இதை யாரும் சொல்லவே இல்லையே...''

''கேட்ருக்க மாட்டீங்க. அதனால யாரும் சொல்லியிருக்க மாட்டாங்க.''

''அதுவும் சரிதான்...'' - பதிலோடு இரவுவரை காத்திருக்கத் தொடங்கிவிட்டான் நந்தகுமார்!

4

இருட்டிவிட்டது!

பனிமூட்டத்தில் கோவில் இருக்கிற இடமே தெரியவில்லை. சித்திரை பௌர்ணமியின் பால் வெளிச்சம் வேறு நடுவில் புகுந்து ஒரு தினுசான காட்சியாக காட்டிக் கொண்டிருந்தது. நந்தகுமாருக்கு படுத்ரில்லாக இருந்தது.

கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டு!

கோவிலிலும் மணி சப்தம்.

பூசாரி அர்த்தசாம பூசையை ஆரம்பித்துவிட்ட மாதிரி நொன்றியது.

அந்த குருட்டு மனிதர் மட்டும் ''ஆத்தா வருவாங்களா பூசாரி...? வந்துடுவாங்கல்ல...? நிச்சயமா வந்துடுவாங்கல்ல?'' - என்று திருப்பித் திருப்பிக் கேட்டுக் கொண்டே இருந்தார்.

''சித்தம் போக்கு சிவம் போக்கு... யாருக்குப்பா தெரியும்? எப்படியும் வருவாங்கன்னு நம்புவோம்,'' என்று பூசாரியும் சமாதானம் சொல்லியபடி இருந்தார்.

அவர் சொல்லிக் கொண்டிருந்த சமாதானம் வீண் போகவில்லை. 'டொய்ங்ங்...டொய்ங்ங்...' என்று சகுண்டி மணிசப்தமும், சங்கு முழக்கமும் காதில் கேட்க ஆரம்பித்தது.

அவர்கள் இருவரும் உடனேயே விறைப்பானார்கள். நந்தகுமாரும் சுறுசுறுப்பானான்.

எல்லோராலும் ஆச்சரியத்துடன்-அதியசத்துடன் விவரிக்கப்பட்டிருக்கும் ஒரு அபூர்வப் பெண்மணியை பார்க்கும் ஆவல் அவனைத் தொற்றிக் கொண்டது. கேமிராவையும் ஒரு பார்வை பார்த்தான். முக்கியமான சமயங்களில் அது நிறையவே கழுத்தறுத்திருக்கிறது. இன்று அப்படி எதுவும் ஆகிவிடக்கூடாது என்கிற எச்சரிக்கை.

பூசாரியும், அந்த குருடரும் வாயில் பக்கம் பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்கள். சப்தம் மிக சமீபத்தில் கேட்க ஆரம்பித்தது. எங்கும் புகை போட்ட மாதிரி பனிமூட்டம். அந்த மூட்டத்துக்குள் தேவதை போல் ஒரு பெண் நுழைந்து கொண்டிருந்தாள்.

மிகச் சாதாரண கண்டாங்கிப் புடவைதான். குங்கும நிறத்தில் இருந்தது அது. ரவிக்கை அணிந்திருக்கவில்லை.

மாறாக புடவை முந்தியால் கழுத்துவரை போர்த்தியது போல மூடியிருந்தாள். நெற்றியில் நன்கு பெரிய பொட்டு. கண்கள் மான் விழியெல்லாம் சாதாரணம் என்கிற மாதிரி நீண்ட இமை முடிகளின் தோகையோடு பளிச்சென்று தெரிந்தது. தலை முடியும் அவிழ்ந்த நிலையில் இடுப்பைக் கடந்து ஆற்றில் குளித்தவர்கள் ஆறப்போடுகிற மாதிரி அலையடித்துக் கொண்டிருந்தது.

காலில் தண்டை!

நெருங்க நெருங்க அவளின் அழகு அள்ளியது! நந்தகுமார் வியப்பின் உச்சிக்கே போகலானான். அவளுக்குப் பின்னால் கோவிலுக்கு வெளியே கடை விரித்திருந்தவர்களும், ஊர்க்காரர்கள் சிலரும்கூட வந்தனர். எல்லாரிடம் ஆழ்ந்த ஓர் அமைதி இருந்தது. துளிகூட சப்தமில்லை. நடந்து வரும் அந்த பெண்ணின் தண்டை மட்டும் சிணுங்கலாகக் கொஞ்சியது. இடுப்பில் சகுண்டிமணி தொங்கியது. அவளது கையில் சங்கு இருந்தது.

மிகவும் சமீபித்து விட்டவளை பூசாரி கையெடுத்துக் கும்பிட்டார். ''ஆத்தா வந்துட்டியா...வா ஆத்தா... வா...''-என்று சன்னதி நோக்கி அழைத்துச் செல்லத் தொடங்கினார். அவளோ நின்று அந்த குருட்டு மனிதனை ஒரு பார்வை பார்த்தாள். அப்படியே பார்வையை விலக்கி மண்டபத்தில் ஒரு தூணை ஒட்டி கேமராவும் கையுமாக நின்று கொண்டிருந்த நந்தகுமாரையும் ஒரு பார்வை பார்த்தாள். பின் ஒரு சிரிப்பு சிரித்தாள். சரியான மாயப்புன்னகை! நந்தகுமாருக்கு பனிப் பள்ளத்தாக்கில் சறுக்கி விழுந்த மாதிரி இருந்தது. குருட்டு மனிதர் ''ஆத்தா... ஆத்தா...'' என்று தேம்பிக் கொண்டிருந்தார்.

''சரியாகிவிடும்...உனக்கு ஒரு மண்டலத்துல எல்லாம் சரியாகிடும்.''-என்று அவனிடம் ஆறுதலாக பேசியவள் நந்தகுமாரைப் பார்த்து சிரித்தபடியே நடந்தாள்.

நந்தகுமார் அந்த புன்னகையில் சற்று மயங்கினாலும் சுதாரித்து கேமராவை உயர்த்தி அந்த அழகிய பெண்ணை ஒரு மின்னல் ஃப்ளாஷில் கேமராவுக்குள் வாரினான். அந்த வெளிச்சம் அவளைச் சற்று தடுத்து நிறுத்தியது. புன்னகை அழிந்து முகத்தில் க்ஷணத்தில் கோப உணர்ச்சிகள் குவியத் தொடங்கின. பூசாரி அது புரிந்த மாதிரி ஓடிவந்து ''தம்பி...போட்டோல்லாம் பிடிக்காதீங்க...''-என்றார். நந்தகுமாரும் உடனே பேந்தப் பேந்த விழித்தான்.

''யார் அது?''-அந்த இளம் பெண்ணிடம் கேள்வி.

''பட்டணத்துல இருந்து வந்துருக்குது. உன் தரிசனத்துக்காகத்தான் தாயி காலைல இருந்து காத்திருக்குது.''-பூசாரி சொல்ல மீண்டும் ஒரு அழுத்தமான பார்வை!

நந்தகுமார் பதிலுக்கு மிரள மிரளப் பார்த்தான்.

''ஆத்தாவைக் கும்புட உனக்கு மனசு வரலையா?'' அந்தப் பெண்ணே கேட்க-

''நீங்கதான் எல்லாரும் சொல்ற பர்வதம்மாவா?''

''அதுலையே உனக்கு சந்தேகமா?''

''குகையைவிட்டு. நீங்க வெளியவே வர மாட்டீங்களா?''

''எதுக்கு இந்த கேள்விங்களையெல்லாம் கேக்கறே?''

''உங்களப் பத்தி கேள்விப்பட்ட விஷயங்கள் எல்லாமே பயங்கர ஆச்சரியமானதா இருக்கு. புரிஞ்சுக்கத் தான்.''

''என் விஷயங்கள் இருக்கட்டும். உனக்கு உன்னைத் தெரியுமா?''

''எனக்கு என்னைத் தெரியுமான்னா?''

''நீ உன்னை புரிஞ்சு வெச்சுக்கிட்டிருக்கியான்னு கேட்டேன்.''

''எனக்கு என்னைத் தெரியாமலா...? நல்லா தெரியுமே...!''

''என்ன தெரியும்...?''

''என்ன தெரியும்னா...?''

''திருப்பித் திருப்பி என்னையே கேள்வி கேட்காதே. தன்னை அறியாத யாரும் என்னை அறிய முடியாது. தன்னை அறிஞ்ச ஒருத்தன் என்னை அறியவும் தேவையில்லை. ஒழுங்கா ஊருக்குப் போய் வேலையைப் பார். எண்ணி பதினைஞ்சு நாள்ல உனக்கு கல்யாணம் ஆகப்போகுது. கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா வாழ முயற்சி செய். என்னை ஆராய்ச்சி செய்யற வேலையெல்லாம் வேண்டாம்.''

-பர்வதம்மா என்று அறியப்பட்ட அந்த இளம் பெண் ஒரு தேர்ந்த ஞானியைப் போல பேசிவிட்டு சன்னதி முன் போய் நின்றாள். பூசாரியும் தீபாராதனை காட்டத் தொடங்கினார். அவளும் மனமுருகி வழிபட்டாள். பூசாரி அவளுக்கு மாலையணிவித்தார். கையில் ஒரு அகல் விளக்கையும் எடுத்துத் தந்தார். அதை ஏந்திக் கொண்டு அந்தப் பெண்ணும் கோவிலை வலம் வரத்தொடங்கினாள்.

நந்தகுமார் பார்த்துக் கொண்டே நின்றான்.

மற்றவர்கள் அமைதியாக அவள் பின்னாலேயே நடந்தனர்.

அகல் விளக்கும் கையுமாய் அந்தப் பெண் காற்றில் ஆடும் கூந்தலுடன் நடந்து வரும் விதம் அவனையே என்னவோ செய்தது.

அவன் நிறைய சாமியார்களைப் பார்த்திருக்கிறான். அவர்களில் இளம் பெண்களும் உண்டு. ஆனால் யாரிடமும் இப்படி ஒரு சுண்டி இழுக்கும் அழகு இருந்ததில்லை. பொன்னை மை போல அரைத்து பூசிக் கொண்ட மாதிரி ஒரு தேகமோ, கரும்பட்டு நூலே கேசமாக தொங்குகிற மாதிரி கூந்தலையோ அவன் பார்த்ததில்லை.

ஆச்சரியம் அலைமோதியது.

விளக்குடன் நடந்து வரும் காட்சி அற்புதமாகவும் இருந்தது. மீண்டும் கேமராவை எடுத்தான். அவளது எச்சரிக்கையை மீறி ஒரு தட்டு தட்டினான்.

ஃப்ளாஷ் வெளிச்சம் பரவி அடங்கியது.

விளக்குடன் அந்த பெண்ணும் நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தாள். முதலில் கோபமாய்ப் பார்த்தாலும் பிறகு பழைய புன்னகைக்கு மாறினாள்.

''நீ அடிபட்டாதான் திருந்துவே போல இருக்கே?'' என்றாள்.

பூசாரி பதைத்துப் போனார்.

''தம்பி போப்பா அந்தாண்ட... உனக்கு நேரம் சரியில்லன்னு நினைக்கறேன். அதான் ஆத்தா அவ்வளவு சொல்லியும் திரும்பப் படம் எடுக்கறே... போயிடு... போ...''-துரத்திவிட்டார். அவனுக்கும் அப்போதைக்கு அதுவே போதும் என்று தோன்றியது. பதில் பேசாமல் கிளம்பினான்.

5

பௌர்ணமி நிலா வெளிச்சம்!

வானில் இருந்து யாரோ பீச்சாங்குழலால் பாலை பீச்சிக் கொண்டிருக்கிற மாதிரி ஒரு காட்சியைத் தந்து கொண்டிருந்தது.

பஞ்சமூர்த்தி மலை அடிவாரச் செக்போஸ்ட்டில் சென்ட்ரி போலீஸ்காரர் அதை ரசிக்கத் தெரியாமல் மூக்குப் பொடி போட்டுக் கொண்டிருந்தார்.

அப்பொழுது வயதான ஒருவர் செக்போஸ்ட்டைக் கடந்து நடந்து போய்க் கொண்டிருந்தார்.

போலீஸ்காரர் பார்த்துவிட்டு ''யாரப்பா அது... இந்த ராத்திரியில'' என்று குரல் கொடுக்க, திரும்பினார்.

''யாரு...?''

''என்ன தம்பி... என்னத் தெரியலியாக்கும்?'' கேட்டபடி அவர் சமீபிக்கவும் சென்ட்ரி போலீஸுக்கு அவர் யார் என்று அர்த்தமாகியது.

வைத்தியர் அண்ணாமலை!

''வைத்தியரா... எங்க வைத்தியரே, மூலிகை பறிக்கவா?''

''ஆமாம் தம்பி. சித்ரா பௌர்ணமியாச்சே. அதான் கிளம்பி வந்தேன்.''

''நீங்களும் பௌர்ணமிக்கு பௌர்ணமி இந்த பஞ்சமூர்த்தி மலைக்கு மூலிகை பறிக்க வர்றீங்க. ஆமா அது என்ன கணக்கு வைத்யரே?''

''நிலா வெளிச்சத்துக்குன்னு ஒரு சக்தி உண்டு. அப்ப சில மூலிகைங்க எட்டிப் பார்க்கும். மத்த நாள்ல வந்தா அது கிடைக்காது தம்பி.''

''அப்படியா சங்கதி?''

''அதுலையும் சித்ரா பௌர்ணமிக்கு ஒரு விசேஷ சக்தி உண்டு, கோடை வெப்பத்துல தாவரமெல்லாம் அனல் கண்டு அதோடு வேர்கள் ஈரத்தை முடிஞ்ச அளவு உறிஞ்சி தண்டுப் பகுதியில் சேமிச்சு வெச்சிருக்கும். தரைப் பரப்புலையும் நித்ய ஈரம், நிதான ஈரம், பத்திய ஈரம், பதனமான ஈரம்னு பல நிலை இருக்கு. அதுல பத்திய ஈரம் பூமிக்கடியில நிலவறப்போதுதான் சந்திரகாந்தி தலை யெடுக்கும். அது கிடைக்கறது அபூர்வம். அது கிடைச்சுட்டா அதைக் கொண்டு வைத்தியங்களைச் செய்து நோய்களைக் குணமாக்கலாம். மனசைக் கட்டுப்படுத்தற வசிய மை தயாரிக்கலாம். இப்படி எவ்வளவோ இருக்கு...''

-வைத்தியர் அண்ணாமலை விஸ்தாரமாய் பேசினார். சென்ட்ரி போலீஸ் வாயைப் பிளந்தார்.

''என்னென்னவோ சொல்றீங்க... ஆமா வசிய மை அது இதுங்கறீங்களே. மேலதிகாரிகளை வசியப்படுத்தி பிரமோஷன் வாங்கறதுக்கு உங்களாண்ட எதாவது மை இருக்கா?''-கேலியாகக் கேட்டார் சென்ட்ரி.

''இந்த உலகத்துல மூலிகைகளால ஆகாதது எதுவுமே இல்லை. பண்ணத் தெரியணும். இந்த விஷயத்துக்கு இன்னமூலிகைன்னு விஷயம் தெரியணும். தெரிஞ்சுட்டா என்னென்னவோ பண்ணலாம்.''

''என்னனென்னவோன்னா?''

''ஒரு வேர் இருக்கு. அத முகர்ந்து பார்த்தாலே போதும் நாம மாயமா மறைஞ்சிடுவோம். நம்புவீங்களா இதை?''

''நிசமாவா?''

''இருக்கே... நான் பார்க்க இதே பஞ்சமூர்த்தி மலைக் காட்டுல ஒரு சாமி எத்தனை தடவை அந்த மாதிரி என் கண் எதிர்க்க மறைஞ்சிருக்கார் தெரியுமா?''

''என்ன வைத்தியரே... நான் அக்கறையா கேக்கறேன்னு என் காதுல பூ வைக்கறீங்களா?''

''அதுல எனக்கு என்ன லாபம் சொல்லுங்க...''

''அதுசரி... அது எப்படி வைத்தியரே மோந்து பாத்துல்லாம் மறைய முடியும்? அப்படி முடியும்னா அதை எங்க டிபார்ட்மென்ட்டுக்கு கொஞ்சம் கொடுங்க. காட்டுக்குள்ளார திருட்டுப்பசங்க மரம் வெட்ட வரும்போது மாயமா அவங்களைப் போய் அமுக்கிப் புடிக்க எங்களுக்கும் ரொம்ப வசதியா இருக்கும்.''

''அதுக்கென்ன... அந்த வேர்த்தண்டு கிடைச்சா நிச்சயமா உங்களுக்கு தரேன். அது கிடைக்கறதுலதானே எல்லாம் இருக்கு.''

''இப்படி கேட்டா அப்படி... அப்படி கேட்டா இப்படி பதில் சொல்றதா?''

''தம்பி, நான் உள்ளதச் சொல்றேன். அபூர்வமான விஷயமெல்லாம் அபூர்வமான மனுஷங்களுக்குத்தான் கிடைக்கும். எல்லாருக்கும் கிடைக்காது. அப்படிக் கிடைச்சிட்டா அப்புறம் ஆளாளுக்கு தப்பு பண்ணிட்டு வேரைக் கொண்டு மாயமா மறைஞ்சு தப்பிச்சிட மாட்டாங்களா?''

''லாஜிக் படி பார்த்தா நீங்க சொல்றதும் சரிதான். இருந்தாலும் நம்பமுடியல வைத்யரே...''

''உங்களை யார் நம்பச் சொன்னா... இதெல்லாம் கட்டுக்கதையாவே இருந்துட்டு போகட்டும். அதான்

எங்களுக்கும் நல்லது. நானே முயல்காது இலைக்காக இதுவரை முந்நூறு பௌர்ணமி ராத்திரி அலைஞ்சுட்டேன். கண்ணுல படமாட்டேங்குது.''

''முயல்காது இலையா...? அது என்ன?''

''அது ஒரு மூலிகை...!''

''வேடிக்கையா இருக்கே...?''

''இதுவே வேடிக்கையா இருக்குன்னா எலியா மணக்கு, யானைத்திப்பிலி, குதிரைவாலி, ஆடுதீண்டாப் பாளை, சிலந்திநாயகன், நாக மஞ்சள், குரங்கு மஞ்சள், கருடநாரை, செந்நாயுருவி'ன்னு ஒவ்வொரு மிருகம் பேரால ஒரு மூலிகை இருக்குதே... அதுக்கெல்லாம் என்ன சொல்விங்க?''

''அட.... இப்படி எல்லாம் கூடவா மூலிகைங்க இருக்கு?''

''இப்படியா... இதுக்குமேலையும் இருக்கு தம்பி. 'கன்னிக்காலி'ன்னு ஒரு செடி இருக்கு. இதை சாப்ட்டா முதுமையே நம்மைத் தாக்காது... தெரியுமா?''

''நிசமாவா?''

''விடுங்க... இந்த மாதிரி நான் எவ்வளவோ விஷயங்கள் சொல்லிக்கிட்டே போவேன். உங்களுக்கு அதெல்லாம் அம்புலிமாமா கதை மாதிரி இருக்கும். எனக்கும் நேரமாகுது. நான் வர்றேன்...''

-வைத்தியர் அண்ணாமலை நடந்தார். சென்ட்ரி போலீஸையும் கொட்டாவி ஆக்ரமித்தது.

''பாத்துப் போய் வாங்க... பக்கத்து காட்டுல தண்ணி இல்லைன்னு யானைங்களும், மானுங்களும் இப்ப நம்ம காட்டுக்குள்ள நுழைஞ்சிட்டதா ஒரு தகவல் வந்துருக்குது.''

-போகும் அவருக்கு எச்சரிக்கை செய்து வழி அனுப்பி வைத்துவிட்டு செக்போஸ்ட் நாற்காலியில் போய் அமர்ந்தார்!

வைத்தியர் காட்டுக்குள் நுழைந்திருந்தார். பால் நிலா வெளிச்சம் வழிகாட்டினாலும், பனிமூட்டம் பெரிய தொல்லையாக இருந்தது.

சாதாரணமாக சித்திரை மாதத்தில் பனி இருக்காது. அதென்னவோ தெரியவில்லை. இந்த முறை இயற்கையே மாறிப்போய் மார்கழியில் புயலும் மழையும் கொட்டியது. பங்குனி வெய்யிலில் பொன் உருக வேண்டும். மாறாக அப்பொழுதுதான் தரைப்பனியே தட்டிற்று. இப்பொழுது சித்திரையிலும் பனிமூட்டம்.

அவ்வளவாக குளிரில்லாவிட்டாலும் பார்ப்பதற்கு இடைஞ்சலாக இருந்தது.

வைத்தியர் டார்ச் லைட் வைத்திருந்தார். அது கொஞ்சம் உதவி செய்தது. மலைத் தரை முழுக்க காய்ந்த இலைச் சருகுகள்-சுள்ளிகள். நடக்கையில் பலமாக சலசலத்தன. இதனால் ஒளிந்திருக்கும் முயல்கள் திபுதிபு வென்று ஓடி அவரையே கொஞ்சம் அச்சப்படுத்தின.

நெடுந்தூரம்வரை தரையில் பார்வையை செலுத்திய படியே வந்தவர் அங்கங்கே தெரிந்த சின்னச் சின்ன மூலிகைச் செடிகளைப் பறித்து தன் மூங்கில் கூடையில் போட்டுக் கொண்டார்.

இருந்தும் பெரிதாக தேடி வந்தது கிடைக்காத மாதிரி ஒரு ஏமாற்றம் தெரிந்தது. நடுவில் ஓடை ஒன்று குறுக்கிட்டது... மண்பானையில் காசுகளைப் போட்டு குலுக்கினமாதிரியான சப்தத்தோடு அதன் நீரோட்ட சப்தம் அவர் காதிலும் விழ அதை நோக்கி நடந்தார்.

தாவிக் குதித்து பாறைகள் மேல் விழுந்து உருண்டு பிரண்டு ஓடிவரும் அந்த நீரில் நல்ல ஜிலுஜிலுப்பு.

தண்ணீரில் வைத்தியரின் பாதம்பட்ட நொடி உச்சி மண்டையில் ஒரு சிலிர்ப்பு!

குனிந்து நீரை அள்ளிப் பருகிவிட்டு நிமிர்ந்தார். பகீரென்றது!

எதிரில் முகமூடியணிந்த ஒருவன் கைத்துப்பாக்கியோடு...

வைத்தியர்முகத்தில் தடுமாற்றம். அவன் பேசினான்.

''யார் நீ?''

''நான்...நான்...மூலிகை வைத்தியன். மூலிகை தேடி வந்தேன்.''

''பார்தாலே தெரியுதே. எந்த ஊர்? அடிவாரமா?''

''ஆ...ஆமாம்!''

''சரி சரி...அப்படியே திரும்பிப்போ. ஒடையைத் தாண்டி இந்தப் பக்கமா வராதே...''

-மிரட்டினான். அப்படிச் சொல்லும்போதே மலையில் மரங்களைத் திருடவந்த கள்ளனாகத்தான் அவன் இருக்கவேண்டும் என்று வைத்தியருக்கும் புரிந்துவிட்டது.

''அந்தப் பக்கம்தான்பா நான் தேடிவந்த மூலிகை இருக்கு. இப்ப விட்டா நான் அப்புறம் அடுத்த சித்ரா பௌர்ணமி வரை காத்திருக்கணும்...''

-வைத்தியர் தைரியமாகப் பேசியது அவனைச் சற்று யோசிக்க வைத்தது.

''யோசிக்காதப்பா... நான், நீ யாரு - என்ன பண்றேன்னுல்லாம் கேட்கமாட்டேன். என்வேலையைப் பாத்துக்கிட்டு போயிடுவேன்.''

அவன் அவரை கூர்ந்து பார்த்தான். பிறகு ஓடையில் இறங்கி நெருங்கி வந்து அவர் கூடையைப் பார்த்தான். அதில் மூலிகை செடிகள்.

''ஆமா... அப்படி என்ன மூலிகைல்லாம் இந்த மலைக்காட்டுல இருக்குது...''-கேட்டான்.

''உனக்கு சொன்னா புரியாது.''

''சரி... ஆனா என்னைப் பார்த்த விஷயத்தையோ அடுத்து நீ இந்த மலைக்காட்டுக்குள்ள பாக்கப்போற எதைப்பத்தியுமோ வெளிய மூச்சுவிடக் கூடாது.''

''எனக்கு எதுக்கு தம்பி வம்பு... அப்படி நான் வெளிய சொன்னா என்ன நடக்கும்னு எனக்குத் தெரியும். என் வைத்திய சாலைக்குத் தேடி வந்து என்னை சுட்டுக் கொல்லக்கூட தயங்கமாட்டீங்க. சரிதானே?''

''பரவால்லியே... உனக்கு எங்களப்பத்தி நல்லா தெரிஞ்சிருக்குதே?''

''நான் மருதப்பன் கோஷ்டியையே பார்த்தவன்.''

''அப்ப உனக்கு மருதப்பனை தெரியுமா?''

''நல்லா தெரியும். மருதப்பன் என்கிட்டதான் வைத்தியமே பாத்துக்குவான். ஆனா இப்பல்லாம் இந்த காட்டுப்பக்கம் அவனைப் பாக்க முடியறதே இல்லை.''

-வைத்தியர் பேசப்பேச அவனிடமும் இறுக்கம் தளர்ந்தது. துப்பாக்கியை பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டான்.

''சரிசரி...நீ போய் மூலிகை பறிச்சுக்கோ. ஆனா நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும்.''

வைத்தியரும் தலையாட்டிவிட்டு நடந்தார். உயரமான மலை வேம்புகளும், மஞ்சக் கடம்புகளும் பௌர்ணமி

வெளிச்சத்தில் கூடிக் குலாவிக் கொண்டிருக்க, தரைப் பரப்பில் சந்திரக்கதிர் ஊடாடிக் கொண்டிருந்தது. நடக்க நடக்க நாசியை ஒரு வித துர்வாடை தாக்கியது. ஒரு இடத்தில் தீப்பந்த வெளிச்சத்துக்கு நடுவில் சிலர் என்னவோ செய்து கொண்டிருந்தனர். ஒரு மரத்தின் பின் ஒளிந்தபடி ஊன்றிப் பார்த்தபோது பதைத்துப் போனது மனது.

ஒரு காட்டு யானையை அவர்கள் வெட்டிக் கூறுபோட்டுக் கொண்டிருந்தார்கள். ரத்தச் சொத சொதப்போடு இரண்டு தந்தத்தை ஒரு கையில் பிடித்தபடி நின்று கொண்டிருந்தான் ஒருவன். கொடுமையான-ஈவிரக்கமற்ற யானைத் தந்த வேட்டை. வைத்தியர் அண்ணாமலைக்கு நெஞ்சையடைத்தது. இதற்கு முன் கள்ளர்கள் காட்டுக்குள் விலையுயர்ந்த சந்தனம், தேக்கு இவைகளைக் கடத்திப் பார்த்திருக்கிறார். ஆனால் இப்படி யானை வேட்டையாடிப் பார்த்ததில்லை. வயிற்றைப் பிரட்டி குமட்டியது.

அந்த ரத்த வாடைக்கு அங்கங்கே சில காட்டு நாய்கள் கூட வந்துவிட்டிருந்தன. அதன் கண்களில் தீப்பந்த வெளிச்சம் படும்போது நீலமாய் ஒருவித ஒளிச்சுடர் தெரிந்து-பார்க்கவே பயங்கரமாய் இருந்தது. இளைப்போடு நாக்கைத் தொங்கபோட்டுக் கொண்டு மாமிசத்துக்காக வரும் நாய்களை ஒருவன் தீப்பந்தம் காட்டி தூர விரட்டிக் கொண்டிருக்க, ஒருவன் யானை எலும்புகளை விறகுக் கட்டை வெட்டுவதுபோல வெட்டி எடுத்துக் கொண்டிருந்தான்!

வைத்தியரால் நெடுநேரம் அந்தக் காட்சியைப் பார்க்க முடியவில்லை. வேறுபக்கமாய் வேகமாய் நடந்தார். பல இடங்களில் மரக்கிளைகள் வழி மறித்தன. தாண்டி நடப்பது சிரமமாக இருந்தது. ஒரு இடத்தில் பள்ளத்தில் யாரோ

விழுந்து கிடக்கின்ற மாதிரி தெரிந்தது. அடிவயிறு அமிலம் பீய்ச்சியது.

யாரது...?

கிட்டே சென்று பார்க்கக்கூட அச்சமாக இருந்தது. பயந்து விலகுவதும் கீழ்மையாகத் தோன்றியது. துணிந்து பள்ளத்தில் இறங்கி சென்று குனிந்து பார்த்தார். ரத்தக் காயங்களுடன் நந்தகுமார்!

6

விடிந்துவிட்டது! வைத்தியர் வீட்டில் நந்தகுமாரும் கண் விழித்தான். எதிரில் வைத்தியர்! ஆச்சரியமாய் இருந்தது. 'முதல் நாளன்று இரவில் காட்டுக்குள்-மயங்கி விழுந்தவன் இங்கே எப்படி வந்தேன்?' என்கிற பாவனை களுடன் அவரைப் பார்த்தான்.

''உனக்கு ஆயுசு கெட்டி தம்பி. அதான் நடுக்காட்டுல மயங்கிக் கிடந்த உன்னை நான் பார்த்தேன்.'' என்ற வைத்தியரைப் பார்த்து கைகூப்பினான்.

''அதெல்லாம் இருக்கட்டும். கைல கேமராவோட மயங்கிக்கிடந்தியே. யானைத் தந்தத்தை திருடவந்தவங்கள படம் பிடிக்கத்தான் வந்தியா?''

-அந்தக் கேள்வியே அவனுக்கு அதிர்ச்சியளித்தது.

''இல்லீங்க... நான் வேற விஷயமா வந்தேன். ஆமா இந்தக் காட்டுல அதெல்லாம் வேற நடக்குதா?''

''இது நாள் வரைல இல்ல. ஆனா நேத்தி நானே அந்த கொடுமையைப் பாத்தேன்.''

''நீங்க...?''

''நாட்டு வைத்தியம்ப்பா. மூலிகை தேடி காட்டுக்குப் போனப்பதான் அந்த கொடுமையையும், உன்னையும் பாக்க முடிஞ்சது. நீ யாருப்பா?''

''என்பேர் நந்தகுமார். ஃப்ரீலான்ஸ் பத்திரிகை நிப்போர்ட்டர்!''

''பத்திரிகைக்கார ஆளா...? ஆமா யார் துரத்தி வந்து பள்ளத்துல விழுந்தே?'

''யாரும் துரத்தலை...ஒடி வரும்போது கால் இடறி கீழ விழுந்துட்டேன்.''

''ஓடிவந்துன்னா... யாராவது துரத்தியிருக்கணுமே?''

-வைத்தியர் மடக்கினார்.

-நந்தகுமார் மேற்கொண்டு பேசப் பிரியமில்லாத மாதிரி அவரைப் பார்த்தான்.

''சும்மா சொல்லு... பத்திரிகைக்கார ஆளுங்கறே. நிச்சயம் காத்துவாங்க இந்த மலைப்பக்கம் வந்துருக்க மாட்டே. அதான் கேக்கறேன்.''

''வாஸ்தவம்தான். நான் பர்வதம்மாவை பாக்க வந்தேன்.''

-அவன் அப்படிச் சொன்னதுதான் தாமதம். வைத்தியர் அவனை மிரண்டு போய் பார்த்தார்.

''ஏன் என்னவோ மாதிரி ஆயிட்டீங்க... பர்வதம்மாவை பாக்கறதுங்கறது அவ்வளவு தப்பான விஷயமா?''

''அது இல்ல... ஆமா உனக்கு பர்வதம்மாவைப் பத்தி எப்படித் தெரியும்?''

''பத்திரிகைக்காரங்களுக்கு தெரியாத ஒரு விஷயம்கூட இந்த பூமியில இருக்க முடியுமாங்க?''

''சரி... அப்ப கேள்விப்பட்டுத்தான் பாக்க வந்துருக்கே. ஆமா அவங்கள பாக்க முடிஞ்சுச்சா?''

''உம்...''

''எங்க பார்த்தே...எப்படிப் பார்த்தே?''-வைத்தியர் வேகவேகமாக அந்தக் கேள்விகளை கேட்டார்.

''மலைல இருக்கற கோவிலுக்கு சாமி கும்பிட வந்தாங்க...''

''அப்படியா...? அடடா இது தெரியாம நான் இருந்துட்டேனே...!''

''ஆமா... அவங்களுக்கு நிஜமாலுமே நூறு வயசுக்கு மேல இருக்குங்களா?''

''இப்ப அதுதான் உனக்கு சந்தேகமா தம்பி...''

''ஆமாங்க... நூறு வயசான ஒருத்தர் எப்படிங்க இப்பவும் இருபது இருபத்தஞ்சு வயசு இளமையோட இருக்க முடியும்?''

''அதுதான் தம்பி ஆத்தாளோட சக்தி.''

''அப்ப உங்களுக்கு சந்தேகமெல்லாம் இல்லையா?''

''கண்ணால பாக்கறோமே... நான் ஆத்தாளை சிறுவயசுல இருந்து பாக்கறேன். கட்டுக் குலையாம அப்படியேதான் இருக்கறாங்க.''

''உங்களுக்கு வயசு...?''

''எவ்வளவு இருக்கும் நீயே சொல்லேன்.''

''ஒரு ஐம்பது இருக்குமா?''

-உடனேயே வைத்தியர் சிரித்தார்.

''எதுக்கு சிரிக்கிறீங்க...?''

''எனக்கு வயசு எண்பது தம்பி.''

''எண்பதா...? தலைல ஒரு முடிகூட நரைக்கல. கன்னத்துல சுருக்கம் விழல. ஆச்சரியமா இருக்குதே!''

''உப்பு, காரம், எண்ணெய்னு தின்னா உடம்பு வேகமா களைச்சிப் போயிடும் தம்பி. சிறுவயசுல இருந்தே ஆகாரக்கட்டுமானம் உள்ளவன் நான். போதாததுக்கு யோகாசனம்லாம் வேற பண்ணுவேன். முதுமை என்னை எப்படி நெருங்க முடியும்?''

''நல்ல பதில்தான்... உங்க பதில்ல ஒரு நியாயம் இருக்குது. உணவுக்கட்டுப்பாடு-யோகம்னு சொல்றதால நான் நம்பறேன். ஆனா இருபது வயது இளமைங்கறது எனக்கு உண்மையிலேயே நம்ப முடியாத விஷயமாத்தாங்க இருக்கு.''

''அதான் அது எப்படின்னு தெரிஞ்சுக்க வந்தீங்களாக்கும்?''

''ஆமாம். அந்த அம்மாவையே பேட்டி எடுக்கலாம்னு பார்த்தேன். ஆனா அவங்களைப் பாக்கறதே தப்புங்கற மாதிரி சூழ்நிலை இருந்ததை அங்க போன பிறகுதான் தெரிஞ்சுகிட்டேன். அது எப்படி தப்பாகும்?''

''ஆத்தா விஷயத்தை எடைபோட்டுப் பார்க்க முயற்சி செய்யறது தப்புதான் தம்பி. நல்லவேளை உனக்கு ஒண்ணும் ஆகலை. ரொம்ப பேருக்கு கண்ணு போயிருக்கு. காது கேட்காம போயிருக்கு.''

''ஒரு அபூர்வ விஷயத்தைப் புரிஞ்சுக்க முயற்சி செய்யறது எப்படிங்க தப்பாகும்?''

''முயற்சியை அதுக்குண்டான முறைல செய்யணும். சந்தேகத்தோட செய்யக்கூடாது.''

''அதுக்குண்டான முறையிலன்னா... எப்படீங்க?''

''நீ எப்படி முயற்சி செய்தே... அதைச் சொல்லு.''

''ஒரு பத்திரிகைக்காரன் எப்படி முயற்சி செய்வான்? போட்டோ எடுப்பான்-கேள்வி கேட்பான்.''

''போட்டோ எடுத்து கேள்வி கேட்டுட்டா அந்த அபூர்வ விஷயம் உனக்கு விளங்குமா?''

''விளங்காதா?''

''இந்த உலகத்துல சித்த ரகசியங்கள்னு ஒண்ணு இருக்கு. அதை எல்லாம் அஞ்சும் மூணும் எட்டுங்கற கணக்குமாதிரி போர்டுல எழுதிப்போட்டு புரிய வைக்க முடியாது.''

''சரி... நீங்க சொல்ற மாதிரியே இருக்கட்டும். 'உனக்கு அதைப் புரிய வைக்க முடியாது'ன்னு சொல்ல வேண்டியதுதானே. எதுக்காக கண்ணு போயிடும், காது கேட்காதுன்னு மிரட்டணும்?''

''ஒரு குழந்தை ஈ மொய்க்கற பொரி உருண்டையை கேட்குது. சாப்ட்டா உடம்புக்கு கெடுதல்னு சொன்னாலும் கேட்க மாட்டேங்குது. அப்ப என்ன செய்வோம்?''

''அது...அதுவும் இதுவும் ஒண்ணா?''

''நிச்சயமா... சில ரகசியங்கள் ரகசியமாகத்தான் இருக்கணும். அப்படி இல்லேன்னா அதனால் ஊர் உலகத்துக்குதான் கெடுதல் தம்பி.''

''நீங்க சொல்றதே புரியல எனக்கு.''

''புரிய வேண்டாம். நல்ல நேரத்துல நீ ஊருக்கு போய்ச் சேரு. திரும்பவும் இந்த பக்கம் வந்துடாதே.''

''நீங்களும் மிரட்றீங்களே வைத்தியரே.''

''மிரட்டலை... உன் நன்மைக்காக சொன்னேன். அப்புறமா உன் இஷ்டம்!''

-நந்தகுமார் வைத்தியரை ஆழமாகப் பார்த்தான். அதற்குமேல் எவ்வளவு பேசினாலும் அவர் அரைத்த மாவையேதான் அரைக்கப் போகிறார்.

இனி பேசுவதில் பலனில்லை என்றே தோன்றியது. அதே சமயம் பர்வதம்மா தங்கியிருப்பதாக சொன்ன குகைக்குள் தைரியமாகவும், ரகசியமாகவும் நுழையப் போனபோது உள்ளிருந்து புலியின் உறுமல் சப்தம் கேட்டதையும், தலை தெறிக்க ஓடி வந்து பள்ளத்தில் விழுந்ததையும் ஒரு முறை எண்ணிப் பார்த்தான்.

'அந்தக் குகையில் ஏதோ ஒரு ரகசியம் இருக்கிறது. பர்வதம்மாள் அதை ஒரு அமானுஷ்யப் போர்வையில் உலகம் அறியாதபடி காப்பாற்றிக் கொண்டிருக்கிறாள்.

இவர்கள் பகுத்தறிவால் அதைப் புரிந்து கொள்ள முயலாமல் பயத்தால் அவளிடம் நெருங்கவே தயங்குகின்றனர்.

ஆனால் நான் அப்படியெல்லாம் பயந்து ஒதுங்கிப் போய்விடமாட்டேன் வைத்தியரே!''

-மனதுக்குள் சொல்லிக் கொண்டான். வைத்தியரும் தனது அடுத்த வேலையை பார்க்கத் திரும்பினார்.

இனி அடுத்து?

7

அட்டெண்டர் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போன காராசேவையும், டீயையும் சுவைத்தபடி முக்கியமான ஒரு ஃபாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார் பழனிக்குமார்.

''குட்மார்னிங் சார்!''

-குரல் கேட்டு நிமிர்ந்தவர் எதிரில் நந்தகுமார்.

''வாய்யா... உட்கார்.''

-நந்துவும் அமர்ந்தான்.

''டீ சாப்பிட்றியா... ராமசாமி...! ஒரு டீ.''

-அங்கிருந்தே குரல் பறந்தது. அப்படியே நந்தகுமாரை ஊன்றிப் பார்த்தார். நெற்றியில் ஒரு பிளாஸ்ட்ரி.

''என்னய்யா... என்ன ஆச்சு போனவிஷயம்?''

''ஒரே குழப்பமா இருக்கு சார்...''

''தலைலகூட காயம் போல இருக்கே. போன இடத்துல ஏதாவது வீர தீரச் செயல்ல ஈடுபட்டையா?''

''அப்படித்தான் சொல்லணும். ஆனா சாண் ஏறி முழம் சறுக்கினா மாதிரி ஒரு ஃபீலிங்.''

-நடுவில் டீ கப் நுழையவும் எடுத்து சூப்பினான். சுமாரான சூடுள்ள நடுத்தரமான டீ. பாதி குடித்துவிட்டு வைத்தான். பெருமூச்சு விட்டான்.

''உம் விஷயத்தைச் சொல்லு.''

''பஞ்சமூர்த்தி மலை பர்வதம்மா பின்னால ஏதோ ஒரு பயங்கர மர்மம் இருக்கு சார்.''

''சாமியார்ப் பொம்பளைங்கன்னாலே மர்மம்தான். அது என்னன்னு கண்டுபிடிக்கறதுதானே நம்மள மாதிரி பத்திரிகைக்காரங்க வேலை.''

''அங்கதான் சார் சிக்கலே... அந்தம்மா மலைல ஒரு குகைல இருக்காங்க. வருஷத்துக்கு ஒரு தடவையோ இரண்டு தடவையோதான் வெளிய வருவாங்களாம். பாக்க மெர்ன் மாதிரி எவ்வளவு அழகா இருக்காங்க தெரியுமா?''

''அப்ப உன் வரையில சிம்ரன் அழகியா?''

''இல்லையா சார் பின்னே. நான் வயசக் குறிப்பிட்றதுக்காக அப்படி சொன்னேன்.''

''சரி சொல்லு...''

''நான் போன அன்னிக்கு அதாவது நேத்தைக்கு சித்ரா பௌர்ணமி. நல்ல வேளையா வெளிய வந்தாங்க. பார்த்தேன். போட்டோவும் எடுத்தேன். ஆனா பதிலுக்கு அவங்க முறைச்ச முறைப்பிருக்கே...''

''குட்... பர்வதம்மாவை படம் எடுத்துட்டே. அவங்களும் சிம்ரன் கணக்கா இளமையோட இருக்காங்க. அப்புறம்?''

''அவங்களுக்கு 100 வயசுங்கறதத்தான் நம்ப முடியல.''

''நாம சொன்னா வாசகனும் நம்பமாட்டான். அதுக்கு என்ன ஆதாரம்னு கேட்பான்.''

''அவங்கள பல வருஷமா பாத்துக்கிட்டிருக்கற அந்தப் பகுதி மலை வாழ் மக்கள்தான் சார் ஆதாரம்.''

''அவங்கல்லாம் பொய்கூட சொல்லலாம் இல்லையா?''

''பொய் சொல்றதுல அவங்களுக்கு என்ன சார் லாபம்?''

''அப்ப அதுதான் மர்மம்... அதுதான் கேள்வி.''

''ஆமாம் சார்.''

''அந்தம்மாகிட்டையே கேட்டுட வேண்டியது தானே?''

''எங்க சார்... அவங்கள பார்த்ததே அபூர்வம்னு சொல்லும்போது பேசறது எப்படி? பேச முயற்சி செய்தேன். துணிச்சலா-அவங்க இருக்கறதா சொல்ற குகைக்கும்

போனேன். உள்ற இருந்து ஒரு சிறுத்தைப்புலி என்னைத் துரத்தினா நான் என்ன சார் பண்ணுவேன்...?''

''அப்ப அங்க சம்திங் என்னவோ இருக்கு. ஆமா போட்டோ எடுத்தேன்னு சொன்னியே எங்க?''

''இனிமேதான் சார் பிரிண்ட் போடணும்...''

''முதல்ல போட்டுக் கொண்டுகிட்டு வா... 'பஞ்சமூர்த்தி மலையில் மர்மம்'னு போட்டு ஒரு கிழிகிழிப்போம். போலீஸ் பார்வைல படட்டும்...''

''சார்ர்...''

''என்ன...?''

''எதுக்கும் கொஞ்சம் யோசிச்சு எழுதுவோம் சார்...''

''என்னய்யா பயப்படறியா?''

''அனுபவிச்சவன் நான். அங்க மர்மம் இருக்கற மாதிரியும் இருக்கு. இல்லாத மாதிரியும் இருக்கு சார்...''

''ஒரு ரிப்போர்ட்டர் இப்படி ஸ்டெடி மைண்ட் இல்லாம பேசவே கூடாது. இப்படி இருந்தா எப்படிய்யா?''

பழனிக்குமார் செல்லமாய் கோபித்துக் கொண்டார்.

''சரி சார்... போய் பிரிண்ட் போட்டு எடுத்துக்கிட்டு வரேன் சார்...!''

நந்தகுமார் புறப்பட்டான்!

லைபில் பிரிண்டுக்காக ஃபிலிம் சுருளை உருவிக் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்தபோது அவன் மாமா குருமூர்த்தி வந்திருந்தார். பார்க்க படு பரபரப்பாக இருந்தார்.

''வாங்க மாமா... என்ன திடீர்னு வந்திருக்கீங்க?''

அவர் கண்களில் கண்ணீர் திரண்டு கொண்டிருந்தது.

''என்ன மாமா... நான் இப்ப என்ன தப்பா கேட்டுட்டேன்னு அழுவறீங்க?''

''நீ கேட்டதுக்காக அழுவலை நந்து... ஊர்ல உங்க அத்தை நிலை ரொம்ப மோசம்ப்பா.''

''ஐயய்யோ... என்னாச்சு?''

''அதை ஏம்ப்பா கேக்கறே... புத்து நோயாம்!''

''புத்து நோயா...? மை காட்... யார் சொன்னது? நல்ல டாக்டர்கிட்ட காட்னீங்களா?''

''பாண்டிச்சேரி ஜிப்மர்லையே காட்டிட்டேன். ரொம்ப முத்திப் போச்சு. ஒரு மாசம்கூட தாங்கா துன்னுட்டாங்க...''

மாமா மீண்டும் அழுதார். சில ஆண்கள் அழுதால் முகமே விகாரமாக இருக்கும். அவன் மாமாவும் அந்த ரகம்!

நந்தகுமாருக்கு தர்ம சங்கடமாகிப் போனது.

''சரி மாமா... இப்ப நான் என்ன பண்ணணும்?''

''உன் கைலதான் நந்து உன் அத்தையோட நிம்மதியே இருக்கு.''

''புரியும்படி சொல்லுங்க...''

''அவ தான் கண்ண மூடறதுக்குள்ள மகளோட கல்யாணத்தை பாத்துட ஆசைப்பட்றா!''

''யாருக்கு... உங்க மக அம்பிகாவுக்கா...?''

''ஆமாம்... நந்து. முறைப் பையன் நீ இருக்கும்போது அவசரத்துல நான் வெளிய எப்படிய்யா நல்ல இடத்தைப் பார்த்து முடிவெடுக்க முடியும்?''

மாமா எங்கு வருகிறார் என்பது அவனுக்குப் புரிந்தது. அதே சமயம் பஞ்சமூர்த்தி மலையில் பார்வதம்மாளை

புகைப்படம் எடுத்தபோது அவள் சொன்னதும் ஞாபகத்தில் வந்தது. எண்ணி பதினைந்து நாளில் திருமணம் ஆகப்போகிறது' என்றாளே!

அந்த நினைப்பே குபீர் என்கிற வியர்வையாய் அவன் முகத்தில் துளிர்த்தது.

''என்ன நந்து பேசமாட்டேங்கறே... சரின்னு சொல்லுப்பா... சாகக் கிடக்கற உன் அத்தைக்கு இந்த நிம்மதியாவது கிடைக்கட்டும்...''

மாமா பேசுவதெல்லாம் அவன் காதிலேயே விழவில்லை. பார்வதம்மா சொன்னதுதான் காதில் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

'பர்வதம்மா யார்... உண்மையில் இயற்கையை விஞ்சி வாழும் ஒரு தெய்வப் பெண்ணா? நடப்பதைப் பார்த்தால் அப்படித்தானே தெரிகிறது.'

மௌனமாய் பொன்னியம்மன் கோவில் நினைப்பில் இருந்தவனை மாமா பிடித்து உலுக்கினார்.

''நந்து... தம்பி... என்னய்யா பேசமாட்டேங்கறே!''

''ஒண்ணுமில்ல மாமா... ஒண்ணுமில்ல.''

''இப்படி திடுதிப்புன்னு வந்து கல்யாணப் பேச்செடுக்கறேனேன்னு நினைச்சு சங்கடப்பட்றியா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல மாமா... ஆமா இதுல அம்பிகாவுக்கு சம்மதமா?''

''அவ ஒத்தக் கால்ல நிக்கறாப்பா...''

''அப்ப நீங்க வேண்டிய ஏற்பாட்டை செய்யுங்க.''

''ரொம்ப சந்தோஷம் நந்து. நீ இனிமே இந்த மெட்ராஸ்ல இப்படி தனியா ரூம்ல கஷ்டப்பட வேண்டாம். நானே நல்ல வீடு பார்த்து உங்களை குடி வைக்கறேன்.''

''அவசரப்படாதீங்க மாமா... எனக்கு இன்னும் நிரந்தரமான உத்யோகம் இல்ல. ஏதோ அலைஞ்சு திரிஞ்சு கண்டத எழுதி பொழைச்சுக்கிட்டிருக்கேன். அத்தையோட இக்கட்டான சூழ்நிலையை நினைச்சுதான் சம்மதிக்கறேன். இல்லேன்னா நிச்சயம் முடியாதுன்னு சொல்லிடுவேன்.''

''அதெல்லாம் எனக்கும் தெரியும். உனக்கு நல்ல வேலை வாங்கித் தர்றதும் என் பொறுப்பு. நீ கவலைப் படாதே.''

மாமா தெம்பாக பேசி தட்டிக்கொடுத்தார். அதன்பின் உட்காரக்கூட அவகாசம் இல்லாதவராக 'அடுத்த வேலையை பார்க்கிறேன்' என்று கிளம்பியும் போனார்.

அவர் அந்த பக்கம் போயிருப்பார்.

இந்தப் பக்கமாய் போட்டோ லேபில் இருந்து ஒரு பையன் வந்து நின்றான்.

''சார்... நீங்க பிரிண்ட் போட ஃபிலிம் கொடுத்துருந் தீங்கதானே?''

''ஆமாம்... பிரிண்ட் போட்டாச்சா...?''

''போட்டாச்சு சார்... ஆனா, ஒரு போட்டோகூட உழுவலை சார். எல்லாமே ஃபேட் ஆயி பிளாக்கா இருக்கு சார்... முதலாளி வேற எதாவது ஃபிலிமை கொடுத்துட்டீங்களான்னு கேட்டுட்டு வரச்சொன்னார்.''

அந்தப் பையன் சொன்னது நந்தகுமாரின் நெஞ்சில் ஒரு குத்து குத்தியது. ''நிஜமாவா...?'' - என்று கேட்டுவிட்டு அவன் கூடவே ஸ்டூடியோவிற்கு கிளம்பினான்.

ஸ்டூடியோ ஓனர் சிரித்தபடியே ''என்ன நந்து... ஒரு படம்கூட உழுவலையே...''-என்று பிரிண்டுகளைக் காட்டினார். அவ்வளவிலும் கட்டி இருட்டு.

''ஆச்சரியமா இருக்கே... ஃப்ளாஷ் போட்டு தெளிவாகத்தானே எடுத்தேன். ஃபிலிம்ல எதாவது கோளாறா?''

''அதை எல்லாம் பாக்காம இருப்பேனா... ஃபிலிம் நல்ல ஃபிலிம்தான்.''

''கேமராவுல எதாவது ஃபால்டா?''

''இல்லையே...''-என்றபடி கேமராவை எடுத்து நீட்ட, வாங்கி பார்த்தார். பட்டனைத் தட்டியதில் முகத்தில் தெறித்தது ஃப்ளாஷ்! குட்டி மானிட்டரிலும் ஒன்று என்று ஒரு சதுரம் நகர்ந்ததற்கான பதிவு எண்!

''நல்லாத்தானே இருக்கு...'' என்றார். ஆச்சரியம் விலகாதபடி அங்கிருந்து நகர்ந்தவன் தொலைபேசியைத் தொட்டான். மறுமுனையில் பழனிக்குமாரை பிடித்தான்.

''சார்! ஒரு போட்டோ ஃபிலிம்கூட உழுவலை சார். எல்லாமே ஃபேட் ஆயிடுச்சு...''

''அப்படியா...?''

''ஆமாம் சார். அதோட நான் பர்வதம்மாவை சந்திச்சப்போ 'உனக்கு பதினைஞ்சு நாள்ல கல்யாணம் நடக்கப் போகுது. போய் வேலையைப் பாரு'ன்னு சொன்னாங்க. அதுவும் உண்மையாகப் போகுது சார்...''

''என்னய்யா உளர்றே...?''

-நந்தகுமார் விளக்கி முடித்தான்.

பழனிக்குமார் மறுமுனையில் ''ஒரே மாயாஜாலமா இருக்குதேய்யா...'' என்று சீரியஸாவது தெரிந்தது.

''சார் எனக்கு என்ன பண்றதுன்னே தெரியல சார்...''

''பதட்டப்படாதே... என்னன்னு யோசிப்போம். ஆமா... உனக்கு இப்ப வேற எதாவது வேலை இருக்குதா...?''

''எதுக்கு சார் கேக்கறீங்க...?''

''எதுவும் முக்கியமான வேலை இல்லைன்னா கிளம்பு. நானும் உன்கூட வரேன். பஞ்சமூர்த்தி மலைக்குப் போவோம். அந்த பர்வதம்மாவையே பார்த்து கேட்போம்.''

''நானும் அவங்கள பாக்கத்தான் ஆசைப்பட்டேன். ஆனா அந்த குகைக்குள்ள நுழையறத நினைச்சாலே பயமா இருக்கு சார்...''

''பயப்படாதே... உனக்கு கல்யாணம் ஆகும்னு சொல்லியிருக்காங்க. ஆகையால அதுக்கு நடுவுல உனக்கு எந்த கெடுதலும் நடக்க அவங்க வாக்குப்படியே எந்த வாய்ப்பும் இல்லை. என்னாலையும் இவ்வளவையும் கேட்டுட்டு சும்மா இருக்க முடியலை. அங்க நிஜமா என்ன இருக்குன்னு தெரிஞ்சுக்கிட்டே ஆகணும். அப்படி தெரிஞ்சுக்கிட்டா உன் விஷயமே ஒரு கவர்ஸ்டோரியா யிடும்.''

''வேற மாதிரி எதாவது ஆயிட்டா...?''

''நீ ரொம்ப பயப்பட்றே... நான் இருக்கேன். நீ வா!''

-அவர் தீர்மானமாய் சொல்லிவிட்டு போனை வைத்தார். நந்தகுமாருக்கு ஒரு தடுமாற்றமாகிவிட்டது. வாழ்க்கையே ஒரு புதிய திசை நோக்கி நகருகிற மாதிரி தோன்றியது.

கடவுளே...!

8

வைத்தியர் வீடு!

வைத்தியர் அண்ணாமலை உரலில் எதையோ போட்டு இடித்துக் கொண்டிருந்தார். கூடவே நின்றபடி ஒத்தாசித்துக் கொண்டிருந்தான் அவரது உதவியாளன் மாமுண்டி.

விலுவிலுவென்று ஒற்றை நாடி சரீரமும் நல்ல உயரமுமாய் இருந்த மாமுண்டி ஒரு குப்பைத் தொட்டி அருகில் ஒருநாள் சாகக் கிடந்தான். உடம்பெல்லாம் சிற்பிடித்து சிரங்கும் சொறியுமாய்க் கிடந்தவனைப் பார்த்துவிட்டு மனது கேட்காமல் தூக்கி வந்து குணப் படுத்தியது வைத்தியர்தான்.

ஒரு விதத்தில் தன்வசம் உள்ள சில மூலிகைகளை வைத்து அவனிடம் பரீட்சை செய்து பார்த்தார் என்றுகூட சொல்லலாம்.

மாமுண்டியின் நல்லவேளை அந்த மூலிகைகள் அவனை முழு மனிதனாக்கி அவருக்கு வேலைக் காரனாகவும் ஆக்கிவிட்டது.

அவரை விட்டுச் செல்ல அவனுக்கு போக்கிடமும் இல்லை. அவர் எதைச் சொன்னாலும் செய்தான்.

''போய் அந்த படிகாரக் கல்லை எடுத்துகிட்டு வா...'' என்றார் அவரும். அங்கிருந்து அகன்றான். வீட்டுக்கு வெளியே சில மூலிகைகளைக் காய வைத்திருந்தார். ஒரு இடத்தில் படிகாரக் கல்லை அரைத்து மாவுபோல் ஆக்கி அதையும் நிழலில் காயவைத்திருந்தார்.

அதை எடுப்பதற்காக அவன் சென்ற போது வைத்தியர் வீட்டு வாசலில் கார் ஒன்று தேங்கி நின்றது.

உள்ளே இருந்து இரண்டு பேர் இறங்கினார்கள். ஒருவர் வெள்ளைக்காரர். இன்னொருவர் அடிக்கடி வைத்தியரை வந்து பார்த்துவிட்டுப் போகும் டாக்டர் செல்லமுத்து.

''என்னய்யா வைத்தியர் இருக்காரா...?'' -என்று கேட்டபடி அந்த வெள்ளைக்காரருடன் உள்ளே நுழைந்தார் செல்லமுத்து. வைத்தியர் அண்ணாமலையும் அவர்கள் இருவரையும் பார்த்துவிட்டு பிரகாசமாய் சிரித்தபடி வரவேற்க ஆரம்பித்தார்.

''வாங்க டாக்டர்...''

''வர்றது இருக்கட்டும்... யார் வந்துருக்காங்கன்னு பாருங்க...''-டாக்டர் செல்லமுத்து அந்த வெள்ளைக்காரரை காட்டிச் சிரித்தார்.

''சார் யாரு?''

''பாத்தா தெரியல...அமெரிக்காவுல இருந்து வந்துருக்காரு. இவரும் ஒரு டாக்டர்தான். பேர் ஜோன்ஸ்.''

''அப்படியா ரொம்ப சந்தோஷம்...''

-அண்ணாமலை ஜோன்ஸிடம் கைகுலுக்கினார்.

''உங்களை சந்திச்சதுல ரொம்ப ரொம்ப மகிழ்ச்சி...''

-ஜோன்ஸ் அதிசயமாக தமிழ் பேசினார்.

''இவருக்கு தமிழ்கூடத் தெரியுமா?''

''நல்லா... சித்தர்பாடல்கள்ல இருந்து சிலப்பதிகாரம், மணிமேகலை வரை அப்படியே ஒப்பிப்பாரு!''

''ஆச்சரியமாயிருக்கே...''

''நமக்குத்தான் இதெல்லாம் ஆச்சரியம். ஜோன்ஸுக்கு இதெல்லாம் சுண்டைக்காய்...''

''சரி... என்ன விஷயமாய் இந்த நாட்டு வைத்யன பாக்க வந்துருக்கீங்க...?''

''காரணமாத்தான். டாக்டர் ஜோன்ஸ் நம்ம நாட்டு மூலிகைகளைப் பத்தி ஆராய்ச்சி செய்துக்கிட்டிருக்கார். அதுல கிட்டத்தட்ட ஒரு முடிவுக்கும் வந்துட்டாரு. இருந்தாலும் மாயமூலிகைகள் பத்தி அவருக்கு கொஞ்சம் குழப்பமிருக்கு...''

-டாக்டர் செல்லமுத்து லகுவாக விஷயத்துக்கு வந்தார்.

''அதுக்கு நான் என்ன பண்ணணும்?''

''உங்களுக்குத்தான் நிறைய மாய மூலிகைகள் பத்தி தெரியுமே. அதான் கூட்டிக்கிட்டு வந்தேன்.''

-செல்லமுத்து முடிக்க, அண்ணாமலைக்கு கொஞ்சம் சுருக்கென்றது. சற்று முறைப்பாக செல்லமுத்துவைப் பார்த்தார்.

''என்ன பார்க்கறீங்க அண்ணாமலை...''

''எனக்கு மாயமூலிகை பத்தியெல்லாம் எதுவும் தெரியாது செல்லமுத்து. சாதாரண மூலிகைச் செடியைப் பறிக்கவே நான் படாதபாடு பட்டுக்கிட்டிருக்கேன்...''

அண்ணாமலை சொல்லவும் செல்லமுத்துவின் இதழ்க்கடையில் ஒரு கேலிப் புன்னகை இழையோடியது.

''நிஜமா டாக்டர்... எனக்கு அதெல்லாம் ஒண்ணும் தெரியாது. நான் என்ன சித்தனா...-''

''வேண்டாம் அண்ணாமலை. இதோ இந்த மாமுண்டி எப்படிக் கிடந்தான்னு எனக்கும் தெரியும். இவன்

உடம்பெல்லாம் அழுகிப் போயிடுச்சு. இந்த ஊர்ல இவன் பிச்சை எடுத்துத் திரிஞ்சது ஊருக்கே தெரியும். குன்மம் வந்து இவன் கையும் காலும் இருந்த இருப்பைப் பார்த்து முகம் சுளிக்காதவங்களே இல்லை. அப்படிப்பட்ட இவனையே ஒரு மண்டலத்துல நீங்க குணப்படுத்தியிருக்கீங்க. சாதாரண மூலிகையால முடியற விஷயமா அது?''

-செல்லமுத்து மலைப்பாம்புபோல வளைக்கத் தொடங்கினார்.

''அது... அது...''

''பயப்படாதீங்க... நம்ம டாக்டர் ஒண்ணும் சாதாரண ஆள் இல்லை. மாய மூலிகைல ஒண்ணே ஒண்ணு பத்தி தெரிஞ்சாக்கூட போதும். ஒரு மூலிகைக்கு உங்களுக்கு பத்து லட்சம் ரூபா தரத் தயாரா இருக்கார்.''

''நீங்க புரியாம பேசறீங்க... மாமுண்டி உடம்புல இருந்தது சாதாரண சொறி சிரங்கு. கத்தாழை வைத்தியம் ஒண்ணு போதும் - அதை குணப்படுத்த... கூட நான் சிலந்தி நாயகனையும் சேர்த்துக்கிட்டேன். அவ்வளவுதான்...!''

-அண்ணாமலை அழுத்தமாக மறுத்தும் டாக்டர் செல்லமுத்துவிடம் எந்த மாற்றமும் இல்லை

''எதுக்கு அனாவசியமா பயப்பட்றீங்க. மாயமூலிகை பத்தி வெளிய தெரியக்கூடாதுன்னும் ஏன் நினைக்கறீங்க?''

''இதோ பாருங்க டாக்டர். மாய மூலிகைகளை நீங்களோ, நானோல்லாம் அடைய முடியாது. அதுக்கு கடவுளோட அனுக்ரகம் வேணும். அது சுயநலமில்லாத சித்தர்கள் கண்ணுக்குத்தான் கிடைக்கும். இதை புரிஞ்சுக்குங்க. நான் ஒரு சராசரி வைத்தியன்.''

''அண்ணாமலை... திரும்ப சொல்றேன். ஒரு மூலிகைக்கு பத்து லட்ச ரூபாய். டாக்டர் ஜோன்ஸுக்கு ஒரு

மூலிகை மட்டும் தெரிஞ்சாக்கூட போதும். அதை வெச்சு அவர் எவ்வளவோ மருந்து கண்டுபிடிச்சுடுவாரு.''

''நானும் திரும்ப சொல்றேன். எனக்கு ஒரு மூலிகை பத்தியும் தெரியாது. உங்களுக்கு தெரியணும்னா காட்டுக்குள்ற நீங்க போங்க. கண்டுபிடிச்சுக்குங்க.''

''அப்ப இதுதான் உங்க முடிவான பதிலா...?''

''ஆமா...!''

''அப்பசரி... மிஸ்டர் ஜோன்ஸ்! லெட் அஸ் மூவ். நாம மலைக்கு மேல போவோம். மேல பர்வதம்மான்னு ஒரு லேடி இருக்காங்க. 'கன்னிக்காலி'ன்னு ஒரு மாய மூலிகையால அவங்க ஒரு சின்னப் பொண்ணாகவே இருக்காங்க. அவங்கள மீட் பண்ணுவோம்.''

-டாக்டர் செல்லமுத்து பர்வதம்மா பற்றி பேசவும் அண்ணாமலைக்கு பகீரென்றது.

''டாக்டர்... உங்களுக்கு என்ன பைத்தியமா? பர்வதம்மாவை பாக்கறது பேசறதுல்லாம் லேசுப்பட்ட விஷயமில்லை.''

''அது எனக்கும் தெரியும். ஜோன்ஸ் எல்லாவித எக்ஸ்பீரியன்ஸையும் எதிர்பார்த்துதான் வந்துருக்கார்.''

''வேண்டாம்... இப்பவே வெள்ளைக்காரங்க மஞ்சள், வேம்பு எல்லாத்துக்கும் பேடண்ட் ரைட்ஸ் வாங்கி வெச்சுக்கிட்டு கலாட்டா பண்ணிக்கிட்டு இருக்காங்க. நீங்ககூட மாய மூலிகைகள் பத்தி தெரிஞ்சுக்க ஆசைப்படலாம். ஆனா, ஒரு வெள்ளைக்காரனுக்கு மட்டும் அது தெரியவே கூடாது!''

ஜோன்ஸுக்கு அதைக் கேட்க கோபம் வந்தது.

''லுக் மிஸ்டர் அண்ணாமலை. ஏஸ் எஜ்யூமன் பீயிங் இந்த உலகத்துல விளையற ஒரு மூலிகை பத்தி யார் வேணா

எப்ப வேணா தெரிஞ்சுக்கலாம். அது பொது சொத்து. நான் மெடிசின் பண்ணத்தான் மேன் அதை தெரிஞ்சுக்க விரும்பறேன். மெடிசின் செய்தா அதால யாருக்கு லாபம்? சொஸைட்டிக்குதானே?''

''ஒரு லாபமும் கிடையாது. எங்க மூலிகையை வெச்சு எங்ககிட்டையே கோடிக்கணக்குல லாபம் சம்பாதிப்பீங்க. மூலிகைங்கறது கடவுளோட கருணை. அதை விலைக்கு விக்கவோ, வாங்கவோ யாருக்கும் உரிமை கிடையாது.''

-அண்ணாமலை பதிலுக்கு சிறினார்.

''வேண்டாம்... விட்ருங்க. நீங்க இவ்வளவு பொசஸிவா இருப்பீங்கன்னு நாங்க நினைக்கல. நாங்க பர்வதம்மாவைப் பாத்து பேசிக்கறோம்...''

''போங்க... போங்க... நானாவது பேச்சோட உங்கள விட்டேன். அவங்க கடவுளோட அம்சம். உங்களை தண்டிக்காம விடமாட்டாங்க...''

-வைத்தியர் அண்ணாமலை சபதம் போடுவதுபோல சொல்ல செல்லமுத்துவும் ஜோன்ஸும் ஏமாற்றமுடன் திரும்பி காரில் ஏறிக் கொண்டு புறப்பட்டனர்.

பார்த்துக் கொண்டேயிருந்த அண்ணாமலையை மாமுண்டியும் வெறித்தான்.

''மாமுண்டி... நீ வீட்டைப் பாத்துக்கோ. நான் மேலவரை போய்ட்டு வரேன்.'' - என்றவர் விறுவிறுவென்று உள்ளே நுழைந்து பரண்மேல் கிடந்த வேர்க்கட்டு ஒன்றை எடுத்தார்.

அதைக் கையில் பிடித்தபடி நடக்க ஆரம்பித்தார். சிறிது தூரம்தான்! மாமுண்டி எதற்கோ திரும்பிவிட்டு திரும்ப அவரைப் பார்த்தபோது வைத்தியரைக் காணவில்லை!

9

பஞ்சமூர்த்தி மலையின் மேல் தளம்!

பசுமாட்டு மடியை முட்டும் கன்றுபோல மலை உச்சியில் மேகக்கூட்டங்கள் முட்டிக் கொண்டிருந்தன. அப்பொழுதுதான் நுழைந்த பஸ்ஸில் இருந்து உதிர்ந்தனர் பழனிக்குமாரும்-நந்தகுமாரும்!

பஸ்ஸைவிட்டு இறங்கிய இடத்தில் ஏகத்துக்கும் பலாப்பழக் கடைகள், தொங்கும் வாழைத்தார்கள், குவிந்துகிடக்கும் அன்னாசிப் பழங்கள்!

ஜில்லென்ற க்ளைமேட்!

''அட்டகாசமான இடமா இருக்குல்ல...?'' - பழனிக்குமார், நந்தகுமாரைப் பார்த்து ஸ்லாகித்துக் கொண்டார்.

''இந்த அழகுக்குப் பின்னாலதான் சார் புரிஞ்சுக்க முடியாத மர்மம்லாம் இருக்குது.''

''இனிமே புரிஞ்சுக்க முடியாத'ன்னு சொல்லாதே. புரிஞ்சுக்க வேண்டிய மர்மங்கள்னு சொல்லு.''

''என்னவோ சார்... எனக்கு பக்குபக்குன்னுதான் இருக்கு.'' - பேசியபடி நடந்தனர்.

''ஆமா... அந்த குகைக்கு போற வழி உனக்கு தெரியும்தானே?''

''என்ன சார் கேள்வி... தெரியாமத்தான் அங்கே நான் போனேனா?''

''எப்படி இருந்தது குகை...?''

''இது ஒரு கேள்வியா சார்... எவ்வளவு சினிமாவுல பாத்துருப்பீங்க...?''

''அது ஏன்னு தெரியல... சாமியார்னா அவங்க குகைலதான் இருக்காங்க.''

''இயற்கையோட கன்ஸ்டரக்ஷன். வாடகை கிடையாது. மழை காத்தும் ஒண்ணும் பண்ணாது. அதுதானே சார் சௌகரியம்.''

''அந்த சௌகர்யம் மனுஷங்களுக்கு மட்டுமில்ல, மிருகங்களுக்கும்தான். பெரும்பாலும் சிங்கங்கள் குகைகள்லதான் வசிக்கும்...''

''நீங்க என்ன சொல்ல வர்றீங்க?''

''குகைல வசிக்கிறதுல ஆபத்தும் இருக்குன்னு சொல்ல வரேன். அதே சமயம் நீ ஏதாவது மிருகம் பதுங்கியிருக்கிற குகையைப் பார்த்துட்டு பயந்து ஓடிவந்துட்டியோன்னும் நினைக்கறேன்.''

''இல்ல சார்... நான் பர்வதம்மாவோட குகைக்குள்ளதான் நுழைஞ்சேன்.''

''அது சரி... அந்த குகைக்குள்ளே நுழைஞ்ச ஒருத்தன் கண் தெரியாம இருந்தான்னு சொன்னியே... அவனை பார்க்க முடியுமா?''

''தாராளமா... கோவிலுக்கு போனா பாக்கலாம்.''

''அவனையுமா போட்டோ எடுத்தே?''

''ஆமாம் சார்...''

''அவனோட படம்கூடவா விழலை?''

''ஆமாம் சார்...''

''கேமராஃபால்ட் இல்லையே...''

''நிச்சயமா இல்லை. இதோ...''

-நந்தகுமார் நீட்ட பழனிக்குமார் வாங்கிப் பார்த்தார்.

''இப்ப இதுல ஃபிலிமை லோட் பண்ணியிருக்கியா?''

''ஆமாம் சார்...''

''நில்லு... உன்னை ஒரு படம் எடுக்கறேன்.''

''எதுக்கு சார்...''

''நில்லுப்பா... என்னோட பரீட்சையை உன்கிட்ட இருந்தே ஆரம்பிக்கறேன்.''

-பழனிக்குமார் பேசிக் கொண்டே கேமரா வியூஃபைண்டர் வழியாகப் பார்த்து ஒரு க்ளிக்... சப்தம் தெளிவாகக் கேட்டது. கூடவே கோவில் மணி சப்தமும் காதில் விழுந்தது.

''மணி சப்தம் கேட்குதே... இந்த கோவில்தானா?''

''ஆமாம் சார்...''

-வேகமாய் இருவரும் நடக்கத் தொடங்கினர். ஆச்சரியமாய் பல விஷயங்கள் கண்ணில் பட்டன.

ஒரு மூங்கிலை இருவர் தோளில் சுமந்தபடி செல்ல மூங்கில் நடுவில் ஒரு தொட்டில். அதில் ஒரு முதியவர் படுத்திருந்திருந்தார். விசாரித்தனர்.

''அவருக்கு வயசு நூத்து பத்து ஆவுதுங்க. அவ்வளவா நடமாட முடியலை. அதனால அவரை தூக்கிகிட்டு போறாங்க...''

''ஏன் தள்ளுவண்டியெல்லாம் எதுவும் இல்லையா?''

''அதெல்லாம் இங்க எதுக்குங்க... அத்தோட மலைக்காட்டுக்குள்ள வண்டியை தள்ளிகிட்டு போக சிரான பாதை வேண்டாமா?''

-அந்த பதில் பஞ்சமூர்த்தி மலை இன்னும் சரியான சாலை வசதிகூட இல்லாதபடி இருப்பதை சொல்லாமல் சொன்னது.

''சார்... இதுகூட ஒரு விஷயம்தான்-கட்டுரை எழுதலாம். ஒரு போட்டோ எடுத்துக்கலாமா?''

''கேக்காதே... எடு...''

அடுத்த நொடி க்ளிக்!

படுத்தபடி பயணம் செய்யும் கிழவர் தூலியை ஒதுக்கிப் பார்த்து ஒரு சிரிப்பு சிரித்தார்.

நந்தகுமாரும், பழனிக்குமாரும்கூட பதிலுக்கு சிரித்தனர்.

அடுத்த ஆச்சரியமாய் ஒரு பெண்ணின் தலைமேல் வரிசையாய் விழுந்துவிடாதபடி ஏழெட்டுப் பானைகள்.

விழுந்தால் சுக்கு நூறுதான்!

ஆனால் அவளோ சர்வ சாதாரணமாய் பேலன்ஸ் செய்தபடி நடந்து கொண்டிருந்தாள்.

''சார் இது அடுத்த ஆச்சரியம் சார்!''

''ஆச்சரியம் மட்டுமில்ல நந்தா... இதுதான் மனித சக்தியோட உச்சம்.''

''இவங்க பேசாம சர்க்கஸ்ல சேரலாம்.'' -விளையாட்டாக பேசிக் கொண்டு நடந்தாலும் நந்தகுமாருக்கு கடுக்கடுக்கென்றுதான் இருந்தது.

கோவில் கோபுரமும் கண்ணில் பட்டது.

கோவிலுக்கு முன்னால் ஒரு கார்!

கீழே வைத்தியர் வீட்டுக்கு வந்த டாக்டர் செல்லமுத்துவும் வெள்ளைக்காரர் ஜோன்சும் ஏறிவந்த அதே கார்.

''என்னப்பா... நம்மைப்போல சிட்டியில இருந்து யாரோ கோவிலுக்கு வந்துருக்கற மாதிரி தெரியுது!''

''ஆமாம் சார்... அப்படித்தான் தெரியுது...''

நந்தகுமார் ஆமோதிக்க கோவில் வாசலை எட்டிப்பிடித்தனர். கடைக்காரர்கள் தேங்காய்ப் பழத்தட்டுக்களை எடுத்து நீட்டினார்கள்.

யாரும் நந்தகுமாரை இதற்கு முன் பார்த்த மாதிரியே காட்டிக்கொள்ளவில்லை.

அதுவே நந்தகுமாருக்கு ஆச்சரியம்தான்.

அவர்களை மறுத்துவிட்டு உள்ளே நுழைந்தான். உள்ளே இருந்து ஜோன்சும், செல்லமுத்துவும் வெளியே செல்வதற்காக வந்து கொண்டிருந்தனர்.

அறிமுகம் இல்லாததால் பேசிக்கொள்ள வழியில்லாதபடி வெளியேறியும் சென்றனர்.

''பரவால்ல சார்... இந்த மலைக்கு வெள்ளைக்காரங்கெல்லாம்கூட வர ஆரம்பிச்சுட்டாங்க...''

''அவங்கதான் நம்ம கல்ச்சரை உண்மையா ரசிக்கறவங்க.''

-பேச்சோடு ஊர் பாசத்தை பழனிக்குமார் அளந்தார். அப்படியே நந்தகுமாரிடம் ''ஆமா எங்க அந்த குருட்டு மனிதர்?''-கேட்டார்.

''இங்கதான்-இந்த கோவில் மண்டபத்துலதான் பார்த்தேன்.''

-நந்தகுமாரும் பார்வையை சுழற்றித் தேடினான்.

மண்டபத்தில் ஒருவர் படுத்திருந்தார்.

''சார்... அதோ...'' - ஓடினான் நந்தகுமார்.

நெருங்கியவன் படுத்திருந்த அந்த மனிதரின் தோளைத் தொட்டு உசுப்ப, அவரும் விழித்து எழுந்தார். இதற்கு முன் கண்தெரியாதபடி கண்ணில் மூலிகையை வைத்துக் கட்டிக் கொண்டு அங்கே அமர்ந்திருந்த அதே மனிதர்தான்.

ஆனால் இப்பொழுது கண்ணில் மூலிகை எல்லாம் இல்லை. பார்வையும் பளிச்சென்று இருந்தது.

''யார் சார் நீங்க... என்ன வேணும்?''-அவரிடம் கேள்வி வேறு.

''சார்...உங்களுக்கு கண் பார்வை வந்துடிச்சா?''

-நந்தகுமார் ஆவலாய் விசாரித்தான்.

''நீங்க என்ன கேக்கறீங்க...?''-இது அந்த மனிதர்.

''என்ன சார் நீங்க... என்னைத் தெரியல? இரண்டுநாள் முந்திகூட வந்தேனே...''

''சரி அதுக்கென்ன?''

''அதுக்கென்னவா...? உங்களுக்கு கண்ணு எப்படி வந்தது?''

''என் கண்ணுக்கு என்ன வந்துச்சு. நான் நல்லாத்தானே இருக்கேன்?''-அந்த மனிதரின் பதில் நந்தகுமாரின் கன்னத்தில் அறைந்தது. பழனிக்குமாரும் குழம்பினார்.

''நல்லாத்தான் இருந்தீங்களா...? என்ன சார் நீங்க! இரண்டு நாளைக்கு முந்தி நான் பார்த்தப்போ கண்ணுல மூலிகையை கட்டிக்கிட்டு தவிச்சுகிட்டிருந்தீங்களே!''

''நானா...? தவிச்சுக்கிட்டிருந்தேனா...? என்ன சார் இது உளறல்?''

''நான் உளர்றேனா...?'' - நந்தகுமார் பல்லைக் கடித்தான். கையைப் பிசைந்தான். பழனிக்குமாரும் ஒரு மாதிரி பார்த்தார்.

37671
546947

''சார் அப்படிப் பாக்காதீங்க... இந்த ஆள்தான் கண்ணு தெரியாம கிடந்து அல்லாடிக்கிட்டிருந்தார். சந்தேகமா இருந்தா பூசாரியைக்கூட கேட்டுப்பாருங்க...''

-நந்தகுமார் அடுத்து பூசாரி எங்கே என்று கேட்டுக் கொண்டு சன்னதி நோக்கிச் சென்றான். பூசாரியும் சன்னதி முன் அமர்ந்துகொண்டு ஏதோ ஒரு பழைய புத்தகத்தை புரட்டிக் கொண்டிருந்தார். நந்தகுமாரும் பழனிக்குமாரும் திபுதிபுவென்று ஓட்டமும் நடையுமாக வருவதைப் பார்த்து நிமிர்ந்தார்.

''பூசாரி... எப்படி இருக்கீங்க...?''

''நல்லாருக்கேன்... நீங்க யாரு?''-பூசாரி அப்படிக் கேட்பார் என்று எதிர்பார்க்கவில்லை அவன். முகம் இருண்டு போயிற்று.

''என்ன பூசாரி... என்னைத் தெரியலியா?''

-அலறினான் நந்து.

''தெரியலியே தம்பி... யார் நீங்க?''

''என்னய்யா இது பெரிய மாயா பஜாரா இருக்கு... இரண்டு நாள் முந்தி வந்து போட்டோல்லாம்கூட எடுத்தேனே. நீங்ககூட அதெல்லாம் தப்புன்னு சொல்லலை...?''

''இல்லியே... ஆமா தம்பிக்கு ஏதாவது சித்தப் பிரமையா?''

-பூசாரி பழனிக்குமார் பக்கம் திரும்பினார். நந்தகுமாருக்கு அந்தக் கேள்வியே ஒரு மினி இடியாகத்தான் இருந்தது.

''என்ன நந்து... இவங்கல்லாம் உன்னை சுத்தமா தெரியலைங்கறாங்க. நீ இந்த கோவிலுக்குத்தான் வந்தியா-

இல்லை வேற எதாவது கோவிலுக்குப் போய் ஞாபக மறதியா குழப்பிக்கறியா?''

-பழனிக்குமாரும் காலை வாரினார்.

''சார், இவங்க அவ்வளவு பேரும் நடிக்கிறாங்க. நான் இந்த ஊர் கோவிலுக்கு... அதுவும் இந்த கோவிலுக்குத்தான் சார் வந்தேன்.''

-நந்தகுமார் பரிதவிக்கச் சொன்னது பழனிக் குமாரையே என்னவோ செய்தது.

''ஆமா, என்ன விஷயம் தம்பி... இப்ப இவர் இங்க வந்தாரு; வரலை... அதனால என்ன?''-பூசாரி சாங்கோபாங்கமாக விசாரிக்க ஆரம்பித்தார்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. நாங்க பத்திரிகை யாளர்கள். ஒரு கட்டுரைக்காக இந்த மலை - அப்புறம் இங்க வசிக்கிற பர்வதம்மா பற்றி கேள்விப்பட்டு இங்க வந்துருக்கோம். அவ்வளவுதான்.''

''அப்படிங்களா... அம்மாவை பாக்கவந்தீங்களா?''

''ஆமாம்... அவங்ககூட ஏதோ ஒரு குகையில் இருக்கறதா கேள்விப்பட்டோம்.''

''குகையிலையா...? அவங்களா...? இல்லையே!''

-பூசாரி முகம்போன விதமும் அதில் அவர் கேள்வி களை அடுக்கிய விதமும் நந்தகுமாருக்குள் பெட்ரோலை ஊற்றி எரித்ததுபோல எரிச்சலை உருவாக்கியது.

''பூசாரி... பிரமாதமா நடிக்கிறியய்யா... சார் நம்பாதீங்க. இந்த ஆள் நடிக்கறான்.''

''ஸ்ஸ்... சும்மா இரு நந்து. நான் பேசிக்கிட்டு இருக்கேன்ல... ஐயா நீங்க சொல்லுங்க. அப்ப பர்வதம்மா எங்க இருக்காங்க?''

''இங்க பக்கத்துலதாங்க இருக்கு அவங்க குடிசை. இப்ப போனாக்கூட பாக்கலாம்.''

''அப்படியா... என்னமோ அவங்கள பாக்கறதே கஷ்டம் வருஷத்துக்கு ஒரு தடவையோ இரண்டு தடவையோதான் பாக்கலாம்னு கேள்விப்பட்டோமே...''

''யாரோ தப்பா சொல்லியிருக்காங்க. அம்மாவை எப்ப வேணும்னாலும், யார் வேணும்னாலும் பார்க்கலாம். அவங்களப் பாத்தா நாம செஞ்ச பாவமும் பறந்தோடிடும்.''

''ஒஹோ... ஆமா அவங்களுக்கு இப்ப எவ்வளவு வயசிருக்கும்?''

''என்ன... ஒரு நூறு நூத்திபத்து வயசு இருக்கலாம்.''

''கரெக்ட்... ஆனாலும் ரொம்ப இளமையா இருப்பாங்களாமே அப்படியா?''

''அப்படியெல்லாம் இல்லீங்களே...''

''அதுதானே அவங்ககிட்ட ஹைலைட்டாள விஷயமே.''

''அப்படின்னா...?''

''அதாவது... அவங்க இளமையா இருக்கறதுதான் ஆச்சரியமான-தெய்வீகமான விஷயம்னு கேள்விப் பட்டோம்னு சொல்ல வந்தேன்.''

''அப்படியெல்லாம் இல்லீங்களே... நீங்களே போய் பாருங்க. உங்களுக்கு தானா தெரிஞ்சுகிட்டு போகுது.''

-பூசாரி மிக மிக சாதாரணமாக-எந்தவித நெருடலும் குழப்பமுமின்றி பேசியதைத் தொடர்ந்து பழனிக்குமார் மீண்டும் நந்தகுமாரைப் பார்த்தார்.

அவன் நெற்றியை தேய்த்துக் கொண்டிருந்தான்.

''நந்தா... போய்ப் பார்க்கலாமா?''

''போலாம் சார்... போலாம். அங்க என்ன கூத்து நடக்குதுன்னு பாக்கறேன். வாங்க...''

''அப்ப நாங்க வரோம்யா...''

''நல்லதுங்க... ஆமா இவ்வளவுதூரம் வந்துட்டு சாமி கும்பிடாம போறீங்களே.''

-பூசாரி இணக்கமாய் கேட்க, பழனிக்குமார் ''தப்புதான்...'' என்றபடி சன்னதி முன்போய் நின்றார். கூடவே குழப்பம் கலையாதபடி நந்தகுமாரும் போய் நின்றான்.

சன்னதியில் பூசாரி கற்பூர ஆரத்தி காட்டிவிட்டு தட்டை எடுத்து வந்தார். கண்களில் ஒற்றிக் கொண்ட பழனிக்குமார் தட்டில் ஒரு பத்து ரூபாயைப் போட்டார்.

''தம்பி... தயவு செய்து தப்பா எடுத்துக்காம இந்த பணத்தை எடுத்து ஆத்தா உண்டியல்ல போட்டுட்றீங்களா?''

-பூசாரி ஆச்சரியமளித்தார்.

''ஏன்... தட்டுல போடக்கூடாதா?''

''அப்படி இல்லை... இங்க நான் நல்ல சௌகர்யத்தோட இருக்கேன். காணிக்கை வாங்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.''

''என் வாழ்க்கைல இப்படி ஒரு பதிலைச் சொன்ன ஒரே பூசாரி நீங்கதான்.''

''இருக்கலாம். ஆத்தா என்னை சௌகர்யமா வெச்சிருக்கும்போது எனக்கு எதுக்கு பிச்சைக்காசு?''

''அப்ப நீங்க சௌகர்யமா இருக்கிங்களா?''

''நிச்சயமா... இங்க நான் மட்டுமல்ல. எல்லாருமே நல்ல சௌகர்யத்தோட இருக்கோம்.''

''புளுகாதிங்க... நான் போன தடவை ஐம்பது ரூபா போட்டப்போ உச்சி குளிர்ந்து என்னென்ன பேசினீங்க? இப்ப என்ன... மனசுல பெரிய குபேரன்னு நினைப்பா?''

-நந்தகுமார் திரும்பவும் உக்கிரமாகி வெடித்தான்.

''தம்பி வந்ததுல இருந்து தப்புத் தப்பாவே பேசுது. அதுக்கு எதாவது மனக்குழப்பமா-''

-பூசாரி வகையாக திருப்பி அவன் எறிந்த அம்பை அவனுக்கே திருப்பினார். பழனிக்குமார் மீண்டும் நந்தகுமாரைப் பார்த்தார். நந்தகுமார் கூசிப்போனான். கண்களில் கோபமும் ஆத்திரமும் கூட்டணி அமைத்து முகத்தை சிவப்பாக்கிவிட்டிருந்தன.

''டென்ஷனாகாதே நந்தகுமார். சம்திங்ராங். அது உன்கிட்டையா - இங்கையான்னு தெரியலை. சரி வா போகலாம்.'' - என்றபடி நடந்தார்.

நந்தகுமார் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடந்தான்.

பூசாரி முகத்தில் ஒருவித மர்மப் புன்னகை.

10

பார்வதம்மாளின் குடிசை முன்பு டாக்டர் செல்லமுத்துவின் கார் நின்று கொண்டிருந்தது.

நந்தகுமாரும், பழனிக்குமாரும் எட்டி உள்ளே பார்த்தபோது டாக்டர் செல்லமுத்துவும், அந்த அமெரிக்கக்கார ஜோன்சும் ஒரு வயதான கிழவி முன் அமர்ந்திருந்தனர். தலையெல்லாம் சடைபிடித்து நரை பூத்திருக்க, அந்தக் கிழவியும் நெற்றி கொள்ளாத மஞ்சள்

குங்குமத்துடன் கையில் ஒரு சூலாயுதத்தைப் பிடித்தபடி அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

''என் ஆசை மக்கா... என்னை வந்து கும்பிட்ட உங்க எல்லா கஷ்டமும் இனி நீங்கிவிடும். உங்க தொழிலும் இனி அமோகமா நடக்கும்...''

-என்றபடியே அந்த கிழவி வெறும் கையை மேலே உயர்த்தி ஒரு ஆட்டு ஆட்டி விட்டு கீழே இறக்கினாள். இறங்கிய அவள் கையில் ஒரு முழுமையான எலுமிச்சம் பழம்.

அதை டாக்டர் செல்லமுத்துவிடம் நீட்டினாள். செல்லமுத்துவும் பயபக்தியோடு வாங்கிக் கொண்டார். ஜோன்சுக்கும் அந்தக் கிழவி ஒரு எலுமிச்சம் பழத்தை அதே மாதிரி வரவழைத்து நீட்டினாள். அவரும் பேந்தப் பேந்த விழித்தபடி அதை வாங்கிக் கொண்டார். செல்லமுத்து எதையோ கேட்க விரும்பியவராக ''தாயி... மாய மூலிகை பத்தி ஆராய்ச்சி பண்ற எங்களுக்கு அது எங்க இருக்குன்னு நீதான் சொல்லணும்''- என்றார்.

''இந்த பஞ்ச மூர்த்தி மலை அருவிக்கரைகிட்ட இல்வாத மாய மூலிகைகளா... அங்கபோய் தேடுங்க. கிடைக்கும்...'' என்றாள் அவளும்.

''உன்னையே இளம்கன்னின்னு சொல்றாங்களே... ஆனா நீயோ முத்தின கிழவியா இருக்கியே?''

''யார் சொன்னது அப்படின்னு... நான் எப்பவும் கன்னிதான். அதுலையும் நித்ய கன்னி. ஆனா நரையும் திரையும் எனக்கும் விலக்கல்ல... புரிஞ்சுக்க.''

''அப்ப நாங்க கேள்விப்பட்டது...?''

''எல்லாமே பொய்யி...''

''மாய மூலிகைகளாவது மெய்யா தாயி...?''

''அது எப்படி பொய்யாகும்! அது இந்த மலைக்காட்டோட சொத்தாச்சே.''

''அதுல 'கன்னிக்காலி'ங்கற மூலிகை ரொம்ப விசேஷமாமே...?''

''ஆமாம்... விசேஷம்தான். யார் இல்லேன்னா...?''

''அதாலதான் நீகூட இளமையோட இருக்கறதா சொன்னாங்க...''

''அப்படி இருந்தாத்தான் நீ பாத்துருப்பியே...?''

''அந்த மூலிகைபத்தி தெரிஞ்ச நீ அதால இளமையோட இல்லாம ஏன் தாயி இப்படி முதுமரமா இருக்கே?''

''இதுதான் தவத்துக்கு உகந்த கோலம்! ஒளவைக் கிழவியே இளம்பிராயத்தைவிட்டு முதுமை வேணும்னு கேட்டவதானே?''

''அது...அது...''

''போதும்... பேசுனது போதும், பின்னால ரொம்ப பேர் காத்துருக்காங்க பார். ஆத்தா அவங்களுக்கும் அருள் வாக்கு சொல்லணுமில்ல...''

-அந்தக் கிழவி அவர்களை நறுக்கி விலக்க, அவர்களும் எழுந்து கொண்டனர். பின் மேற்கொண்டு நின்று பேச அவகாசம் கிடைக்காத சங்கடத்தோடு நகர்ந்து வெளியேறினர்.

அவர்கள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த நந்தகுமாரும் பழனிக்குமாரும் கிழவி எதிரில் அமர நந்தகுமார் கிழவியை ஊன்றிப் பார்த்தான்.

'இரண்டு நாள் முன்பு கோவிலுக்கு ஒரு இளம் தேவதையாக வந்த பெண்ணா இன்று இப்படி? இது நிஜமான முதிய தோற்றமா... இல்லை மேக்கப்பா...?'

- மனசைக் கொத்தும் கேள்விகளோடு கிழவியை ஊன்றிப் பார்த்தான்.

''நல்லா உக்காருங்க... ரெண்டு பேரும் பட்டணத்துல இருந்து வாரீகளா?'' - கிழவி கேட்டாள்.

''ஆமா... நீங்கதான் பர்வதம்மாவா?''

''நானேதான்... அதுகூட தெரியாமத்தான் என்னைப் பாக்க வந்தீங்களோ?''

''இல்ல...இல்ல...தெரிஞ்சுதான் வந்தேன்...''

''என்ன விஷயம்? கலியாணம் - காட்சி பிரச்சினையா, இல்லை கடன் தொல்லையா...?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. சும்மா தரிசனம் பண்ண வந்தோம். அவ்வளவுதான்...''

''பரவால்லியே... கோரிக்கை இல்லாம கும்பிட வந்துருக்கற நீங்க ஆத்தா அருளால நல்லா இருக்கணும். நல்லாவும் இருப்பீங்க. ஆனா, இந்தச் சின்னத் தம்பிக்குத்தான் ஏதோ மனச்சஞ்சலம்போல இருக்குது. சொப்பனம் கண்டுட்டு அதுக்கும் நிஜத்துக்கும் வித்தியாசம் தெரியாம குழப்பிக்கிட்டு இருக்குது.''

- கிழவி சொன்ன மறுநொடி பழனிக்குமாரும் அதுதான் உண்மையோ என்பதுபோல நந்தகுமாரைப் பார்த்தார்.

''சார்! சத்தியமா நான் கனவெல்லாம் காணல. நான் பார்த்தது அவ்வளவும் உண்மை.'' - அவன், அவள் எதிரிலேயே விசும்பினான்.

''லுக் நந்தகுமார்... இங்க எல்லாமே ரொம்ப ரொம்ப நார்மலா இருக்கு. ஆனா...நீயோ சாதிக்கறே. இட்ஸ் ஓ.கே. நான் உன்கிட்ட அப்புறமா பேசிக்கறேன். ஆத்தா! ஆசீர்வாதம் பண்ணுங்க. நாங்க கிளம்பறோம்.''

- பழனிக்குமார் பேச்சோடு கும்பிட்டபடி தலையை முன்கொண்டு செல்ல பர்வதம்மா கிழவியும் பழனிக்குமார் நெற்றியில் குங்குமத்தை வைத்து தலையைத் தடவி ஆசீர்வாதம் செய்தாள். அதேபோல நந்தகுமாருக்கும் செய்ய, வேண்டா வெறுப்பாக அந்த நெற்றிக் குங்குமத்துடன் எழுந்தான்.

''போய்ட்டு வாங்க...'' - வழியனுப்பினாள். இருவரும் வெளியில் வந்தனர். வெளியில் டாக்டர் செல்லமுத்துவும், ஜோன்ஸும் கிளம்பிப் போய் விட்டிருந்தனர்.

உயரமான நாகலிங்க மரத்தின் நிழல் மட்டும் தரையில் புரண்டு புரண்டு விளையாடிக் கொண்டிருந்தது. நந்தகுமார் பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்பது தெரியாத குழப்பத்தில் இருந்தான்.

''என்ன நந்தகுமார்... இப்ப என்ன சொல்லப் போறே...?''

''என்னத்த சார் சொல்ல... திகில் சினிமால வர்ற மாதிரி இருக்கு சார். எனக்கு இது புது அனுபவம்...''

''என்ன புது அனுபவம்...? நீ கனவு கண்டிருக்கேன்னு நினைக்கறேன்...''

''கனவா... கடவுளே...! நான் முன்பு சொன்ன அவ்வளவும் நிஜம் சார்... சத்தியம்...''

''அப்படின்னா இங்க அதுக்கு தோதா ஒரு விஷயம்கூட இல்லையே...''

''அதான் சார் எனக்கும் புரியல. எப்பவும் ஒரு விவகாரத்துல ஒரு சிலர்தான் பல்டி அடிப்பாங்க. ஆனா, இங்கையோ ஒரு ஊரே நடிக்குது.''

''இப்பவும் நீ உண்மையை ஒத்துக்காம நான் பேசறதே பேச்சுன்னு பேசறியே. பரவால்ல விட்று. நான் ஒண்ணும் உன்னை தப்பா நினைக்கமாட்டேன்.''

''சார்... நான் திரும்பவும் சொல்றேன். நான் ஒண்ணும் நான் பேசறதே பேச்சுன்னு பேசலை. முன்னைவிட இப்பதான் நான் ரொம்ப தீவிரமாவே மாறியிருக்கேன். இந்த மலைல முந்தியாவது ஏதோ ஒரு மர்மம் இருக்கு. அது பர்வதம்மா தொடர்பானது மட்டும்தான்னு நினைச்சுக் கிட்டிருந்தேன்.

இப்ப சொல்றேன்சார்... இந்த மலைல பயங்கர மர்மம் இருக்கு, அது என்னன்னு கண்டுபிடிக்காம நான் வரமாட்டேன்...''

- நந்தகுமார் தீர்க்கமாக சபதமே போட்டான். பழனிக்குமார் பெருமூச்சுவிட்டார்.

''நம்புங்க சார் என்னை...''

''வேண்டாம் நந்தகுமார். நமக்கு வேற வேலைங்க நிறைய இருக்கு. உன் பேச்சை கேட்டு வந்ததுல இன்னிக்கு ஒருநாள் எனக்கு வேஸ்ட்டானதுதான் மிச்சம். சரி நான் கிளம்பறேன். நீ என்ன பண்ணப் போறே...?''

''அவரப்படாதீங்க... எனக்கு ஒரே ஒரு சான்ஸ் கொடுங்க. நான் சொன்னது உண்மைங்கறத உங்களுக்கு நிரூபிக்கிறேன்.''

''எப்படி...?''

''அடிவாரத்துல ஒரு வைத்தியர் இருக்கார். என்னை புலி துரத்தினப்போ நான் ஒரு பள்ளத்துல விழுந்துட்டேன். அவர்தான் என்னைக் காப்பாத்தி மருத்துவ உதவி செய்தார். அவர்கிட்ட கூட்டிக்கிட்டு போறேன். அவர் சொல்வார்.''

''நல்ல உத்யோகம்ப்பா எனக்கு... சரி இதுதான் கடைசி சான்ஸ். அந்த வைத்தியரும் உன்னை யாருன்னே தெரியலைன்னு சொல்லிட்டா அப்படியே அங்க இருந்து வண்டி ஏறிடுவேன்.

அப்புறம் உனக்கும், உன் பஞ்சமூர்த்தி மலை மர்மக் கட்டுரைக்கும் ஒரு கும்புடுதான் போட வேண்டியிருக்கும்.''

''அவசரப்பட்டு அப்படியெல்லாம் பேசாதீங்க... என் நெத்தியில பாருங்க காயத்தை...''

''சரி... சரி... வா...''

- இருவரும் அங்கிருந்து புறப்பட்டனர்!

11

மலைப்பாறை ஒன்றின்மேல் அமர்ந்திருந்தார் ஜோன்ஸ்.

பக்கத்தில் தீவிரமான முகத்தோடு டாக்டர் செல்லமுத்து.

''என்ன செல்லமுத்து... இந்த மலையைப் பத்தி நீங்க சொன்ன மாதிரி எந்த விஷயமும் இல்லையே...''

- ஜோன்ஸ் கிள்ளிவிட்டார்.

''இல்ல ஜோன்ஸ்... இங்க ஏதோ குழப்பமிருக்கு...''

''குழப்பம்...? வாட் யூ மீன்...?''

''அதபத்திதான் யோசிச்சிட்டிருக்கேன்...''

''நோ... ஒரு குழப்பமும் இல்லை. பர்வதம்மா பற்றி நீங்க சொன்னதெல்லாம் பொய். ஈவன் மாயமூலிகைகூட பொய்யாதான் இருக்கும்னு நினைக்கறேன்.''

''இல்ல... மாய மூலிகைகள் உண்மை. இந்த மலையிலயும் நிறைய சித்தர்கள் இருக்காங்க.''

''அப்படின்னா ஒருத்தரை கண்ணுல காட்டுங்க பார்ப்போம்.''

''அப்படி எல்லாம் அவங்கள சாதாரணமால்லாம் பாத்துட முடியாது ஜோன்ஸ்.''

''இதே மாதிரிதான் ஆப்பிரிக்கா காட்டுலையும் கண்டத சொல்லி என்ன ஏமாத்தினாங்க. கண்ட்ரி வேறையா இருந்தாலும் ஏமாத்தற விஷயம் ஒண்ணாதான் இருக்கு.''

- ஜோன்ஸிடம் கோபம் கொப்புளித்தது.

''ஜோன்ஸ்... அவசரப்பட்டு வார்த்தைகளை விடாதீங்க. நீங்க சித்தர் பாடல்கள் படிச்சவர். நீங்களா அவங்களை எல்லாம் பொய்யுங்கறீங்க?''

''லுக் மிஸ்டர் செல்லமுத்து... உங்க சித்தர்கள் ஒன்ஸ் அபான் எ டைம் இருந்திருக்கலாம். இப்ப நோ சான்ஸ். காலம் மாறிப் போச்சு. ஹெர்பல் விஷயமெல்லாமும் பொலூஷனால, க்ளைமேட்டால மாறிப் போயிருக்கலாம். மாய மூலிகைகள் இருக்குங்கறது ஒரு மித். அந்த மித்தை நான் நம்பத் தயாரா இல்லை. இங்க இருந்து டயத்தை வேஸ்ட் பண்ணாம கிளம்புவோம். நீங்க வாங்கின அட்வான்ஸை திருப்பிக் கொடுத்துடுங்க.''

- டாக்டர் ஜோன்ஸ் வளவள கொழகொழவென்று பேசாமல் நறுக்கென்று பேசி முடித்தார். டாக்டர் செல்லமுத்துவுக்குதான் ஏமாற்றமாகி விட்டது.

'பஞ்சமூர்த்தி மலை பற்றி கேள்விப்பட்ட விஷயமும் பர்வதம்மா பற்றி கேள்விப்பட்ட விஷயமும் வெறும் கட்டுக்கதையா?

அந்த கட்டுக் கதையை உண்மை என்று சொல்லி வைத்தியர் அண்ணாமலையும் நிச்சயம் பணத்துக்கு ஆசைப்பட்டு உதவி செய்வார் என்று நம்பி அட்வான்ஸாக வாங்கிய ஆயிரம் டாலர்களை, கிட்டத்தட்ட இந்திய மதிப்பில் நாற்பத்து எட்டாயிரம் ரூபாயை திருப்பிக் கொடுக்கத்தான் வேண்டுமா?'

டாக்டர் செல்லமுத்துவுக்குள் குழப்பமும் கூடவே கோபமும் சேர்ந்து வந்தது. இருந்தும் சமாளிக்கப் பார்த்தார்.

''ஓ.கே. ஜோன்ஸ்... எதுக்கும் அந்த பர்வதம்மா சொன்ன அருவிக் கரைப்பக்கம் போய் மூலிகைகளை தேடிப் பார்க்கலாமா?''

''எதை வெச்சு தேடுவீங்க...? உங்களுக்கு மாய மூலிகைகள் எதுன்னு தெரியுமா?''

''சில புத்தகங்கள்ல படிச்சிருக்கேன். சொர்ணசந்தி, சந்திரசந்தி, கன்னிக்காலி, வாயு ரூபின்னு நிறைய இருக்கு...''

''அது எப்படி இருக்கும்...? அதுதான் மாய மூலிகைன்னு எதைவெச்சு நம்பறது?''

''எனக்குத் தெரியும்... போகர் நாலாயிரம் படிச்சவன் நான். என்கிட்ட பாடல் குறிப்புகள் இருக்கு. அதைவெச்சு தேடுவோம். இன்னொரு வழியும் இருக்கு!''

''என்ன...?''

''அந்த வைத்தியன் அண்ணாமலைக்கு நிச்சயமா மாயமூலிகைகள் பத்தி தெரியும். பல வருஷமா நான் அந்த ஆள் வைத்தியம் பத்தி கேள்விப்பட்டேன். அந்த ஆள் நவபாஷாணம் பண்ணத் தெரிஞ்சவன். நவபாஷாணத்தால பல லிங்கங்கள் செய்து நிறைய சாமியார்களுக்கு கொடுத்திருக்கான். நவபாஷாணம் பண்ணத் தெரிஞ்சவங்களுக்கு மாய மூலிகைகள் பத்தி நிச்சயம் தெரிஞ்சிருக்கும்.''

''ஐ அக்ரி... ஆனா, அந்த ஆள் கோ-ஆப்பரேட் பண்ணமாட்டேங்கறானே?''

''பண்ண வைப்போம். அந்த ஆளோட பொண்ணு ஒருத்தி மெட்ராஸ்ல காலேஜ்ல படிச்சுக்கிட்டு இருக்கா. அவளை பிடிச்சு வெச்சுக்கிட்டு பிளாக் மெயில் பண்ணுவோம். பொண்ணு வேணுன்னா மாயமூலிகைகளை நீ அடையாளம் காட்டணும்னு சொன்னா...?''

அங்கு தொட்டு, இங்கு தொட்டு இருவரும் பிளாக்மெயில் செய்வதில் வந்து நிற்க ஜோன்ஸும் உற்சாகமாகி 'குட் ஐடியா...' என்றார்.

''அப்ப கிளம்புங்க... வெட்டியா அருவிக் கரைகிட்ட போய் டயத்தை வேஸ்ட் பண்ணாம வைத்தியரோட டாட்டரைப்போய் பார்ப்போம். பட் ஒன் திங். இந்த விஷயத்துல நாம தப்பு பண்ணினா என்னை ஒரு கிரிமினலா ஆக்கி என் பாஸ்போர்ட்டையும் உங்க கவர்ன்மென்ட் லாக் பண்ணிடும். ஆகையால ரொம்ப க்ளவரா மூவ் பண்ணனும். இதுல நான் டிஸ்டன்ஸ்லதான் இருப்பேன். இந்த கிட்நாப்பை நீங்க மட்டும்தான் பண்ணனும். இதுல என்னை சம்பந்தப்படுத்தக்கூடாது.''

''டோன்ட் ஒர்ரி... அதே சமயம் நான் காரியத்தை சக்ஸஸா முடிச்சா பேசின பணத்தைவிட கூடதரணும். சரியா...?''

''ஐ வில் பே ஒன் மில்லியன் டாலர். கவலையே படாதீங்க.''

-ஜோன்ஸ் கில்லாடித்தனமாய் பேசிவிட்டு செல்லமுத்துவை தட்டியும் கொடுத்தார்.

செல்லமுத்துவையும் உற்சாகம் தொற்றிக் கொண்டது. இருவரும் அந்த பாறையைவிட்டு விலகி காரை நோக்கி நடந்தார்கள். அது மண்சாலை மேல் ஒரு ஓரமாய் நின்று கொண்டிருந்தது.

அதில் ஏறி காரைக் கிளப்பி புழுதிக் கவளங்களைப் புரட்டிப் போட்டுவிட்டு மறைந்தும் போனார்கள்.

புழுதிக் கவளங்கள் காற்றில் கரைந்து அடங்க அங்கே வைத்தியர் அண்ணாமலை நின்று கொண்டிருந்தார். அவர் முகத்தில் குரூரப் புன்னகை!

12

வைத்தியர் வீடு!

பழனிக்குமாரும் நந்தகுமாரும் வீட்டு முன் நின்று கொண்டிருந்தனர்.

உள்ளே மாமுண்டி கொழிஞ்சி, அவுரி, திப்பிலி, முள்ளி விதை, ஆளி விதை, தேற்றாங்கொட்டை, புன்னைக் கொட்டை, கூவைக்கிழங்கு, கொள்ளுவாய் வேளை என்று ரகவாரியாய் மூலிகைகளை கண்ணாடி ஜாடிகளில் போட்டு அடைத்துக் கொண்டிருந்தான்.

''வைத்தியரே...'' - என்கிற நந்தகுமாரின் குரலைக் கேட்டு வெளியில் வந்தான்.

நந்தகுமாரைப் பார்த்து 'வாங்க சாமி' என்றான்.

''வைத்தியர் இருக்காரா?''

''இல்லையே... மலைப்பக்கம் போயிருக்காரு.''

''அடடா... எப்ப வருவாரு?''

''எப்ப வேணா வருவாரு. என்ன விசயம்...?''

''சும்மாதான் பாக்க வந்தேன். நீயே சொல்லு இரண்டு நாள் முந்தி நான் இங்க வந்தேன் தானே?''

''ஆமா... அதுக்கென்ன இப்போ...?''

- அவன் ஆமோதிக்க, நந்தகுமார் உற்சாகமாக பழனிக்குமார் பக்கம் திரும்பி ''பாத்தீங்களா சார்...'' என்றான். அதன்பின் பழனிக்குமாரே கேள்வி கேட்க ஆரம்பித்தார்.

''ஏம்ப்பா... இவருக்கு உங்க வைத்தியர்தான் வைத்தியம் பார்த்தாரா?''

''ஆமாங்க... ஏன் கேக்கறீங்க...?''

''இல்ல... சும்மா தெரிஞ்சுக்கத்தான் கேட்டேன். இவர் மலைல மயங்கிக் கிடந்தாராம். உங்க வைத்தியர்தான் காப்பாத்தினாராம். ஆமா மயங்கிக் கிடந்தவரை மலைல இருந்து உங்க வைத்தியரேவா தூக்கிட்டு வந்தார்?''

''ஆமாம்... அதுல என்ன சந்தேகம்...?''

''தூக்கிக்கிட்டு வந்தாரா... இல்லை எதாவது வண்டியில போட்டு எடுத்துக்கிட்டு வந்தாரா...?''

''தூக்கிக்கிட்டுத்தான் வந்தாரு... வண்டிக்கு அவர் எங்க போவாரு...?''

''அது எப்படி ஒரு மனுஷனால அதுவும் ராத்திரியில மலைல இருந்து அதுவும் கிட்டத்தட்ட பதினைஞ்சு கிலோ மீட்டர் தூரம் ஒருத்தரை தூக்கிக்கிட்டு வரமுடியும்?''

''எங்க வைத்தியருக்கு இதெல்லாம் சாதாரணம். அவர் உலோக தண்ணி குடிச்சுட்டு வயிறு கல்லாகிப்போய் விழுந்து கிடந்த வேங்கைப் புலிக்கே வைத்தியம் பார்த்தவர்... இதென்னங்க...?''

''உலோக தண்ணியா...?''

''ஆமாங்க... உங்களுக்குத் தெரியாதா? மலைல பாறைல இடி விழுந்தா அங்க குழி விழுந்து தண்ணி தேங்கிடும். அதை குடிச்சா வயிறு கல்லாயிடும். அதைத்தான் உலோக தண்ணி, உலோகக் கஞ்சின்னு சொல்வாங்க... அதுல கல்லைப் போட்டா இரும்பாயிடும். அவ்வளவு பவர் அதுக்கு...''

- மாமுண்டி வெகுளித்தனமாக தனக்குத் தெரிந்ததை பேசினான் - ஆனால் அவ்வளவும் சித்த மருத்துவ உலகின் அசாதாரண விஷயங்கள் என்பது தெரியாமலே...

பழனிக்குமாருக்கு அதை எல்லாம் கேட்கக் கேட்க பிரமிப்பாக இருந்தது. நடுவில் புலி ஒன்றின் உறுமல் சப்தம் காதில் கேட்டது.

''என்னப்பா இது உறுமல் சப்தம்?''

''நான் சொல்லலை... வேங்கைப்புலிக்கே வைத்தியம் பார்ப்பார்னு? அதான். உலோக தண்ணி குடிச்ச புலி ஒண்ணு காட்டுல கஷ்டப்பட்டுக்கிட்டிருந்துச்சு. அதான் தூக்கிக்கிட்டு வந்து மருந்து கொடுத்து படுக்க வெச்சுருக்காரு. அதுதான் நடுநடுவுல கண்ணு முழிச்சுக்கிட்டு உறுமுது.''

''எங்க...?''

''வாங்க காட்றேன்...'' - அவன் வைத்தியர் வீட்டின் பின்னால் கல் தொட்டி ஒன்றின் அருகே அழைத்துச் சென்றான். அங்கே ஆறடி நீள வேங்கைப்புலி ஒன்று பூனைக்குட்டி போல படுத்திருந்தது. அருகில் ஒரு இளுப்ப மரம். அதில் ஒரு சங்கிலியைப் பூட்டி அந்தப் புலியின் கழுத்திற்கு இணைப்பைக் கொடுத்து கட்டிப் போட்டிருந்தார் வைத்தியர்.

பழனிக்குமாருக்கும், நந்தகுமாருக்கும் சப்த நாடியும் ஒரு விநாடி நின்று பிறகுதான் துடித்தது.

கண்களும் காதுவரை விரிந்துவிட்டன.

''என்னப்பா இது... ஏதோ ஆடு, மாடுக்கு வைத்தியம் பாக்கற மாதிரி புலிக்கே வைத்தியம் பாக்கறாரே உங்க வைத்தியர்...''

- பழனிக்குமார் வியந்தார்.

''அவரை யாருன்னு நினைச்சீங்க...? மாய மூலிகை பத்தியெல்லாம் தெரிஞ்சவர் அவரு.''

- மாமுண்டி தொடர்ந்து அவரது பெருமையை விவரித்தான்.

''மாய மூலிகையா...? அப்படி எல்லாம்கூட இருக்குதா என்ன...?''

''அதனாலதானே ஒரு குஷ்டரோகியான நானே இப்ப மனுஷனா இருக்கேன்.''

''என்னது... நீ குஷ்ட ரோகியா இருந்தவனா...?''

''ஆமாங்க... எந்த ஜென்மத்துப் பாவமோ... அந்த வியாதி எனக்கும் வந்துடுச்சு. ஆனா, இப்ப பாருங்க. சுத்தமா

குணமாயி நான் திடமா இருக்கறதை...'' - மாமுண்டி கைகளை அவர்கள் இருவர் எதிரிலும் ஆட்டிக் காட்டினான்.

பழனிக்குமாருக்கு தன் காதில் விழும் விஷயங்கள் எல்லாம் உண்மைதானா, இல்லை இவன் உளறுகிறானா? என்று தோன்றினாலும் வாலைக் குழைத்தபடி படுத்திருந்த வேங்கைப்புலி 'அது உண்மையாகத்தானிருக்க முடியும்' என்கிற ஒரு நம்பிக்கையை உருவாக்கிற்று.

''என்ன பாக்கறீங்க...? இந்த மாய மூலிகைங்கள தெரிஞ்சுக்க ஒரு அமெரிக்கக்காரருகூட வந்தாரு. ஆனா வைத்தியர் எனக்கு ஒண்ணும் தெரியாதுன்னு சொல்லி அனுப்பி வெச்சுட்டாரு.''

- மாமுண்டியின் அடுத்த விளக்கம் பழனிக்குமாருக்கு மலையில் பர்வதம்மாள் முன் பார்த்த ஜோன்ஸை ஞாபகப்படுத்திற்று.

'இவன் பொய் சொல்லவில்லை... மனதில் பட்டதை அப்படியே பேசுகிறான்' என்பதும் புரிந்து போயிற்று.

''பாத்தீங்களா சார்... இதெல்லாம் டாப் சீக்ரெட்ஸ். இதை சாதாரணமா நாம தெரிஞ்சுக்க கூடாதுன்னுதான் மலைலகூட எல்லாரும் நம்மளை டபாய்ச்சிருக்காங்க.''

- நந்தகுமார் குறுக்கே நுழைந்தான்.

''கொஞ்சம் சும்மா இரு நந்தா... ஏப்பா தம்பி நீ சொல்லு. உனக்கு மலைல இருக்கற பர்வதம்மாவைத் தெரியுமா?'' -பழனிக்குமார் மாமுண்டியிடம் கேள்விகளைத் தொடர்ந்தார்.

''தெரியுமே... பர்வதம்மா, வைத்தியரோட அம்மா தானே?''

''என்னது...?'' - பழனிக்குமார் வியப்பின் உச்சி முனைக்கு ஏற -

''ஆமாங்க... வைத்தியர் குடும்பம்தான் இந்த மலைல இருக்கற மூலிகைங்கள பாதுகாத்துக்கிட்டிருக்குது. பர்வதம்மாவுக்குத் தெரியாத மூலிகைங்க கிடையாது. அவங்க சாமி...''

''சாமின்னா...?''

''அம்மா மாயமா மறைவாங்க. சின்னப்புள்ளையா மாறுவாங்க. பாம்பு பறவைன்னு எந்த வடிவமும் எடுப்பாங்க! மலைக்காட்டுல யாராவது தப்புதண்டா பண்ணா அவங்கள அடிச்சு விரட்டுவாங்க. இரண்டுநாள் முந்திகூட ஒரு யானையை வேட்டையாடின திருட்டுப் பசங்களை ஒடஒட விரட்டி சேத்துப் பள்ளத்துல விழவெச்சு அமுக்கிக் கொன்னுட்டாங்க... வைத்தியர் அய்யா அதைச் சொல்லி சந்தோஷப்பட்டுக்கிட்டிருந்தாரு...''

''நந்தா... என்ன இது? இந்த ஆள் நம்ப முடியாததையே பேசறான். எனக்குத் தலையே சுத்துது.''

- பழனிக்குமாரின் படபடப்பு மாமுண்டிக்கு சிரிப்பைத்தான் தந்தது.

''அட என்னங்க நீங்க... நான் சொல்றதை நம்ப முடியலைன்னா போங்க. யாருக்கு நஷ்டம்? இதை எல்லாம் நம்பினதாலதான டாக்டர் செல்வமுத்தய்யா அமெரிக்கா காரனோட வந்தாரு?''

''அந்த அமெரிக்காகாரருக்கு உங்க வைத்தியர் என்ன பதில் சொன்னாரு?''

'''எனக்கு எதுவும் தெரியாது'ன்னு சொல்லி திருப்பி அனுப்பிட்டாரு. வைத்தியரை பொறுத்தவரை இந்த

மலையும் இதுல விளையற மூலிகைங்களும் சாமிங்க மாதிரி... 'ஐயய்யோ காப்பாத்துங்க'ன்னு கால்ல வந்து விழுந்தாகாசே வாங்காம கூட வைத்தியம் பார்ப்பாரு. ஆனா மலைல இருக்கற மூலிகைங்களை திருடி காசு சம்பாதிக்க நினைச்சா சும்மா விடமாட்டாரு.''

- மாமுண்டியின் விளக்கம், பழனிக்குமாருக்கு மொத்தத்தையும் புரிய வைத்து விட்டது.

''நந்தா, நீ சொன்னது உண்மைதான். மலைல நாம பார்த்தது அவ்வளவும் நாடகம்தான். ஆனா நல்ல காரணத்துக்காக நடந்த அழகான நாடகம்.

நானே இல்ல நீயோ இந்த மாமுண்டியை பார்க்காம போயிருந்தா, இல்ல - இந்த மாமுண்டியும் இப்படி வெகுளியா பேசாம போயிருந்தா நம்ம வரைல சாரி என் வரைல நீ சொன்னது ஒரு கனவாதான் இருக்கும். நீயும் புரிஞ்சுக்க முடியாத ஒரு புதிர்னு இந்த விஷயத்தைத் தலை முழுகியிருப்பே.

ஆனா நாம அதிர்ஷ்டசாலிகள்.

அதான் இந்த மாமுண்டி மூலமா எல்லாம் தெரிய வந்திருக்குது. நம்ம நாட்டு மூலிகைகள் பத்தி எனக்கு எப்பவுமே ஒரு மதிப்பு உண்டு. ஆனா அது நான் மதிச்ச அளவுக்கும் மேலான ஒண்ணுங்கறது இப்ப தெரிஞ்சு போச்சு.

எவ்வளவு நேரமானாலும் சரி... வைத்தியரை பாத்துட்டுதான் போகணும். இப்படி ஒரு அபூர்வமான மனுஷனைப் பார்க்க ரியலா கொடுத்து வெச்சுருக்கணும்.''

- பழனிக்குமார் அதித உணர்ச்சி வசப்படும்போது எலும்பும் தோலுமான மாமுண்டி சிறுத்தைப் புலி அருகே

சென்று அரை மயக்கத்தோடு படுத்திருக்கும் அந்தன் கழுத்தை தைரியமாகத் தடவிக் கொடுத்தான்.

- ''சார் பார்த்தீங்களா... இப்படி எல்லாம் ஒரு காட்டுப் புலிகிட்ட நெருங்க முடியுமா? வைத்தியர் வந்தா இந்த மூலிகை ரகசியங்களை மூடி மறைச்சு வைக்காம எய்ட்ஸ்க்கு, கான்சருக்கெல்லாம் மருந்து கண்டு பிடிங்கன்னு சொல்லணும்.

நம்ம பத்திரிகைல வைத்தியர் படத்தையும் பர்வதம்மா படத்தையும் அட்டைப் படத்துல போட்டு உலகத்தையே திரும்பிப் பார்க்க வைக்கணும் சார்...''

''அட போய்யா ஃபூல்! இதெல்லாம் ரகசியமா இருக்குபோதே அமெரிக்காவுல இருந்து ஆள் வருது. இதை நாம பட்டவர்த்தனப் படுத்தினா அவ்வளவுதான்.''

''அப்ப கட்டுரையா எழுத வேண்டாம்னு சொல்றீங்களா?''

''எழுதக்கூடாதுன்னு சொல்றேன்...''

''அப்புறம் எப்படி சார் நம்ம நாட்டோட மதிப்பு உலகத்துக்குத் தெரியவரும்.''

''அது எப்பவுமே இருக்கு. இனிதான் தெரிய வரணும்னு இல்லை. நீ வாயை மூடிக்கிட்டிரு. வைத்தியர் வரட்டும். அவர் என்ன சொல்றாருன்னு கேட்போம்.''

- இருவரும் காத்திருக்கத் தொடங்கினர்.

13

ஜான்சும், டாக்டர் செல்ல முத்துவும் காரில் சென்னை சாலையில் சீறிக் கொண்டிருந்தனர். டாக்டர் ஜோன்ஸ் விண்டோ வழியே நழுவும் புளியமரங்களைப் பார்த்தபடியே வந்தார்.

''ரோட்டு ஓரமா புளியமரம்கற உங்க சிஸ்டம் சூப்பர்...'' என்றார்.

''ஸ்டேட்ஸ்ல எப்படி...? இப்படி புளியமரம் கிடையாதா?''

''இல்ல... அங்க எல்லாமே காட்டு மரங்கள்தான். அதோட இப்படி சாலை ஓரமா நிழலுக்காகன்னு திட்டமிட்டு வளர்க்கலை.''

''இதெல்லாம் அசோகர் காலத்து நாகரீகம். புளிய மரமும் நல்லா வெய்யில் தாங்கும்...''

''ஆமாம்... உங்க ஊர்லதான் நாலு விதக்ளைமேட். எங்க ஊர்ல அப்படி இல்ல. ஹெவி சம்மரே அங்க கிடையாது. ஆனா ஹெவி வின்டர் உண்டு.''

''அதனாலதான் அங்க எங்க ஊர் அளவுக்கு ஹெர்பல்ஸ் இல்லையோ?''

''ஆமாம்... உங்க க்ளைமேட் ஒரு வரப்ரசாதம். குளிர்காலம்; அப்புறமா வசந்தகாலம்; அப்புறமா கோடைகாலம்; அப்புறமா காத்துக்காலம்; அப்புறமா மழைகாலம் ஒ... என்ன ஒரு பியூட்டிஃபுல் ஆர்டர்!''

''தட்ஸ் இண்டியா!''

''ரியலா... உங்க ஊர் ஒரு டிவைன் கன்ட்ரிதான் செல்லமுத்து.''

''இப்படி பாராட்டினா மட்டும் போதாது டாக்டர் ஜோன்ஸ். மூலிகை ரகசியம் தெரிஞ்ச பிறகு ஒன்மில்லியன் டாலருக்கு மேல போட்டுக் கொடுக்கணும்.''

- அதைக்கேட்டு ஜோன்ஸ் சிரித்தார்.

மனதுக்குள் 'ஊர் அற்புதமாக இருக்கு... ஆனா மனிதர்கள்ல சிலர் பிச்சைக்காரர்களா இருக்கிங்களே...' என்கிற ஏளனம் ஒரு ஓட்டம் ஓடியது.

காரிடமும் நல்ல சீற்றம்.

''ஆமா... அந்தப் பெண்ணை எப்படி கிட்நாப் பண்ணப் போறீங்க செல்லமுத்து?''

''வேடிக்கை பாருங்க. 'வைத்தியருக்கு உடம்பு சரியில்லை. சீரியஸ்'னு ஒரு போன் போதும். அந்தப் பொண்ணு ஹாஸ்டல விட்டு புறப்படும். அது வெளியில வந்துட்டா போதாதா? 'உங்கப்பாவை பாக்கத்தான் போறோம்'னு நம்ம கார்லையே ஏத்திக்கிட்டு நம்ம வேலையைக் காட்ட வேண்டியதுதான்.''

''இந்த மாதிரி ஐடியால்லாம் எப்படித்தான் உங்களுக்கு ஸ்ட்ரைக் ஆகுதோ?''

- ஜோன்ஸ் பாராட்டும்போது காருக்குள் மெல்லிசாக 'ஸ்ஸ்ஸ்' என்கிற சப்தம்.

''செல்லமுத்து... என்ன இது ஸ்ஸ் சப்தம்...? உங்களுக்கு கேக்கல?'' - ஜோன்ஸ் கேட்க செல்லமுத்துவின் காதும் விடைக்க, ரியர் மிர்ரரில் பின் சீட்டில் நல்லபாம்பு ஒன்று படம் விரித்த நிலையில் அமர்ந்திருப்பது தெரிந்தது.

அதிர்ச்சியுடன் கழுத்தை வளைத்து திருப்பிப் பார்த்த செல்லமுத்துவை அதுவும் அவர் பார்க்கும் கூடணத்தில் எம்பிச் சீறியது. அவ்வளவுதான்...! அலறிய செல்லமுத்துவின் கண்ட்ரோலை விட்டு விலகிய காரும் அசுர வேகத்தில் பக்கத்து புளிய மரத்தின் மேல் மோதியது!

அதன் பின் எல்லாமே சொல்ப நிமிடங்களில் முடிந்துவிட்டது. சாலையில் செல்லும் மற்ற கார்காரர்களும் வாகனக்காரர்களும் ஓரம் கட்டிவிட்டு இறங்கி மோதிய காரை எட்டிப்பார்க்கும் போது செல்லமுத்துவும் ஜோன்சும் ரத்தச் சகதியாகியிருந்தார்கள்.

சீறிய அந்தப் பாம்பு ஓசையின்றி கிடைத்த இடைவெளியில் யார் கண்ணிலும் படாமல் காரைவிட்டு இறங்கி விறுவிறுவென்று புளிய மரத்தை ஒட்டி ஒடி புதர் ஒன்றில் புகுந்து மறைந்தும் போனது!

14

வீட்டுக்குள் வைத்தியர் நுழைந்தபோது நந்த குமாரும், பழனிக்குமாரும் காத்திருந்தனர். மாமுண்டி ஒவ்வொரு மூலிகையாகக் காட்டி அதன் பெருமைகளை விளக்கிக் கொண்டிருந்தான்.

வைத்தியருக்குப் புரிந்துவிட்டது.

பழனிக்குமார் மிக மரியாதையாக எழுந்து ''வணக்கம் வைத்தியரே...'' என்று பணிவாகக் கும்பிட்டான். நந்த குமாரும் அவரை மிக மரியாதையாகப் பார்த்தான்.

''வணக்கம்... நீங்க...?''

''என் பேர் பழனிக்குமார். சூர்யோதயம் பத்திரிகையோட உதவி ஆசிரியர்.''

''அப்படியா... சந்தோஷம்!''

''உங்களை சந்திக்கறதுல எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. பெருமையுங்கூட...''

''என்ன தம்பி பெரிய பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க... நான் ஒரு சாதாரண வைத்தியன்.''

''தெரியும். நீங்க அப்படித்தான் சொல்வீங்க. ஆனா நீங்க இந்த பஞ்சமூர்த்தி மலைக் காட்டையே கட்டிக் காப்பாத்தற ஒரு சித்தர்ன்னு எனக்குத் தெரியும். உங்க சிஷ்யன் எல்லாத்தையும் சொல்லிட்டான்.''

''நான் சித்தனா...? சேச்சே... ஏண்டா மாமுண்டி என்னத்தடா இவங்க கிட்ட உளறினே?''

''அவன் உளறலை. உண்மைகளை சொன்னான். கேட்கவே புல்லரிச்சுது. கவலைப்படாதீங்க. உங்களைப் பத்தின எந்த ஒரு உண்மையையும் நாங்க பத்திரிகைல எழுத மாட்டோம். எழுதினா என்ன நடக்கும்னு தெரியும்.''

''தம்பி... என்ன சொல்றீங்க?''

''எதுவும் பேசாதீங்க. எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க. நாங்க டாக்டர் செல்லமுத்து மாதிரி சுயநலவாதி இல்லை. அமெரிக்க டாக்டர் மாதிரி எதையும் கடத்தவும் வரலை. நாங்க செஞ்ச புண்ணியம்தான் உங்களைப் புரஞ்சுக்க முடிஞ்சது.''

''திரும்பவும் சொல்றேன். நீங்க அநாவசியமா என்னைப் புகழறீங்க. நான் ஒரு சாதாரண மனுஷன்.''

''நீங்க அப்படித்தான் சொல்வீங்க... எந்த பெரியவரும் தன்னைப் பெரியவன்னு சொல்லிக்கமாட்டாங்க. உங்களுக்கு ஒரு வேண்டுகோள்.''

''என்ன தம்பி?''

''எங்களுக்கு ஒரு ஆசை...''

''என்னன்னு சொல்லுங்க...''

''உங்ககிட்ட சிரஞ்சீவி மூலிகைன்னு ஒண்ணு இருக்காமே. அதை சாப்பிட்டா வியாதியே வராதாமே.''

''அதுக்கென்ன?''

''எங்களுக்கு நீங்க அதைத் தரணும்.''

- வைத்தியர் அதைக் கேட்டு பலத்த சிந்தனையோடு மாமுண்டியைப் பார்த்தார். பின் பேசினார்.

''தரேன் தம்பி. ஆனா நீங்களும் எனக்கு ஒரு உதவி செய்யணும்.''

''என்ன செய்யணும் சொல்லுங்க...''

''இந்த மாமுண்டியை உங்கக்கூட கூட்டிக்கிட்டு போய் உங்க பத்திரிகை ஆபீஸ்லையே ஒரு வேலை போட்டுக் கொடுக்கணும்.''

''தாராளமா... ஆனா உங்களுக்கு அப்புறம் யார் உதவி செய்வா?''

''அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். எனக்கு அந்த உதவியை செய்யறதா இருந்தா நான் சிரஞ்சீவி மூலிகை மருந்தைத் தரேன்.''

- வைத்தியர் ஒரு முடிவோடுதான் பேசினார். பழனிக்குமாரும் 'சரி' என்று தலையை ஆட்டினார்.

வைத்தியரும் உள்ளே சென்று ஒரு மூலிகையை எடுத்து வந்து பாலில் கலந்து நந்தகுமாருக்கும், பழனிக்குமாருக்கும் கொடுத்தார். பின் மாமுண்டியிடமும் ''நீயும் குடிடா...'' என்று அவனுக்கும் கொடுத்தார். மூவரும் குடித்தார்கள். அதன்பின் அவர் காலில் விழுந்தார்கள்.

''நல்லது. போய்ட்டு வாங்க...''

- வைத்தியர் வழியனுப்பி வைத்தார். திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடந்தனர். நடக்கும் போது ''அடிக்கடி வருவோம்'' என்றனர்.

''ஞாபகம் இருந்து வரணும்னு தோணினா வாங்க...'' - என்றார். அப்படியே ''நல்ல தூக்கம் வரும். தூக்கத்துல பிரமாதமா கனவெல்லாம் வரும்.'' என்றும் சொல்லி டாட்டா காட்டினார்!

அறைக்குத் திரும்பிய நந்தகுமாருக்கு கொட்டாவி வாயண்ணங்களைப் பிளந்தது. பேண்ட் சட்டையைக்கூட கழற்றத் தோன்றாமல் படுக்கையில் போய் விழுந்தான்.

இதே நிலைதான் பழனிக்குமாருக்கும்... அவரது வீட்டிலேயே ஒரு மூலையில் மாமுண்டியும் போய் படுத்தான்.

மறுநாள்!

கண் திறந்தது முதலில் மாமுண்டிதான்!

தான் எங்கிருக்கிறோம் என்பதே தெரியவில்லை.

கொட்டாவி பிரிய வந்த பழனிக்குமாருக்கும் மாமுண்டி ஒரு புதிய மனிதனாய்த் தெரிந்தான்.

''யாருப்பா நீ...?''

மாமுண்டியும் திருப்பிக் கேட்டான்.

''நீங்க யாருங்க...?''

''என் வீட்ல இருந்துக்கிட்டு என்னையே யாருன்னு கேட்கறியா நீ?''

''இது உங்க வீடுங்களா...? மன்னிச்சுக்குங்க. நான் ஒரு நாடோடி... எப்படி இங்க வந்தேன்னே தெரியல...''

''போப்பா முதல்ல வெளிய...''

- பழனிக்குமார் விரட்ட மாமுண்டியும் மலங்க மலங்க பார்த்தபடி வெளியேறினான்.

அதன்பின் பழனிக்குமார் குளித்து முடித்து ஆபீசுக்குப் போனபோது நந்தகுமார் வந்திருந்தான்.

பஞ்சமூர்த்தி மலை பற்றியோ வைத்தியர் பற்றியோ பர்வதம்மாள் பற்றியோ எதுவும் பேசாமல் பழைய நந்தகுமாராக ''சார் எதாவது ஒரு நல்ல அசைன்மென்ட் இருந்தா கொடுங்க சார்...'' - என்று கேட்க ''நீ என்ன எங்க ஸ்டாஃப் ரிப்போர்ட்டரா... போப்பா. போய் உன் நோக்கத்துக்கு என்ன மேட்டர் கிடைக்குதோ கொண்டுகிட்டு வா...'' என்றார் பழனிக்குமார்.

''கல்யாணமாகப் போகுது சார் எனக்கு... உங்க ஸ்டாஃப் ரிப்போர்ட்டரா அப்பாயிண்ட் பண்ணக் கூடாதா சார்...?'' - என்று வழக்கம்போல கெஞ்சினான். அப்போது டேபிளுக்கு புளிய மரத்தில் மோதிச் செத்த டாக்டர் ஜோன்ஸ், செல்லமுத்து பற்றிய செய்தி வந்து சேர்ந்தது.

'கண்ணு மண்ணு தெரியாம காரை ஓட்டி இப்படியா சாவாளுங்க?' - என்று இகழ்ந்தபடியே, வந்த அந்த செய்தியை பழனிக்குமார் வாசிக்கத் தொடங்க, நந்த குமாருக்கு ஒரு ஐடியா தோன்றியது.

''சார், இந்த ஆக்சிடென்ட் பத்தின தகவல்களை மூடெய்ல்டா கறந்துக்கிட்டு வரட்டுமா சார்...?'' - என்று கேட்க,

''அதான் செத்துட்டாங்களே... இன்னும் என்ன மூடெயில்... போய் வேற ஏதாவது வித்தியாசமான விஷயத்தைக் கொண்டுகிட்டு வாய்யா'' என்றார் பழனிக்குமார்.

நந்தகுமாரும் தலையாட்டிவிட்டுக் கிளம்பினான். வெளியே வந்தான். எதிரில் வைத்தியர் அண்ணாமலை வந்து கொண்டிருந்தார்.

''வணக்கம் தம்பி... இங்க சப்-எடிட்டர் எங்க இருக்காரு...?'' - கேட்டார்.

''அப்படியே ரைட்ல போய் மேலபோங்க. முதல் ரூம்ல இருப்பாரு...'' - நந்தகுமார் யாருக்கோ வழி காட்டுவது போல காட்டிவிட்டுக் கிளம்பினான். அதைக் கேட்டு ரசித்து சிரித்த வைத்தியரும் அவன் கிளம்பிச் செல்லவும் திரும்பி நடக்கத் தொடங்கினார். அவர் உதட்டில் அர்த்தம் காண முடியாத மர்மமான மாயப்புன்னகை மட்டும் அழியாமல் ஒட்டிக் கொண்டிருந்தது! ரகசியத்தை ரகசியமாகவே வைத்துக் கொள்ளத் தெரிந்தவர்களுக்கு வேண்டுமானால் அதற்குப் பொருள் தெரிய வரலாம்!

நிறைந்தது

சென்னை மாவட்ட மைய நூலகம் சௌகார்பேட்டை, சென்னை 600 001 37671 546217